# ஈழத்து இலக்கிய முன்னோடிகள்



கலாநிதி
க. கைலாசபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இலக்கிய முன்னோடிகள்

கலாநிதி க. கைலாசபதி

மக்கள் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வெளியீடு 40
முதல் பதிப்பு அக்டோபர் 1986
உரிமை சர்வமங்களம் கைலாசபதி

பதிப்பாசிரியர் டாக்டர் மே. து. ராசு குமார்

EELATHU ILAKKIYA MUNNODIKAL
(Forerunners of Sri Lanka Tamil Literature)

Prof. K. KAILASAPATHY
Formerly Professor of Tamil &
Dean, Faculty of Arts
University of Jaffna, Sri Lanka

விலை ரூபாய் பதினாறு

**மக்கள் வெளியீடு**
24 உனிசு அலி சாகிப் தெரு
எல்லிசு சாலை சென்னை 600 002

**மக்கள் அச்சகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டையும் இலக்கியத்தையும்
நேசிக்கும்
என் மாமா
நாகமுத்து மாணிக்க இடைக்காடருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | 6 |
| | முன்னுரை | 9 |
| 1 | புதிய நோக்குகளும் போக்குகளும் | 13 |
| 2 | நாவலரின் இலக்கிய நோக்கு | 47 |
| 3 | பத்திராதிபர் சரவண முத்துப் பிள்ளை | 67 |
| 4 | அம்பலவாண நாவலரின் கல்விப்பணி | 77 |
| 5 | நாவலாசிரியர் நாகமுத்து | 87 |
| 6 | பாவலர் துரையப்பா பிள்ளை | 107 |
| | பெயர் அகரநிரல் | 138 |
| | இதழ்—நூல் அகரநிரல் | 141 |
| | பொருள் அகரநிரல் | 143 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எந்தவொரு வளர்ச்சியானாலும், அது பின்னணியாகச் சில முன்னோடிகளின் உழைப்பையும் முயற்சியையும் அடித்தளமாகக் கொண்டிருக்கிறது. அத்தகைய முன்னோடிகளின் வெற்றிகள் மட்டுமல்லாது தோல்விகளும்கூட அவர்களை அடியொற்றி வருவோருக்கு வழிகாட்டுதலாக இருந்திருக்கின்றன—இருக்கின்றன. இலக்கியத் துறைக்கும் இது விலக்கல்ல. நாவல், சிறுகதை, கவிதை, இதழ்கள் என்று எத்துறையானாலும் முன்னோடிகளின் முயற்சிகள், அவர்கள் வாழ்ந்த காலத்தின் கண்கொண்டு ஆய்வு செய்யத் தக்கவையாகும். இன்றைய வளர்ச்சிப் படிகளின் மேல் நின்றுகொண்டு, தொடக்க முயற்சிகளின் முனைப்புகளை மதிப்பிடும்போது எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அன்றைய சூழல்களும் சமூக நிலைமைகளும், முன்னோடிகளின் மேல் ஏற்படுத்திய தாக்கங்களையும், அதை அவர்கள் எதிர்நோக்கிய முறைகளையும் நுணுகிப் பார்ப்பது இன்றைய ஆய்வாளர்களின் கடமையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி, முன்னைய நூற்றாண்டுகளின் வளர்ச்சியை விட விரைவானதும் விரிவானதுமாகும். ஐரோப்பியத் தொழிற் புரட்சியின் அறிமுகம் இத்தகைய மாற்றங்களுக்கு வித்திட்டது. பழமையின் பிடிப்புகளில் ஊறிக் கிடந்த பலர், இதன் விளைவுகளை எப்படி எதிர்கொண்டார்கள் என்பது அவர்களைப் பற்றிய ஆய்வில் இன்றியமையாத பங்கினைப் பெறுகின்றது எனலாம்.

புத்திலக்கிய வரலாற்றுக்கும் வளர்ச்சிக்கும் திறனாய்வுக்கும் இந்த முன்னோடிகளைப்பற்றிய ஆய்வுகள் அடிப்படையாகவும் தொடக்கமாகவும் அமைவதோடு அவற்றின் பிரிக்க இயலாப் பகுதியாகவும் அமைந்து கிடக்கின்றன.

புதிய இலக்கியங்களை மேலும் மேலும் அறிமுகப்படுத்தி, வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த இலக்கிய உலகினர் முதல் கட்டத்தில் அவற்றின் முன்னோடிகளைப் பற்றிய ஆய்வில் ஈடுபடவில்லை. ஆனால் அடுத்த கட்டத்தில் திறனாய்வு நெறி முறைகள் வளர்ச்சி பெற்றுவிட்ட நிலையில் இத்தகைய ஆய்வுகள் பல வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஈழம், மலேசியா போன்ற தமிழ் கூறும் பிற பகுதிகளில் முன்னோடிகளாக விளங்கியவர்களைப் பற்றிய விரிவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் தமிழ்நாட்டில் முழுமையாக அறிமுகப்படுத்தப் படாமல் இருப்பதைப் பார்க்கிறோம். ஆறுமுக நாவலர் போன்ற சிலரைப் பற்றி நாம் அறிந்திருந்தபோதிலும், அவர் கள் ஆற்றிய குறிப்பிட்ட சில பணிகளே நமக்குக் காட்டப் பட்டிருக்கின்றன. இந்த நிலையில், ஈழத்து இலக்கிய முன்னோடிகளைப் பற்றிய சமூகப் பார்வையோடு கூடிய அறிமுகம் தமிழகத்திற்குத் தேவையாக இருந்தது.

இதனைப் பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி அவர்கள் நிறைவேற்றித் தந்திருப்பது பெருமை மிக்கதாகும். ஓர் ஆய்வாளராக மட்டுமல்லாது, சிறந்த சிந்தனையாளராகவும் விளங்கிய அவர்கள் தமிழகத்திற்குச் செய்யவேண்டிய பணிகள் எவ்வளவோ இருந்தன. தாம் வாழ்ந்த காலத்தின் வரலாற்று வளர்ச்சியினைத் தெளிவாகவும் விரிவாகவும் உணர்ந்திருந்த அவர், அது குறித்துக் கொண்டிருந்த கருத்துக்கள் நுட்ப மானவை. அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கொண்ட வர்களுக்கு இவை நன்கு புரியும். தமிழியல் துறைகள் யாவற்றிலும் அவரது தாக்கம் இன்றும் தவிர்க்க இயலாத வாறு தொடர்கின்றது.

அவரது மறைவுக்கு மூன்று திங்களுக்கு முன்னர், அவரே முழுமையாகத் தயாரித்து அனுப்பிய நூல் இது. நூல் வடிவில் வெளிவருவதற்கேற்ற வகையில் அவர் தயாரித்த இறுதி நூலும் இதுவே.

> முழு நூலையும் அச்சடித்த பின் ஒரு பிரதியை அனுப்பி வைத்தால் ஒரு வாரத்திற்குள் மூன்று அகர வரிசைகளை யும் எழுதி அனுப்பி வைப்பேன். முந்திய நூலுக்கு அவ்வாறுதான் செய்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். இதனையடுத்து மற்ற நூலைத் தயாரிப்பேன்

என்று அவர் எழுதிய மடலும் நூலும் எனக்கு 26-8-1982 அன்று கிடைத்தன. இடையில் மக்கள் வெளியீட்டுப் பணிகள் நின்று கிடந்ததில் இதுவும் வெளிவருவது தடைப்பட்டது. கலாநிதி க. கைலாசபதி அவர்கள் இந்நூலுக்கு எழுதிய முன்னுரையில்,

> இத்தகைய ஒரு நூலை எழுதித்தருமாறு இரண்டு மூன்று ஆண்டுகளாக இடைவிடாது என்னைத் தூண்டி வந்தவர் நண்பர் டாக்டர் மே. து. ராசுகுமார். நிருவாகப் பணியும் வேறு கடப்பாடுகளும் என் நேரத்தையெல்லாம் தம தாக்கிக் கொள்ளும் நிலையில் நூல் எழுதுவதற்குத் தேவையான அவகாசமின்றி ஏங்கும் என்னை எப் படியோ எழுதச் செய்யும் வல்லமை அவருக்கிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவரை எழுதச் செய்யும் வல்லமை பெற்றிருந்த நான், வெளியிடும் வாய்ப்புப் பெறாமல் இருந்ததற்காக வருந்துகின்றேன். கலாநிதி க. கைலாசபதி அவர்கள் மறைந்துவிட்ட நிலையில், அவரது நூலினைப் படிக்கும் வாய்ப்பை நான்கு ஆண்டுகள் பறித்ததற்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்பு வேண்டுகின்றேன்.

இந்த நூலினை நானே வெளியிட வேண்டும் என்ற உணர்வு வகையிலான விழைவுக்கு மதிப்பளித்து, தாமதத்தையும் பொருட்படுத்தாமல் வாய்ப்பேற்படுத்திய அவரது துணைவியர் திருமதி சர்வமங்களம் கைலாசபதி அவர்களுக்கும் குழந்தைகள் செல்வி சுமங்களா, செல்வி பவித்ரா ஆகியோருக்கும் என் நன்றியினை எப்படித் தெரிவிப்பது என்றே புரியவில்லை.

அவ்வப்போது தாம் எழுதிவந்த ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவம் தரவேண்டும் என்ற எண்ணம் கலாநிதி க. கைலாசபதி அவர்களுக்கு இருந்து வந்தது. இதனை நான் அடிக்கடி நினைவூட்டி வந்தேன்; வற்புறுத்தினேன் என்றும் கூறலாம். இதன் முதல் முயற்சியே 'நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்' என்ற நூலாகும். 'ஈழத்து இலக்கிய முன்னோடிகள்' நூலினை அடுத்து 'மானுடம் பேணியவர்கள்' என்ற தொகுப்பை முடிக்கவும் திட்டமிட்டிருந்தார். இந்நூலும், பிற தொகுக்கப்படாத ஆய்வுகளும் விரைவில் வெளிவரவேண்டும் எனத் தமிழ் மக்கள் சார்பில் விழைகின்றேன். அத்தோடு அவரது Tamil Heroic Poetry என்ற ஆய்வும் தமிழில் வெளியிடப்படவேண்டும். இந்த நூலின் மொழிபெயர்ப்பினை அவரே செய்யவேண்டும் என்று அவாக் கொண்டிருந்தார். பல முறை இது குறித்து அவருக்கு நான் நினைவூட்டிக் கொண்டிருந்தேன். பொறுப்புக்களின் அழுத்தத்தால் இதுவும் தள்ளிப் போடப்பட்டு வந்தது. கலாநிதி க. கைலாசபதி அவர்களின் பணிகளையெல்லாம் தமது பணிகளாக்கிக்கொண்டு, அவருக்கு முழுமையான துணையாக நின்ற அவரது துணைவியர், இப்படைப்புகள் எல்லாம் தமிழகத்திற்கு எவ்வளவு தேவையாக இருக்கின்றன என்பதை உணர்ந்தவர். அவர் இதற்கான முன் முயற்சிகளைச் செய்துவருகிறார் என்பது நிறைவு தருகின்றது.

இந்நூலுக்கான அகரநிரல் மூன்றையும் தொகுத்துத் தந்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் வேண்டிய உதவிகளை விருப்புடன் தொடர்ந்து செய்து வருபவர். அவருக்கு என்றும் கடப்பாடு உடையேன்.

**மே. து. ராசு குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இலக்கிய ஆராய்ச்சியின் வளர்ச்சியை ஊன்றிக் கவனிப்போர்க்கு ஒருண்மை தெளிவாகத் தெரியவரும். இலக்கிய ஆராய்ச்சிக்கே உரிய சில சிறப்பான நெறிமுறைகள் இருப்பினும், ஏனைய துறைகளிற் பயின்றுவரும் ஆய்வு நெறிகளும் அணுகுமுறைகளும் தவிர்க்க இயலாதவாறு அதற்கும் பொருத்தமானவையாக அமைந்து விடுகின்றன. உதாரணமாக, இலங்கை, இந்தியா முதலிய நாடுகளின் வரலாறு சரியாகத் தெரியப்படாத ஒரு காலகட்டத்தில் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் நாட்டின் பொதுவான வரலாற்றை எழுதுவதே முதல் தேவையாயிருந்தது. சுருக்க வரலாறுகூட மெத்தப் பெரிய சாதனையாயிருந்தது. காலப்போக்கில் பல வகையான ஆய்வுகள் பெருகிய பின், வெவ்வேறு பிரதேசங்களைப் பற்றியும் குறுகிய காலப்பகுதிகளைப் பற்றியும் பல்வேறு இயக்கங்களைப் பற்றியும் முக்கியமான மனிதரைப் பற்றியும் தனித் தனியே நுண்ணாய்வுகள் மேற்கொள்ளப்படலாயின.

இலக்கிய வரலாற்று ஆய்விலும் அவ்வாறே. மு. சி. பூரணலிங்கம் பிள்ளையிலிருந்து மு. அருணாசலம் வரையில் நடைபெற்றிருக்கும் இலக்கிய வரலாற்றாராய்ச்சிகளைக் கவனித்தால் இவ்வுண்மை புலனாகும். தமிழிலக்கிய ஆய்வு இன்று உலகின் பல பகுதிகளிலும் பல மொழிகளிலும் நடைபெறுகிறது. ஆங்கிலேய, அமெரிக்க, ருஷிய, சீன, செக்கோசிலவாக்கிய ஆய்வாளர்கள் உள்ளிட்ட பல நாட்டவர் இந்தியவியல் ஆய்வுகளின் ஒரு பகுதியாகத் தமிழியலில் தனியான ஆர்வமுடையவராய் உள்ளனர்.

இவ்வாறு பல்கிப் பெருகி உலகளாவியதாய் உருப்பெற்று வரும் தமிழ் இலக்கிய ஆய்வு விருத்தியின் பிரிக்கவியலாத அம்சமாகவே ஈழத்துத் தமிழிலக்கிய ஆய்வும் கடந்த சில வருடங்களாகப் பரிணமித்து வந்திருக்கிறது. ஈழத்து நவீன தமிழிலக்கிய ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்திருக்கும் நான் அதன் ஊற்றுக்களையும் மூலங்களையும் தேடியபொழுது பின்னோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அரும்பிய சில செல்நெறிகளும் கருத்தோட்டங்களும் இருபதாம் நூற்றாண்டிலே மலர்ச்சி பெற்று மேலும் செழுமையடைவதைக் காண முடிந்தது. தமிழிலக்கிய வரலாற்றிலே பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குரிய முக்கியத்துவத்தை மயிலை சீனி வேங்கடசாமி முதலிய சிலர் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியுள்ளனரெனினும், அது போதுமான அளவில் விளக்கிக் கூறப்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை. ஈழத்து இலக்கியத்தைப் பொறுத்தவரையிலே சில சிறப்பியல்புடைய வரலாற்றுக் காரணங்களினால் சென்ற நூற்றாண்டு அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. கிறித்தவம், மேனாட்டுக் கலாசாரம், ஆங்கிலக் கல்வி ஆகியவற்றின் கடுமையான தாக்கமும் அதற்கு எதிரான நிலைப்பாடுகளும் இலக்கிய இலக்கண சிந்தனை களுக்கும் ஆக்கங்களுக்கும் புதிய உத்வேகத்தைக் கொடுத்தன. இந்நூலிலுள்ள கட்டுரைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழிலக்கியத்தின் சிற்சில அம்சங்களை விவரித்து விளக்குகின்றன. பொதுவான வளர்ச்சியையும் அவ்வளர்ச் சிக்குச் சிலர் ஆற்றிய காத்திரமான பங்களிப்பையும் அங்கங்கு மதிப்பிடவும் முயன்றிருக்கிறேன். அம்முயற்சிக்கு வாழ்க்கை வரலாறு, சமூக வரலாறு, இலக்கியத்தின் சமூகவியல், இலக்கியத் திறனாய்வு என்பன துணை புரிந்துள்ளன. சமுதாய ஆய்வும் இலக்கிய ஆய்வும் ஒன்றுக்கொன்று அநுசரணையானவை என்பதை இயன்றளவு காட்டியிருக்கிறேன்.

ஏறத்தாழக் கால் நூற்றாண்டுக்கு முன் ஈழத்திலே தோன்றிய ஓர் இலக்கிய எழுச்சியின்போது தேசிய-ஜனநாயக-முற்போக்கு உள்ளடக்கத்தின் இன்றியமையாமை பெரிதும் வற்புறுத்தப்பட்டது. குறிப்பாகச் சிருஷ்டியிலக்கியம் காலம், களம் முதலியவற்றை நன்கு பிரதிபலிக்கும் வகையில் அமைந் திருத்தலே தருக்கரீதியானதும் வரலாற்று ஓட்டத்திற்கு இசை வானதும் என்று கூறும் குரல்கள் ஓங்கி ஒலித்தன. அவற்றின் பெறுபேறு இன்று இலக்கிய வரலாறாகிவிட்டது. இப்பொழுது இலங்கைத் தமிழிலக்கியம் 'அக்கரை இலக்கியம்' என்று வழங்கப்பட்ட விளக்கவுரையைக் கடந்து, தமிழிலக்கியத் தினின்றும் பிரிக்க இயலாத அங்கமாகி இருப்பதைத் தமிழகத்து முன்னணி ஆய்வாளரும் திறனாய்வாளரும் ஏற்றுக்கொண்டுள் ளனர்.

ஐம்பதுகளிலே சமகாலச் சிருஷ்டி இலக்கியம் தொடர்பாக எழுந்த குரல் படிப்படியாக ஏனைய பிரிவுகளுக்கும் பரவி, ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தையே நுணுக்கமாக ஆராய்ந்து நிறுவும் சூழ்நிலை உருவாகியது. அதன் பயனாக ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதும் முயற்சிகள் மேற் கொள்ளப்படலாயின. இந்நூலிலுள்ள கட்டுரைகள அப் பின்னணியில் எழுதப்பட்டவையே. அதனால் இவற்றில் வரலாற்றுப் பார்வை அழுத்தம் பெற்றிருக்கக் காண லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரைகளை எழுதுங்கால் விதந்துரைக்கக் கூடிய செய்தி ஒன்று மேலும் மேலும் முனைப்பாய்த் தோன்றியது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழகத்திலும் ஈழத்திலும் வாழ்ந்த தமிழ்ப்புலவர்கள் மிகவும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். போக்குவரத்து வசதிகளும் தொடர்பியற் சாதனங்களும் மிக அருகலாக இருந்த அக்காலத்தில் இரு நிலங்களிலுமிருந்த தமிழறிஞர்களும் புலவர்களும் கவிராயர் களும் கணக்காயர்களும் அடிக்கடி சந்தித்து அளவளாவிப் பரஸ்பரம் உணர்வைப் பரிமாறிக் கொண்டனர். இன்று நாம் நம்பமுடியாத அளவில் இது நடைபெற்றிருக்கிறது. ஈழத்த வரான சு. சரவண முத்துப் பிள்ளை 'சைவ-உதயபானு' என் னும் பத்திரிகையை ஏக காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்தும் மதுரையிலிருந்தும் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த அளவிற்கு அன்றைய உலகம்—கற்றோர் உலகம்—நன்கு ஒன்றிணைக்கப் பட்டதாயிருந்தது. இன்று, எத்தனையோ வசதிகள்—வாய்ப்பு கள்—இருந்தும்—வெளியீட்டுச் சாதனங்கள் வெகுவாகப்பரவி யிருந்தும்—இரு நாடுகளிலுமுள்ள எழுத்தாளரிற் பெரும் பாலானோர் தத்தம் குறுகிய எல்லைகளுக்கு அப்பாலுள்ள இலக்கியங்களை அறியாதவர்களாகவே காணப்படுகின்றனர். இது கவலைக்குரியது. நம் காலத்து முரண்படு செய்திகளில் ஒன்று.

இந்நூலிலே விவரிக்கப்படும் ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் அனைவருமே இந்தியாவுடன் இடையறாத தொடர்புகள் வைத்திருந்தவர்கள். சிலர் தமிழகத்திலேயே சில காலம் தங்கி யிருந்து தமிழ்ப்பணியும் சைவப்பணியும் ஆற்றியவர்கள். சிலர் அங்கேயே இறந்தவர்கள். மறுபுறமாக நாம் எதிர்பார்க்கக் கூடியதைப் பார்க்கிலும் அநேக தமிழ்நாட்டுக் கலைஞர்களும் இலக்கிய ஆசிரியர்களும் இலங்கைக்குப் போய்வந்திருக் கின்றனர். இரு வழியாலும் ஆசிரிய மாணவப் பரம்பரைகள் உருவாகின. உண்மையில், ஈழத்து இலக்கியம் என்று நாம் குறிப்பிடுவது தமிழ்நாட்டு இலக்கியமாகவும் அமைந்துவிடு வதைக் காணும்பொழுது வியப்படைகிறோம். இந்நோக்கிலே அணுகுமிடத்து ஈழத்தின் தனித்துவத்தை வலியுறுத்தும் பொருட்டு எழுந்த இலக்கிய இயக்கம் அதன் வளர்ச்சிப் போக்கிலே பொதுப் பண்புகளைக் கண்டறியும் நிலையை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கிய வளர்ச்சியின் இயக்கவியலை உணர்பவர்களுக்கு இது எவ்வித ஆச்சரியத்தை யும் அளிக்கமாட்டாது. ஈழத்துப் புலவர்களை ஆராயும் பொழுது அடிக்கடி தமிழ்நாட்டுப் புலவர்களையும் சேர்த்தே விவரிக்க வேண்டியுள்ளது. ஒரு வகையில் ஈழத்து இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி பற்றியதாக இருக்கும். இந்நூல் இன்னொரு வகையில் பொதுவாகத் தமிழிலக்கியம் பற்றியதாகவும் அமைந்துவிடுதல் மனங்கொளத்தக்கது.

பல்கலைக்கழகங்களிலே நுண்ணாய்வுகள் நடத்தப்படும் இந் நாட்களில் ஆராய்ச்சியாளருக்கு இந்நூலிலுள்ள பல விஷயங் கள் வெவ்வேறு வழிகளிற் பயன்படும் என்று எண்ணுகிறேன். கருத்துரைகளோடு கவனத்திற் கொள்ள வேண்டிய தகவல்களும் சேர்ந்திருப்பதால் இவை ஆராய்ச்சியாளர்க்கு அநுகூல மாயிருக்கும். எனினும் தனித்துறை வல்லுநர்களை மாத்திரம் மனங்கொண்டு இக்கட்டுரைகளை நான் எழுதவில்லை. இலக்கிய ஆர்வலர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும்—குறிப்பாக ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தை அறிய விரும்பும் தமிழக எழுத்தாளருக்கும்—இந்நூல் ஓரளவு உபயோகமாக இருக்கும்.

இத்தகைய ஒரு நூலை எழுதித் தருமாறு இரண்டு மூன்று ஆண்டுகளாக இடைவிடாது என்னைத் தூண்டி வந்தவர் நண்பர் டாக்டர் மே. து. ராசு குமார். நிருவாகப்பணியும் வேறு கடப்பாடுகளும் என் நேரத்தையெல்லாம் தமதாக்கிக் கொள் ளும் நிலையில் நூல் எழுதுவதற்குத் தேவையளவு அவகாச மின்றி ஏங்கும் என்னை எப்படியோ எழுதச் செய்யும் வல்லமை அவருக்கிருக்கிறது. இந்நூலை அன்புடன் பெற்று ஆர்வத் துடன் வெளியிடும் அவருக்கு என் இதயபூர்வமான நன்றி என்றும் உரியது.

என் எழுத்துப் பணியை இலகு வாக்குவதற்காக அன்றா டன்ற அலுவல்கள் பலவற்றிலிருந்து என்னை விடுவித்துக் காலத்தைக் கையிலே தந்து உதவுவதோடமையாது, கையெழுத் துப் பிரதியைத் தயாரிப்பதிலும் கட்டுரைகளைத் தொகுப்பதி லும் இன்னோரன்ன இன்றியமையாச் சகாயங்களிலும் முழு மனதுடன் ஒத்தாசை புரிந்த என் மனைவி சர்வ மங்களத்துக்கு நூலாக்கத்திலே பெரும்பங்குண்டு

முன்னாள் மாணவரும் இன்னாள் துணை விரிவுரையாளரு மான சி. சிவலிங்கராஜா அவ்வப்போது தேவையறிந்து செய்த உதவிக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**க. கைலாசபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நோக்குகளும் போக்குகளும்

இலங்கைப் பாரம்பரியத்திலே தமிழ் இலக்கியம் என்னும் பொருள் பற்றிச் சிந்திக்கும்பொழுது ஓர் எண்ணம் முதலிலே தலைதூக்குகிறது. இந்நாட்டில் தமிழ் மக்கள் வாழத் தொடங்கிய காலமுதல் வாழ்க்கைக்குத் தேவையான தத்துவம், சமயம், சட்டம், நுண்கலைகள், மொழி, இலக்கியம், வைத்தியம் முதலாய பல்வேறு துறைகளை உருவாக்கி வளர்த்து வந்துள்ளனர். இத்துறைகள் அனைத்திலும் பற்பல சாதனைகளைத் தமிழ் மக்கள் கண்டுள்ளனர். எனினும் இவை யாவற்றுள்ளும் இலக்கியத் துறையிலேயே நீண்டகாலமாகச் சாதனைகளை ஈட்டியுள்ளனர் எனலாம். சங்கச் செய்யுள்கள் சிலவற்றைப் பாடியவராகக் கருதப்படும் ஈழத்துப் பூதந்தேவனாரிலிருந்து இன்று கவிதை எழுதும் இ. முருகையன் ஈறாக இலக்கிய மரபு ஒன்று சங்கிலிப்பின்னல் போல வாழையடி வாழையென வந்திருப்பதை இலகுவில் மறுக்கவியலாது.

இதற்கு ஓர் அடிப்படைக் காரணமும் உண்டு. மனித சமுதாய வரலாற்றில் மொழியே வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் இன்றியமையாத தொன்றாகும். ஒரு மக்கட் சமுதாயம், ஒருமைப்பாடுடையதாயும் தொடர்ந்து நிலைபேறு உடையதாயும் இருப்பதற்கு மொழியே முக்கிய காரணியாக அமைகிறது. எனவே மொழியை மூலப்பொருளாயும் ஆதாரமாயும் கொண்டு அமைக்கப்படும் இலக்கியம், மொழியைப் போன்று முக்கியத்துவம் பெறுவதில் வியப்பெதுவுமில்லை. அதுமட்டுமன்று, மொழியே இலக்கியத்துக்கு முன்னர் தோன்றுகிறது. அதனடியாகவே இலக்கியம் தோன்றுகிறது. ஆயினும் இலக்கியம் தோன்றிய பின், குறிப்பாக அது கலைவடிவம் பெற்றபின், அதுவே மொழியைச் சிறப்பாக வளர்க்கும் ஒரு சாதனமாகவும் அமைந்து விடுகிறது. அந்த வகையில் இலங்கைப் பாரம்பரியத்தில் தமிழ் இலக்கியம் நெடுங்காலமாக வளர்ந்து வந்திருக்கிறதென்றால் அவ்வளர்ச்சியின் உடனிகழ்ச்சியாகவும் பெறுபேறாகவும் மொழியும் வளர்ந்துள்ளது என்பது மனங்கொள்ள வேண்டிய உண்மையாகும். இத்தகைய ஒரு கட்டுரையிலே இலங்கைத் தமிழிலக்கியத்தின் வரலாற்றையோ, பரப்பையோ முழுமையாகவும் விரிவாகவும் எடுத்துரைத்தல் இயலாது. நமது பாரம்பரியத்தின் பின்னணியில் எவ்வாறு எத்தகைய இலக்கியங்கள் காலப்போக்கில் உருவாகி வந்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்டுவதே பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் பாரம்பரியம் என்னும் பதத்தை நோக்குவோம். ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒவ்வொரு பாரம்பரியம் உண்டு. காலங்காலமாக அச்சமூகத்தாரால் நம்பப்பட்டும் பேணப் பட்டும் வந்த விழுமியங்கள், மதிப்பீடுகள், பெறுமானங்கள் என்பவற்றைப் பற்றுக்கோடாகக் கொண்டு மேற்கொள்ளப் படும் ஒழுகலாறும் செயல்களுமே பாரம்பரியத்திற்குப் பொருள் தருகின்றன. பாரம்பரியம் ஒவ்வொரு காலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தாரைப் பாதிப்பது போல, ஒவ்வொரு காலப்பகுதியில் சிலபல புதிய பெறுமானங்களையும் பெறுகிறது. இதனையே மரபும் மாற்றமும் என்று சமூகவியலாளரும் வரலாற்றியலாளரும் குறிப்பிடுவர். இன்னொரு வகையாகச் சொல்வதானால், ஒவ்வொரு சமூக மக்களும், தாம் ஒரு குறிப் பிட்ட பாரம்பரியத்திற்கு வாரிசுகள் என்னும் உணர்வுடை யவராய் வாழ்கின்றனர். அது அவர்களுடைய வாழ்க்கைத் தத்துவத்தையும் உலக நோக்கையும் பெருமளவிற்குப் பாதிக் கிறது. குறிப்பாகக் கலை, இலக்கியம், சமய நம்பிக்கை, ஒழுக்க வியல் ஆகிய துறைகளில் பாரம்பரிய உணர்வு முனைப்பாகச் செயல்படுவதைக் காணலாம். ஆனால் அதே வேளையில், வெவ்வேறு காலப் பகுதிகளில் பாரம்பரியத்திற்கு வாரிசுகளாக இருப்பவர்கள் தமது பாரம்பரியக் கூறுகளில் சிற்சில பொருத்த மின்மைகளும் குறைபாடுகளும் இருப்பதைக் கண்டு அவற்றிற்குப் பரிகாரம் தேட முற்படுவதையும் காண்கிறோம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அத்தகைய ஒரு உணர்வு இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் ஏற்பட்டது. பொதுவாகத் தமிழ் கூறு நல்லுலகிற்கு இது பொருந்துமாயினும் பல்வேறு காரணங்களினால், தமிழகத்திலும் பார்க்க இலங்கையிலே, அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பத்தொன்ப தாம் நூற்றாண்டு பல மாற்றங்களைக் கண்டதோடு, பின்னர் வந்த மாற்றங்கள் பலவற்றுக்கு அத்திவாரம் இடப்பட்ட காலப் பகுதியாயும் அமைகின்றது.

இலக்கிய வரலாற்றினைக் காலப்பகுதிகளாக வகுப்பதி லுள்ள சிரமங்களையும் இடர்ப்பாடுகளையும் இலக்கியக் கல்வி யாளர் நன்குணர்வர். குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்கு உரியனவாய்க் கூறும் சிறப்பியல்புகளும் பண்புகளும் மற்றொரு காலப்பகுதியிற் காணப்படா என்பது கருத்தன்று. ஆராய்ச்சி வசதிக்காகவும் இலகுவிலே தொகுத்து நோக்குவதற்காகவும் சில காலவரையறைகளை நாம் வகுத்துக் கொள்கிறோம். அந்த வகையில் நவீன காலப் பகுதியைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு எனவும் இருபதாம் நூற்றாண்டு எனவும் இங்கு அமைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொன்று; இலக்கியம் என்று தற்காலத்திலே நாம் குறிப்பிடும்போது சிருஷ்டி இலக்கியம் அதாவது கவிதை, புனைகதை, நாடகம், திறனாய்வு முதலிய ஆற்றல் இலக்கியப் பிரிவுகளையே கருதுகின்றோம். ஆயினும் இது மிகச் சமீப காலத்தில் ஏற்பட்ட வழக்காறு ஒன்றாகும். பொதுவாக இலக்கியம் என்று முற்காலத்திற் குறிப்பிட்டோர், சிருஷ்டி யிலக்கியத்தை மாத்திரமின்றி சமயம், தத்துவம், சாத்திரம், அறிவியல் முதலிய துறைகளைச் சார்ந்த நூல்களையும் கருத்திற் கொண்டனர். ஆதிகாலத்திலே வாய்மொழிப் பாடல்கள் வழங்கியபொழுது வாகட நூலிலிருந்து வமிச வரலாறு வரையில் செய்யுள் வடிவிலேயே அமைந்து நிலவின என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. அவை அனைத்தும் செய்யுள் என்றே கருதப்பட்டன. உதாரணமாக இலங்கையிலே, யாழ்ப்பாணத்திலிருந்து அரசாண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலப்பிரிவிலே எழுந்த பல செய்யுள் நூல்கள் வைத்தியம், சோதிடம், சிற்பம், வமிசவரலாறு முதலியவற்றைப் பாடற்பொருளாகக் கொண்டிருத்தலைக் காணலாம். தம்பதேனியாவிலிருந்து அரசாண்ட நாலாம் பராக்கிரமபாகுவின் அவையிலே அரங்கேற்றப்பெற்ற சோதிட நூலாம் 'சரசோதிமாலை' இயற்றிய போசராசபண்டிதரும், ஐந்தாம் செகராசசேகரன் காலத்தில் எழுந்த சோதிட நூலாம் 'செகராசசேகரமாலை' இயற்றிய சோமஐயரும், 'பரராச சேகரம்' முதலிய வைத்திய நூல்களை எழுதியோரும் செய்யுள் செய்த புலவர்களாகவே கருதப்பட்டமை கவனிக்கத் தக்கது. இந்நூல்களிற் பெரும்பாலானவை விருத்தப்பாக்களால் அமைந்தவை. வரலாற்றுப் பாங்கில் அமைந்த 'வையாபாடல்' என்னும் நூலும் இவ்விடத்திற் குறிப்பிடக்கூடியதே. இதனை இயற்றியவர் வையாபுரி ஐயர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தை ஆராயும் நாம் இப்போது விதியை நினைந்து கொள்ளுதல் நன்று. தமிழ் நாட்டிலுஞ்சரி, இலங்கையிலுஞ்சரி பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சிக்கும் அதற்கு முற்பட்ட காலத்து இலக்கியங்களுக்கும் சில அடிப்படைக் குணவேறுபாடுகள் இருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டைத் தனியொரு காலப்பகுதியாக நாம் கொள்ளுவதற்கு ஏதுவாக இருப்பன இவ்வேறுபாடுகளேயாம். இவ்வேறுபாடுகளைக் கூர்ந்து நோக்கினால் நவீன காலப்பகுதியின் தோற்றத்தைக் குறிக்கும் காலக்கோட்டினைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி அளவில் வரைந்து கொள்ளலாம் எனத் தோன்றும். அரசியல் சமூக நிலைமைகளும் இப்பாகுபாட்டிற்கு அரண் செய்வனவாய் உள்ளன. இவற்றை இன்று நோக்குகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வசாதாரணமானவையாய்த் தோன்றக்கூடும். ஆனால், சென்ற நூற்றாண்டிலே அவை மொழியிலக்கிய வளர்ச்சியில் எத்துணைப் பெருமாற்றங்களைப் புகுத்தின என்பதை உணர்ந்து கொள்ளல் மிகவும் இன்றியமையாதது.

இவற்றுள் முதலாவதாக அச்சியந்திரம் உண்டாக்கிய பெருமாற்றத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். பெரும் பிரயாசைப்பட்டு ஏடுகளில் நூல்களை எழுதிப்படித்துப் பேணி வந்த சூழ்நிலையில், தமிழ் அச்சு எழுத்துக்கள் எத்தகைய புரட்சியை உண்டாக்கின என்பதை இன்று நாம் இலகுவில் உணர்ந்து கொள்ள இயலாது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் பலர் அச்சு எழுத்தை 'எழுதா எழுத்து' என்று வருணித்தனர். பதினாறாம் நூற்றாண்டு முதலாய் அச்சு வாகனம் தமிழ் நூல்கள் பதிப்பிப்பதற்குப் பயன்பட்டதாயினும், அச்சியந்திரம் என்ற மகத்தான சாதனம் பெரும்பாலும் மேனாட்டுக் கிறித்தவ பாதிரிமாரிடத்தும், சில ஐரோப்பிய நிறுவனங்களிடத்துமே ஏகபோக உரிமையாயிருந்தது. உடைமை வரையறுக்கப்பட்டு ஏகபோகமாய் இருந்தமையால் அதன் பயன்பாடும் குறுகியதாயும் விதேசிய நலன்கருதியதாயும் அமைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்துதான் சுதேசிகள் அச்சியந்திரசாலைகள் நிறுவும் வாய்ப்பையும் உரிமையையும் பெற்றனர். சுருங்கச் சொன்னால் பதினாறாம் நூற்றாண்டு தொடக்கம் கிறித்தவ சமய நூல்களையும் அவற்றின் ஆக்கத்திற்கும்—பிரசாரத்திற்கும் இன்றியமையாதனவாயிருந்த 'கருவி' நூல்களையும் கண்ட தமிழகம், சென்ற நூற்றாண்டிலே பிறதுறைகளைச் சார்ந்த நூல்களையும் அச்சிற் கண்டது.

ஏட்டுச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த பழந்தமிழ் இலக்கண இலக்கிய சாத்திர நூல்கள் சொற்ப விலையில் ஆயிரக்கணக்கான பிரதிகளாக நடமாடும் சூழ்நிலை தோன்றியது. இது இலக்கியத்தின் பண்பிலும் பெருமாற்றத்தை உண்டாக்கியது. பிரபுக்கள், ஜமீன்தார்கள், சிற்றரசர்கள், மடாதிபதிகள், கணக்காயர்கள் மட்டத்தில் மட்டும் வழங்கிய இலக்கியம் ஓரளவு பொதுமக்கள் மட்டத்திற்கும் பரவ வழி பிறந்தது.

நவீன சமுதாயங்களைப் பற்றி எழுதும் சமூகவியலாளர்கள், அவற்றின் அடிப்படை இலட்சணங்கள் சிலவற்றைக் குறிப்பிடுவர். அவற்றுள் ஒன்று, பொதுமக்கள் அல்லது வெகுசனம் சமுதாயத்தின் பெரும்பகுதியினர் என்னும் உணர்வு பல்வேறு வழிகளிற் புலப்படுதலாகும். வெகுசனம் என்னும் சொல்லிற்கு இரு முக்கிய பொருட்குறிப்புண்டு. பெரும்பான்மைப் பொது மக்கள், அடிநில வகுப்பு மக்கள், சாதாரண மக்கள் இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையே அச்சொல் சிறப்பாகக் குறிக்கிறது. முற்பட்ட காலங்களிலும்—நிலமானிய சமுதாயத்திலும் அதற்கு முற்பட்ட சமுதாயங்களிலும்—கீழோர் இருந்த போதும் அவர்கள் உள்ளமை ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை. அவர்கள் சமுதாய வரம்புகளுக்கு வெளியே நின்றவர்கள். பழந்தமிழ் நூலாம் தொல்காப்பியம் கூறுவதுபோல "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே" என்னும் அடிப்படையில் இயற்கையுலகும் செயற்கையுலகும் உயர்ந்தோர் குழாத்துக்கே இயல்புரிமையாய் உள்ளன என்ற எண்ணமே ஐயத்துக்கு இடமின்றி நிலவியது. பொதுமக்கள் மாக்களாகவே கருதப்பட்டனர். வெகுசனம் என்ற கருத்தும் அதையுணர்த்தும் சொற்றொடரும் அத்தகைய சூழமைவிலே தோன்ற வாய்ப்பில்லை. முதலாளித்துவ சமுதாய அமைப்பிலேயே—கைத்தொழில் வளர்ச்சியும் நகர வாழ்க்கையும் போக்குவரத்து சாதனங்களின் அபிவிருத்தியும் ஏற்பட்ட சூழ்நிலையிலேயே—முதன்முதலாக வெகுசனம் என்ற கோட்பாடு உருவாகியது. முதலாளித்துவ அமைப்பினைக் குடியேற்ற நாடுகளிலே புகுத்திய ஆங்கிலேயர் ஆட்சியின்போது தவிர்க்கவியலாதவாறு வெகுசனக்கோட்பாடு மெல்ல மெல்ல உருவாகியதில் வியப்பெதுவுமில்லை. தொடக்கத்தில் மத்தியதர வகுப்பினரையே 'பொதுமக்கள்' என்னும் தொடர் குறித்ததாயினும், காலப் போக்கிலே பரந்த உழைப்பாளர் வர்க்கத்தையும் குறிப்பதாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழுலகிலே பொதுமக்கள் என்ற சொல் இன்றைய வழக்கைப் பார்க்கிலும் குறுகிய அர்த்தத்திலேயே பயன்படுத்தப்பட்டது என்பதில் ஐயமில்லை. எனினும் தமிழிற்கு அக்கருத்துப்படிவம் புதிதாகவே வந்தமைந்தது என்பது மனங்கொளவேண்டியது.

இன்னொரு வகையிற் கூறுவதானால் 'வெகுசனம்' என்னும் கருத்தோட்டம் வளரும் அளவிற்கு ஒப்பவே, ஒரு சமுதாயத்திலே ஜனநாயகமும் வளர்ச்சியுறுகிறது எனலாம். இலக்கியத்தைப் பொறுத்தவரையில் வெகுசனக் கோட்பாடு தோன்றிய பின் எழுத்தாளர்களின் நோக்கிலும் போக்கிலும் அடிப்படையான மாற்றங்கள் உண்டாயின: உதாரணமாக முற்காலத்தில் இலக்கிய கர்த்தா ஒரு குறிப்பிட்ட நபரையோ குழுவையோ மனங்கொண்டே தனது நூலை இயற்றினான். அரசவையோ, ஆதீனமோ, தனியொரு வள்ளலோ அல்லது ஆலய நிர்வாகிகளோ ஆதரித்த அளவிற்கே இலக்கிய கர்த்தாவின் ஆர்வமும் பொருட்பரப்பும் இருந்தன. ஆனால் வெகுசனம் என்ற கோட்பாடு எழுந்ததன் பின்னர் ஓர் எழுத்தாளன் அதைப் புறக்கணித்துவிட்டு இயங்க இயலாத நிலை தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளன்—சுவைஞர் உறவு இருபதாம் நூற்றாண்டிலே இயக்கவியல் ரீதியில் அமையலாயிற்று.

நமது நாட்டிலே தேசிய எழுச்சியின் முன்னோடியாக முகிழ்த்த சமய மறுமலர்ச்சியின் வழிகோலிகளல் ஒருவராக விளங்கிய யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரது எழுத்துக்களில் இக்கோட்பாட்டின் தாக்கத்தை மிகத் தெளிவாய்க் கண்டு கொள்ளலாம். 'இலங்கை நேசன்' பத்திரிகையிலே அவர் எழுதிய கட்டுரை ஒன்றின் தலைப்பு 'வெகுசனத் துரோகம்' என்பதாகும்.

> பத்திரிகையினது கடமை யாது? சனங்களுக்குப் பொது நன்மை செய்வது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துக்கள், கிறிஸ்தவர்கள், மகமதியர்கள் என்கிற சனங்கள் இப்பொழுது இரண்டு மூன்று வருஷகாலம் என்ன நிலையில் இருக்கிறார்கள்? துவையினந் துரையுடைய சிநேகிதர்களாகிய சில உத்தியோகத்தர்கள் ஒழிந்த மற்றச் சனங்களெல்லாம் துவையினந் துரையினாலும் அவர் கீழுத்தியோகத்தர்களாலுந் துன்பமே அனுபவிக்கிறார்கள். சனங்களுடைய பணங்கொண்டு நடத்தப்படுகின்ற 'உதய தாரகை' இதிலே தன் கடைமையைச் செய்கின்றதா? இல்லை பின் யாது செய்கின்றது. துவையினந் துரைக்குச் சார்பாகச் சனங்களுக்கு மாறாகப் பொய் வார்த்தையே பேசுகின்றது.

மேலேயுள்ள பகுதியில் 'சனங்கள்' என்னும் சொல்லை எத்தகைய பரந்த—ஆழமான—பொருளில் நாவலர் பயன்படுத்தியுள்ளார் என்பது நுனித்து நோக்கத்தக்கது. இக்கட்டுரையில் மட்டுமின்றி 'சமயம், சமயம்', 'இது நல்ல சமயம்' முதலிய கட்டுரைகளிலும் "யாழ்ப்பாணத்துச் சனங்களே" என்று விளித்துப் பல விஷயங்களைக் கூறுகிறார். சைவப் பிரசாரகர் என்ற புனைபெயரில் பல கட்டுரைகள் எழுதிய நாவலர், பொது சனத் தொடர்பின் முக்கியத்துவத்தை அறிவு பூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் குறிப்பிடத்தக்க வகையில் தெளிந்திருந்தார் என்பதில் தடையில்லை. அவரைப் பின்பற்றிச் சமயத் தொண்டிலும் இலக்கியப் பணியிலும் ஈடுபட்ட அவரது மாணாக்கரிடத்தும் ஞானபுத்திரர்களிடத்தும் இவ்வுணர்வின் செயற்பாட்டினைக் கண்டுகொள்ளலாம். அவர்களிற் பெரும்பாலானோர் வாழ்க்கையின் ஏதோ ஒரு கட்டத்திலே பத்திராதிபர்களாக இருந்திருக்கின்றனர். வைரம் பாய்ந்த வாதப் பிரதிவாதங்களை நடத்தியிருக்கின்றனர். கல்வியிலும் சமய சீர்திருத்தத்திலும் கருத்துடையராய் இருந்த நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய நிலையில் கிடைத்த துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள், நூல்கள் வாயிலாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் மக்களுடன் தொடர்பு கொண்டு உழைத்தமை மனங்கொள்ள வேண்டியதொன்றாகும். அவர் 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் போற்றப்படுவதற்கு ஏதுவாக இருந்தது இந்த உரைநடைத் தேவையை இனங்கண்டு அதற்கேற்றவாறு எழுதியமையேயாகும்.

அன்றுவரை நிலவிவந்த வழக்கத்திற்கு மாறாக ஜமீன்தார்களையோ, ஆதீன கர்த்தாக்களையோ அல்லது பரம்பரைப் பிரபுக்களையோ மாத்திரம் சற்காரியங்களுக்கு நம்பியிராமல் சாதாரண கல்வியறிவுடைய மக்களிடமும் பொதுக்காரியங்களுக்கு உதவி கோரினார் நாவலர். 1860, 1868, 1870ஆம் வருடங்களில் அவர் எழுதி வெளியிட்ட விக்கியாபனங்கள் இதனை நிரூபிக்கின்றன. நாவலரவர்களின் தனித்தன்மையான கண்ணோட்டத்தை—அன்றைய நிலையில்—சனங்களை அவர் சார்ந்து நின்றமையை—இவை எடுத்துக்காட்டுவதுடன் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே பொதுமக்கள் குறித்துக் கற்றோர் சிலர் மத்தியில் ஏற்பட்ட மனமாற்றத்தையும் விளக்குகின்றன.

இத்தகைய சமூகவியல் மாற்றங்களின் விளைவாகவே வாசகர்—நூல்களை வாங்கிப் படிப்போர்—என்னும் ஒரு மக்கட்பிரிவினர் சமுதாயத்திலே உருவாயினர். பத்திரிகாசிரியர் மட்டுமின்றி, நூலாசிரியரும் வாசகர்களை (audience) மனங்கொண்டே எழுத வேண்டிய நிலை தோன்றியது. அதனால் இலக்கியக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் மகத்தானது. அதுகாலவரை ஓர் இலக்கியப் படைப்பை ஆக்கியோனின் நிலையிலிருந்தே நோக்கினர். ஆக்கியோனது பிறப்பு, வளர்ப்பு, கல்வி, கேள்வி அறிவு, தகைமை, மாண்பு முதலியவற்றை மனங்கொண்டே ஒரு நூலைப் போற்றினர். நூலாசிரியன் 'கருவிலே திருவுடையான்' என்றெல்லாம் போற்றப்பட்டான். நூலைப் படித்துப் பயன்படுத்துவோரைப் பற்றிய பேச்சுக்கு இடம் இருக்கவில்லை. அவர்கள் கல்வி கேள்விகளில் வல்லவராய் இருப்பர் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கற்றோர்க்கு மட்டுமின்றி மற்றோர்க்கும் நூலெழுதும் நிலை தோன்றியதும் நூலாசிரியன் யாரை நோக்கி எழுதுகிறான் என்ற வினா முதன்மை பெறத் துவங்கியது. வாசகர் கூட்டத்தை நன்குணர்ந்து எழுதுவோனே ஆற்றல் வாய்ந்தவனாகக் கருதப்படும் நிலையும் தோன்றியது. அது மட்டுமன்று. வாசகர்—சுவைஞர்—பற்றிய எண்ணம் இலக்கியகர்த்தாவின் ஆக்கத்தை ஆரம்பத்திலிருந்தே பாதிக்கலாயிற்று. குறிப்பாகச் சிருஷ்டி கர்த்தா உள்ளடக்கம், உருவம், விநியோகம் பற்றியெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு வழிகளிற் சிந்திக்க முற்பட்டான். எளிமை என்ற கோட்பாடும் இதன் பயனாகத் தோன்றியது. இருபதாம் நூற்றாண்டிலேயே தமிழைப் பொறுத்தவரையில் இம்மாற்றம் முனைப்பான வடிவம் பெற்றதெனலாம். ஆயினும் நாவலர் காலத்திலிருந்து இதன் ஊற்றைக் கண்டு கொள்ளலாம். இதற்கு உடனிகழ்ச்சியாகப் புதிய கல்விமுறையும் மெல்ல உருவாகியது. குரு-சிஷ்ய முறையிற் சில இலக்கண இலக்கிய சாத்திர நூல்களைக் கற்கும் குருகுலக்கல்வி முறைக்குப் பதிலாகப் பள்ளிக்கூடங்களிற் பொதுப்பட மாணவர்கள் பாடத் திட்டங்களுக்கமையக் கல்வி கற்கும் முறை ஏற்பட்டது. ஆறுமுகநாவலரது கல்விப்பணியை இச்சூழ்நிலையில் வைத்தே நாம் நோக்குதல் வேண்டும்.

மேலே நாம் விவரித்த மாற்றங்கள், அதாவது பொது மக்கள் சமுதாயத்திலே பெறத் தொடங்கிய முக்கியத் துவம், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் வெவ்வேறு அளவிலும் விதத்திலும் வெளிப்பட்டது. கல்வித்துறையில் பழைய திண்ணைப் பள்ளிக்கூடங்களுக்குப் பதிலாகப் பொதுக் கல்வி நடைபெறும் கல்வி நிலையங்கள், கிறித்தவ மிசனரி மாராலும் அரசாங்கத்தாலும் தனிப்பட்டோராலும் தாபிக்கப் பெற்றன. அதுகாலவரை இருந்ததுபோல 'உயர்ந்த சாதி' மக்கள் மட்டுமன்றி, 'தாழ்ந்த சாதி' மக்களும் கல்வி கற்கும் வாய்ப்பு நாளடைவில் ஏற்பட்டது.

இத்தகைய கல்விக் கூடங்களிலே பயன்படுத்துவதற்குப் புதிய முறைப்பாடப் புத்தகங்களும் தேவைப்பட்டன. பாடப் புத்தகங்களின் பெருக்கத்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண் டில் தமிழ்மொழி, இலக்கியம் என்பவற்றில் நூதனமான வளர்ச்சிக்கு வாய்ப்பு உண்டாகியது. அச்சியந்திரம் வந்ததன் பயனாகச் சமயச்சார்புடைய நூல்கள் மட்டுமன்றிப் பிறதுறை களைச் சேர்ந்த நூல்களும்* எழுந்தன. இலங்கையைப் பொறுத்தமட்டில் இரு துறைகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாயுள்ளன. விஞ்ஞானத் துறையில் சென்ற நூற்றாண் டின் பிற்பகுதியிலே இன்றுகூடப் பெருமைப்படத்தக்க சில நூல்களை டாக்டர் கிறீனும் அவரைச் சார்ந்தோரும் சுயமாக எழுதியும் மொழிபெயர்த்தும் ஆக்கினர். 1850ஆம் ஆண்டளவில் வைத்தியர் கிறீன் (1822—1884) விஞ்ஞானத்தை—அதுவும் சிக்கல் நிறைந்த வைத்தியவியலை—மாணவர்க்குத் தமிழில் போதிக்க முற்பட்டார். இம்முயற்சியின் பயனாக நவீன வைத்திய ஞானம் மாத்திரம் நம்மவருக்குக் கிடைத்தது என்று கருதுவது தவறு. 'இரண வைத்தியம்' (1867), 'மனுஷ அங்காதிபாதம்' (1872), 'மனுஷ சுகரணம்' (1872), 'கெமிஸ்தம்' (1875), 'வைத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகரம்' (1875) முதலிய நூல்கள் புதிய விஷய ஞானத்தைப் புகுத்திய அதே வேளையில் தமிழ் மொழியின் வளத்தையும் புதுக் கருத்துக்களை வெளிப்படுத்தும் அதன் ஆற்றலையும் அதிகரிக்கச் செய்தன. அதாவது மொழியின் ஏற்புடைமையை விருத்தியடையச் செய்தன.

இத்தகைய சூழலிலேயே தமிழ் உரைநடை அரும்பி மலர்ச்சி பெற்றது என்பது மனங்கொள்ளத்தக்கது. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழக வகுப்புவரை வசனநடையே வழங்கும் இக்காலத்தில், உரைநடை பெருவழக்குப் பெறாத காலத்தைக் கற்பனை செய்து பார்ப்பதே கடினமாயிருக்கும். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தைச் சரிவர விளங்கிக் கொள்வதற்கு இச்செய்தியை நினைந்து கொள்ளல் இன்றியமையாதது.

1862ஆம் வருடம் எம். உவின்ஸ்லோ என்னும் பாதிரியார் 'தமிழ் ஆங்கில அகராதி' ஒன்றை வெளியிட்டார். இலங்கைத் தமிழறிஞர் பலரின் உதவியுடன் வெளிவந்த அவ்வகராதியின் முன்னுரையில் பதிப்பாசிரியர் மேல்வருமாறு குறிப்பிட்டார்.

> தமிழ் உரைநடை இப்பொழுதுதான் வடிவம் பெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே அதனைச் செம்மையாக உருவாக்குவதற்குத் திட்ப நுட்பம் வாய்ந்த அறிஞர்கள் இருப்பார்களானால் அம்முயற்சி தக்க பலன் தரும். சுதேசிகள் பலர் விரைவாகச் செய்யுள் இயற்ற வல்லவராயினும் பிழையின்றி உரைநடை ஒரு பக்கந்தானும் எழுத மாட்டாராய் இருக்கக் காணலாம்.

ஆறுமுகநாவலர் போதனைகளாற் கவரப்பட்டு உரைநடையில் இலக்கண நூல் எழுதுவது நலம் எனக்கருதி 'தமிழ் இலக்கணத்தெளிவு' (1893) என்னும் நூலை வெளியிட்ட தாவீது யோசேப்பு பின்வருமாறு கூறியுள்ளார்.

> நமது முன்னோர்கள் தமிழைப் பேசினார்கள். வாக்கிய சரூபமாகப் புஸ்தகங்களையும் கடிதங்களையும் எழுதுவது அவர்கள் வழக்கமல்ல—பாட்டாய் எழுதுவது அவர்களுக்கு மகாபிரியம். வசனம் எழுதினால் மதிப்பில்லை. இதனால் முன்னோர்கள் எழுதியவையெல்லாம் (வைத்தியம், அகராதி, இலக்கணம், ஸ்தல சரித்திரம், கடிதங்கள் யாவும்) பாட்டாகவேயிருந்தன. பாட்டெழுதத் தெரியாதவன் மூடன் எனப்பட்டான். இதனால் முன் எழுதிய இலக்கண நூல்களில் வசனரூபமாய் எழுதுவதிற்கு விதிவகைகள் விஸ்தரிக்கப்படவில்லை. ஏறக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைய 150 வருடங்களாக வசன ரூபமான புஸ்தகங்கள் எழுதப்பட்டு வருகின்றன.

சபாபதி நாவலர் தாம் எழுதிய 'திராவிடப் பிரகாசிகை' (1899) என்னும் வசன நூலில் கூறுவதும் கவனிக்கத்தக்கது.

தமிழ் மொழியார் சூத்திரஞ் செய்யுளென்றும் மிரண்டாற்றானே நூலியற்றுப: உரையாணியன்ற தொல்லாசிரியர் தமிழ் நூல் அரிதென்றுணர்க.

இத்தகைய சூழ்நிலையிலே சிறு பிள்ளைகளின் வயது, பக்குவம், தராதரம் என்பவற்றை அனுசரித்து எழுதப்பட்ட பாடப் புத்தகத்திலிருந்து 'பெரியபுராண சூசனம்' வரை பல்வேறு தரப்பட்ட வசனநடைகளை எழுதியபடியாலேயே ஆறுமுக நாவலர் புதுநெறி கண்டவராகப் போற்றப்பட்டார். இலக்கணம் கற்க முற்படும் இளமாணாக்கரின் அறிவு வளர்ச்சியை மனங்கொண்டே ஆறுமுக நாவலர் வசன இலக்கண நூல்களை எழுதினார். 'இலக்கணச் சுருக்கம்' (1873), 'இலக்கண வினாவிடை' (1875) என்னும் இரண்டும் அவர் எழுதி வெளியிட்டவை. திருவேற்காடு சுப்பராய முதலியார் 1811இல் வெளியிட்ட 'தமிழ் விளக்கம்' என்னும் இலக்கண நூல் தொடக்கம், தாண்டவராய முதலியாரின் 'இலக்கண வினா விடை' (1820), இராமாநுச கவிராயரின் 'இலக்கணச் சுருக்கம்' (1848), விசாகப் பெருமாள் ஐயரின் 'பாலபோத இலக்கணம்' (1852), மயிலை சவேரிமுத்துப் பிள்ளையின் 'இலக்கணச் சுருக்கம்' (1860) முதலியன நாவலருக்கு முன்பு தமிழகத்தில் எழுதப்பட்ட வசன இலக்கண நூல்களிற் சில. இவற்றுள் பல வினாவும் விடையுமாக அமைந்தவை. நாவலருக்கு முற்பட்டவர்கள் இயற்றிய வசன இலக்கண நூல்களுள் திருத்தணிகை விசாகப் பெருமாளையரின் 'இலக்கணச் சுருக்க வினாவிடை' விதந்துரைக்க வேண்டியது. ஆயினும் நாவலர் தமது கல்விப் போதனை நோக்கங்களுக்கு இயைய சந்தி பிரித்தும் நிறுத்தக் குறியீடுகளை அமைத்தும் எளிமையான உதாரணங்களை எடுத்தாண்டும் இலகுவான முறையில் இலக்கண நூல்களை வெளியிட்டார். விசாகப் பெருமாளையரின் நூலையும் நாவலரின் நூலையும் ஒப்புநோக்கினால் இவ்வுண்மை தெற்றெனப் புலனாகும். நாவலர் பரம்பரையில் வந்தவர்கள் அவரைப் பின்பற்றி வசன இலக்கண நூல்களை அவ்வப் போது பிரசுரித்தனர். பொதுமக்களும் அதாவது சாதாரண கல்வியறிவுடையவர்களும் புகழ்பெற்ற சிறந்த நூல்களைப் படித்துப் பயனடைதல் வேண்டும் என்பதற்காகவே நாவலர் பத்திய ரூபமாக, அதாவது செய்யுள் வடிவில் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூல்களைக் கத்திய ரூபமாகச் செய்து வெளியிட்டார். உதாரணமாக 'திருவிளையாடப் புராணம்' வசன நூலிலே பின்வருமாறு காணப்படுகிறது. "இது கற்றோரும் மற்றோரு மாகிய யாவருக்கும் எளிதில் பயன்படும் பொருட்டு நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களால் கத்தியரூபமாகச் செய்து சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபுரி பாலகர் விசுவநாத பிள்ளையால் சென்னைப்பட்டணம் வித்தியாநுபாலன யந்திர சாலையில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது." 'சிதம்பர மான்மியம்' போன்ற நூலை நாவலர் எளிய நடையில் எழுதுவதற்குப் பொதுமக்களை மனங்கொண்டிருந்தமையே காரணமாகும். நாவலர் மரபில் வந்தவர்களும் தமிழ் வசன இலக்கியத்தை வளர்த்தனர். சிவசங்கர பண்டிதரிலிருந்து சு. சிவபாத சுந்தரனார் வரையில் பேச்சாலும் எழுத்தாலும் வசனநடையைப் பலர் வளர்த்தனர்.

இலக்கண இலக்கிய வரம்பினின்றும் சற்று விரிவடைந்த வளர்ச்சியைக் காட்டுவனவாயுள்ளன தமிழ் அகராதி முயற்சிகள். 1833ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்து அமெரிக்க மிஷின் பாதிரிமார்கள் தமிழ், ஆங்கில இருமொழி அகராதிகள் தயாரிக்கத் திட்டமிட்டுப் பணியாற்றி வந்தனர். 'யாழ்ப்பாண அகராதி' யென்றும் 'மானிப்பாய் அகராதி' என்றும் வழங்கிய பேரகராதி 1842இல் வெளியிடப்பட்டது. அதனை அடுத்து வெளிவந்த 'உவின்ஸ்லோ அகராதி' முதல் கதிரவேற்பிள்ளை அகராதிவரையீறாக ஈழநாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகராதி முயற்சிகள் பல.

இவையாவற்றையும் நோக்கும்போது சில வளர்ச்சி நிலைகள் நமக்குப் புலப்படும். அச்சியந்திரத்தின் வருகையோடு சமகால நிகழ்ச்சிகளாக ஈழத்திலே சென்ற நூற்றாண்டிற் சிற்சில புதுத்துறைகளில் நம்மவர் கவனஞ் சென்றது. தமிழ்நாட்டிலும் இப்போக்குகள் காணப்படினும் இலங்கையில் இவை முனைப்பாகக் காணப்படுகின்றன என்பதை மறுக்கவியலாது. விஞ்ஞானத்தைத் தமிழில் பெயர்த்ததிலும் அகராதிகளை அரும்பாடுபட்டுத் தயாரித்ததிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்தமிழகம் முன்னின்றது என்று பட்டியல் தயாரித்துப் பெருமைப்படுவதிலே பயனெதுவும் இல்லை. இம்முயற்சிகள் வரலாற்று உண்மைகளே. ஆனால் இவற்றின் விளைவுகளே முக்கியமாகக் கருதத்தக்கன. இதனை ஓர் உதாரண விளக்கத்தோடு நோக்குவோம்.

'தமிழ் தந்த தாமோதரனார்' என்றழைக்கப்படும் சி.வை. தாமோதரம் பிள்ளையை (1832–1901) எடுத்துக்கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டால் அவரது பதிப்பு முயற்சிகளே நமக்கு நினைவுவரும். உ.வே. சாமிநாதையர்க்கு வழிகாட்டியாகவும் சில வழிகளில் அவரினும் மேம்பட்டவராயும் விளங்கிய தாமோதரம்பிள்ளை முற்கூறிய போக்குகளின் சின்னமாக விளங்குகிறார் எனலாம். உதாரணமாக 'வீரசோழியப்' பதிப்புரையிலே (1881), அவர் தமிழிலக்கிய சரிதத்தைக் காலமுறைப்படி பாகுபாடு செய்ய முயன்றார்: அபோதகாலம், அக்ஷரகாலம், இலக்கண காலம், சமுதாய காலம், அநாதரகாலம், சமணகாலம், இதிஹாஸ காலம், ஆதீனகாலம் என எட்டுக் காலப்பிரிவுகளாய்த் தமிழிலக்கிய வரலாற்றை வகுத்தார். தமிழ் நாட்டில் மொழியியல், வரலாறு, கல்லெழுத்தாய்வு, அகழ்வாய்வு முதலியன ஓங்கி வளராத காலத்தில் வாழ்ந்தபோதும் பிள்ளையவர்கள் இத்தகைய காலவாராய்ச்சியை மேற்கொண்டது நான் முற்கூறிய பொதுப்போக்குகளின் தாக்கத்தினாலேயே என்பது கூறாமலே விளங்கும். இன்று தாமோதரம்பிள்ளை பதிப்புக்களையும் சாமிநாதையர் பதிப்புக்களையும் ஒப்புநோக்கி ஆராயும் வாய்ப்பு எமக்குண்டு. அவ்வாறு பார்க்கும்போது காலவாராய்ச்சி, சரித்திரவுணர்வு, ஒப்பியல் நோக்கு, திறனாயும் தன்மை, ஆய்வறிவு நேர்மை, முறையியல் நுட்பம் ஆகியன ஐயரிலும் பார்க்கப் பிள்ளையிடத்து அதிகமாகக் காணப்படுதல் தெளிவு.

இதை இன்னொரு விதத்திலும் விவரித்தல் கூடும். சாமிநாதையர் அநேக நூல்களைப் பதிப்பித்துள்ளனர் எனினும் மூலபாட ஆராய்ச்சியினைக் கோட்பாட்டு அடிப்படையில் மேற்கொண்டார் என்று கூறுவதற்கில்லை. அனுபவத்தால் அறியப்படுகிறவற்றை ஆதாரமாய்க் கொண்டே நூல்களைப் பதிப்பித்து வந்தார். மூலபாட ஆராய்ச்சி சம்பந்தமான நெறிகளில் அவருக்கு அக்கறையிருந்ததற்கோ, அவற்றில் ஒன்றையோ பலவற்றையோ தமது ஆய்வுகளுக்குத் துணைக் கொண்டார் என்பதற்கோ அவரது பதிப்புரைகளில் எதுவித சான்றுமில்லை. மூலபாட ஆராய்ச்சி குறித்து அவரது விவரணங்களும் அவதானிப்புகளும் மிகச் சொற்பமே. காலப்போக்கிலே பதிப்பிக்கும் நூலின் பொருளாராய்ச்சி, பல்வேறு அட்டவணைகள் சொல்லடைவுகள் தயாரித்தல் என்பவற்றிலேயே அவரது கவனம் அதிகமாயிருந்தது. அவருக்கு உதவியாளராக இருந்தோர் அத்தகைய பட்டியல்களைத் தயாரித்து உதவினர் என்றும் கருத இடமுண்டு. மூலபாட ஆய்வு யாந்திரீகமயமாக ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்தல், ஒப்புநோக்குதல், ஒரு குறிப்பிட்ட பாடத்தைத் தேர்ந்தெடுத்தல், ஒப்புமைப் பகுதிகளைக் குறிப்பிடுதல் என்ற முறையில் அமைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கச் சொன்னால் மூலபாடத் திறனாய்வை ஒரு நெறி முறைப் பயிற்சியாகவோ, சாஸ்திரமாகவோ, அறிவியற்றுறை யாகவோ அவர் கருதவில்லை. அதற்குத் தேவையான பயிற்சி யும் அறிவும் அவருக்கிருந்தன என்றும் கூறுவதற்கு இல்லை. அவரது பின்னணி அதற்கு இடமளித்திருக்காது.

ஆனால் சி. வை. தாமோதரம் பிள்ளை மூலபாடத் திற னாய்வை முழுமையான ஆய்வுத் துறையாகக் கொண்டு செயற் பட்டார். அனுபவ அறிவுக்கு அனுசரணையாக மூலபாடத் திற னாய்வுக் கொள்கைகளைக் கைக்கொண்டார். தாம் பதிப்பித்த நூல்களுக்கு அவர் எழுதிய நீண்ட பதிப்புரைகளைப் படிப் போர்க்கு, பதிப்புக்கலையைப் பற்றி எத்துணை நுட்பமாகவும் விரிவாகவும் அவர் சிந்தித்துச் செயலாற்றினார் என்னும் உண்மை தெரியவரும். ஐயருக்கும் பிள்ளையவர்களுக்கும் அணுகுமுறையிலிருந்த அடிப்படை வேறுபாடே இவ்வாறு வெளிப்பட்டதெனலாம். எத்தனையோ வழிகளில் இவ்வேறு பாடு புலப்படுவதாயிற்று. உதாரணமாக ஒரு நூலைப் பதிப் பிக்கையில், அதற்கு முற்பட்ட பதிப்பு முயற்சிகளைக் குறிப் பிடுதல் வரலாற்றுணர்ச்சியின் பாற்படுவதாகும். பின்வரும் ஆய்வாளருக்குச் சில செய்திகள் வழங்கப்படுதல் இன்றியமை யாதது. பின்வரும் பதிப்புக்கள் மேலும் திருத்தமடைய அச் செய்திகளும் தகவல்களும் உதவும். இவ்விஷயத்தில் இரு வருக்கும் வேறுபாடு உண்டு. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை கூறுகிறார்:

> இவர் (தாமோதரம்பிள்ளை) தாம் செய்யும் பதிப்புக்கு முன்னே நிகழ்ந்திருக்கும் பதிப்பு வகைகளை எடுத்துக் கூறுமாற்றால் நூற்பதிப்பு வரலாறு காண்டற்கு வேண்டும் கருவிகளையுதவுவது இன்பந் தருகிறது. தாம் பதிப்பிக்கும் நூலின் முன்னைப் பதிப்பு வகைகளை எடுத்துக்காட்டும் பண்பு, ஒப்பற்ற பதிப்பாசிரியர் எனவுயர் புகழ்படைத்த திரு. உ. வே. சாமிநாதைய ரிடத்தும் குறைந்தே காணப்படுகிறது.

இது கசப்பான உண்மையைச் சற்று மென்மையாகக் கூறும் குறைமதிப்பீட்டுரையேயாகும். உண்மையில் தம்மையொத்த அறிஞர்களினதும் சகாக்களினதும் சேவையையும் சாதனையை யும் அங்கீகரிக்க ஐயர் தயக்கங் காட்டுபவராயிருந்திருக்கிறார் கள். இது சம்பந்தமாக எஸ். வையாபுரிப்பிள்ளை கூறியிருக் கிறார்:

> இங்கே குறித்த கண்டனப் பிரசுரங்களும் ஐயருக்கு நன்மையாகவே முடிந்தன. இப்பிரசுரங்களில் தமக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சரியெனத் தோன்றியவற்றைத் தமது பிற பதிப்புக்களில் உடன்பட்டுக் கொள்ளலாயினர். ஆனால் ஐயர் ஓரிடத் தேனும் இக்கண்டனவுரைகளால் இத்திருத்தமடைந்தது என்று தெரிவிக்கவேயில்லை. இதுவேயன்றி, தமக்கு முன்பு பிறர் பரிசோதித்து வெளியிட்ட பதிப்புக்களைப் பற்றியும் பெரும்பாலும் இவர் குறித்ததே இல்லை. இங்ஙனம் தெரிவித்தல் பதிப்பாசிரியரின் கடமை.

அதுமட்டுமன்று; குறுகிய சிற்றுணர்ச்சிகளைக் கடந்த பெருந்தன்மையும் அவரிடத்துக் குறைவாகவே இருந்திருக்கிறது. இது வெறும் குணவியல்புக் குறைபாடு மாத்திரமன்று. அவரது கல்வியின் தன்மையாலும் ஏற்பட்டதெனலாம். இவரோடு தாமோதரம் பிள்ளையை ஒப்பிடும்போது உன்னத பதிப்பா சிரியருக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் அவரிடம் பொருந்தி யிருக்கக் காணலாம். இதற்கு முக்கியக் காரணம் பிள்ளை யவர்கள் இளமைக்காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பொதுவாக யாழ்ப்பாணத்திலும் பின்னர் சென்னைப் பல்கலைக்கழகச் சூழலில் ஆங்கில இலக்கிய ஆய்வாளர் தொடர் பாலும் பெற்ற மனப்பக்குவமே எனலாம். யாவற்றுக்கும் மேலாக "ஆங்கிலம் கற்று மேனாட்டுக் கலைப்பண்பில் திளைத்துத் தம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்குத் தொண்டு" புரிய வேண்டும் என்ற பேரவாவும் அவருக்கு இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகையவரே மற் றொரு ஈழத்தறிஞரான வி. கனகசபைப் பிள்ளை (1855—1906). 'பத்துப்பாட்டு,' 'புறநானூறு,' 'சிலப்பதிகாரம்' முதலிய பழந்தமிழ் இலக்கியப் பிரதிகளைப் பெற்றுச் சாமிநாதையர்க்கு இவர் உதவியவர்.

> ஏட்டுப் பிரதிகள் கொடுத்து உதவிபுரிந்ததேயன்றித் தாம் அருமையாகக் கண்டு தெளிந்த ஆராய்ச்சி உண்மை களையும் தமிழறிஞர்கட்குத் தாராளமாக வெளியிட்டு உதவி வந்தனர்.

சுருங்கச் சொன்னால் சென்ற நூற்றாண்டிலே சிருஷ்டி யிலக்கியத் துறையில் தென்இந்தியாவைப் போலவே ஈழத்திலும் பெருவாரியான தலபுராணங்களும் பல்வேறு பிரபந்தங்களும் தோன்றிக் கொண்டிருந்தபோதிலும், கல்வியாளர் மத்தியில் விஞ்ஞானம், அகராதி, வரலாறு முதலிய துறைகளில் பேரூக்கமும் சிறப்பறிவும் நிலவியமையால் அவற்றின் தாக்கத்தை மொழி இலக்கிய முயற்சிகளிலும் ஆக்கங்களிலும் நாம் காணக்கூடியதாயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ்க் கவிதையாளரும் இலக்கிய கர்த்தாக் களும் பெருமளவுக்குத் தென்னிந்தியப் பிரமுகர்களையும் மடாதிபதிகளையும் சாராமலிருந்ததும் இத்தனிப்போக்குக் காரணமாகலாம். ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை ஆகியோர் மடங்களுடன் தொடர்பு கொண்டிருந்தன ரெனினும் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைப் போல மடங்களையும் அரசவைகளையும் அண்டி வாழ்ந் தவர்கள் அல்லர். அதுமட்டுமன்று. நாவலர், தாமோதரம் பிள்ளை முதலியோர் ஆங்காங்கே மடாதிபதிகளின் முயற்சி யின்மையையும் அசட்டை மனப்பான்மையையும் இடித்துரைத் துள்ளனர். அவர்கள் ஆங்கில அறிவு படைத்த புதிய மத்தியதர வர்க்கத்தினரின் ஆதரவையும் பெற்றவர்கள். அதாவது கல்லூரிகளிலும் பின்னர் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலம் படித்துப் பட்டம் பெற்றும் பல்வேறு 'துரைத்தன'த் தொழில் கள் பார்த்தும் வாழ்ந்த மத்தியதர வர்க்கத்தினரின் ஆதரவும் சகவாசமும் அவர்களுக்கு இருந்தமையால் அவர்கள் நோக்கி லும் போக்கிலும் நவீனத்துவம் இருந்ததில் வியப்பெதுவு மில்லை.

துரைத்தன உத்தியோகம் பார்த்த சைமன் காசிச் செட்டி, சி. வை. தாமோதரம் பிள்ளை, கு. வைமன் கதிரவேற்பிள்ளை, த. பொன்னம்பலபிள்ளை, த. செல்லப்பாபிள்ளை, தி. த. கனக சுந்தரம் பிள்ளை, தி த. சரவணமுத்துப்பிள்ளை, வி. கனகசபைப் பிள்ளை, சி. வை. சின்னப்பாபிள்ளை ஆகியோரது பார்வையை யும் ஆய்வுகளையும், சம்பிரதாய முறைப்படி மடங்களை அண்டி வாழ்ந்த கோப்பாய்ச் சபாபதிநாவலர் ஆக்கங்களையும் ஒப்பு நோக்கினால் இவ்வேறுபாடு தெளிவாகும். திருவாவடு துறை ஆதீன வித்வானாகவும் இராமநாதபுரத்துச் சேது பதியின் அவைப்புலவராயும் விளங்கிய சபாபதி நாவலர் பிரபந் தங்களை இயற்றுவதிலும் சேதுபதிகள் அவையில் பிரசங்கங்கள் செய்வதிலும் காலத்தைக் கழித்தார். இலக்கிய வரலாற்றுச் சாயலுடையதும் சிலவழிகளில் முன்னோடியானதுமான 'திராவிடப் பிரகாசிகை' (1899) என்னும் நூலிற்கூட சி. வை. தாமோதரம் பிள்ளையைக் கண்டனஞ் செய்வதிலேயே குறிப்பிடத்தக்க அளவு பகுதியைச் செலவிட்டார்.

இவ்வாறு பார்க்கும்போது, பத்தொன்பதாம் நூற்றாண் டிலே பகுத்தறிவு, வரலாற்றுணர்வு, ஆங்கில அறிவு, சமூக நோக்கு முதலிய பண்புகளைத் தழுவி நின்று இலக்கணம், இலக்கியம், வரலாறு, அறிவியல் ஆகிய துறைகளில் உழைத்த இலங்கையர்களே பிற்காலத்தவர் நினைவுகூரத்தக்க ஆக்கங் களைச் செய்தனர் என்பது உறுதிப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இருபதாம் நூற்றாண்டுக்குரிய சில போக்குகளையும் நெறிகளையும் முற்படச் சுட்டிச்சென்றனர் என்று கூறலாம். உதாரணமாக ஆர்னல் சதாசிவம் பிள்ளை 'பாவலர் சரித்திர தீபகம்' (1886) என்ற தமிழ்ப்புலவர் சரித்திர நூலை மட்டுமின்றி 'நன்னெறிக் கதாசங்கிரகம்' என்ற சிறுகதைப் போக்கில் அமைந்த நூலையும் 1869இல் வெளியிட்டார். இவர் 'வானசாத்திரம்,' 'சாதாரண இதிகாசம்' ஆகிய நூல்களையும் இயற்றி வெளியிட்டார். ஆர்னல் சதாசிவம் பிள்ளையைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து அவர் பல்லாண்டுகள் ஆசிரியராக விளங்கிய 'உதயதாரகை' பத்திரிகையையும் 'இலங்கை நேசன்,' 'இலங்கை வர்த்தமானி' முதலிய பத்திரிகைகளையும் குறிப்பிடுதல் வேண்டும். உதயதாரகை சமயநோக்கில் நடத்தப் பெற்றதொன்றாயினும் இலக்கண இலக்கிய சர்ச்சைகளுக்கும் இடமளித்தது. நாவலர் உட்படப் பலர் அதில் எழுதியுள்ளனர். இம்முயற்சிகள் வீறு கொண்ட நடையொன்று வளரவும் ஏதுவாயிற்று. தமிழிலக்கியத்தில் எல்லைகள் விரிவடைவதற்குப் பத்திரிகைகளும் ஏதுக்களாயிருந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்காலிலேயே தமிழில் நாவல் இலக்கியம் தோன்றியது. 1876இல் முதலாவது தமிழ் நாவலாம் 'பிரதாப முதலியார் சரித்திரம்' வெளிவந்தது. இலங்கையைப் பொறுத்தவரையில் அறிஞர் சித்திலெவ்வை (1838—1898) எழுதிய 'அஸன்பே சரித்திரம்' (1885) காலத்தால் முற்பட்டதாகத் தெரிகிறது. தி. த. சரவணமுத்துப்பிள்ளையின் 'மோகனாங்கி' (1895) அடுத்துத் தோன்றியது. முன்னோடி நாவல்களாக இவை அமைந்திருப்பினும் சிறந்த இலக்கியங்களாகக் கொள்ளப்படலாமோ என்பது ஐயத்துக்குரியதே. இருபதாம் நூற்றாண்டிலேயே நாவலின் உருவம், உள்ளடக்கம் என்பன வளமும் வனப்பும் பெற்றன. நவீன அணுகு நெறிகளும் செல்நெறிகளும் அரும்பிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே 'வசன காவியம்' எனக் கருதப்படத்தக்க புது இலக்கிய வடிவமாம் நாவலும் இலங்கையிலே தோன்றியமை எதிர்பார்க்கக்கூடியதே. தமிழ்நாட்டு இலக்கிய வளர்ச்சிக்குச் சமாந்தரமாக இலங்கையிலும் நூல்கள் எழுந்தன என்பதை நாவலிலக்கியத்தின் பரிணாமம் நமக்கு நிரூபிக்கின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்காலிலே, 1876இல் முதலாவது தமிழ் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' வெளிவந்தது. ஒன்பது வருடங்களுள் (1885) இலங்கையில் எழுதப்பட்ட முதல் தமிழ் நாவல் 'அஸன்பேயுடைய சரித்திரம்' வெளிவந்தது. முஸ்லிம் அறிஞரும் சமூக சீர்திருத்தவாதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளராயுமிருந்த சித்திலெவ்வை இதனை எழுதினார். ஆரம்பகால நாவல்களிலே கணிசமானவை வீரதீரக் கதைப் பிரிவைச் சார்ந்தனவாயிருத்தல் பல மொழிகளிலும் காணப் படுவது ஒன்றாகும். இந்நாவலின் கதாநாயகனான அஸன் பல நாடுகளுக்குச் சென்று பல சூழ்ச்சிகட்கு ஆட்பட்டுத் தப்பி இறுதியில் மேனிலை எய்துகிறான். அவனைப் போன்றமைந்த 'கடல் கடந்த' பாத்திரம் அவ்வேளையில் தமிழுக்கு முற்றிலும் புதிதாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பிறிதோரிடத் திலே நான் கூறியிருப்பதுபோல, சித்திலெவ்வையின் நூலைப் படிக்குமொருவர் அதற்கு 'அஸன்பேயின் திகைப்பூட்டும் நூதன சாகஸங்கள்' என்று பெயரிட்டிருக்கலாமென்று எண்ணக்கூடியதாய் உள்ளது. கதையின் கருவும் போக்கும் அவ்விதம் எண்ணத்தக்கதாகவே அமைந்துள்ளன. இலங்கை யில் வெளிவந்த மூன்றாவது சமூக நாவல் எனக் கருதப்படும் 'ஊசோன் பாலந்தை கதை' என்ற படைப்பும் வீரசாகஸக் கதைப் பிரிவைச் சேர்ந்ததாய்த் தோன்றுகிறது. திருகோண மலை எஸ். இன்னாசித் தம்பியால் எழுதப்பட்டு அச்சுவேலி எஸ். தம்பிமுத்துப் பிள்ளையால் 1891இல் பதிப்பித்து வெளி யிடப் பெற்ற இந்நூல் போர்த்துக்கேய நெடுங்கதை ஒன்றைத் தழுவியது எனக் கொள்ளல் தவறாகாது.

இவ்விடத்திலே ஈழத்துத் தமிழ் நாவல்களின் தோற்றத் துக்கு அநுகூலமாயிருந்த சில காரணிகளைப் பற்றிக் குறிப் பிடுதல் பொருத்தமாயிருக்கும். ஆங்கிலேயர் ஆட்சியிலே மிஷனரித் தொடர்பினாலும் ஆங்கிலக் கல்வியாலும் புதிய பொருளியல் நிலைமைகளினாலும் காலப்போக்கிலே அகலுலகத் தொடர்புகளினாலும் மத்தியதர வர்க்கம் ஒன்று உருவாகியது. உலகின் வேறு பகுதிகளில் நிகழ்ந்ததைப் போலவே இங்கும் மத்தியதர வர்க்கத்தின் எழுச்சியுடனேயே பத்திரிகைகளும் புனைகதைகளும் பெருவழக்குப் பெற்றன. பத்திரிகைகள் 'வாசனைப் பயிற்சி' முக்கியமானது எனக் கருதிச் செயற் பட்டன. வாசனை பெருக பத்திரிகை பெருகும். பத்திரிகைகள் சஞ்சிகைகள் பெருக, நூல்வாசிப்புப் பழக்கமும் அதிகரிக்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்தில் ஏறத்தாழ இருபத்தைந்து தமிழ்ப் பத்திரிகைகள் தோன்றி இயங் கின என்று கூறப்படுகிறது. இவை பொது மக்களின் வாசனைப் பழக்கத்தை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தன. ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் சிறாரும் நூல்கள் படிக்கும் பழக்கம் வளர்ச்சியடைந்தது. நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து நாட்டின் பலபாகங்களில் நூல் நிலையங்கள் நிறுவப்பட்டன. 'ஈழத்துத் தமிழ் நாவல்களின் தோற்றம்' என்னும் கட்டுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே திரு. ஆ. சிவநேசச் செல்வன் கூறியிருப்பது போல, "ஈழத்தின் ஆரம்பகால நாவலாசிரியர்களான சித்திலெப்பை, இன்னாசித்தம்பி, சரவண முத்துப்பிள்ளை ஆகியோர் கண்டி, திருகோணமலையில் உருவாகியமைக்கு அப்பிரதேசத்தில் ஏற்பட்ட நூல்நிலைய வசதியும் பின்னணியும் ஒரு காரணமாக இருக்கலாம்."

நாவலாசிரியர்களும் தமக்கு வாய்ப்பாக இருந்த வாசகர் வட்டத்தை மனங்கொண்டே எழுதினர். உதாரணமாக 1895இல் 'மோகனாங்கி' வெளிவந்தபோது பத்திரிகை ஒன்றிலே பின்வரும் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது:

மோகனாங்கி

> தமிழில் செய்யப்பட்ட ஒரு விநோதமான கதை.
> பெண்களுக்கும் பாலியர்களுக்கும் இன்னு மற்றவர்களுக்கும் உபயோகமாகும்படி மிக தெளிவாகவும் இனிமையாகவும் தற்கால ஆங்கிலேய கதை (Novel) களைப் போல எழுதப்பட்டது...........

அக்காலப் பத்திரிகைகளிலே தொடர்கதைகளும் வெளி வரத் துவங்கியிருந்தன. மொத்தத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே கல்வி, கலாசாரத் துறைகளிலே ஏற்பட்ட மாற்றங்களின் விளைவுகளில் ஒன்றாகவே நாவலிலக்கியம் தோன்றி வளர்ந்தது என்று கூறலாம்.

இறுதியாக, இந்நூற்றாண்டுச் செய்யுளிலக்கியம் பற்றிச் சிறிது கூறுதல் வேண்டும். மரபுவழித் தமிழ்ச் செய்யுள்கள் பல்லாயிரக்கணக்கிலே பாடப்பெற்ற காலம் இந்நூற்றாண்டு என்பதை நாம் மனங்கொள்ளும் போது, தமிழகத்தைப் போலவே ஈழத்திலும் புலவர்கள் பலவகைப்பட்ட பிரபந்தங்களை இயற்றினர் என்பது கூறாமலே விளங்கும். சுன்னாகம் முருகேச பண்டிதர் (1830—1900), க. மயில்வாகனப் புலவர் (1875—1918), உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் (1852—1910), திருக்கோணமலை வே. அகிலேச பிள்ளை (1853—1910) முதலியோருடன், அருள்வாக்கி அப்துல் காதிறுப்புலவர் (1866—1918), சு. மு. அசனாலெப்பைப் புலவர் (1870—1918), யாழ்ப்பாணம் சுலைமான் லெப்பைப் புலவர் முதலிய ஆற்றல் வாய்ந்த முஸ்லிம் புலவர்களுமாக ஏறத்தாழ ஐம்பது புலவர்களுக்கு மேல் நூற்றுக்கணக்கான பிரபந்தங்களையும் தனிச் செய்யுள்களையும் பாடிச்சென்றனர். ஆயினும் அவற்றுட் பெரும்பாலானவை கால வெள்ளத்தில் அடிபட்டுச் சென்றன. இன்று பின்னோக்கிப் பார்க்குமிடத்து, அக்காலத்தில் முளைவிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவங்கியிருந்த சில சமுதாய இலக்கியங்களே காலத்தை வென்று நிற்கக்கூடியனவாகத் தோன்றுகின்றன.

மாற்றமின்றி வழிவழிவந்த சமுதாய அமைப்பையும் அதற்கு அரண்செய்யும் வகையில் அமைந்த நம்பிக்கைகளையும் வழக்காறுகளையும் மாற்றமின்றி எடுத்துரைப்பனவே மரபுவழி நூல்கள். சாசுவதமாகக் கருதப்பட்டவற்றைச் சொற்களில் தீட்டிக்காட்டுவதே மரபுவழி இலக்கியம். ஆயினும் நாம் மேலே விவரித்த பல்வகைப்பட்ட மாற்றங்கள் பெருமளவிலே சமுதாய நிகழ்ச்சிகளாகத் தோற்றமளிக்கும்பொழுது புலவர்களும் எழுத்தாளர்களும் மெல்ல மெல்ல அம்மாற்றங்களையும் அம்மாற்றங்களின் விளைவுகளையும் தமது படைப்புகளில் பிரதிபலிக்கத் துவங்குகின்றனர். புதிய இலக்கிய வடிவங்கள் பிறப்பதற்குரிய அடிப்படையே இதுதானே. வெள்ளைக்கார ஆட்சியிலே ஏற்பட்ட புதிய வாழ்க்கை முறைகள், புதுவகையான ஏற்றத்தாழ்வுகள், புதிய நீதிமுறை, புதிய சம்பிரதாயங்கள், புதிய பழக்கவழக்கங்கள், பொதுவில் சமுதாயத்திலே தலைதடுமாற்றங்களையும் சமகால நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டிய சூழ்நிலையையும் தோற்றுவித்தன. இம் மாற்றங்களையும் விளைவுகளையும் புலவர்கள் அனைவரும் சரிவரப்புரிந்து கொண்டனர் என்றோ அவற்றைக் காரண காரியத் தொடர்புடன் விவரிக்க முனைந்தனர் என்றோ கூறுவதற்கில்லை. ஆயினும் சிலர் அவற்றின் சிற்சில அம்சங்களைக் கண்டு மரபுவழி இலக்கிய வடிவங்களுக்குள்ளேயே அவற்றைச் சித்திரிக்க முற்பட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இத்தகைய சமுதாய இலக்கிய நோக்கு தலைதூக்கியது. சமகாலச் சம்பவங்களைக் கவிப்பொருளாகக் கொண்டு அவற்றினூடாகச் சமுதாயநிலைகள் பற்றிக் கருத்துரைக்கும் போக்கு புதிய செல்நெறியொன்றின் பிரதிபலிப்பு என்றே கொள்ளவேண்டும்.

இலங்கைத் தமிழிலக்கியத்தில் இப்போக்கின் முதற்குரலாக உடுப்பிட்டி குமாரசுவாமி முதலியாரின் (1791—1874) சில மரபுவழிச் செய்யுள்கள் அமைந்துள்ளன. பிரபுத்துவக் குடும்பத்திற் பிறந்து வளர்ந்து இலக்கிய இலக்கண அறிவும் வாய்க்கப் பெற்றிருந்த இவர் பதிகம், கோவை, ஊஞ்சல் முதலிய பிரபந்தங்களைப் பாடியவர். தமது நண்பர் அருளம்பல முதலியாரைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து 'அருளம்பலக் கோவை' என்னும் பிரபந்தத்தைப் பாடியவர் தாம். இவ்வாறு தமது காலத்து ஏனைய புலவர்களைப் போல இறைவன் மீதும் பிரபுக்கள் மீதும் செய்யுள்கள் இயற்றிய குமாரசுவாமி முதலியார், தம் காலத்திலே—குறிப்பாக 1866-67ஆம் வருடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே—யாழ்ப்பாண மாவட்டத்திலே கடுமையான பஞ்சமும் அதனைத் தொடர்ந்து கோதாரி நோயும் பரவி ஏறத்தாழப் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் இறந்தபொழுது, உருக்கமான சில பாடல்களைப் பாடினார். பஞ்சத்தினால் பரிதவித்திருந்த மக்கள் தொற்று நோயினால் இலகுவில் பீடிக்கப் பெற்றுப் புழுப்போல் துடித்து மடிந்தனர். பெருந்தொகையான மக்கள் இறந்தமையால் அன்றைய ஆங்கிலேய தேசாதிபதி விசாரணைக் குழு ஒன்றினை நியமிக்கும்படி கட்டளையிட்டார். அக்குழு 1867ஆம் வருடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. குழுவின் உத்தியோக பூர்வமான புள்ளி விவரங்களின்படி ஆறு மாத காலத்தில் பன்னீராயிரத்து இருநூற்றுப்பத்துப் பேர் கோதாரி நோயினால் இறந்தனர் என்று தெரிகிறது.

இத்தகைய மாபெரும் அழிவு சிலரது சிந்தனையையும் உணர்ச்சியையும் தொட்டிருக்க வேண்டும். குமாரசுவாமி முதலியார் மனிதாபிமான உணர்வு மேலிடச் சில செய்யுள்கள் இயற்றினார். கட்டளைக் கலித்துறைகள் சிலவற்றைப் பாடிய அவர் கொள்ளை நோயைப் பற்றியும் கொடிய பஞ்சத்தைப் பற்றியும் ஐந்து கீர்த்தனைகளையும் பாடினார். இறுக்கமான கட்டளைக் கலித்துறை யாப்பிற்குள் நின்றுவிடாமல் நெகிழ்ச்சியுடைய இசைப்பா வகையினை அவர் கையாண்டமையே உள்ளடக்கத்துக்கும் உருவத்துக்குமுள்ள உயிரியல் ரீதியான தொடர்பினை உள்ளுணர்வாகவேனும் அவர் உணர்ந்திருந்தார் என்பதை எமக்குக் காட்டுகிறது. கொள்ளைநோய் இறைவனுடைய கோபத்தினாலே வந்தது என்றும் அவனைப் பூரணபக்தியுடன் பூசிப்பதனாலேயே வந்த பேரிடர் தீரும் என்றும் நம்பினார் புலவர். அது எதிர்பார்க்கக் கூடியதே, ஆயினும் கண்ணாரக் கண்ட அவலங்களைப் பாட முற்பட்ட புலவர், துன்பத்தின் மத்தியிலே சமுதாயத்திற் காணப்பட்ட திருட்டுத்தனம், போலித்தனம், பேராசைத்தனம், நீசத்தனம் முதலியவற்றைச் சாடியிருப்பதே நமது கவனத்திற்குரியது. 'வஞ்சர்,' 'மாயப் பசாசர்,' 'குறும்பர்,' 'சண்டாள நீசர்,' 'ஈனப்பசாசர்,' 'பித்தர்' என்றெல்லாம் தில்லுமுல்லுகளில் ஈடுபடுவோரையும் கொள்ளை லாபம் சம்பாதிக்க முற்படுவோரையும் கண்டித்திருக்கிறார் புலவர். கண்டனமும் நையாண்டியும் கலந்த தோரணையில் அவர் பாடிய செய்யுள்கள் அன்றைய சூழ்நிலையில் புதிய இலக்கிய நோக்கையும் போக்கையும் குறித்தன என்பதில் ஐயமேயில்லை. 'எந்தெய்வம்' என்னும் கீர்த்தனையிற் சில பகுதிகளை நோக்குவோம்: இரண்டடிக் கண்ணிகளால் ஆக்கப்பட்ட அப்பாடல் நீலாம்பரி இராகத்தில் அமைந்தது என்று ஆசிரியரே கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரத் தொண்ணூற்றறு பத்தாறட்சயத்தே ழெட்
டாரம்பிக்குங் கொள்ளை நோய்க் கெந்தெய்வமே
பாயிரஞ் சொல்ல நாவோராயிரமும் போதாவாம்
பார் மன்னர் குணிப்பாரா மெந்தெய்வமே

வையகத் துய்யு மனுச் சென்ம மழிக்கக் கொள்ளை
வந்து நுழைந்தந்தோ வெந்தெய்வமே
பையப்பைய நுழைந்து பாரெங்குஞ் சேரவாரிப்
படபடென்றடிக்கிதே யெந்தெய்வமே

சிங்கையிலங்கை சென்னை சேர சோணோடு பாண்டி
தேசாதேசமெங்குமா மெந்தெய்வமே
கங்கைக்கரை வங்காளங்காசி முதற்றலங்கள்
கலக்கமலக்கமா மெந்தெய்வமே

பஞ்சப்பசியிலுண்ணாப் பலவுணவுண்ணல் கொள்ளை
படர்கொழு கொம்பிங்கென்ப ரெந்தெய்வமே
கஞ்சி கெஞ்சியுங் கிடைக்காதிந்தக்காலம் காட்டுக்
காய் கிழங் கேனுண்ணாரோ வெந்தெய்வமே

என்று பல கண்ணிகளில் பாடியிருப்பதை நோக்கும்பொழுது "ஓலமிட்டு உயிர்பதைத்தோடிப் படபடத்து ஒதுக்கிடம் எங்கும் காணா" மக்களின் துன்பதுயரங்களை மனமுருகி இறைவனுக்கு முறையிடும் வகையிற் குமாரசுவாமிப்புலவர் பாடியமை புலனாகும். அக்காலத்துப் பத்திரிகைகளிலும் பஞ்சம் பற்றியும் கொள்ளைநோய் பற்றியும் பல விவரணங்களும் கட்டுரைகளும் வெளிவந்தன. குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொண்டிருந்த *Jaffna Freeman* என்னும் பத்திரிகையில் பஞ்ச நிலைமைகளைப் பற்றியும் மக்களின் பரிதாப நிலைமைகளைப் பற்றியும் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல குறிப்புகள் வெளியிடப்பட்டன.

நாமறிந்த அளவில், சமகால நிகழ்ச்சிகளைச் சமுதாய நோக்கிலே பாடிய ஈழத்துப் புலவருள் குமாரசுவாமி முதலியாரே காலத்தால் முற்பட்டவராய்க் காணப்படுகின்றார். அவரது வாழ்க்கையைக் கவனித்தால் இவ்வாறு பாடியது தருக்கத்திற்கு இயைவதாகவும் தோன்றும். பிரபுத்துவக் குடும்பத்திலே பிறந்து சைவராகவே வாழ்ந்த குமாரசுவாமி முதலியார் கிறித்தவ மிஷனரிமார்களின் கல்வி முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்குமுகமாகத் தமது கிராமத்திலே ஊரிக்காடு என்னும் பகுதியை — தமது நிலப்பகுதியை—அவர்களுக்கு நன்கொடையாக வழங்கியவர். அதுமட்டுமல்லாது கிறித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதர்மீது சில கீர்த்தனைகளையும் பாடினார். சமரசத்தின் சாயலை அவர் எழுத்துக்களில் இலேசாகக் காணலாம். நிலத்தைத் தானம் செய்ததோடு அமையாது தாமும் தமதூரில் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவி நடத்திவந்தார். அவரது நண்பர் அருளம்பல முதலியாரும் உடுப்பிட்டியில் ஒரு தருமப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்திவந்தார். 1840ஆம் ஆண்டளவில் இப்பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன. தமிழ்மொழி இலக்கியம் என்பவற்றோடு கணிதம், பூமிசாத்திரம் முதலிய நவீன பாடங்களும் இப்பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டன. இவர்களது இம்முயற்சிகள் ஆறுமுக நாவலரது பாரிய கல்விப்பணிகளுக்குச் சற்று முற்பட்டவை என்பதும் மனங்கொளத்தக்கதே. நவீன கல்விப் பரிச்சயமும் மிஷனரிமார் தொடர்பும் சமூகசேவை ஈடுபாடும் ஏலவே வாய்க்கப் பெற்றிருந்த மனப்பக்குவத்துடனேயே அட்சய வருடப் பஞ்சத்தையும் கொள்ளை நோயையும் சமுதாய நிகழ்வாகக் கொண்டு கவிகள் பாடினார் குமாரசுவாமி முதலியார். அவர் காலத்து ஏனைய தமிழ்ப் பண்டிதர்களிலிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டுவது அவரது சமுதாய உணர்வேயாகும். தன்னைச் சுற்றியுள்ள நிலைமைகளைப் பற்றி மட்டுமன்றி, பிற இடங்களிலும் பஞ்சம் பட்டினி நிகழ்வதைப் பாடலிலே அவர் குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கக் கூடியதே. சமுதாய நோக்கும் உலகப் பார்வையும் தொடர்புடையன. ஆற்றல்மிக்க இலக்கிய கர்த்தாக்கள் ஓரளவிற்கேனும் சமுதாய நோக்குடையவர்களாயிருத்தல் வேண்டும் என்னும் பொதுநியதிக்குக் குமாரசுவாமி முதலியாரின் வாழ்வும் எழுத்தும் மேலும் சான்று பகர்வனவாயிருக்கின்றன.

அட்சய வருடப் பஞ்சத்தின் பின் பத்து வருடங்கள் கழியுமுன் தாது வருடத்தில் (1876) மற்றொரு கொடிய பஞ்சம் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் கோரதாண்டவம் புரிந்தது. 'தாது வருடப் பஞ்சம்' என்ற சொற்றொடரே தமிழ் வழக்கில் நிலைத்துவிட்டது. தாது வருடத்திலும் அதனை அடுத்த ஈசுர வருடத்திலும் யாழ்ப்பாணத்தில் கொடிய பஞ்சமும் கொள்ளை நோயும் மீண்டும் பேரழிவினை உண்டாக்கின. அவ்வேளையில் ஆறுமுக நாவலர் தமது இலட்சியப் பணிகளைக் கைவிட்டு மக்கள் பசிப்பிணியைக் குறைக்கக்கூடிய முயற்சிகளில் இறங்கினார். சைவமும் தமிழும் என்றிருந்த நாவலர் கிறித்தவர், இசுலாமியர் என்ற பாகுபாடுகளை மறந்து பொதுமக்களுக்கு வேண்டிய நிவாரண வேலைகளை முன்னின்று நடத்தினார். கிறித்தவர்களான பிறிற்றோ, பிறவுண் சின்னத்தம்பி முதலியவர்களுடனும் வேறு சிலருடனும் சேர்ந்து நிதி சேர்த்துக் கஞ்சித்தொட்டித் தருமம் செய்ய முற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சி உணவு பெரிய தொட்டியில் இடப்பட்டு உணவற்றோருக்கு வழங்கப்பட்டதினால் கஞ்சித் தொட்டித் தருமம் என்று அதனை அக்காலப் பத்திரிகைகள் விவரித்து ஊக்கப்படுத்தின. சைவப் பிரசாரகரும் வைதிக இயக்கவாதியுமான நாவலர் முன்னின்று நடத்திய இம்மகத்தான பரோபகாரப் பணியினைக் கத்தோலிக்கப் 'பாதுகாவலன்' பத்திரிகையே, "இத்தூய பணி காதுக்கு மதுரமாய் தொனிக்கின்றது" என்று மனம்விட்டுப் பாராட்டியது. நாவலரின் முன்மாதிரியைப் பின்பற்றி அரசாங்கமும் சில நிவாரண வேலைகளைச் செய்ய முற்பட்டது. சமுதாயத்துக்குப் பேரிடர் ஏற்படும்பொழுது சமய இலக்கிய சாத்திரப் பணிகளிலும் பார்க்க மக்களுக்குத் தொண்டு செய்வதனை முக்கியமாகக் கொண்டு முன்மாதிரியாக விளங்கியமையாலேயே நாவலர் வரலாற்றில் இடம்பெறும் பெருமகனாகவும் திகழ்கிறார். ஏட்டுக் கல்விக்குள் தம்மைச் சுருக்கிக் கொண்டவர் அல்லர் அவர். கொள்கையைச் செயலுடன் இணைத்தவர் அவர்.

தாது வருடப் பஞ்சத்து நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டே தமிழகத்தில் அழகிய சொக்கநாதபிள்ளை 'காந்திமதி அம்மை அந்தாதி' என்னும் நூலையும், வில்லியப் பிள்ளை 'பஞ்சலட்சணத்திருமுக விலாசம்' என்னும் நூலையும் இயற்றினர். இருவருமே பஞ்சம் நிகழ்ந்து பல வருடங்களுக்குப் பின் தத்தம் பிரபந்தங்களை ஆக்கி அளித்தனர். முதல் தமிழ் நாவலை எழுதிய மாயவரம் ச. வேதநாயகம் பிள்ளை (1826—1889) தாது வருடப் பஞ்சத்தைப் பொருளாகக் கொண்டு சில விருத்தங்களையும் பாடினார். அருட்டிரு சுப்பிரமணிய தேசிகர் பஞ்சத்தில் பரிதவித்த மக்களுக்குக் கஞ்சித்தொட்டி வைத்து உதவி வழங்கியதையும் அவர் பாராட்டினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழகத்திலும் சரி, இலங்கையிலும் சரி சமுதாய உணர்வினைப் பிரதிபலிக்கத் துவங்கிய புலவர்கள் மரபுவழிவந்த வடிவங்களைப் பயன்படுத்தியே சிற்சில புதிய எண்ணங்களையும் நிகழ்வுகளையும் வெளிப்படுத்தினர் என்பது மேலே காட்டிய செய்திகளினின்றும் தெளிவாகியிருக்கும். அதற்கு மேலும் சிறந்த உதாரணங்களாக உள்ளன 'கனகிப்புராணம்,' 'தத்தைவிடு தூது' ஆகியன. பெரும்பாலும் தலங்களின் மகத்துவத்தையும் விரதங்களின் சிறப்பையும் விரித்துரைப்பனவாகவே அநேகமான புராணங்கள் அமைந்தன. கிறித்தவ, இசுலாமியப் புலவர்களும் சமயப் பொருளையே புராணங்களில் பாடினர். ஆயினும் புராணம் என்ற இலக்கிய வடிவத்தை வைத்துக் கொண்டு சமுதாயச் செய்திகளை அங்கதமாகப் பாட இரண்டொருவர் வழிவகுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர். அவர்களுள் அவசியம் குறிப்பிடப்படவேண்டியவர் 'கனகிபுராணம்' பாடிய சுப்பையனார். 'கனகி சுயம்வரம்' என்றும் சிலரால் வழங்கப் பெறும் இந்நூல் முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. சிதைவுற்ற நிலையிலே கிடைக்கிறது. முழுமையாகக் கிடைத்திருந்தாலோ என்று ஏங்கும் வகையில் சிதைந்த நிலையிலும் அதன் சிறப்பு நம்மை மகிழ்விக்கிறது. கனகி அழகு வாய்ந்த கணிகை. அக்காலத்து யாழ்ப்பாணப் பிரபுக்கள் பலரும் அவளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அதனைக் கருவாகக் கொண்டு அங்கதச்சுவை ததும்பும் அற்புதமான செய்யுள்களை இயற்றியுள்ளார் சுப்பையனார். 'பாவலர் சரித்திர தீபகம்' (1886) ஆசிரியர் சதாசிவம் பிள்ளை, "இவர் காலம் தற்காலந்தான்" என்று கூறுவதிலிருந்து சுப்பையனார் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராதல் வேண்டும் என்று தீர்மானிக்கலாம். சதாசிவம் பிள்ளையின் மற்றொரு கூற்றுப் பின்வருமாறு:

> இவரை நாம் கண்டிருந்தும் இவருடைய கல்வி சாமர்த்தியங்களைக் குறித்து யாதும் உணர்ந்தேம் அல்லேம். இலக்கண இலக்கியங்களிற் பயின்றவரோ, அன்றி வாணி வாக்கில் உறையப் பெற்றவரோ யாதும் அறியோமாயினும், வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் தாசிகளுள் ஒருத்தியும் இற்றைக்குச் சில காலத்தின் முன் இறந்தவளுமாகிய கனகி என்பவள் பேரிற் "கனகி சயமரம்" எனப் பாடிய ஓர் பாடலால் நல்ல சரள நடைப் புலவராய் இருந்தார் இவர் என அறிகிறோம். கனகி சயமரம் எனும் பாடலில் முன்பின் நானூறு விருத்தங்கள் உண்டென்று கேள்விப்பட்டோம்.

சுருங்கக் கூறுவதானால் "மேளகாரப் பகுதியைச் சேர்ந்த இவர்" என்று சதாசிவம் பிள்ளை விவரிக்கும் நட்டுவச் சுப்பையனார் கல்வியில் வல்ல புலவராகப் பெயர் பெற்றிருக்கவில்லை என்பதே முக்கியமான செய்தியாகும். இயற்றமிழ் ஆசிரியர்களும் வித்துவசிரோமணிகளும் தமிழ்ப்புலமையில் மிக்குயர்ந்து விளங்கிய காலப்பகுதியில், கல்வித்திறமையின் துணையாலன்றிக் கவித்துவ சக்தியின் ஆற்றல் கொண்டும் கவிப்பொருளை உள்ளும் புறமும் அறிந்த பட்டறிவின் துணை கொண்டும் புதுமுறைப் புராணம் ஒன்றைப் பாடினார் சுப்பையனார். இதனைக் கருத்திற் கொண்டே பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (1903–1968) 'ஈழத்து வாழ்வும் வளமும்' (1962) என்னும் நூலிலே 'ஈழநாட்டில் தமிழ் வளர்ச்சி' என்ற கட்டுரையில் மேல்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இலக்கண இலக்கியங்களிற் பயின்றவரோ என்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால், இவரை ஒரு இயற்கைப் புலவன் என்றே கூறல் வேண்டும். இவர் இயற்றிய நூல் இவரது இயற்கைப் புலமைத் திறமையையும் வர்ணனைச் சிறப்பையும் புத்திசாதுரியத்தையும் நன்கு தெரிவிக்கின்றது. இந்நூலில் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பிரபுக்களைப் பற்றியும் பல சுவையான செய்திகள் மலிந்துள்ளன.

'கனகி புராணம்' தக்கபடி பதிப்பிக்கப்பெறாமையால், இன்று வழங்கும் செய்யுள்களிற் சில இடைச்செருகல்களாய் இருக்கலாம் என்னும் ஐயம் நியாயமானதாகும். எனினும் சுப்பையனாரின் பாடல் மாதிரிக்கு ஒரு செய்யுளைப் பார்க்கலாம்:

தாலக் கனி யொன்றினுக்காகத்
　　தரைமேல் மாந்தர் பலர் திரண்டு
வேல் கத்திகள் கொண்டெறிந்து மிக
　　விசயம் பொருதும் வளநாடன்
மால் பற்றிய நெஞ்சினனாகி
　　வந்தான் கனகே மன்றலுக்கு
நீலக் கருங் கார்மேக நிற
　　நியூற்றனிவன் காண் நேரிழையே

சுயம்வரப்படலத்திலே தோழிகூற்றாக அமைந்தது இச்செய்யுள். போர்க்களத்திலே விளைக்கும் வீரம் இல்லாத ஒருவனை எள்ளி நகையாடுவதுபோல, பனைமரத்திற்குக் கீழே பலர்கூடி வேலும் கத்திகளுமெடுத்துப் பனம் பழத்தைப் பார்த்து வீசி மிகவும் வீரத்துடன் போர் செய்கின்ற வளநாடுடைய இவன் என்று தோழி அறிமுகப்படுத்தும் தோரணையில் நியூற்றன் என்ற கிறித்தவப் பெயர் கொண்ட செல்வந்தன் ஒருவனை நையாண்டி செய்கிறார் புலவர். கனகியிடம் வந்துபோகும் பிரபுக்கள் பலரைச் சுயம்வரப் படலத்திலே கிண்டல் செய்திருக்கிறார் என்பது தவறாகாது. 'வெட்டைகாண்படலம்' கனகியைக் கலந்தவர்களுக்கு மேகநோய் பீடிப்பதை விவரிக்கிறது. புராணம் என்ற சட்டகத்தை வைத்துக்கொண்டு பிரபுத்துவ உலகையே ஒரு கலக்குக் கலக்கி விடுகிறார் புலவர். பள்ளுப்பிரபந்தங்களில் பண்ணைக்காரரையும் பண்ணை விசாரிப்பான்களையும் கிண்டல் செய்யும் போக்கில் அமைந்த அங்கதத்தின் குரலை இப்பாடல்களிலும் கேட்கலாம். அக்காலப் பிரபுக்களின் சீரழிந்த ஒழுக்கநெறியினையும் பொதுவான தார்மீக வீழ்ச்சியையும் நுண்ணிய அநுபவ உணர்வுடன் 'கனகி புராணம்' சித்திரிக்கிறது என்று கருதுதல் மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூதனமான பொருளைக் கொண்ட மற்றிரு புராணங்கள் சம்பிரதாயத்துக்கு மாறுபட்ட முறையில் சமுதாய அமிசங்களைச் சித்திரிப்பனவாய் எழுந்தன எனத் தெரிகிறது. அச்சுவேலி நீ. காசிநாதப் புலவர் (1796—1854) இயற்றிய 'தாலபுராணம்,' கோப்பாய் வே. இராமலிங்கம் பாடிய 'கோட்டுப் புராணம்' என்பன அவ்விரண்டுமாம். தாலம் என்பது பனை. இலங்கையின் வடபகுதி பனைவளம் நிரம்பியது. எனவே இலக்கியங்களிலே பனைபற்றிய வர்ணனைகளும் குறிப்புகளும் அதிகம் இடம் பெறுவது எதிர்பார்க்கக் கூடியதே. இருபதாம் நூற்றாண்டில் நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் 'இலங்கை வளமும் தாலவிலாசமும்' என்னும் நூலைப் பாடினார். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை விநோதமாக இயற்றிய 'காதலியாற்றுப்படை' என்னும் கவிதையில் கதாநாயகன் "கரும்பனங்காடு கிழவோனே" என்று சிறப்பிக்கப் படுகின்றான். பனையும் பனம்பொருள்களும் மக்கள் வாழ்க்கையில் முக்கியமானவையாக இருந்தமையால் புலநெறி வழக்குப் பாடல்களில் மட்டுமன்றி நாட்டார் வழக்கியலிலே அவை பெருமளவில் இடம்பெற்றன. பழமொழி, விடுகதை, நொடி நாட்டுப்பாடல் என்பவற்றிலெல்லாம் பனையின் மகத்துவம் பேசப்பட்டது. மருத்துவர்களும் பனையிலிருந்து சில பாகங்களைப் பயன்படுத்தினர். 'கற்பகதரு' என்னும் கட்டுரையிலே பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பனையின் வரலாற்றையும் பயன்பாட்டையும் சமூகவியல் நோக்கில் விவரித்திருக்கிறார். சாம். டி. தம்பு என்பவர் 1938இல் 'பனை இராசன் நாடகம்' என்னும் நாடகத்தில் பனையின் பெருமையை விளக்கினார்.

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழ்க்கையோடு கலந்துவிட்ட பனையைப் பொருளாகக் கொண்டு இயற்றப்பெற்ற 'தாலபுராணம்,' 'பனங்காய்ப் பாரதம்' எனவும் வழங்கப்பட்டதாய்த் தெரிகிறது. சென்ற நூற்றாண்டில் எழுந்து நமக்கு இன்று கிடைப்பதரிதாயுள்ள பல நூல்களைப்பற்றிப் பயனுள்ள தகவல்களைத் தரும் 'பாவலர் சரித்திர தீபகம்' ஆசிரியர் இந்நூல் குறித்துப் பின்வருமாறு கூறுகிறார்:

> யாம் அதனைக் கண்ணுற்றிராமையால் அதனது நயநட்டங் கூறுதல் கூடாதேனும், கற்பக விருட்சம் எனப் பெயரிய தெய்வ விருட்சத்திற்கு இலக்காய் எம்மூரிலிருக்கும் பனைமரப் பெருமையும் அவற்றின் பிரயோசன நயங்களுமே அப்பாடற் பொருளாம் எனத் துணிகின்றோம். பனைப்பெருமை கூறினும், ஓர்போது ஒருவகைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலிப்பாடலாகவும் இருக்கலாம். இப்பாடல் அலாது பல தனிப்பாக்களையும் இவர் பாடினர் என்று கேள்வி.

'தாலபுராணச்' செய்யுள்களென வாய்மொழியாக வழங்கிவரும் சில உதிரிப் பாடல்களை நோக்குமிடத்து, புராணத்திற் கேலித் தொனி இருந்திருக்கலாம் என்றே தோன்றுகிறது. சமயப் பொருளைப் பாடுவதுபோல லௌகிகத்தைப் பாடுதல் நூதன முறையேயாகும்.

வே. இராமலிங்கம் பாடிய 'கோட்டுப்புராணம்' பலவழி களில் முக்கியத்துவம் வாய்ந்தது. கோடு என்பது court என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம் ஆகும்; நீதிமன்றத் தைக் குறிப்பது. ஆங்கிலேயராட்சியின் இயல்புகளைத் தூல மாகக் காட்டிய நிறுவனங்களில் ஒன்று நீதிமன்றமாகும். புதிய நீதி பரிபாலன முறையானது 'கோர்ட்' என்ற வடிவத்தில் நாடெங்கிலும் தனது சக்தியை நிலைநாட்டிக்கொண்டது. அதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு மத்திய வர்க்கத்தின் ஒரு முக்கிய பிரிவினரான நியாயவாதிகள், சட்டத்தரணிகள் தோன்றினர். சிறுச்சிறு சண்டைகள், பிணக்குகள் முதலிய வற்றுக்கும் கோர்ட்டுக்குச் சென்று கைப்பொருள் இழந்த மக்கள் பலராயினர். குடிப்பழக்கம் குடியைக் கெடுத்தது போல, கோடேறும் பழக்கமும் பலரது வாழ்க்கையைக் குட்டிச்சுவராக் கியது. இத்தகைய சமுதாயப் பின்னணியிலேயே 'கோட்டுப் புராணம்' என்னும் பிரபந்தத்தை நாம் நோக்குதல் வேண்டும். இவ்விடத்திலும் 'பாவலர் சரித்திர தீபகம்' ஆசிரியர் கூறியிருப் பதை நாம் கவனிக்கலாம்.

> புலவர் இராமலிங்கம் விரைவிலே பாடுஞ் சக்தி உடைய ரென்று கேள்வி. இவர், நீதித்தலஞ் சென்று வியாச்சியம் நடத்தும் வாதி பிரதிவாதிகளுக்கு நேரிடும் பண நஷ்டம், கஷ்டம், அல்லல், தொல்லைகளையும், அந்நீதி ஸ்தலங் களில், "உதர நிமித்தம் வெகுகிருது வேடம்" எனப் பிழைப்பின் பொருட்டுத் தந்திர வேடம் போட்டுத் தமன கனைப்போல் இருதிறத்தவரையும் மூட்டிவிட்டுப் பணம் பறிக்குங் கோட்டுப் புறாக்களையும், வாதி பிரதிவாதி களுக்காகத் தனித் தனி ஏற்பட்டும் இருபுறமுங் கைநீட்டும் நியாய துரந்தரர்களையும், இழித்தும் பழித் தும், கோட்டுப் புராணம் எனும் பெயர் சூட்டி ஒரு பாடல் இயற்றினார்.

உவமைகள் நிரம்பிய விருத்தம் ஒன்றை உதாரணத்துக்காக நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடொரு களரி யதிலுறுந் துரையோ
கூத்துப் பார்த்திருந் திடுமூப்பு
ஆடுறுங் குரங்கோ வழக்கர் களாவா
ரவையிடை யவைகளைக் கொண்டு
நாடொறு மாட்டுங் கயிறுதான் வழக்கு
நட்டுவப் பணிக்கனோ தரணி
வாடிடு வயிறு வளர்ப்பதற் கெடுத்த
வஞ்சனை வேடமென் றுணரே

கோர்ட்டை ஒரு கூத்துக் களரியாகவும் நீதிபதியைப் பார்வையாளராகவும் வழக்காடுவோரைக் குரங்காகவும் ஆட்டும் கயிற்றினை வழக்காகவும் சட்டத்தரணியை ஆட்டுவிப்பவனாகவும் வயிறு வளர்ப்பதற்கான சூழ்ச்சி வேடங்களே இவையென்றும் புலவர் கூறுவது சுவைபட அமைந்திருக்கிறது. இந்நூலும் இப்பொழுது கிடைத்திலது. எனினும் அது எழுதப்பட்ட காலத்திலே விநோதார்த்தமாகவே கருதப்பட்டது என்பதில் ஐயமில்லை. சமகாலத்தவரான சதாசிவம் பிள்ளையின் மேற்கண்ட கூற்று இதனைத் தெளிவுபடுத்துகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழில் எழுந்த புதிய இலக்கியங்கள் கையாண்ட பொருள்களில் ஒன்று வியாச்சியம் என்பது ஆரம்பகால நாவல்களைப் படிப்போர்க்குப் புலனாகும். தனிமனிதக் கொள்கையின் வளர்ச்சிக்குப் பாகப்பிரிவினை அநுசரணையாயிருப்பது யாவரும் அறிந்ததே. பாகப்பிரிவினை முதலிய விவகாரங்களுக்கு வழக்காடுதல் ஏதுவாயிருந்தது. மாதவய்யா எழுதிய 'விஜயமார்த்தாண்டம்,' ஜமீன்தார் இருவரின் பதவிப் போட்டியின் விளைவாக எழுந்த வியாச்சியத்துடன் ஆரம்பிக்கிறது. வேறுபல புனைகதைகளிலும் வழக்காடுதலினால் வந்த விளைவுகளை ஆசிரியர்கள் சித்திரித்துள்ளனர். சென்னையில் வாழ்ந்த காசி விசுவநாத முதலியார் 1872இல் வெளியிட்ட 'டம்பாச்சாரி விலாசம்' என்னும் நாடக நூலிலும் வழக்காடுதலினால் வரும் கேடு சித்திரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இந்நூற்றாண்டின் முதற்காலிலே எழுதப்பட்ட 'நீலகண்டன்' (1925), 'சித்தகுமாரன்' (1925) ஆகிய இரு நாவல்களிலும் நியாயவாதிகள், பொய்ச்சாட்சியம் கூறுவோர், வழக்குச் சோடிப்போர் பற்றியும் வழக்காடுவதினால் உண்டாகும் கேடுகளைப் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. 'நீலகண்டன்' நாவலில் கதாநாயகன் தன்மீது அபாண்டமாகச் சுமத்தப்பெற்ற குற்றங்களிலிருந்து விடுபடுகிறான். நீதிமன்றத்து விசாரணைகள் தத்ரூபமாகச் சித்திரிக்கப்படுகின்றன. இதனால் வழக்கு விசாரணையும் நீதிமன்ற விவகாரங்களும் கதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணர்ப்பில் பிரிக்க இயலாதவாறு பிணைந்துள்ளன. புதிய ஒரு சமூகப்பிரச்சினையை முற்படக் கவிதையில் எடுத்தாண்ட இராமலிங்கம் சென்ற நூற்றாண்டில் ஈழத்தில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க புலவரில் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் முகிழ்த்த புதிய இலக்கியச் செல்நெறிக்கு மற்றுமொரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது தி. த. சரவணமுத்துப்பிள்ளை எழுதிய 'தத்தை விடுதூது' (1892) என்னும் நூல். தி. த. கனகசுந்தரம் பிள்ளையின் இளைய சகோதரரான இவரும் சென்னையிலே வாழ்ந்தவர். சென்னைப் பல்கலைக் கழகத்திலே பி. ஏ. பட்டம் பெற்றபின் மாநிலக் கல்லூரியிலே தலைமை நூலகராகச் சில காலம் பணிபுரிந்தார். அக்காலத்தில் தமிழ் நாட்டு வரலாற்று மூலங்களை ஆராய்ந்து அவர் எழுதிய 'மோகனாங்கி' (1895) தமிழில் எழுந்த முதலாவது வரலாற்று நவீனமாகும். 'தமிழ்ப் பாஷை' என்னும் நூலையும் அவர் எழுதினர். மரபுவழி வந்த தூதுப் பிரபந்தவடிவத்தை எடுத்துக் கொண்ட சரவணமுத்துப் பிள்ளை பாட்டுடைத் தலைவனைப் போற்றவும் தூற்றவும் அதனைப் பயன்படுத்திய முற்பட்ட புலவர்களின்றும் வேறு பட்டு நூலை ஆக்கியிருக்கிறார். தூதுப் பொருளைப் பற்றிய செய்திகளை விவரிப்பதிலும் அவர் நேரம் கழிக்கவில்லை. சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த கதைக்கரு ஒன்றை எடுத்துக் கொண்டு அதனைத் தூதுப்பிரபந்தத்திற்குள் அடக்கி வெற்றி யும் காண்கிறார். கதைக்கரு இதுதான்; சிறுவயது முதல் ஒன்றாகப் பழகிய ஓர் ஆணும் பெண்ணும் நாளடைவிலே காதலராகின்றனர். ஆயினும் தலைமகனுக்குப் பொருள் வளம் இல்லாத காரணத்தால் பெண்ணின் பெற்றோர் அக்காதலுக்குத் தடை விதிக்கின்றனர். கனவான் ஒருவனை அவளுக்கு மண முடித்துவைக்க முற்படுகின்றனர். இதனை அறிந்த காதலன் தன் காதலியின் மனநிலையை அறிந்து வரும் வகையில் தத்தையைத் தூது விடுகிறான். நவீன காலப்பகுதியிலே எண்ணிறந்த நாடகங்களுக்கும் நாவல்களுக்கும் திரைப்படங் களுக்கும் அடிமையக்கருவாக அமைந்ததே இக்கதைக்கரு. திருமணம் என்ற நிறுவனத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளையும் நெருக்கடிகளையும் காதலர் கண்ணோட்டத்தில் சித்திரிப் பனவே பெரும்பாலான கதைகள். நவீன வர்க்க சமுதாயத்தில் இம்முரண்பாடு கூர்மையடைந்தது. சமுதாயத்திலே நடப் பியலிற் காணும் சாதாரண நிகழ்ச்சியொன்றினைக் கவிப் பொருளாகக் கொண்டு மரபுவழிப் பிரபந்தங்களினின்றும் வேறுபட்ட தூது நூலை இயற்றியிருக்கிறார் ஆசிரியர். பெற்றோரால் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் காதலியை விவரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் போக்கிலே, பொதுவாகவே தமது காலத்துச் சமுதாயத்திலே காணப்பட்ட பெண்களின் அவல நிலையைத் துல்லியமாகப் பாடுகிறார். சம்பிரதாயமான திருமணமுறையின் பாதகத் தன்மைகளை உணர்ச்சிச் செறிவுடன் பாடுகிறார். மரபுவழிச் செய்யுள்களிலே பொதுவாகக் காணப்படாத வேகம் இதிலே வெளிப்படையாகவே தென்படுகிறது.

கூட்டிற் பசுங்கிளிபோற்
கோதையரை யெப்பொழுதும்
வீட்டி லடைத்து வைக்கும்
விரகிலருக் கியாதுரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும்
பொருளாகக் கருதினரோ
கேட்டார் நகைப்பதுவுங்
கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற்
கிளத்தாய் பசுங்கிளியே

கண்ணைமறைத் தேகொடு போய்க்
காட்டில் விடும் பூனையைப் போல்
பெண்ணைமனை யடைத்துப்
பின்னொருவர் கைக்கொடுப்பர்
கண்ணால்முன் கண்டுமிலர்
காதலர் சொற் கேட்டுமிலர்
எண்ணாது மெண்ணி
இருந்தயாவர் மங்கையர்கள்
இக்கொடுமைக் கியாது செய்வ
திசையாய் பசுங்கிளியே

தம்மனைக்கோர் பசுவேண்டிற்
றாம்பலகாற் பார்த்திருந்தும்
பின்னுந் துணிவிலராய்ப்
பேதுறுதல் மாந்தர் குணம்
என்னே மணவினையேல்
இமைப் பொழுதிலே முடிப்பார்
சின்னப் பதுமை கொடு
சிறார் செய்மணம் போலுமரோ
தெரிவையவட் கிம்மாற்றஞ்
சீர்க்கிளியே கூறுதியால்

பாடல்களைப் பதம் பார்ப்பதற்காக இங்கு தரப்பட்ட மூன்று செய்யுள்கள் நூலின் நவீன நோக்கையும் போக்கையும் நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்துவனவாயுள்ளன. நாவலாசிரியர் வேதநாயகம் பிள்ளை காலத்திலிருந்து உறையூர் அமிர்தம் பிள்ளை (1845–1899), நரசிம்மலு நாயுடு முதலியோர் பெண்கள் முன்னேற்றம் பற்றி எழுதி வந்தனர். அவற்றில் பெரும்பாலானவை நீதி போதிக்கும் முறையில் அமைந்தன. அத்தகைய சூழ்நிலையிலே பெண் விடுதலைப் பொருளைக் கவித்துவ ஆற்றலுடன் விநோதமான பிரபந்தமாக இயற்றிய சரவணமுத்துப்பிள்ளை நினைவுகூரவேண்டியவரே. கூர்ந்து ஆராயும்பொழுது சுப்பிரமணிய பாரதியார் 'தத்தைவிடுதூது' பிரபந்தத்தைப் படித்திருக்கலாம் என்றே தோன்றுகிறது. 'சுயசரிதை,' 'புதுமைப் பெண்,' 'பெண் விடுதலை' முதலிய பாடல்களிலே பாரதி கூறியிருப்பனவற்றையும் கூறியிருக்கும் முறையினையும் உற்று நோக்கினால் அவனுக்கு முற்படப் பாடிய கவிஞருள் சரவணமுத்துப் பிள்ளையே சொல்லிலும் பொருளிலும் பாரதிக்கு அண்மித்தவராய்க் காணப்படுகிறார். சென்னையிலிருந்த ஸ்ரீ நிலையம் அச்சியந்திர சாலையிலே 1892ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்ட 'தத்தைவிடுதூது' நூலினைப் பாரதியார் படித்திருக்கக்கூடும். பெண் விடுதலை பற்றிய நூலாதலின் அதில் தீவிரவாதியாயிருந்த பாரதி அதனைப் பெரும்பாலும் படித்திருப்பார் என்பதற்கு ஆங்காங்கு சில சான்றுகள் காணப்படுகின்றன. 'தத்தைவிடுதூது' நூலில் வரும் சில சொற்றொடர்களின் எதிரொலியைப் பாரதி வாக்கிற் கேட்கலாம். எனினும் இது தனியே ஆராய வேண்டியது. தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்த பலவிதமான கட்டுரைகளையும் நூல்களையும் "ஓய்விலா ஊக்க உணர்ச்சியுடன்" வாசித்த பாரதி இந்நூலைப் படித்திருந்தார் என்று துணிதல் தவறாகாது.

மேலே, நாவலர், குமாரசுவாமி முதலியார் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்டவிடத்து, இலக்கியத்தில் மாத்திரமன்றிச் சமூகப் பிரச்சினைகளிலும் அவர்களுக்கு ஆழ்ந்த சிரத்தை இருந்தமையாலேயே அவர்களது இலக்கிய நோக்கு அன்றைய நிலையில் முற்போக்கானதாகவும் மக்கள் நலன் பேணுவதாகவும் இருந்தது என்று கூறினேன். 'தத்தைவிடுதூது' ஆசிரியர் தி. த. சரவணமுத்துப்பிள்ளையும் சமூகப் பிரக்ஞை உடையவராயிருந்தார் எனத் தெரிகிறது. ஆங்கிலத்திலே 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலை 1904ஆம் ஆண்டிலே வெளியிட்ட எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை (1866—1947), சரவணமுத்துப் பிள்ளையைப் பற்றிக் குறிப்பிடுகையில், "இளவயதிலேயே இறந்து விட்ட இவர், யதார்த்தப் பண்புடைய 'மோகனாங்கி' என்ற நாவலை எழுதியவர்; நல்ல நண்பர், இங்கிதமாய்ப் பழகும் இனிய சுபாவம் படைத்தவர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தத்தில் ஈடுபாடுடையவர்; பல காரியங்களைச் சாதித் திருக்கக் கூடியவர்'' என்று புகழ்ந்திருக்கிறார். சரவணமுத்துப் பிள்ளையின் சீர்திருத்த ஈடுபாட்டிற்கு அழியாத சின்னமாக விளங்குவதே 'தத்தைவிடுதூது' எனலாம்.

புராணம், தூது, கீர்த்தனை முதலிய மரபுவழி வடிவங் களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே அசாதாரணமான ஆற்றலுடனும் அழகியல் உணர்ச்சியுடனும் கையாண்ட சில புலவர்களே அடுத்தடுத்து வந்த கவிஞர்களுக்கு உந்து சக்திகளாக இருந்திருக்கின்றனர். அந்நூற்றாண்டின் இறுதித் தஸாப்தத்திலும் இருபதாம் நூற்றாண்டின் முதற் காலிலும் கவிதைத் துறையில் புதுமைகள் நிகழ்த்திய பாவலர் துரையப்பா பிள்ளை, மேற்கூறிய புலவர்களின் பரிசீலனை முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றார். இவர்கள் அனைவருக் கும் காலத்தால் முற்பட்டவர் வரகவி என்று அழைக்கப்பட்ட சுன்னாகம் முத்துக்குமார கவிராசர் (1780–1851). சிலேடை யாகப் பாடுவதில் வல்லவராயிருந்த கவிராசர், கடின மான—கற்றோரும் எளிதிற் பொருள் விளங்கிக் கொள்ள முடியாத—செய்யுள்களைப் பாடியவர். சி. வை. தாமோதரம் பிள்ளையின் குருவாகவும் இவர் விளங்கினார். தமது காலத்து வழக்கத்திற்கு இயைய இவரும் தெய்வங்கள் மீது தோத்திரம், ஊஞ்சல், பதிகம், லாலி முதலியன பாடிக் குவித்தவரே. ஆயினும் அந்நியரின் வருகையினாலும் அவரது ஆட்சி யினாலும் கலாசாரத்திலே முரண்பாடுகள் தோன்றிய பொழுது, அவற்றின் சில கூறுகளைப் பாட முற்பட்டார். அந்நிய ஊடுருவல் ஆரம்பத்திலே சமயத்துறையிலேயே முனைப்பாய்த் தென்பட்டது. எனினும் நாளடைவிலே வாழ்க்கையின் பல்வேறு அமிசங்களிலும் முரண்பாடுகள் வெடித்தன. ஊண், குடிவகைகள், ஆடை, மொழி, இசை போன்றவற்றிலெல்லாம் கிறித்தவம் பிரத்தியோகமான வழக் காறுகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டதாயிருந்தது. இதனாலேயே கிறித்தவத்துக்கும் சைவத்துக்கும் நிகழ்ந்த பலப் பரீட்சையில் மதக்கோட்பாடுகள் மாத்திரம் பிரச்சினைக் குரியனவாய் இருக்கவில்லை. மக்களின் முழு வாழ்க்கை முறை யும் மத அடிப்படையில் நோக்கப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய முத்துக் குமார கவிராசர் இயற்றிய விருத்தப்பாக்கள் சில இப் பிரச்சினைகளைத் தூலமாகச் சித்திரித்துள்ளன:

நல்லவழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நானாநா ளுந்தருகுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாஞ்சொல் வதைக்கேளும் எனமருட்டிச் சேர்த்து
நானமுஞ் செய்து விட்டார்
மெல்லமெல் லப்பின்னை வேலையிங் கில்லை நீர்
வீட்டினிடை போமென்கிறார்
வேண்டியொரு கன்னியைக் கைக்கொண்டு கருவாக்கி
விட்டபின் கணவன்வேலை
இல்லைநீ போவென்று தள்ளுவது போலுமே
இனிஎம்மை எம் உறவினோர்
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
ஏர்ப்பூட்டி உழவுமறியோம்
அல்லலாம் இம்மைக்கு மறுமைக்கு நரகினுக்
காளாகி மிக அழிந்தோம்
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
அடுத்துக் கெடுத்தார்களே.

முதலிலே இவ்விருத்தத்தின் எளிமை விதந்துரைக்க வேண்டியது. பலருக்கும் புரியும்படியாகப் புலவர் எழுதினார் என்பது வெளிப்படை. கிறித்து மதத்திலே வேதன நிமித்தம் பிரவேசித்த சிலரை உடுவிலில் இருந்த பாதிரியார் ஒருவர் விலக்கியபோது, அவ்வாறு விலக்கப்பட்டார் கூற்றாக இவ்விருத்தம் இயற்றப்பட்டுள்ளது. ஆயினும் தனிப்பட்ட ஒரு நிகழ்வையன்றி, மதமாற்றத்தை ஒட்டி எழும் பல்வேறு சமூக பண்பாட்டுப் பிரச்சினைகளையும் இது தத்ரூபமாய் விளக்குகிறது எனலாம். மதமாற்றத்தின்போது "உடுபிடவை சம்பளம்" முதலியன வகித்த பங்கையும், அதனால் கிறித்தவத்திற் சேர்ந்தோர் தமது சூழலிலிருந்து அந்நியமயப்பட்டதையும், உழவுத் தொழில் முதலியவற்றைக் கைவிட்டுச் சம்பளத்தை மாத்திரம் முற்றாக நம்பியிருந்தமையையும், இவற்றினால் ஏற்பட்ட ஆத்மார்த்த, மன உளைவுகளையும் இப்பாடல் வெகுநுட்பமாக வெளிப்படுத்துகிறது. மேலேயுள்ள விருத்தத்தையடுத்து வரும் செய்யுள்களும் படித்தின்புறத் தக்கவை. முத்துக்குமார கவிராசர் சமுதாய இலக்கியம் படைத்தவர் என்று நாம் இவ்விடத்தில் வாதிடவேண்டியதில்லை. சமய வட்டத்திற்குள்ளேயே அவர் பாடினார். அவரியற்றிய 'ஞானக்கும்மி,' 'யேசுமதபரிகாரம்' முதலியன சாத்திர நூல்களின் சந்ததியில் வருவனவே. ஆயினும் சமயம் சமுதாய வாழ்க்கையிலே பிரச்சினைகளைத் தோற்றுவித்ததைக் கண்ட கவிராசர் அறிந்தோ அறியாமலோ மனிதவாழ்க்கையின் அவலங்களைக் கவிதையாக்க முனைந்தார். அவ்வாறு நடப்பியலை அநுசரித்துப் பாடிய பாக்கள், அவரது ஏனைய செய்யுள்களிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்டு அதாவது எளிமையானவாய் இருப்பதும் கவனிக்கக் கூடியதே. கற்றோர்க்கு மட்டுமின்றி மற்றோர்க்கும் பாடத் துவங்கிய—பாடவேண்டிய—சூழ்நிலையில் தவிர்க்க இயலாத வாறு எளிமை வந்து புகுந்துவிடுகிறது. இது நம்மை மீண்டும் உள்ளடக்கத்துக்கும் உருவத்துக்கும் உள்ள இயங்கியல் ரீதியான உறவைச் சிந்திக்கும்படி வைக்கிறது.

செந்தமிழ் நடைதழுவிய இலக்கிய முயற்சிகள் இவ்வாறாக, வாய்மொழிப் பாடல்களும் ஜனரஞ்சகமான இசை நாடகங் களும்—விலாசங்களும்—பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந் தன. இதிகாசக் கதைக் கூறுகளும் சமயப் பொருளுமே பெரும் பாலான நாடகங்களின் கதையாக இருப்பினும், அவை பலரது ஆக்கசக்திக்குக் களமாக அமைந்தன என்பது மனங் கொளத்தக்கது. திரு. பூரணலிங்கம் பிள்ளை தமது ஆங்கில நூலிலே 'நாடகம்' என்னும் அத்தியாயத்தில் மேல்வருமாறு கூறியிருக்கிறார்.

> நமது நாடகாசிரியர்கள் தமது கதைகளை மகாபாரதம், இராமாயணம் ஆகியவற்றிலிருந்து அப்படியே பெற்றுக் கொள்கின்றனர். தமிழ் நாடகங்களை உருவாக்குவதில் யாழ்ப்பாணம் முன்னணியில் நிற்கிறது.

அதற்குச் சான்று காட்டுவதுபோல பல நாடகங்களையும் நாடகாசிரியர்களையும் குறிப்பிட்டுச் செல்கிறார். யாழ்ப் பாணத்து நாடகாசிரியர்கள் வட்டுக்கோட்டை இராமசாமி ஐயர், கணபதி ஐயர், கணபதிப் புலவர், கந்தப்பிள்ளை, சின்னத்தம்பி (1830—1878), நாகேச ஐயர், முருகேச ஐயர், மாப்பாண முதலியார், முத்துக்குமாரப் புலவர் முதலி யோரை அவர் குறிப்பிட்டிருக்கிறார். வேறு சிலரும் எழுதிய வற்றைக் கணக்கிட்டால் சுமார் முப்பது நாடகங்களுக்கு மேல் இலங்கைப் புலவர்கள் எழுதியனவாகக் காணப்படும். கிறித்தவப் புலவர்களும் பல நாடகங்கள் எழுதினர் என்பது நினைந்துகொளத் தக்கது. தொகுத்துப் பார்க்கும்போது சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து மொழி, இலக்கியம் ஆகியவற்றில் ஒரு வகையான நெகிழ்ச்சியும் மரபின் பிடியி லிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு நிற்கும் மனப்பான்மையும் சமயநோக்கிலிருந்து சமூகநோக்கிற்குப் பெயரும் போக்கும் சில இலக்கிய ஆசிரியர்களிடையே ஓரளவு காணப்பட்டமை கருத்திற் கொள்ளவேண்டியதாகும். இவற்றின் விகசிப்பையும் பரிணாமத்தையும் அடுத்த நூற்றாண்டில் அழுத்தமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரின் இலக்கிய நோக்கு

மனிதன் படைக்கும் ஏனைய பொருட்களைப் போல இலக்கியமும் காலதேச வர்த்தமானங்களுக்குக் கட்டுப்பட்டது. அதே வேளையில் வேறு படைப்புக்களைப் போலன்றி இலக்கியம் காலத்தை வென்று நிற்கவும் காண்கிறோம். தமது காலத்து உள்ளியல்புகளை உறுதியாகப் பிரதிபலிக்கும் இலக்கியங்களே காலத்தைக் கடந்து நிற்கும் ஆற்றலையும் பெற்றுவிடுகின்றன. மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து இது பொருந்தாவுரை யாகத் தோன்றக் கூடும். ஆயினும் கூர்ந்து நோக்கினால் முரணுரை போலத் தோன்றும் மெய்யுரை என்பது புலனாகும். ஹென்ரி மற்றிஸே (1869—1954) என்ற பிரசித்தி பெற்ற பிரஞ்சு ஓவியர் ஒரு சந்தர்ப்பத்திலே பின்வருமாறு கூறினார்.

> கலைகள் யாவற்றிலும் அவை உருவாகிய வரலாற்று யுகத்தின் முத்திரை பொறிக்கப் பெற்றிருக்கும். ஆனால் சிறப்பு மிக்க ஆக்கங்களில் அம்முத்திரை மிகவும் ஆழ மாகப் பதிக்கப் பெற்றிருக்கும்.

காலத்துக்குக் கட்டுப்பட்டும் காலத்தைக் கடந்தும் இயங்கும் இரு பண்புகள் கலை இலக்கியத்திற்கு இருப்பத னாலேயே அவைபற்றிக் காலந்தோறும் வாதப்பிரதிவாதங்கள் நிகழ்கின்றன.

இலக்கியத்தின் நித்தியத்துவம்பற்றி ஒவ்வொரு தலைமுறை யிலும் முடிவற்ற சர்ச்சைகள் நிகழக்கூடுமாயினும் அதன் அடிப் படைப் பண்பு ஒன்று உண்டு. அதுதான் இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்குமுள்ள பிரிக்கவியலாத பிணைப்பு ஆகும். ஆங்கிலத் திறனாய்வாளர் ஒருவர் இரத்தினச் சுருக்கமாய்க் கூறியிருப்பது நினைவுக்கு வருகிறது.

> இலக்கியம் சமுதாயத்தின் ஓர் அமிசம். அது சமுதாயத் தின் மகோன்னதமான — ஆழமிக்க—விஷயங்கள் பல வற்றை ஒட்டி இணைத்து ஒன்றுபடுத்தி அவற்றுக்கு உரிய வடிவங் கொடுத்து விளக்கமும் அளிக்கிறது. அதனை ஒரு சமுதாய நிறுவனம் என்றும் குறிப்பிடலாம். கலை யாக்க மரபுகள், விழுமியங்கள் என்பவற்றின் களஞ்சிய மாகவுள்ளன. அதிலே கலைஞர்களும் பொதுமக்களும் சங்கமிக்கின்றனர். அதனால் மகத்தான தொடர்பு சாதனமாகவும் அது அமைந்துவிடுகின்றது. நமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பார்வம், கற்பனை, ஈடுபாடு இவற்றின் வெளிப் பாடாகவும் இருக்கிறது.

நமது கலாசாரப் பாரம்பரியம் கடுஞ் சோதனைக்கு உட்பட்ட ஒரு காலகட்டத்திலே செயற்பட்ட ஆறுமுகநாவலர் தவிர்க்க இயலாதவாறு இலக்கிய உலகிலும் சஞ்சரித்தார். அன்றும் இன்றும் கலாசாரத்தின் முக்கிய கூறுகளில் ஒன்றாக இலக்கியம் விளங்குகின்றது என்பதை எவராலும் மறுக்க வியலாது. எனவே நாவலரது இலக்கியக் கொள்கை, நடை முறை, செல்வாக்கு என்பவற்றை ஆராய்தல் அவசியம் வேண்டப்படுவது ஒன்றாகும்.

இருபதாம் நூற்றாண்டிலே 'இலக்கியம்' என்ற சொல் வெகுபரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற அதே வேளையில் அதன் வரைவிலக்கணத்திலும் பல பிரச்சினைகள் எழுந் துள்ளன. அதனாலேயே 'எது இலக்கியம்' என்னும் வினா முன்னெக் காலத்தில் பார்க்க இந்நூற்றாண்டிலே அடிக்கடி கேட்கப்படுகின்றது. இலக்கியம் தோன்றிய காலம் முதல் திறனாய்வும் வாதங்களும் இருந்து வந்துள்ளபோதும் எமது நூற்றாண்டில் இருப்பதைப் போன்று பன்முகப்பட்ட—கார சாரமான இலக்கிய சர்ச்சைகள் முற்காலங்களில் இருந்தன என்பதற்கில்லை. பரந்துபட்ட பொதுக் கல்வி, வெகுசன சாதனங்கள், ஜனநாயக உரிமைகள் முதலியன இலக்கிய சர்ச்சை களுக்குப் புதிய வாய்ப்புக்களையும் பரிமாணங்களையும் உண்டாக்கியுள்ளன எனலாம்.

இதிலொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இலக்கியத்தை உள்ளடக்கும் கல்வியை எடுத்துக் கொண்டால் அதனது பண்பு, பணி ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கள் காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்றிருப்பதைக் காண்கிறோம். ஆன்ம ஈடேற்றம், நல்லொழுக்கம், குடியியல் உணர்வு, நாட்டு முன்னேற்றம் முதலிய பல்வேறு கருத்துப்படிவங்கள் காலத்திற்குக் காலம் கல்வியின் குறிக்கோளாகக் கூறப்பட்டு வந்துள்ளன. பிளேட்டோவிலிருந்து பியாஜே வரை கல்வியைப்பற்றி எழுதியே, தத்தம் காலச் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு வெவ்வேறு கோணங்களிலிருந்து கல்விக்கு வரைவிலக்கணமும் விளக்கமும் கூறி இருக்கின்றனர்.

அறவியலை ஆதாரமாய்க் கொள்ளும் நோக்குக் கொள்கை யாளர் "தருமமும் அர்த்தமும் காமமும் மோட்சமடைதலாகிய நான்கும் நூலால் (இலக்கியத்தால்) எய்தும் பிரஜோசனம்" என்பர். ஆனால் அழகுச் சுவையையே இலக்கியத்தின் பிரதான நோக்கமாகக் கொள்வோர் "இலக்கியத்திற்குப் புறநோக்கம் எதுவும் இல்லையென்றும் அது தன்னளவில் தானே நிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுடையதொன்று, கலை கலைக்காகவே'' எனறும் உறுதியாகக் கூறுவர். 'உயிர் பெற்ற தமிழர் பாட்டு' என்ற கவிதையில் புராணங்களைப் பற்றிக் கூறவந்த பாரதியார்,

> ஒன்று மற்றொன்றைப் பழிக்கும் ஒன்றில்
> உண்மையென் றோதிமற்றொன்று பொய்யென்னும்

எனக் கூறினார். இலக்கிய சர்ச்சைகளிலும் இத்தகைய ஒரு நிலையைக் காணலாம். உதாரணமாக, ஓர் இலக்கியப் படைப்புக்குரிய வாசகரின் எண்ணிக்கையைக் கொண்டே அதன் தரம் குறித்து மாறுபட்ட மதிப்பீடுகள் தோன்றலாம். "பல்லாயிரக் கணக்கான வாசகரைக் கவரக்கூடிய ஒரு நூல் இயல்பாகவே இலக்கியத்தரம் அற்றது; அது பாமர ரஞ்சகமானது. ஆகையால் அதிலே இலக்கிய 'நயம்' எதுவும் இருக்கவியலாது'' என்பர் ஒருசாரார். பல்லாயிரக்கணக்கான வாசகர்களை வைத்திருந்த கல்கியின் எழுத்துக்களைப் பற்றிக் கா.நா. சுப்பிரமணியம் போன்ற விமர்சகர்கள் இவ்வாறுதான் கூறியிருக்கின்றனர். ஓர் உதாரணம் பார்க்கலாம்.

> இன்று தமிழன் மூவரை இலக்கியவாசிரியர்கள் என்று ரசிக்கிறான். துப்பறியும் நாவல்களை எழுதுவதில் சிறீமான் துரைசாமி ஐயங்கார், சமூக சீர்திருத்த நாவல்களை எழுதுவதில் சிறீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள், சிறுகதைகள், கட்டுரைகள் எழுதுவதில் சிறீமான் கல்கி......ஸ்ரீமான் கல்கி இந்த நாவலால் பொது ஜனத்தின் மனத்தைக் கவர்ந்து விட்டார். இந்தக் கவர்ச்சிக்கு முக்கியகாரணம் அவருடைய வசன நடை......அங்கங்கே நிகழும் ஹாஸ்சியப் பேச்சுக்களும் சம்பவங்களும் பொது ஜனத்திற்கு எளிதில் புரியக்கூடியதாக, பொது ஜனத்திற்கு அடிக்கடி பழக்கமானதாகவும் இருக்கின்றன......மனித சுபாவத்தைத் தொடர்கதை படிக்கும் சுபாவம், தொடர்கதை படிக்காத சுபாவம் என்று இரண்டாகப் பிரிக்கலாம். 'மேலே என்ன?' 'உம், உம்' என்று கேட்டுக்கொண்டு போகக்கூடிய 'குழந்தை' உள்ளங்களை உத்தேசித்தே தியாகபூமி எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்......நாவல் கதையாக ரஸிக்கக் கூடிய தியாக பூமியை நாவல் இலக்கியமாக அங்கீகரிப்பது சிரமந்தான்.

ஏறத்தாழ முப்பத்து நான்கு வருடங்களுக்குமுன் கல்கியின் தியாகபூமி திரைப்படமாக்கப்பட்டிருந்த சமயம் 'சூறாவளி' என்னும் இலக்கிய சஞ்சிகையில் (11-6-1939) அதன் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா.நா.சு. எழுதிய விமர்சனம் ஒன்றிலேயே மேற்காணும் பகுதிகள் இடம்பெற்றன. ஓரளவு இலக்கியப் பரிச்சயமுள்ளவர்க்கும் இப்பகுதியிலே பொதிந்துள்ள குத்தலும் கிண்டலும் புலனாகாமற்போகா. “பொதுஜனத்திற்கு எளிதில் புரியக் கூடியதாக” இருந்த காரணத்தினாலேயே கல்கியின் ஆக்கத்தைக் கிண்டல் செய்தார் விமர்சகர். அதாவது ஜனரஞ்சகமும் இலக்கியத்தரமும் உடனொத்தியல முடியாதவையென்பது இத்தகையோரின் பிரதான வாதமாகும்.

இதற்கு நேர்மாறான கருத்தோட்டமும் உண்டு. உதாரணந்தேடி வெகுதூரம் போக வேண்டியதில்லை. பாஞ்சாலி சபதம் முகவுரையில் பாரதியார் எழுதினார்.

> எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.

இக்கூற்று முந்தியதற்கு முரணிசைவானது என்பது வெளிப்படை. ஜனரஞ்சகத் தன்மையே இலக்கியத்தரத்தின் அடிப்படைகளில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. பாரதியார் கூற்றில் உண்மையில் இவ்விரண்டும், அதாவது இலக்கியச் சிறப்பும் ஜனரஞ்சகத் தன்மையும் ஒன்றுக்கொன்று முரணாகவோ, ஒன்றையொன்று விலக்குவதாகவோ இருக்கவேண்டுவதில்லை. ஆனால் இலக்கிய உலகில் கடந்த சில காலங்களாக இப்பிளவு இருந்து வருகின்றது. நமது சமுதாயத்திற் கைப்பணிக்கும் கலைக்கும் உடலுழைப்பாருக்கும் புத்திஜீவிகளுக்கும், பேதமும் ஏற்றத்தாழ்வுகளும் இருப்பதைப் போலவே இதுவும் சமுதாய அமைப்பிற் காணப்படும் சிற்சில முரண்பாடுகளின் பிரதிபலிப்பேயாகும்.

உலக இலக்கிய வரலாற்றை நோக்கினால் இலக்கியம் என்பது உணர்ச்சியின் வெளிப்பாடே; பயிற்சியினாலன்றி இலக்கியகர்த்தாவினது பாவனையினாலும் அவனையும் மீறிய உள்ளார்ந்த உணர்ச்சி வேகத்தினாலுமே கவிதை முதலானவை படைக்கப்படுகின்றன என்னும் கோட்பாடு தோன்றியதை அடுத்தே அப்பிளவு முனைப்பாகத் தென்படலாயிற்று என்பது புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய உலகில் நிலவும் பாகுபாட்டையும் பிளவையும் சிற்சில விகற்பங்களுடன் வெவ்வேறு ஆசிரியர்கள் வெவ்வேறு வகையிற்கூறிப் போந்தனர். உதாரணமாக டி. குயின்ஸி என்பவர் இலக்கியத்தை ஆற்றல் இலக்கியம் (Literature of power), அறிவு இலக்கியம் (Literature of knowledge) என இரு வகைப்படுத்திக் கூறினர். பொசாங்கே (Bosanquet) என்பவர் இலக்கியத்திற்காணும் சுவையையும் அழகையும் வேறொரு விதத்திற் பாகுபடுத்துகிறார். மெல்லழகு (Easy Beauty), வல்லழகு (Difficult Beauty) என்பது அவரது பகுப்பாகும். இப் பாகுபாட்டைப் பயன்படுத்தும் பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியம் மேல் வருமாறு எழுதுகிறார்.

> எளிதில் தென்படும் இன்னோசை, உவமைப் பொலிவு, கதைப் பொருள் ஆகியவற்றால் துலங்குவது மெல்லழகு. இது நூலைப் படித்தவுடன் மிக எளிதாகப் புலப்படும். ஆய்வோ, சிந்தனையோ இதனை அறியத் தேவை இல்லை. இதிலிருந்து சற்று வேறானது வல்லழகு. இது நூலில் மறைந்து கிடப்பது; எளிதில் வெண்ணெய் கடைந்து எடுப்பதுபோல் அலசிப் பார்த்த பின் இலக்கியத்திலிருந்து துலங்குவது. துன்பியல், அருவம், பொருத்தமின்மை, இணைவு முதலியவற்றால் உருவாவது. இலையால் மறைப்புண்ட கனி போன்றது.
>
> ('இலக்கியப்பேழை,' அறிமுகம், ப. 6)

சற்று மேலே நாம் எடுத்தாண்ட மேற்கோளில் கா. நா. சுப்பிரமணியம் கல்கியில் மெல்லழகு மாத்திரம் உண்டென்று இளக்காரமாகப் பேசியதைப் பார்த்தோம். அவ்விடத்தில் வல்லழகுக் கொள்கையையே இலக்கியத்திற் சிறப்பம்சமாக அவர் வற்புறுத்துகிறார் என்று நாம் கருதலாம். ஒன்று மற்றொன்றைப் பழிக்கும் நிலைமை இது.

மேலே எடுத்துக்காட்டியிருப்பன எமது காலத்து 'இலக்கிய' நிலைமையின் சிற்சில அம்சங்களாகும். ஆற்றலிலக்கியம், அறிவிலக்கியம், மெல்லழகு—வல்லழகு, ஜனரஞ்சகம்—சார்பற்ற கலையார்வம் என்பனபோன்ற பாகுபாடுகளை நாவலர் எண்ணியுமிருக்க மாட்டார். எனவேதான் நாவலர் நிலைப் பாட்டினை விளங்கிக் கொள்வதற்கு எமது காலத்துப் பிரச்சனைகளைச் சுருக்கமாகவேனும் குறிப்பிடவேண்டிய தாயிற்று.

ஒருதாரணங் காட்டுவோம். இருபதாம் நூற்றாண்டிலே, குறிப்பாக மறுமலர்ச்சித் தமிழிலக்கியம் வளர்ச்சியுற்ற காலப் பகுதியில் டி. குயின்ஸியின் ஆற்றல் இலக்கியம், அறிவிலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பாகுபாடு பலராற் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இப்பாகுபாட்டினை முதன்முதலிற் செய்த டி. குயின்ஸி 1848இல் மேல்வருமாறு ஒரு கட்டுரையில் எழுதினார்.

> அறிவிலக்கியத்தின் பணி போதிப்பதாகும். ஆற்றல் இலக்கியத்தின் பணி உணர்ச்சியூட்டுவதாகும். முன்னது ஒரு சுக்கான். பின்னது ஒரு துடுப்பு அல்லது கப்பற்பாய் எனலாம்.

அலக்ஸாண்டர் போப் என்ற ஆங்கிலக் கவிஞன் பற்றி டி. குயின்ஸி (1785—1859) இவ்வாறு எழுதியவை ஏறத்தாழ அதேகாலப் பகுதியில் இந்நாட்டில் உயிர் வாழ்ந்த நாவலருக்குப் புதிராகவே தோன்றியிருக்கும் என்பதில் ஏதுவித ஐயமும் இல்லை. டி. குயின்ஸி போன்றோர் (இலக்கியத் திறனாய்வாளர்) இத்தகைய நுண்ணிய பாகுபாடுகளை வகுத்திருப்பினும் இன்றுகூடப் பொதுப்படையாக நோக்குமிடத்து எழுதப்பட்டதெல்லாம் ஆங்கிலத்தில் Literature என்றே வழங்கப்படும். உதாரணமாக "Have you any literature on the subject" என்னும் வினாவினால் இலக்கியம் என்னும் சொல் "பாட்டு, உரை, எவையாயினும், ஒரு பொருள்பற்றி விரித்தெழுதப்படும் அனைத்தையும்" குறிப்பதாகவே உள்ளது. நாவலரைப் பொறுத்தவரையில் திருக்குறளையும் தேவாரத்தையும் அடிப்படையில் இலக்கியமாகவே கொண்டார். ஆனால் தற்கால இலக்கிய விமர்சகர்களில் ஒருவரான கா. நா. சு. சில காலத்திற்கு முன் திருக்குறள் இலக்கியமன்று, அறநூலே என்று ஒரு வாதத்தைக் கிளப்பியிருந்தார். கா. நா. சுப்பிரமணியத்தை விதந்து கூறவேண்டிய அவசியமில்லை. நவீன இலக்கிய விமர்சகர்கள் பலர் இக்கருத்தையுடையவராகவே காணப்படுகின்றனர். உதாரணமாகப் 'புதுமைப் பித்தன் கட்டுரைகள்' என்னும் நூலிலே 'சமயத்தையும் கடந்த கலை' என்ற மகுடமிடப்பட்ட கட்டுரையில்

> தற்காலத்திய பண்டிதர்கள் இலக்கியம் எது என்று கவனிக்கமுடியாமல் எல்லாவற்றையும் புகழ்ந்து கொண்டு இடர்ப்படுவதற்குக் காரணம் இலக்கியம் என்றால் என்னவென்று அறியாததுதான்.
>
> இவர்கள் ஒழுக்கத்தையோ, தர்மத்தையோ, மதத்தையோ பற்றிக் கூறுவது அதாவது அணியலங்காரங்களுடன் கூறுவது எல்லாம் கவிதை என்று கூறி இடர்ப்படுவதன் காரணம் இதுதான்...... கவிதையைப் போதனைக்குரிய கருவியாக உபயோகப்படுத்தும்வரை அது கவிதையாக இருக்காது. அதன் ரசனை கெட்டுவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கின்றது. ஒழுக்கமும், தர்மமும், மோட்சமும், கவிஞனது உள்ளத்தில் ஊறி இருதயத்தின் கனிவாக வெளிப்படும் இசைதான் கவிதையாகும்

என்று அழுத்தம் திருத்தமாகக் கூறும்பொழுது திருக்குறள் போன்ற ஒரு நூல் இலக்கியமா என்ற ஐயம் இக்கூற்றைப் படிப்போர்க்கு ஏற்படாமற் போகாது. "இருதயத்தின் கனிவாக வெளிப்படும் இசைதான் கவிதை" என்று புதுமைப்பித்தன் முடிவாகக் கூறுகையில் "ஆற்றலிலக்கியத்தின் பணி உணர்ச்சியூட்டுவதாகும்" என்று டி. குயின்ஸி கூறியதே நமக்கு நினைவுக்கு வரும். இவையெல்லாம் இலக்கியம் பற்றி இந் நூற்றாண்டிலே எழுந்துள்ள சில முரண்பாடுகளையே எமக்கு உணர்த்துகின்றன. 'திருக்குறள்' போன்ற அறிவியற் சார்புடைய நூல்தான் போகட்டும்; ஆற்றலிலக்கியக் கொள்கையைப் பிடிவாதமாகவும் நெகிழ்வற்ற முறையிலும் பற்றிக் கொள்பவர்கள் சங்கம் மருவிய காலத்து நூல்களை மட்டுமன்றி சான்றோர் செய்யுள்களையுமே உணர்ச்சியூட்டும் பண்பு அற்றன என நிராகரிப்பதைக் காணலாம். கவிதையில் மேலழகை வற்புறுத்தி வந்த டி. கே. சிதம்பரநாத முதலியார் 'கவியும் உருவமும்' என்னும் கட்டுரையில் ('இதய ஒலி,' ப. 16) எளிமை இல்லை என்ற காரணத்திற்காகப் புறநானூற்றுப் பாடல்களை அலட்சியப்படுத்துகிறார். இவ்வடிப்படை நோக்கிலேயே புதுமைப்பித்தன் (மேலே குறிப்பிட்ட கட்டுரையில்) இவ்வாறு கூறுகிறார்:

> கவிதையின் அமைப்பும் உணர்ச்சியுந்தான் கவிதையின் உரைகல். தமிழ்க் கவிதையை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று பழைய இலக்கியமான சங்க இலக்கியங்கள்; வெறும் யதார்த்த விஸ்த்தரிப்புக்கள். புகைப்படக் கவிதையென்று கூறிவிடலாம். அதற்குப் பிறகுதான் உண்மையான வளர்ச்சி கம்பன் வரையுள்ள பெருங் கனவுகள்.

கட்டுரையாசிரியர் குறிப்பிடும் இரு பிரிவிலும் அவரின் தனிப் பற்று எப்பிரிவின் மீதுள்ளது என்பது வெளிப்படை. இலக்கியத்திற்கு ஒருதலைச் சார்பான வரைவிலக்கணம் கூறுவதன் விளைவாகச் சான்றோர் செய்யுள்களையே கண்மூடித்தனமாகக் கைவிடும் பரிதாபகரமான நிலைமை ஏற்படுகின்றது. எமது காலத்து இலக்கிய முரண்பாட்டுக்கு இவ்வவல நிலையை விட வேறு சிறந்த உதாரணந்தேவையில்லை.

இவற்றையெல்லாம் அவதானிக்கும்போதுதான் நாவலரது இலக்கிய நோக்கும் போக்கும் குறிப்பிடத்தக்கனவாய் எமக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகின்றன. ஆறுமுக நாவலரவர்கள் 'பிரபந்தத் திரட்டு' முதற்பாகத்திலே முதலில் இடம் பெற்றுப் பின்னர் பதிப்பாளர்களாற் 'பாலபாடம்' நான்காம் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள 'தமிழ்ப்புலமை' என்னும் வியாசத்தில் மேல்வரும் பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன.

> திருவள்ளுவர் குறள், நாலடியார் முதலிய நீதி நூல்களைப் பதப் பொருளுடனே கற்றறிந்து கொள்க......
>
> தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும் சுத்தாங்கமாக ஓதவும் பழகிக் கொள்க......
>
> பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், உபதேச புராணம், கோயிற்புராணம், காசிகாண்டம், கூர்ம புராணம், சேது புராணம், பதினோராந் திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபரசுவாமிகள் அருளிச் செய்த முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக......
>
> திருவள்ளுவர் குறள் பரிமேலழகர் உரை, திருச்சிற்றம்பலக் கோவையார் நச்சினார்க்கினியர் உரை, கல்லாடம் நச்சினார்க்கினியர் உரை என்பவற்றைக் கற்று இடைவிடாது பலகாலும் உளங்கொளப் பயிலுக.
> .................இலக்கணங்களைக் கற்றறிந்து தாம் கற்ற இலக்கியங்களில் இவ்விலக்கண விதிகளை அமைத்துப் பழகுக.

நாவலரவர்களின் இலக்கிய நோக்கை மட்டுமன்றி அவரது கல்விக் கொள்கையையும் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்த இவ்வியாசத்தில் முக்கியமான சில பகுதிகளையே இங்கு எடுத்தாண்டுள்ளேன். புராணங்களைப் பற்றிக் கூறுகின்ற பகுதியில் அவற்றை இலக்கியங்கள் என்று சிறப்பித்திருப்பதும் கவனிக்கத்தக்கதே. சைவ சமயச் சார்பு இருப்பினும் மதக் காழ்புக்கு இடங்கொடாமல் நூல்களைக் குறிப்பிடுவதும் குறிப்பிட வேண்டியதொன்றே. இலக்கியத்தைக் கூறுபடுத்தாமல் முழுமையாக நோக்கும் தன்மையை இப்பகுதிகளிற் காணலாம்.

புராணங்களைத்தானே பெரும்பாலும் இலக்கியங்களாகக் கூறியுள்ளார் நாவலர் என்று சிலருக்குத் தோன்றலாம். அந்த ஐயம் நியாயமானதுமாகும். எனினும் தேவாரம், திருவாசகம் முதலான அருட்பாக்களுக்கும் புராண இலக்கியங்களுக்கும் உரைகளுக்கும் நுட்பமான வேறுபாடுகளை நாவலர் காட்டியுள்ளார் என்பதும் நுணுகி நோக்குவோருக்குப் புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்களைப்பற்றி இவ்விடத்தில் ஒன்று கூறுவது பொருத்த மாயிருக்கும். வரலாற்று அடிப்படையிலே பார்க்கும்பொழுது நாவலரவர்கள் புராணங்களைத் தனியே சமய நூல்களாக மாத்திரம் கருதினார் என்று கூறவியலாது. 'தணிகைப் புராணம்' பதிப்பாசிரியரான த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1959) கூறுவது சிந்தனைக்குரியது.

> ......புராண இலக்கியங்கள் பெருங்காப்பிய வகையைச் சார்ந்தன. வடமொழியிலுள்ள புராண நடை வேறு. தமிழ் மொழியிலுள்ள புராண நடை வேறு. வடமொழி யில் உள்ள புராணங்கள் வரலாற்றை மட்டும் அறிவிப்பன. தமிழ்ப் புராணங்கள் வரலாற்றுடன் காவிய இலக்கணங்களையும் பெற்று விளங்குவன. வட மொழியில் காவியங்கள் தனியே பொருந்துவன.

தமிழ்ப் புராணங்கள் அனைத்துக்கும் அபேதமாக இக் குறிப்புரை பொருந்துமென நாம் கருதவேண்டியதில்லை. ஆயினும் 'தமிழ்ப் புலமை' என்னும் வியாசத்திலே நாவலர் குறிப்பிடும் புராணங்களிலே 'பெரியபுராணம்,' 'கந்த புராணம்,' 'காஞ்சிப்புராணம்,' 'திருத்தணிகைப் புராணம்' முதலியன இலக்கியத்தரத்திலும் உயர்ந்து விளங்குகின்றன என்பதை மறுப்பவர் இரார். அந்த வகையில் நாவலரவர் களது அளவுகோல் இலக்கிய நயத்தையும் உள்ளடக்கியதாய் இருந்தது என்பது கூறாமலே விளங்கும்.

நாவலர் மரபிலே வந்த நா. கதிரைவேற் பிள்ளையை ஞானாசிரியராகப் பெற்றதாலோ என்னவோ தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் (1883—1953), நாவலர் குறிப் பிட்ட புராணங்களையே சிறந்த காவியங்களாகக் குறிப் பிட்டிருக்கிறார்.

> முன்னைத் தமிழ்ப் பெரும் புலவரும் பாட்டுக் காவியக் பெருங்கோயில் பல அமைத்திருக்கின்றார். பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, ஐம்பெருங்காப்பியம், பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், காஞ்சிப் புராணம், தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி, திருப்புகழ் முதலிய தமிழ்க் கோயில்களிருக் கின்றன. புராணங்கள் முதன் முதல் நன்னோக்கத் துடன் எழுதப்பட்டன. நன்னோக்கத்துடன் எழுதப் பட்ட புராணங்களில் இயற்கை உண்டு, பாட்டு உண்டு, இறையுண்டு, அறம் உண்டு, ஒழுக்கமுண்டு, அன்பு உண்டு, எல்லாம் உண்டு. புராணங்களின் உட்கிடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை உணர்தல் வேண்டும். ('முருகன் அல்லது அழகு')

நாவலரவர்கள் இலக்கியம் பற்றிக் கொண்டிருந்த இசை விணக்கமுடைய நோக்கு, அவர் மாணாக்கரிடத்தும் வெவ்வேறு அளவிற் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு திருவாவடு துறை ஆதீன மகாவித்துவானாக இருந்தவரும் நாவலரது மாணாக்கருமாகிய யாழ்ப்பாணத்து வடகோவை சபாபதி நாவலரையே எடுத்துக் கொள்வோம். இலக்கிய வரலாற்றின் திருந்தாத—முன்னோடி மாதிரி—என்று கருதத்தகும் வகையில் அமைந்த நூலொன்றை அவர் இயற்றினார். 'திராவிடப் பிரகாசிகை' (1889) "தமிழிலக்கிய இலக்கண சாத்திர மெய் வரலாறுகளையெல்லாம் இனிதுபட எடுத்துப் போதிப்பது" என்பர். தமிழின் தெய்வப் பழமை மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் என ஐவகைப் பிரிவு பெற்று விளங்கும் அந்நூலில், தமிழ் இலக்கியத்தை விரிந்த மனப்பான்மையுடனே விரித்திருக்கிறார் ஆசிரியர். திருமுறை இலக்கியம், சங்க இலக்கியம், காவிய இலக்கியம், புராண இலக்கியம், இதிகாச இலக்கியம், பல வகைப் பிரபந்த இலக்கியம் எனப் பொருள் அடிப்படையிலும் வடிவத்தின் அடிப்படையிலும் இலக்கியங்களைப் பாகுபடுத்தியிருக்கிறார்.

சபாபதி நாவலர் வேதவழக்கைப் போற்றுபவர் என்ற வகையிலும், தேவாரம் வேதங்களின் சாரம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும், திருமுறை இலக்கியங்கள், திருவருளோத்துக்களாதற் சிறப்புப் பற்றியும் அவற்றின் வரலாற்றை முதற்கண் சொன்னார். இன்று இது காலமுரணாகத் தோன்றுவது இயல்பே. எனினும் இலக்கிய நயத்தின் பெயரில் சங்க இலக்கியங்களையோ, சங்கம் மருவிய கால நூல்களையோ விலக்கி வைத்தாரல்லர்.

தமது சமய நம்பிக்கையின் காரணமாகத் தேவார திருவாசகங்களை முதலிலே பிரித்தபின் "திருமால் திருவடிப் பத்திஞானவான் பயிர் வளர்த்தற்கு இன்றியமையா" ஞானாமிர்தமாம் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை அடுத்துக் கூறினார். அதை அடுத்துச் சங்க இலக்கியத்திற்கும் திருமுறை இலக்கியத்திற்கும் இடையேயமைந்த 'திருக்குறள்' வரலாற்றைக் கூறினார்.

காவிய இலக்கியம் என்னும் மூன்றாம் பிரிவில் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சூளாமணி முதலிய பேரிலக்கியங்களைக் குறிப்பிடுவதைக் காணலாம். "இக்காவியங்கள் தொல்காப்பிய இயல்வழிபட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய சங்கத் தமிழ்ச் சொற்பிரயோகம் பெரும்பாலும் மருவி நவரசங்களுட் சிலவும் பலவும் தங்கண் அடங்கிக் கொண்டு உலகியல், நீதி, வைராக்கியம் முதலியவைகளை நன்கு அறிவுறுத்துவன'' என்றும், சிந்தாமணிக் காப்பியத்திற்கு நல்லுரை கண்ட நச்சினார்க்கினியர் உரையானது "செய்யுட்களின் பொழிப்புத் திரட்டிச் சொன்முடிபு விளக்கி மேற்கோள் காட்டிப் பொருள் நுட்பந்தெளித்துக் கவி இருதயந் தோற்றிச் சிந்தாமணிக்கு நந்தா விளக்கம்'' என்றும் சிலப்பதிகாரம் "முத்தமிழ் இலக்கியமான ஓர் சைன காவியம்...சிலம்பை முக்கியவிடயமாகக் கொண்டெழுந்த காவியமாதலின் சிலப்பதிகாரமெனப்பட்டது'' என்றும் பலவகைப் பிரபந்த இலக்கியம் என்னும் உபபிரிவில், "கலிங்கத்துப்பரணி, நளவெண்பாப் போலும் முன்னோர் பிரபந்தங்களும் சிவப்பிரகாச முனிவர் இயற்றிய பிரபந்தங்களும், குமரகுருபர முனிவர் இயற்றிய பிரபந்தங்களும்......இவை போல்வன பிறவுஞ் செந்தமிழ்ப் பிரபந்த இலக்கியங்களாம்'' என்றும் வேறு சில பிரபந்தங்கள் "சொல்லணி, பொருளணி, குழுமி விளங்கும் நல்ல தமிழ்ப் பிரபந்தங்கள், கொழி தமிழ்க் கவிகள்'' என்றும் சபாபதி நாவலர் ஆங்காங்கு எழுதும் பொழுது, அடங்கிய ஆனால் ஐயத்துக்கிடமில்லாத இலக்கிய ரசனையைக் காண முடிகிறதல்லவா?

சபாபதி நாவலர் மொழிபெயர்த்து இயற்றிய 'சிதம்பர சபாநாத புராணம்' (1885) என்னும் நூலிலே காவிய நயங்கள் சிறப்பாகச் சொல்லுமளவிற்கு இல்லையென்பது எவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய செய்தியே. ஆனால் மேலே காட்டிய மேற்கோள் பகுதிகளில் அவரிடத்து இருந்த கவியுள்ளம் ஆங்காங்கு பளிச்சிடுகின்றது என்பது கண்கூடு. அறிவியல், ஒழுக்கவியல், சமயம், இலக்கியம் ஆகியவற்றை வேறுபடுத்தி உணராமல், ஆற்றலையும் அறிவையும் இணைத்துணரும் பக்குவத்தை அவரது கூற்றுக்களிற்கண்டு தெளியலாம்.

இவ்வாறு அழுத்தமாகக் கூறுவதனால் நாவலர் மரபினர் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் பன்னலத்திரட்டாளர் என்றோ, பல கோட்பாடுகளின் கருத்துக்களையும் இணைத்துக் கொள்கின்றவர்கள் என்றோ நாம் கருதவேண்டியதில்லை. தமக்கெனச் சிறப்பான நம்பிக்கைகள் சிலவற்றைக் கொண்டவராகவே இருந்தனர். எனினும் கண்மூடித்தனமாக இலக்கியத்தைத் தரம் பிரித்தவர் அல்லர் என்பதே மனங்கொள வேண்டியதாகும்.

இவ்விடத்திலே இன்னுமொரு குறிப்பையும் கூறி வைத்தல் பொருத்தமாயிருக்கும் என எண்ணுகிறேன். இலக்கியம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் சில நூற்றாண்டுகளாகத் தமிழில் வழங்கி வந்திருப்பினும் மிகச் சமீபகாலம்வரை அது மிகப்பரந்த பொருளிலேயே பயன்புடுத்தப்பட்டுள்ளது. உரையாசிரியர்களே இலக்கியம் என்ற பதத்திற்குப் பொருட்செறிவு ஏற்றினர் என்று கருத இடமுண்டு. தொல்காப்பியத்தில் இலக்கியம் என்னும் சொல் வழங்கப்படவில்லை. பா, பாடல், செய்யுள் முதலிய சொற்களே இலக்கியங்கள் அனைத்தையும் குறித்து நிற்கின்றன. அவ்விலக்கிய வகைகளுள் உரை நூல்களும் அடங்கின எனக் கருதுதல் தவறாகாது. பாட்டுக்களால் இயன்ற நூல்களே மட்டுமன்றி உரை நூல்களும் இலக்கியமே என்னும் கருத்தைப் பலர் ஏற்றுக்கொள்ளாத 'இருண்ட' காலப்பகுதியில் உரை நடை நூல்கள் இயற்றி உய்யும் நெறி காட்டியவர் நாவலர். அதனாலேயே 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்னும் தனிச்சிறப்பு அவருக்கு ஏற்படுவதாயிற்று. பொருளின் அடிப்படையில் நன்னோக்கமுடைய நூல்களை 'இலக்கியம்' என்று நாவலர் கொண்டமையாலேயே தொல்காப்பிய நெறியைப் பேணிய அதே வேளையில் நவீன கல்விமுறைக்கேற்ற 'இலக்கிய' நூல்களையும் இயற்றுவாராயினார்.

இக்கண்ணோட்டத்திலே பார்க்கும்பொழுது இந்நூற்றாண்டிலே உரைநடையை ஆதாரமாகக் கொண்டு எழுந்த புனைகதை, நாடகம் முதலியன அப்பழுக்கற்ற இலக்கியங்களே என்பது போதரும். நாவலர் இருந்தால் இதனை உவந்தேற்றியிருப்பார். எனினும் சில வருடங்களுக்கு முன் இலக்கிய ஆக்கத்திற்குரிய மொழிபற்றிய சர்ச்சை எழுத்தாளர் மத்தியில் எழுந்தபோது, நாவலர் மரபு பேசும் சில செந்தமிழ்க் காவலர்கள் நவீன இலக்கியப் போக்கையும் நோக்கையும் நையாண்டி செய்து மறுத்துரைத்தது வேடிக்கையாகும். இவர்கள் இலக்கிய வரலாற்றையும் இலக்கியத்தின் பண்பையும் பயனையும் பணியையும் தெரியாதவர்கள் என்று கூறுவதன்றி வேறென்ன கூறமுடியும்? எத்தகைய நல்ல மரபிலும் காலப்போக்கில் சிற்சில கோட்டங்களும் பிறழ்ச்சிகளும் ஏற்பட்டுவிடுகின்றன. முற்கூறிய வாதப் பிரதிவாதத்தின்போது 'செந்தமிழ்' வழக்குப் பற்றி நாவலிக்க உரைத்தோரது சிறுபிள்ளைத்தனமானதும் மட்டகரமானதுமான பிரலாபம் நாவலர் வழிவந்த இலக்கிய மரபின் மறுதலிப்பு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

"கல்வி கேள்விகள் இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்யமாட்டார்கள்" என்று கல்விக்குக் குறிக்கோள் கூறியவர் நாவலர் என்பது நாமறிந்ததே. எனினும் அந் நோக்குக் கொள்கை இலக்கிய ரசனைக்குத் தடையாயிருக்கவில்லையென்பது இக்காலத்தவர் பலர் மனங்கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதொன்றாகும். இதனை நாம் வேறொரு வகையாகவும் எடுத்து விளக்கலாம்.

நாவலரவர்கள் தமது அடிப்படை நம்பிக்கைகளுக்கியையப் புராணக் கருத்துக்கள்—சமயப் பொருளை—சிரமேற் கொண்டவர் எனினும் 'சீவக சிந்தாமணி' போன்ற சமண சமயச் சார்புடைய காவியத்தைப் போற்றத் தவறவில்லை. அந் நூலை அவரே பதிப்பிக்க எண்ணி இருந்தார் என்பதும் தெரிந்ததே. நாவலர் சென்னை முத்தமிழ் விளக்க அச்சுக் கூடத்திலே பதிப்பித்து வெளியிட்ட 'திருக்கோவையார்' (1860) அநுபந்தத்திலே எதிர்காலத்தில் "அச்சிற் பதிப்பித்துப் பிரகடனஞ்" செய்ய விரும்பிய நூல்களின் பட்டியல் இடம் பெற்றது. அதிலே சைவசமயச் சார்பற்ற நூல்களுள் 'கல்லாடவுரை,' 'சீவகசிந்தாமணியுரை,' 'சிலப்பதிகாரவுரை,' 'மணிமேகலை,' 'வளையாபதி,' 'கலித்தொகையுரை,' 'புறநானூறு' முதலியன குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மொத்தம் அறுபத்து இரண்டு நூல்களை அவர் குறிப்பிட்டிருந்தார். சீவக சிந்தாமணியை அவர் பதிப்பிக்கும் வாய்ப்புண்டாகவில்லை. "என்ன காரணத்தினால் அது செயலுருப்பெறாமற் போனதோ தெரியவில்லை" என்று அஷ்டாவதானம் சபாபதி முதலியார் கூறியதாகச் சாமிநாதையர் எழுதியிருக்கிறார். அவ்வாறே பொன்னம்பல பிள்ளையும் சிந்தாமணியைப் பதிப்பிக்கத் திட்டமிட்டிருந்தார். நாவலரைப் பொறுத்தவரையில் அவகாசமின்மையே பிரதான காரணமாய் இருந்தது எனலாம். இடைவிடாத சமயப்பணியில் ஆழ்ந்துபோயிருந்த அவருக்குக் காவிய ரசனை இன்றியமையக் கூடிய ஒரு பொருளாகவே இருந்தது. அவ்வின்பத்தையும் தியாகஞ்செய்தார் என்று கூற இடமுண்டு. ஆனால் நாவலர் வழிவந்தவர்கள் பலர் சிறந்த ரசிகர்களாயிருக்கின்றனர். வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை என்னும் கட்டுரையில் ('கந்தபுராண கலாசாரம்,' ப. 31) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.

> நாவலரவர்களுக்குப் பெரியபுராணம்போல பொன்னம்பல பிள்ளைக்குக் கம்பராமாயணம் நரம்புத்துய்களிலும் ஊறிக்கிடந்தது. சீவகசிந்தாமணியிலும் பிள்ளைக்கு விசேஷ பயிற்சி உண்டு......கம்பராமாயண ரசனைகளையும் சிந்தாமணி முதலிய காவியரசனைகளையும் கந்தபுராணத்திற்கு வியாக்கியானம் செய்யும்போது ஏற்ற ஏற்ற இடங்களில் பொன்னம்பல பிள்ளை அள்ளிச் சொரிவார். அது வித்துவான்களாகிய மதுகரங்களுக்குப் புத்தம்புதிய அமிர்தமாய்ப் பொங்கிக் கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.ச. பொன்னம்பல பிள்ளை (1836—1902) சீவகசிந்தாமணி இரசனையிலும் பயிற்சியிலும் தனிச் சிறப்புடன் திகழ்ந்தமையை அன்றைய அறிஞர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டிருந்தனர். 1887இல் சிந்தாமணியைப் பதிப்பித்த உ.வே. சாமிநாதையர், பொன்னம்பல பிள்ளைக்கு நூற் பிரதியை அனுப்பியதுடன் கடிதமும் எழுதினார். அக்கடிதக் குறிப்பிலே

> பாற்கடலின் ஆழம் மந்தரமலைக்குத் தெரியுமேயன்றி வேறு எந்த மலைக்குந் தெரியாது. அதுபோலச் சீவக சிந்தாமணியின் ஆழம் உங்களுக்குத்தான் தெரியும். ஏதோ ஒருவாறு நான் பதிப்பித்திருக்கிறேன். தாங்கள் அங்கீகரித்துக் கொள்ளவேண்டும்

என்று விநயமாகக் கேட்டுக் கொண்டதை எண்ணும் பொழுது பொன்னம்பல பிள்ளையின் சிந்தாமணிப் பயிற்சி எப்படி இருந்திருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம். 'சிந்தாமணியிலே' ஊறித் திளைத்திருந்த பொன்னம்பல பிள்ளை 'மகாபாரதம்' ஆதிபருவத்திற்குத் தாம் எழுதிய உரையிலே சிந்தாமணி பாடற்பகுதிகளை மேற்கோள்களாகக் காட்டினார்.

ஒழுக்கத்திலும் சமயத்திலும் கடும் கண்டிப்பானவராய் இருந்த நாவலர் காவிய ரசனையை உள்ளடங்கலான முறையில் மாணவருக்குக் கற்பித்திருத்தல் கூடும். எனினும் நாவலர் அவர்களுக்கு மருமகரும் மாணாக்கருமான பொன்னம்பல பிள்ளையிடத்து அபாரமாக வாய்க்கப்பெற்றிருந்த காவிய ரசனை நாவலர் வழிவந்தது என்றே கொள்ள வேண்டும். பொன்னம்பல பிள்ளையிடம் காவிய ரசனையைப் பெற்றவர்கள் பலர். பொன்னம்பல பிள்ளை காலத்திலிருந்து வழிவரும் கம்பராமாயண ரசனை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை (1899—1978) ஆகியோர் வரை பேணிப் போற்றப்பட்டு வந்துள்ளது எனலாம். இது குறித்துப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் கூற்றுக் கவனிக்கத்தக்கது.

> பெரியபுராணம், கந்தபுராணம், பாரதம், கம்பராமாயணம் முதலியவைகளுக்கும் பொன்னம்பல பிள்ளை கூறிய உரைக்குறிப்புக்கள் கையெழுத்துப் பிரதிகளாய் அவருடைய மாணவ பரம்பரையிலிருந்து வருகின்றன. அவை தாய் நாட்டிலும் பரவி இருக்கின்றன. எனக்குக் கிடைத்ததொரு கம்பராமாயணக் குறிப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழக உபவேந்தரும், ஆர். பி. சேதுப்பிள்ளையவர்களும் கேட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டபடி கம்பராமாயணப் பரிசோதனத்துக்கு உபகாரமாக மேற்படி பல்கலைக் கழகத்திற்கு அண்மை யிற் கொடுத்துவிட்டேன்.

(சிந்தனைக் களஞ்சியம், 1978, ப. 218)

நாவலர் பாடசாலையில் 1917ஆம் ஆண்டில் குமாரசாமிப் புலவர் தலைமையிற் தாபிக்கப்பட்ட காவிய பாடசாலையிற் கற்றுத் தேறிய கணபதிப் பிள்ளையவர்கள் நாவலர் வழிவரும் காவியரசனைக்கும் நாம் காணக்கூடிய சாட்சியாக இருக்கிறார் என்று கூறுவதில் தவறில்லை. நாவலர் தென்னிந்தியாவிற்குப் போகின்ற காலங்களில் அவருடன் சென்ற பொன்னம்பல பிள்ளையிடம் காவியங்களைக் கற்றுணர்ந்து சுவைத்தோர் பலராவர். சபாபதிச் செட்டியார் என்பவரது வீட்டில் பிள்ளையவர்கள் 'நடாத்திய' இலக்கிய வகுப்புக்கள் பிரசித்தம். அதுபோலவே காவியங்களைக் கற்பதற்காகத் தென்னிந்தியாவி லிருந்து யாழ்ப்பாணம் வந்தோரும் பலராவர். 'தணிகைப் புராணம்' திருவாவடுதுறை ஆதீனப்பதிப்பு முகவுரையில் த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை பின்வருமாறு எழுதியுள்ளார்.

> இப்போது ஆதீன வெளியீடாக வரும் இப்புராணக் குறிப்புரை என் தமிழாசிரியர்களில் ஒருவரும் இவ்வாதீன வித்துவானுமாகிய ஸ்ரீ பொன்னோதுவா மூர்த்திகள் ஸ்ரீ சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்களிடத்திலும் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளிடத்திலும்...... பாடங்கேட்டபடியே எழுதிவைத்திருந்த பெறலரும் சரக்கரையாகிய குறிப்புரைகளாம்.
>
> ......ஸ்ரீ பொன்னோதுவா மூர்த்திகள் யாழ்ப் பாணத்து ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் மருகரும் மாணவருமாகிய ஸ்ரீ பொன்னம்பல பிள்ளையவர்கள் பால் திருவாவடுதுறை மகாலிங்க பிள்ளையவர்களுடன் கம்பராமாயணம் கேட்பதற்கு முன்னரேயே தணிகைப் புராணம் முதலியவற்றை நன்கு ஆராய்ந்து பாடங் கேட்டவர்கள்.........இக்குறிப்புரை எழுதிவைத்துள்ள காலம் ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையரவர்கள் முதன்முத லாக சீவகசிந்தாமணியைப் பதிப்பித்த கி. பி. 1887ஆம் ஆண்டின் முன்னரென்று தெரிகின்றது...... இனி இத்தணிகைப் புராணத்தை முதன்முதலாக யாழ்ப் பாணத்து ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் 1883ஆம் ஆண்டிலே அச்சிட்டார்கள்......

நாவலர் வழிவரும் மரபு என்று நாம் கூறும்போது, சி. வை. தாமோதரம் பிள்ளை, பொன்னம்பல பிள்ளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசாமிப் புலவர், நா. கதிரைவேற்பிள்ளை முதலியோரது பங்களிப்பையும் அவர் போன்ற ஏனையோரின் பங்களிப்பையும் சேர்த்தே நாம் பொதுவாகக் குறிப்பிடுகின்றோம். இம்மரபு காசிவாசி செந்திநாதையர், மேலைப்புலோலி சைவசித்தாந்த மகாசரபம் நா. கதிரைவேற்பிள்ளை, சங்கரபண்டிதர் போன்ற வைரம் பாய்ந்த சித்தாந்திகளை மட்டுமன்றி இலக்கியத் துறையிலே ஈடுபாடுடையோராய் விளங்கிய தாமோதரம் பிள்ளை, பொன்னம்பலபிள்ளை, அம்பலவாண நாவலர், சபாபதி நாவலர் முதலியோரையும் தன்னுள் அடக்குகிறது என்பது நினைந்து கொள்ளத்தக்கதாகும். இவ்வாறு பாகு படுத்துவதே அத்துணைப் பொருத்தமன்று எனத் தோன்று கின்றது. ஏனெனில் காசிவாசி செந்திநாதையரின் 'கந்தபுராண நவநீதம்,' 'தேவாரம் வேதசாரம்' முதலியன அடிப்படையில் சமயப் பொருள் பற்றியனவாய் இருப்பினும் அவற்றில் உள்ளார்ந்த வகையில் இலக்கிய உணர்வு இழையோடுகின்றது என்பதே பொருத்தமாகும். இவ்வாறு இலக்கியத்தை அறி விலக்கியம், ஆற்றலிலக்கியம் என இரு கூறுபடுத்தாமையே நாவலர் மரபின் பிரதான பண்புகளில் ஒன்று என்பது வற்புறுத்தவேண்டியதொன்றாகும். இவ்விடத்திலே செந்தி நாதையர் முதலியோருக்குப் பிரமாண நூல்களாய் உள்ள சித்தாந்த சாத்திர நூல்கள் சிலவற்றை இயற்றிய உமாபதி சிவாசாரியார் பற்றிக் குறிப்பிடுதல் பொருத்தமாயிருக்கும். தத்துவத்தையும் இலக்கிய உணர்வையும் நன்கு இணைத்துக் காட்டியவர் உமாபதி சிவம். இதனை மனங்கொண்டே டாக்டர். டி. பி. சித்தலிங்கம் 'சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும்' (1979) என்னும் நூலிலே "உமாபதி சிவம் ஒரு நேரத்தில் தத்துவ அறிஞராகவும் சமயப் புலவராகவும் திகழ்கின்றார்" என்று இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடு கின்றார்.

இவ்விடத்திலேயே இலக்கியத்திற்கும் பண்பாட்டிற்கு முள்ள பிரிக்க முடியாத பிணைப்புத் துலக்கமடைகின்றது. 'கந்தபுராண கலாசாரம்' என்ற தொடரைப் பண்டித மணியவர்கள் பயன்படுத்துவது இப்பொருளிலேயேயென லாம்.........

இன்றைய யுகத்திலே கந்தபுராண உணர்வு மட்டும் வாழ்க்கைக்குப் போதாது. அது வேறு விஷயம். ஆனால் தத்து வத்தையும் பண்பாட்டையும், இலக்கியத்துடன் இணைத்துக் காணும் நிலைக்குப் பொருத்தமான குறியீடாகக் 'கந்தபுராண கலாசாரம்' என்னுந் தொடர் கச்சிதமாக அமைந்துள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஔவையாரிலும் திருவள்ளுவரிலும் பாரதத்திலும் இராமாயணத்திலும் முழுகித்திளைத்துத் திருமுறைகளும் சிவபுராணங்களும் பயிலும் ஆண்களையும் பெண்களையும் நாம் ஆக்கி வைத்திருக்கவேண்டாவா?

என்று சி. கணபதிப் பிள்ளையவர்கள் கவலையுடனும் ஏக்கத்துடனும் வினவும்போது நாவலர் மரபின் குரலையல்லவா கேட்கின்றோம்.

நாவலர் மரபின் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் மக்கட் சார்பு ஆகும். அதாவது பாரதியார் பாஞ்சாலி சபதம் முன்னுரையில் எழுதியதுபோல அவருக்குப் பல்லாண்டுகள் முன்னதாகவே "தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி" எழுத முனைந்தவர் நாவலர். சமய தத்துவத் துறையில் அவர் வழிவந்தோர் இப்பண்பைத் தக்கவாறு வளர்த்துப் பயன்படுத்தவில்லையெனினும் நா. கதிரைவேற்பிள்ளை போன்றோர் அப்பண்பைப் பேணினர் எனலாம். 'நாவலர் சரித்திரம்' எழுதிய த. கைலாச பிள்ளையின் கூற்றொன்று இவ்விடத்துப் பொருத்தமாயிருக்கிறது.

> முன்னிருந்த எங்கள் சமயாசாரியர்கள் தாம் தரிசனஞ் செய்யப்போன தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம் போன இடங்களிலெல்லாம் லோகோபகாரமான சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தனர். வசனம் போலப் பாட்டுக்கள் இக்காலத்திற் பிரயோசனமுடையவைகளல்ல வென்று கருதியே பாட்டுப் பாடுதலை இவர் குறைத்துக் கொண்டார்.

இம்மேற்கோளில் இடம்பெறும் சொற்றொடர்கள் சில கூர்ந்து கவனிக்கத்தக்கன. லோகோபகாரம், பிரயோஜனம் என்பனவே நாவலரது மக்கட் சார்புக்கு விளக்கஞ் செய்கின்றன. இப்பயன்பாட்டு நோக்கை சி. கணபதிப் பிள்ளையவர்கள் மேல் வருமாறு கூறியுள்ளார்கள். "ஆறுமுக நாவலர் எல்லோருக்கும் விளங்கத்தக்க தெளிவான நடையில் படிப்படியே பயன் தரும் வகையில் புத்தகம் எழுதவும் பதிக்கவும் நேர்ந்தது" நமது நாடும் மக்களும் நன்நிலையடைதல் வேண்டும் என்பதற்காகவே. மக்கட் சார்பினாலேயே நாவலர் தமிழில் முதன் முதலாகப் பிரசங்கம் செய்ததும் நல்ல முறையிற் கட்டுரைகளை எழுதியதும் பாடநூல்கள் எழுதி வழிகாட்டியதும் ஆங்கிலத்தில் உள்ள குறியீட்டு முறையைத் தமிழ் வசன நடையிற் புகுத்தியதும் சைவ—ஆங்கிலப் பாடசாலையை முதன்முதல் ஆரம்பித்ததும் நிகழ்ந்தன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரின் எளிமை நாட்டம் இலக்கண வித்துவானகளையும் வெவ்வேறு அளவில் ஆகர்ஷித்தது. தனது காலத்திலே தமிழுலகம் முழுவதிலும் இலக்கணப் பேரறிஞர்களில் ஒருவராகப் போற்றி மதிக்கப்பட்ட சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் (1854—1922) பேச்சிலும் எழுத்திலும் இயன்ற அளவு எளிமையும் தெளிவும் இருத்தல் வேண்டுமென்று கூற முற்பட்டதற்கு நாலவரின் முன்னுதாரணமே காரணமாகும். 1878ஆம் ஆண்டு கந்தபுராண விருத்தியுரைகாரரைக் கண்டித்து 'இலங்கை நேசன்' பத்திரிகையில் புலவர் பின்வருமாறு எழுதினார்.

> நீங்கள் எத்தனையோ ஆண் சனங்களும் பெண் சனங்களும் புராணங் கேட்டற்கண் நம்பிக்கையோடும் வந்து உங்கள் வாய்களையே எதிர்பார்த்திருக்க, நீங்கள் அவர்களுக்குக் கொஞ்சமும் விளங்காமல் வெளிப்படையான இயற்சொற்களையெல்லாம் திரி சொற்களாக மாற்றிச் சொல்கிறீர்கள். 'பூ' என்பதற்கு 'வீ' என்றீர்கள். மறைந்து போயினார் என்பதற்கு அந்தர்த்தமாயினார் என்கிறீர்கள். சித்தியாரின் சில செய்யுட்களையும் அவற்றின் கடதன வாக்கியமமைந்த வியாக்கியானங்களையும் எடுத்துப் படிக்கிறீர்கள். சில கவிகளுக்கு வேதாந்த சித்தாந்த பிரசங்கஞ் செய்கிறீர்கள்...... எக்கவிகளிலும் வித்தியா கெம்பீரம் விளக்குகிறீர்கள்...... எத்தனையோ சனங்கள் "ஏன் இங்கு வந்தோம்" பெருமூச்சுவிட நீவிர் ஒரு மூச்சும் விடாமல், வாணன் கோவையையும் திருக்கோவையையும் படிக்கிறீர்கள்...... சில கவிகளில் ஞானக் கருத்துஞ் சொல்லுகிறீர்கள்...... இப்படி விருத்தியுரை கூறும் நீவிர் உரையில்லாத ஒரு நூலுக்காவது, இப்படலத்துக்காவது உரையெழுதி வெளிப்படுத்தலாமே.

மேற்கூறிய—நியாயமான—காலத்தின் தேவையை அறிந்த—கண்டனத்திற்கு மறுப்புரைகள் வந்தன. இருபத்துநான்கு வயது இளைஞரான குமாரசாமிப் புலவர் எழுதிய கண்டனக் கருத்தை ஆதரித்து நாவலர் அப்பத்திரிகைக்குக் கடிதம் ஒன்று எழுதினார். நாவலருடைய கடிதம் குதர்க்கம் புரிந்தவர்களை அடங்கச் செய்தது (அடுத்த ஆண்டில் நாவலர் இறந்தார்). சனோபகாரம் கருதி இயங்கிய நாவலர், குமாரசாமிப் புலவர் போன்றவர்களை உரிய வேளையில் ஊக்கப்படுத்தி வழிநடத்தியமையாலேயே அவர்களும் கல்வித்தானம், சமயப் புனருத்தாரணம் ஆகிய துறைகளில் வருவாய் கருதாது இலட்சியப் பற்றுடன் உழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் அவர்கள் எந்த விஷயத்தையும், சிறப்பாகச் சமய நோக்கில் சீர்தூக்கியவர். எனினும், மக்களிலே சமய அடிப் படையில் வேறுபாடு காட்டியவர் அல்லர். பொது விஷயங் களில்—கத்தோலிக்க மக்களுடன் தோளோடு தோள் நின்று இயக்கங்களில் ஈடுபட்டவர் என்பது நன்கு அறியப்பட்ட செய்தியாகும். அதைப் போலவே கல்வித் துறையிலும் இலக்கியத் துறையிலும் நாவலர் வழிவந்த உழைப்பாளிகள் 'லோகோபகாரமான' வழியிற் கருமங்களாற்றவே முயன்றனர். உதாரணமாக "நாவலரவர்களுக்குப் பின், நாவலரவர்களைப் போலவே நமது நிலையையும், நமது தேசத்தின் போக்கையும் நன்கு சிந்தித்தவர் பாவலர், தெ. அ. துரையப்பா பிள்ளை." "நாவலர் வசன மூலம் தனது கருத்துக்களைப் பிரகடனஞ் செய்தார். துரையப்பா பிள்ளை கவிதைகள் மூலம் தனது சிந்தனைகளை வெளியிட்டார். நாவலர் கண்ணீரால் எழுதிய 'யாழ்ப்பாணச் சமய நிலை' போன்றதே பாவலர் தேச பக்தியோடு இயற்றிய 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி.' அதிலே அவையடக்கத்து முதற் செய்யுள் வருமாறு:

தேசோப காரங் கருதியிக் கும்மியைச்
செப்புகின் றேனதனா லெவரும்
லேசாய் விளங்க இலகு தமிழில்
இயம்பு வதேநலம் சங்கமின்னே

எவருக்கும் இலேசாய்—எளிதில் விளங்கும் பொருட்டு இலகு தமிழில் பாடுவதாகப் பாவலர் கூறும் பொழுது, நாவலர், சுப்பிரமணிய பாரதியார் ஆகிய இருவரது குரலையும் கேட்கக் கூடியதாய் உள்ளது. பின்வருஞ் செய்யுள் ஒன்றில்

கல்வித் திறனை யுலகோ ரறியக்
கழறிட வில்லையிக் கும்மியை யான்
நல்வித மாக நம்நாடு திருந்த
நவிலுகி றேனடி சங்கமின்னே

என்று பாடும்பொழுது வித்துவச் செருக்கு எதுவுமின்றி, பழகு தமிழில் செய்யுள் இயற்றியதின் நோக்கம் எமக்குப் புலனாகி விடுகிறது. நாவலர் மரபிலே சிறப்பு வாய்ந்த தேசோபகாரி களில் ஒருவரான பாவலர் துரையப்பா பிள்ளையைப் போலவே கடந்த இரு தஸாப்தங்களுக்கு மேலாக, சமுதாய நோக்கும் தேசாபிமானமும் தமிழிலக்கிய ஆர்வமும் கொண்டு, இன்றைய தேவைகளை இலக்கியத்திற் கலந்து ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் இயங்கி வருவதும், நாவலர் மரபின் நவீன வெளிப்பாடு என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான — உயிர்த்துடிப்பான — மரபு என்பது கடுமை யான வரையறை அற்றது; அது புனிதமான பெயர்ப் பட்டியலில் தங்கியிருக்காதது. காலத்துக்குக் காலம் தன்னைத் தானே புதுப்பித்தும் தனக்கு வேண்டிய ஜீவசத்துப் பெற்றும் இயங்கிச் செல்வதே மரபு ஆகும்.

இவ்வாறு பார்க்கும்போது நாவலர் மரபு என ஒன்று இருப்பதின் உண்மையையும், அது தொடர்ந்து இலங்கையில் இயங்கி வந்திருக்கிறது என்பதையும், அதற்குச் சில சிறப் பியல்புகள் உண்டு என்பதையும், வெளித்தோற்றத்திற் சிற்சில மாற்றங்கள் தென்படினும் அம்மரபு இன்றைக்கும் வாய்ப்பா யுள்ள சில ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளது என்பதையும், அக்கூறுகளில் ஒருமுகப்படுத்தப்பட்ட இலக்கிய நோக்கு, மக்கட் சார்பு, நாட்டு நல நாட்டம் என்பன சிறப்பானவை என்பதையும் அவை மறைமுகமாகவேனும் உள்ளார்ந்த சக்தி யுடன் செயற்படுவதினாலேயே தற்கால ஈழத்துத் தமிழிலக் கியம் சிற்சில அம்சங்களில் தமிழக இலக்கியப் போக்கிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது என்பதையும் நாம் ஐயத்துக்கிட மின்றி உணரக்கூடியதாயிருக்கிறது. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திராதிபர் சரவணமுத்துப்பிள்ளை

ஆறுமுகநாவலர் (1822—1879) இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் தமிழ்ப்பணி, சைவசமயப்பணி என்பவற்றைச் செய்த பொழுது அவருக்குப் பக்கபலமாகச் சில தொண்டர்கள் இருந்து வந்தனர். நாவலர் அவர்களின் ஆளுமையாலும் செயலூக்கத்தாலும் ஈர்க்கப்பட்ட தொண்டர்கள் பலதரப் பட்டவர்கள். சுன்னாகம் முருகேசு பண்டிதர், மு. கார்த்திகேயப் புலவர், நீர்வேலி சிவ-சங்கர பண்டிதர் போன்றோர் ஏறத்தாழ நாவலருக்கு ஒத்த வயதுடையோர். அம்பலவாண நாவலர், நா. கதிரைவேற்பிள்ளை முதலியோர் நாவலரின் சீடர்கள் எனக் கூறத்தக்கவர்கள். இவ்விரு திறத்தினருக்கும் இடைப்பட, நாவலரவர்களுக்குச் சிறிது இளையவர்களாய், நண்பர் களென்றோ, சீடர்களென்றோ கூறவியலாத வகையில் சிலரிருந் தனர். இவர்கள் நாவலரை நேரேயறிந்தவர்கள்; அவரது பல் வேறு பணிகளாற் கவரப்பட்டவர்கள்; நாவலர் மறைந்ததன் பின் அவர் காட்டிய வழியிற் சென்று சில பல காரியங்களைச் சாதித்தவர்கள். சு. ஏரம்பையர், சி. வை. தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், காசிவாசி செந்திநாதையர், சபாபதி நாவலர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, ச. சபாரத்தின முதலியார் முதலியோர் இப்பிரிவில் அடங்குவர். இவர்களுடன் வைத்து எண்ணப்படவேண்டியவரே ஊரெழு சு. சரவண முத்துப்பிள்ளை அவர்கள் (1848—1916).

நாவலர் காலத்திலும் அவருக்குப் பின்னரும் தமிழ்ப் பணி யிலும் சமயப் பணியிலும் ஈடுபட்ட பலர் அப்பணிகளையே தமது முழுநேர வாழ்க்கை முயற்சிகளாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். சிற்-கைலாசபிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, சபாரத்தின முதலியார் முதலியோர் சில காலம் அரசாங்க சேவையில் இருந்துவிட்டுப் பின்னர் பொதுப் பணிக்கு வந்தனர். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை போல வேறுசிலர் வணிக முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தனர். ஆயினும் நாவலர் பரம்பரையினர் என்று விவரிக்கத் தக்கவர்கள் பலர், தமிழ் கற்பித்தல், சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், பத்திரிகைகள் நடத்துதல், சமய சம்பந்தமான வாதப் பிரதிவாதங்களில் பங்கு பற்றல், சமயசீர்திருத்த முயற்சிகளில் முன்னின்றுழைத்தல் என்பனவற்றையே ஊதியங் கருதாத் தொண்டுகளாகச் செய்து வந்தனர். தற்காலத்திலே சிற்சில அரசியல் கட்சிகளைச் சார்ந் தோர் கொள்கைப்பற்று, இலட்சிய வேட்கை காரணமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றுவது போலவே நாவலரது ஞான பரம்பரையில் வந்த பலர், லோகோபகார மான பல பணிகளைக் கஷ்ட நஷ்டங்களையும் பொருட்படுத் தாது செய்து வந்தனர். அது அவர்களுக்கு ஒருவிதமான ஆத்ம திருப்தியை அளித்திருக்கவேண்டும்.

ஊரெழு சுப்பிரமணியபிள்ளை சரவணமுத்துப்பிள்ளை நாவலரின் ஞானபரம்பரையைச் சேர்ந்தவர். இளமையிலே புன்னாலைக்கட்டுவன் ச. கதிர்காமையரிடம் தமிழிலக்கியம் கற்றார் (கதிர்காமையர் தமது இளமைக் காலத்திலே ஊரெழுவிலிருந்த மயில்வாகனப் புலவர் என்பவரிடத்திற் சில இலக்கியங்களைக் கற்றவர்). பின்பு சரவணமுத்துப்பிள்ளை, சுன்னாகம் பூ. முருகேச பண்டிதரிடம் (1829—1900) இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்தார். முருகேச பண்டிதர் இலக்கணத்திற் பெரிதும் பாண்டித்தியம் வாய்க்கப் பெற்றமை யினால், 'இலக்கணக் கொட்டன்' என்று அழைக்கப்பட்டவர். இவர் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, தமிழ்நாட்டிலே சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திருப்பற்றூர் முதலிய இடங்களிலும் மதிக்கப்பெற்ற தமிழாசிரியராக இருந்தவர். சிலகாலம் கும்பகோணம் டவுண் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டித ராய் விளங்கியவர். முருகேச பண்டிதரிடம் சரவணமுத்துப் பிள்ளை கற்ற காலத்திலேயே உடன் மாணாக்கராகச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவரும் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையும் பாடங்கேட்டனர் என்பர். 1898இல் யாழ்ப் பாணத்திலே தாபிக்கப்பெற்ற தமிழ்ச் சங்கத்து வித்துவ உறுப் பினர்களாக வீற்றிருந்த ஐவருள் இம்மூவரும் விளங்கினர். வட்டுக்கோட்டை ஆறுமுக உபாத்தியாயர், நல்லூர் வே. கனக சபாபதிக் குருக்கள் ஆகியோர் மற்றிருவருமாவர். த. கைலாச பிள்ளை தலைவராக இருந்த தமிழ்ச் சங்கத்திற்கு குகதாசர் ச. சபாரத்தின முதலியார் செயலாளராய்க் கடமையாற்றி னார்.

சரவணமுத்துப்பிள்ளை இளமையிலே ஆங்கிலமும் கற்றுக் கொண்டார். சைவசித்தாந்த சாத்திர நூல்களிலும் நிரம்பிய பயிற்சியுடையவராயிருந்தார். இதனால் இவரைச் சுத்தாத்து வித சைவசித்தாந்தப் பிரசாரகர் எனப் பலர் புகழ்ந்து பேசி யுள்ளனர். இவ்விடத்திலே 'பிரசாரகர்' என்னும் பதப்பிர யோகம் கவனிக்கத் தக்கதாகும். ஆங்கிலத்திலே Publicist என் னும் பதத்திற்குச் சமமானது இது. ஆறுமுகநாவலர் காலத்திலே இப்பதப்பிரயோகம் பெருவழக்குற்றது. 'சைவப்பிரசாரகர்' என்னும் புனைபெயரிலே 'நல்லூர்க் கந்தசுவாமி கோயில்' என்னும் பிரசுரத்தை 1875இல் நாவலர் வெளியிட்டார். அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பகுதிகளாய் அமைந்தது. அவற்றிற்கு எதிராக தூஷணை களே மிகவும் பொதிந்த 'பிரதிகண்டனம்' என்னும் பிரசுரம் நான்கு பகுதிகளாய் கோயிலதிகாரிகளால் வெளியிடப்பட்டது. அதற்கு உத்தரமாக 'மித்தியாவாத நிரசனம்' என்னும் நீண்ட —வைரம் பாய்ந்த கட்டுரை நாவலர் பேனையிலிருந்து புறப் பட்டது. அதிலே சைவப்பிரசாரகர் என்னும் தொடரி னாலேயே நாவலர் குறிப்பிடப்படுதல் கவனிக்கத்தக்கது. "தமிழ் விருத்தி கைம்மாறு கருதாது செய்யுஞ் சுவாதீனபதி யாகிய சைவப்பிரசாரகர்" என்று நாவலர் குறிப்பிடப்படுவது சுவைபட உள்ளது. பரமதகண்டனமும் சுயமதஸ்தாபனமும் செய்வதில் முழுமூச்சாக உழைத்த நாவலரவர்கள் வாழ் நாள் முழுவதும் பிரசாரகராக இயங்கினார். பிரசங்கங்கள், உரைநூல்கள், பாடநூல்கள், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைக் கட்டுரைகள் முதலியனவெல்லாம் ஏதோ ஒருவிதத்தில் கருத்துக் களைப் பிரசாரஞ் செய்வனவாகவே இருந்தன. வைதீக சைவப்பிரசாரகராக நாவலர் விளங்கியமை வரலாறு அறிந்த செய்தியாகும். நாவலரது ஞானபரம்பரையில் வந்தவர்கள் அனைவரும் ஏதோ ஓர் அளவில் பிரசாரகர்களாகவும் இயங் கினர். சரவணமுத்துப்பிள்ளை, அம்பலவாண நாவலர், நா. கதிரைவேற்பிள்ளை, ச. சபாரத்தின முதலியார் ஆகியோர் முனைப்பான பிரசாரகர்களாகப் பெயர் பெற்றனர்.

நாவலருக்குப் பின் வந்தவர்கள் தமது ஞானகுருவிட மிருந்து பெற்றுக்கொண்ட திறமுறைகளில் ஒன்று கண்டன நோக்கு ஆகும். மாறுபடும் கருத்துக்களைத் துவம்சம் செய்யும் மனப்போக்கும் அதற்கேற்ற மொழிநடையும் சிறந்த கண்டனத் திற்கு அடிப்படை. நாவலரின் சகாக்களான கார்த்திகேயப் புலவர், சிவ-சங்கரபண்டிதர், கா. சபாபதிக் குருக்கள் முதலியோர் ஆற்றல் நிரம்பிய கண்டனவாதிகளாய்த் திகழ்ந்த னர். இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்களில், தர்க்ககுடார தாலுதாரி எனப் பலராலும் அழைக்கப்பட்ட திருஞான சம்பந்தப்பிள்ளை (1849—1901), சபாபதி நாவலர் (1844—1903), நா. கதிரைவேற்பிள்ளை (1871—1907), சரவணமுத்துப்பிள்ளை முதலியோர் தீவிரமிக்க கண்டனகாரர் எனலாம். சில பிரபந்தங்களையும் தனிப்பாடல்களையும் பல கட்டுரைகளை யும் சரவணமுத்துப்பிள்ளை எழுதினாரெனினும், சீர்தூக்கிப் பார்க்குமிடத்து அவரது கண்டன எழுத்துக்களே ஆற்றல் நிறைந்தனவாய்க் காணப்படுகின்றன. "சரவணமுத்துப் பிள்ளையென்னுமிவர் போலிக் கொள்கைகளைத் தாக்கிக் கண்டனமெழுதுவதிலும் அதி சமர்த்தர்" என்று பிரமஸ்ரீ சி. கணேசையர் கூறியிருப்பது மனங்கொளத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலே சேர். பொன். அருணாசலம் (1853—1924) அவர்களின் ஆதரவிலே இயங்கிவந்த சைவ பரிபாலன சபையிற் சரவணமுத்துப் பிள்ளை சில காலம் சைவப்பிரசாரகராயிருந்தவர். யாழ்ப்பாணத்திலும் தென்னிந்தியாவிலும், கோயில்களிலும் சபைகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்திப் புகழீட்டியவர். அக்காலத்திலே வாழ்ந்த இலங்கைத் தமிழ்ப்புலவர்கள் பலரைப்போல இவரும் தமிழ்நாட்டில் சிலகாலம் வதிந்து தமிழ்கூறு நல்லுலகத்திற்குப் பொதுவான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

பத்திரிகைத் துறையிலே சரவணமுத்துப் பிள்ளைக்கு விசேஷ ஆர்வமிருந்தது. நாவலர் தேகவியோகமாகிய அடுத்த வருடத்திலே (1880), 'சைவ உதயபானு' என்னும் பத்திரிகையைத் தொடங்கி சுமார் ஆறு வருட காலம் வரையில் அதனைப் பேரூக்கத்துடன் நடத்தினார். அப்பத்திரிகைக்குத் தனிச்சிறப் பொன்றுண்டு. யாழ்ப்பாணத்திலும் மதுரையிலும் அது ஏக காலத்தில் வெளியிடப்பட்டது. மதுரையிலிருந்து வெளிவந்த பத்திரிகையின் முதலாவது இதழிலே (21-4-1884) 'விசேஷ விளம்பரம்' ஒன்று ஆசிரியர் கைச்சாத்திட்டுப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. பத்திரிகையின் உள்ளடக்கம், உருவம் ஆகிய இரண்டைப் பற்றியும் அவர் கொண்டிருந்த எண்ணங்களை அவ்விளம்பரம் தெளிவாக்குகிறது. குறிப்பாக அன்றைய சூழ்நிலையில் உரைநடையில் எளிமை பற்றி அவர் மனங் கொண்டிருந்தமை கவனிக்கத்தக்கதாகும்.

> சைவ உதயபானு என்னும் இப்பத்திரிகையை நாம் இம் மதுராபுரியிலே இருந்து வெளிப்படுத்தும் நோக்கத்தை நமது முதல் விஷயத்திலே தெளிவாக விளக்கியிருக்கின்றோம். நாம் இயன்றளவு நமது சித்தாந்த சைவத்துக்கு மாறுபடாமலும் வாசிப்போர் கேட்போராகிய இருபாலார் மனமுங் குளிர்ந்து முகமும் மலர்ந்து களிகொள்ளத்தக்க இனிய மொழிகளையே புணர்த்திப் பலருக்கும் பிரயோசனப் படத்தக்கதாக இப்பத்திரிகையை நடத்தி வருவேமென்று எண்ணுகிறோம். அவ்வாறு இதனைச் சோர்வடையாது நடத்துதற்குச் சைவசமயாபிமானமுள்ள பிரபுக்கள் வித்துவான்களாகிய இருபாலார் உதவியும் வேண்டப்படும். அதற்கு இவ்விந்தியா இலங்கை முதலிய இடங்களிலுள்ள கனவான்கள் பின்னிடமாட்டார்களென்று நம்புகின்றோம்.
>
> இப்பத்திரிகைக்காக எழுதப்படும் கடிதங்களும் பத்திரிகைகளும் பிறவும், பத்திரகிரயமும், "மதுரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> புதுத்தெரு வாணிவிலாச யந்திரசாலையிற் சைவ உதயபானு பத்திராதிபர் யா. சு. சரவணமுத்துப் பிள்ளைக்கு" என்று எழுதி நமக்கே அனுப்பப்படல் வேண்டும். கடிதமெழுதுவோர் இயன்றளவு கடுஞ் சொற்புணர்த்தலையும், கொடுந்தமிழ் மொழிகளையும், நியாயமின்றிப் பிறரைத் தாக்கத்தக்க வன்மொழி புணர்த்தலையும் நீக்கிப், பலர்க்கும் பிரயோசனப்படத் தக்க நல்விஷயங்களைத் தெளிவான எழுத்தில் எழுதி யனுப்புக.

1884ஆம் வருடம் மே மாதம் ஐந்தாம் திகதி மதுரையிலிருந்து வெளிவந்த 'சைவ உதயபானு' இதழில் மேல்வருமாறு எழுதினார் சரவணமுத்துப்பிள்ளை.

> நமது தமிழ்ப்பாஷையை விருத்தியாக்கத் துணிபவர் ஒருவரை நாங் காணவில்லை. நமது தமிழர்களிலே, பணம் வந்தவுடன் கல்வியை இகழ்ந்து தள்ளிவிடுதல் வழக்கம். தங்கள் பிள்ளைகளையாதல் படிப்பிக்கின்றார் களில்லை. சொல்லுதற்கஞ்சுவானென்; பெரும்பான்மை செல்வப் பிரபுக்களெல்லாம் கல்வியறிவிலே சூனியந் தான். பின்னர் அவர் கல்வியை விருத்தியாக்குவ தெவ்வாறு? பத்திரிகைகளையே வாசிக்க நேரமில்லை என்கிறார்கள். தாசிகளின் நடன சங்கீதங்களைக் கேட்க மாத்திரம் நேரமுண்டு. பத்திரிகைகளுக்குக் கொடுக்கப் பணமில்லை. அவர்களுக்குக் கொடுக்கப் பணமுண்டு. இவர் விதியிருந்தபடி என்னையோ யாமறியோம்.

நாவலரவர்களின் தர்மாவேசமும் குரலும் இவ்வாக்கியங் களிலும் ஓரளவு இடம்பெற்றிருக்கக் காணலாம். ஆறுமுக நாவலரைக் குறிப்பிடுமிடங்களில் அடிக்கடி "ஆறுமுக நாவல சற்குருநாத சுவாமிகள்" என்று சரவணமுத்துப்பிள்ளை எழுது வதைப் பத்திரிகையிற் கவனிக்கலாம். 1883 டிசம்பர் 24ஆம் திகதி இதழில் "அதிபிரதான பொதுத்தருமத்துக்குக் கேடு செய்தது" என்ற தலைப்பில் முக்கியமான கட்டுரை ஒன்று வெளிவந்துள்ளது. நாவலரவர்கள் மறைவிற்குப்பின் அவரது தரும சொத்துக்களை அநுபவித்தற்காக உறவினரும் வேறு சிலரும் செய்துவந்த அக்கிரமங்களை அக்கட்டுரை விரிவாகவும் விளக்கமாகவும் அம்பலப்படுத்துகிறது. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, நாவலரவர்களின் இலட்சியங்களையும் பணி களையும் இடையீடின்றித் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டிய இன்றியமையாமையைப் பிரசாரம் செய்வதற்காகச் 'சைவ உதயபானு' என்ற பத்திரிகையை இரண்டாம் நான்காம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமவாரங்கள் தோறும் பிரகடனம் செய்து வந்தார் எனக் கருதுதல் தவறாகாது. இப்பத்திரிகை வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. (இவ்வியந்திர சாலையிலேயே 'கந்தபுராணம்' இரண்டாம் பதிப்பு 1883இல் வெளிவந்ததாய்த் தெரிகிறது.) நாவலர் அவர்களாற் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள் பற்றிய விற்பனை விளம்பரமும் அவ்வப்போது பத்திரிகையில் வெளிவந்தன. அ. குமாரசுவாமிப் புலவர், ந. ச. பொன்னம்பலபிள்ளை, குகதாஸர் சபாரத்தின முதலியார், மதுரை இ. இராமசாமிப் பிள்ளை, சி. செந்திநாதையர் முதலியோர் 'சைவ உதயபானு' இதழ்களில் விஷயதானம் செய்துள்ளனர். பெரும்பாலான விஷயங்கள் புனைபெயர்களிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றிற் பல சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் எழுதியவை என்று ஊகித்தல் தவறாகாது. நாவலரவர்களை ஐந்தாம் சமயகுரவர் என்று 'சைவ உதயபானு' விவரித்தது. 1883ஆம் வருடம் ஆனி மாத இதழ் ஒன்றில் பத்திராதிபர் குறிப்பாகப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

> ஐந்தாஞ் சைவசமய குரவரென்று விவேகிகள் பலராலும் நன்கு பாராட்டப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல சற்குரு நாத சுவாமிகளது கல்வித்திறமை, பிரசங்க நன்மை, சமயவிருத்தி, தேவபக்தி, அடியார்பக்தி, பூசா நியமம், வாய்மை, பரோபகாரம், சன்மார்க்கம், நிலைதிறம் பாமை, தீரத்துவம் முதலிய சுவலட்சணங்களையும், அவர்களாலே உலகத்தவர்கள் அடைந்த இகபர சிலாக்கி யங்களையும்......பாதிரிகளும் அவர் மாணாக்கர்களுமே அறிய வல்லவர்கள்.

அதே இதழிற் பிறிதோரிடத்திலே 'வாய்மை விரும்பி' என்ற புனைபெயரில் (அது பெரும்பாலும் சரவணமுத்துப் பிள்ளையாகவே இருக்கலாம்) கடிதம் ஒன்றிலே பின்வருமாறு எழுதப் பட்டிருக்கும் பகுதியைக் காணலாம்:

> சிறிதேனும் சுயநலம் கருதாது தமது ஆயுனாளைத் தமது தேயத்தினருடைய ஆன்ம வீடேற்றத்திற்கேது வாகிய தமிழ்க் கல்வி அறிவை விருத்தி செய்வதிற் போக்கி ஈடில்லா நன்மை செய்து அநேகரைக் கலாசூரிய ராக்கிவிட்ட மெய்ப்புகழுடைய சற்குருநாத சுவாமி களாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் யாழ்ப்பாணத் தாருக்குப் புரிந்தவைகள்......

ஆறுமுக நாவலரவர்களின் செல்வாக்கு எந்த அளவுக்கு பத்திரிகை ஆசிரியரைப் பாதித்திருந்தது என்பதை மேற்காணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுக்களிலிருந்து கண்டுகொள்ளலாம். 'சைவ உதயபானு' வெளிவராது நின்றபின், அது அச்சிடப்பட்ட சைவப்பிரகாச அச்சியந்திர சாலையிலிருந்தே 'இந்துசாதனம்' 1889ஆம் வருட முதல் வெளியிடப்படலாயிற்று. 1880இல், அதாவது நாவலர் இயற்கையெய்திய அடுத்த ஆண்டில் சைவப்பிரகாச சமாஜம் என்னும் நிறுவனத்தைத் தாபித்தவர்களே, சைவப்பிரகாச அச்சியந்திர சாலையையும் நிறுவி நடத்தி வந்தனர். ச. பொன்னம்பலபிள்ளை, வை. ஆறுமுகப்பிள்ளை, சு. சரவண முத்துப்பிள்ளை, வி. வேலுப்பிள்ளை முதலியோர் சமாஜத்தை முன்னின்று நடத்தியவர்கள் எனலாம்.

'உதயபானு' பத்திரிகை நின்றபின்னரும் சரவணமுத்துப் பிள்ளையை 'பத்திராதிபர் சரவணமுத்து' என்றே பலரும் அழைத்து வந்தனர். அவரும் அவ்வாறு தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டார். உதாரணமாக 1911ஆம் வருட முதல் யாழ்ப் பாணம் ஸ்ரீ வாலாம்பிகை அச்சகத்திலிருந்து வெளிவந்த 'சண் முகநாதன்' என்னும் பத்திரிகையிலே பிள்ளையவர்கள் பல கட் டுரைகளை எழுதிவந்தார். மு. சு. மாணிக்கம் பிள்ளை என் பவர் நடத்திய அப்பத்திரிகைக்குப் பிள்ளையவர்கள் ஏறத்தாழ ஆசிரியராகவே அமர்ந்திருந்தார் என்று கருதக் கூடியதாய் உள்ளது. சொந்தப் பெயரிலும் புனைபெயர்களிலுமாக மிகப் பல விஷயங்களை எழுதித் தள்ளினார். சொந்தப் பெயரில் எழுதியபொழுது 'சு. சரவணமுத்துப் பிள்ளை உதயபானு பத்திராதிபர்' என்று குறிப்பிட்டார். பிள்ளையவர்களுக்குச் சமகாலத்தவரான இலங்கையர்—சபாபதி நாவலர், செந்தி நாதையர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, சபாரத்தினமுதலியார், எஸ். தம்பிமுத்துப் பிள்ளை, வித்துவான் சி. தாமோதரம் பிள்ளை, வித்துவான் சி. விசுவலிங்கபிள்ளை முதலியோரெல் லாம் இலங்கையிலும் இந்தியாவிலும் பத்திராதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். ஆயினும் சரவணமுத்துப் பிள்ளையே பத்திராதிபர் என்ற அடைமொழியினால் சிறப்பிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பத்திரிகை ஒரு மக்கள் தொடர்பு சாதனம் என்னும் அடிப்படை உண்மையை ஓரள விற்கு இவர் உணர்ந்திருந்தார் என்று கருதலாம். அவ்வுணர் வுடனேயே 'சண்முகநாதன்' பத்திரிகையை நடத்தி வந்தார். 'செல்வமும் வறுமையும்' (1915), 'சமயநூற்கல்வியும் நம்ம வரும்' (1914), 'இந்தியாவுஞ் செந்தமிழும்' (1913), 'கலிகால விபரீதம்' (1915), 'போலிப்புலவர்கள்' (1915), 'சுப்பிரமணியக் கடவுளும் இந்துசாதனப் பத்திரிகையும்' (1915) முதலிய கட்டுரைகள் அப்பத்திரிகையில் பிள்ளையவர்களால் எழுதப் பட்டன. ஓரிதழில் (16-3-1914) பின்வருமாறு எழுதினார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனமாதலால், ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களுடைய காலத்திலே அவர்களால் மிக்கோங்கிப் பிரபலமுற்றிருந்த நமது சுத்தாத்துவித சைவசித்தாந்த சமய அறிவு இப்பொழுது சுருங்கி வருவதற்கேதுவாயிற்று. நாவலரவர்கள் காலத்திருந்தவர்களாயிப்பொழுதுள்ள சிலரினாலேதான் நமது சித்தாந்த சைவஞ் சிறிது விளக்கமுற்றிருக்கின்றது. இச்சிலரும் போயொழிந்தால், நமது யாழ்ப்பாண தேசம் முழுவதும் மாயாவாதமும் நிரீச்சுரவாதமும் உலோகாயதமுமே மலிந்து நீசதேசமாக வருவதற்கு யாதுஞ் சந்தேகமில்லை. இனி நமது தேசத்தைப் பழைய நன்னிலைக்குக் கொண்டு வர வேண்டுமேயானால் இங்கேயுள்ள செல்வப் பிரபுக்களுள்ளே அறிஞராயுள்ள சிலராவதொருங்கு திரண்டு, கோயில்களையும், மடங்களையும் கட்டுதலை விடுத்து, ஊர்கடோறும் சித்தாந்த சைவ சபைகளைத் தாபித்து நடத்திவர முயலல் வேண்டும்.

நாவலரின் குரலை மீண்டும் மீண்டும் பிள்ளையவர்களின் எழுத்திற் கேட்கக்கூடியதாய் இருக்கிறது.

சரவணமுத்துப்பிள்ளை அடிக்கடி தென்னிந்தியாவிற்குச் சென்று வருபவராயிருந்தார். அப்பொழுதெல்லாம் அறிஞர் குழாத்தில் அமர்ந்தும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் தமிழ்ப் பணி புரிந்தார். உதாரணமாக 1909ஆம் ஆண்டு மேலைச் சிவபுரியிலே சன்மார்க்க சபை நிறுவப்பட்ட பொழுது, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரின் அழைப்பையேற்றுப் பிள்ளையவர்களும் அத்தொடக்க விழாவிற் கலந்து கொண்டனர். புலவர்களும் புரவலர்களும் பிறரும் குழுமியிருந்த அச்சபையில் பிள்ளையவர்களே, "இன்று, இச்சபைக்கு, தொல்காப்பிய விருத்தியுரை யாசிரியரும் பற்பல அரிய நூலாசிரியருமாகிய சோழவந்தான் ஸ்ரீ அரசஞ் சண்முகனாரவர்கள் அக்கிராசனாதிபதியாக இருக்க வேண்டும்" என்று எழுந்து கேட்டுக்கொண்டார். அதுமட்டுமன்று; அன்று நடைபெற்ற கூட்டத்தில் பண்டிதமணி, இராமசாமி ஐயங்கார் ஆகியோருடன் பிள்ளையவர்களும் சொற்பெருக்காற்றினர். அக்காலத்திலே இலங்கையிலும் தமிழகத்திலும் வாழ்ந்த தலையாய தமிழறிஞர்களுடன் நெருங்கிப் பழகிய பிள்ளையவர்கள் "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்னும் கூற்றிற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தார் எனலாம்.

தென்னிந்தியாவில் மட்டுமன்றி, சிங்கப்பூர், கோலாலம்பூர் ஆகிய இடங்களுக்கும் சென்று சைவப் பிரசங்கங்கள் நிகழ்த்திப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழீட்டிய பிள்ளையவர்கள், அவ்வப்போது கண்டனங்களன்றி ஆக்க பூர்வமான சிலவற்றையும் எழுதியிருக்கிறார். 'சுத்தாத்துவித சைவசித்தாந்த மகத்துவம்' என்பது அவரின் சிறப்புமிக்க கட்டுரைகளில் ஒன்று. உவைமன் கதிரைவேற் பிள்ளை (1829—1904) தயாரித்த தமிழ்ப் பேரகராதியின் உருவாக்கத்திற் பங்குகொண்ட யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர் களில் இவரும் ஒருவர்; சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், உடுப்பிட்டி சு. ஆறுமுகப்பிள்ளை (1887—1955) ஆகியோரும் சில சில பாகங்களுக்குத் துணை புரிந்தனர். கதிரைவேற் பிள்ளையவர்களின் மரணத்தால் முற்றுப் பெறாமலிருந்த அவ்வகராதியை 1910இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் வெளியிட்டனர். விரைவிற்பாடும் திறன் வாய்க்கப் பெற்றிருந்த இவர் இராமநாதபுரத்து மன்னராயிருந்த பாஸ்கரசேதுபதி (1867—1903) பேரில் சில பிரபந்தங்கள் பாடிப் பரிசிலும் பெற்றார். கோப்பாய்ச் சபாபதி நாவலர், உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் முதலிய இலங்கைப் புலவர்கள் பாஸ்கர சேதுபதி மீது பாடல்கள் இயற்றியமையும் நினைவுகூரத் தக்கதே. எனினும் பிள்ளையவர்கள் இயற்றிய பல்வகைப் பாடல்களுள்ளும், ஆறுமுகநாவலர் தேகவியோகமடைந்த வேளையிலே இயற்றிய இரங்கற்பாக்கள் கவித்துவம் பொதுளியனவாயுள்ளன. கணேசையர் கூறியிருப்பதுபோல "கேட்போர் மனத்தை உருக்கு நீர்மையவாய் மிளிர்கின்றன" அவ்விரங்கற் பாக்கள்.

அருமறையா கமமுறைக ளாலகி லோங்க
வடியனுளத் தஞ்ஞான திமிர நீங்கப்
பெருமையொடு தவவிரத முலகோர் தாங்கப்
பீடில்பர சமயகுழா மிரிந்தே யேங்க
வொருமையொடு நல்லைநக ருதித்தே வந்த
உத்தமநல் லாறுமுகப் பெம்மா னேநின்
னிருமைபெறு திருவாக்கி னருமை தன்னை
யின்பமுடன் கேட்பதினி யெந்த நாளே

என்பது அவரியற்றிய விருத்தப்பாக்களில் ஒன்று. நாவலர் மீது உருக்கமான கையறுநிலைப் பாக்கள் பாடியவர்களில் தாமோதரம் பிள்ளை, சிவசம்புப்புலவர், ச. பொன்னம்பல பிள்ளை, முருகேசபண்டிதர், குமாரசுவாமிப்புலவர் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்களின் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர் சரவணமுத்துப்பிள்ளை.

பிள்ளையவர்களிடம் பலர் பாடங்கேட்டனர். சேர் அம்பலவாணர் கனகசபைப் பிள்ளை, நியாயதுரந்தரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு முதலிய கனவான்களும் தமிழாசிரியர் பலரும் இவரிடம் சிற்சில இலக்கிய சமய நூல்களைக் கற்றனர். இவர்களுள் தென்கோவை பண்டித ச. கந்தையபிள்ளை (1880—1958) சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவர். இலக்கண இலக்கியங்களும் சமய நூல்களும் சரவணமுத்துப் பிள்ளையிடம் பயின்றவர் கந்தையபிள்ளை. 'வித்தகம்' என்னும் பத்திரிகையை நடத்தியமையால் 'வித்தகப் பத்திராதிபர்' எனப் பலராலும் அழைக்கப் பெற்ற கந்தையபிள்ளை இவரிடம் பேரன்பு பூண்டிருந்தார். 1916இல் பிள்ளையவர்கள் இறந்தபோது உருக்கமான சரமகவிகள் பாடியோரில் கந்தையபிள்ளை விதந்துரைக்கத் தக்கவர்.

நாவலர் தமது காலத்தில் பல காரியங்களைச் செய்யவும் அவர் மரபினை முன்னெடுத்துச் செல்லவும், சில ஞானபுத்திரர்கள் இருந்தனர். அவர்களில் சிறப்புடன் விளங்கிய ஒருவர் சரவணமுத்துப்பிள்ளை. நாவலர் வரலாற்றையும் அவரது மரபின் வரலாற்றையும் நன்கு விளங்கிக் கொள்வதற்குச் சரவணமுத்துப் பிள்ளை போன்ற தமிழ்த் தொண்டர்களின் வாழ்க்கையும் பணியும் விரிவாக ஆராயப்படுதல் அவசியம். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாண நாவலரின் கல்விப்பணி

ஆறுமுக நாவலர் வழிவந்த ஞானபரம்பரையினருள் 'நாவலர்' என்னும் பட்டம் வழங்கப் பெற்றுத் திகழ்ந்தோர் இருவர்: வடகோவை சு. சபாபதி நாவலர் (1844—1903) ஒருவர்; சித்தன்கேணி ஆ. அம்பலவாண நாவலர் (1855—1932) மற்றொருவர். இவ்விருவரோடு புலோலி ம. தில்லைநாத நாவலர் (1854—1939) என்பவரும் குறிப்பிடத்தக்கவராயினும், நாவலரது ஞானபரம்பரையில் அவரைச் சேர்த்துக் கொள்ள லாமோ என்பது ஆராய்ச்சிக்குரியது. உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவரிடத்தில் தமிழிலக்கிய இலக்கணங்களைக் கற்று யாழ்ப் பாணத்திலும் கொழும்பிலும் தென்னிந்தியாவிலும் சைவ சமயப் பிரசங்கங்கள் நிகழ்த்திக்கொண்டு வாழ்ந்த தில்லை நாதர், ஆறுமுக நாவலருடன் நேரடியான தொடர்புகொண் டிருந்தாரா என்பதனை அறியுமாறில்லை.

ஆறுமுக நாவலர் மரபில் வந்த முக்கியஸ்தர்கள் தத்தம் சக்திக்கும் ஈடுபாடுகளுக்கும் ஏற்ப நாவலர் ஆற்றிய பணி களைத் தொடர்ந்து செய்ய முயன்றனர். 'முதன் முயற்சியாளர் என்ற வகையில் ஆறுமுக நாவலர் பல துறைகளில் முன்னின்று உழைத்தார்; இன்னும் சில துறைகளில் ஈடுபடத் திட்ட மிட்டிருந்தார். நைட்டிகப் பிரமசாரியாகவும் அயர்வறியா உழைப்பாளியாகவும் விளங்கிய நாவலரவர்கள், பலர் சேர்ந்து செய்யவேண்டிய பணிகளைத் தன்னந்தனியனாக—அநாயாச மாக—ஆற்றினார். அவருக்குப் பின் வந்தோர், இரண்டொரு துறைகளிலே தம்மாலானவற்றைச் செய்தனர். இன்னு மொன்று. அந்த ஞான பரம்பரையைச் சேர்ந்தோராய்க் கருதப் படுவோர் அனைவரும் தாம் போற்றிய தலைமகனின் வரலாற்றுப் பாத்திரத்தையும் காலத்தின் தேவைகளை உள்ளுணர்ந்து அப்பெருமகன் செயலாற்றிய முறையினையும் தெளிவாக அறிந்து கொண்டனர் என்பதற்கில்லை. உதாரண மாக, நிறுவன அடிப்படையில் நாவலரின் கல்விப்பணிகளைத் தொடர்ந்து நடத்திவந்த 'மானேஜர்' த. கைலாசபிள்ளை, நாவலர் கடைப்பிடித்த முற்போக்கான நெறிமுறைகளை விளங்கிக் கொள்ளாதவராய் மனமார்ந்த பழமை போற்றும் பண்பினராய் விளங்கினார். இவ்வாறு பல்வேறு நிலைகளில் நின்று நாவலர் பணிகளைத் தொடர்ந்து நடத்தியவர்களை வெவ்வேறு விதமாய்ப் பாகுபடுத்தல் கூடும்.

அடிப்படையில் நாவலர் பரம்பரையினரை இருபெரும் பிரிவாக வகுத்து நோக்குதல் பயன்தருவதாகும். ஒரு பிரிவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ நாவலர் காலத்தவர்கள்; அவரையொத்த கல்வி கேள்வி வாய்க்கப் பெற்றவர்கள். ஆயினும் நாவலருடைய ஆற்றல், அறப்பற்று, ஆளுமை இவற்றால் ஈர்க்கப்பட்டு அவரைத் தமது தலைவராகவும் வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டவர்கள்; "சிவஞான முனிவருக்குப் பின் படித்தவர் ஒருவர் என்றாற் சங்கர பண்டிதரே" என்று பாராட்டப்பெற்ற நீர்வேலி சிவசங்கர பண்டிதர் (1829—1870), 'தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை' என்று புகழப்பெற்ற சிறுப்பிட்டி சி.வை. தாமோதரம்பிள்ளை (1832—1901), தலைசிறந்த தமிழ்ப்புலவராக இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் போற்றப்பட்ட சுன்னாகம் பூ. முருகேசபண்டிதர் (1829—1900), நாவலர் பாடங்கேட்ட இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் கல்விகற்ற காரைநகர் பிரம்மஸ்ரீ மு. கார்த்திகேயப் புலவர் (1819—1898), நல்லூர் வே. சம்பந்தப் புலவர் முதலியோர் நாவலருக்குச் சமகாலத்தவர்; அவருக்கு ஒத்தாசை புரிந்தவர்கள்; அவரைத் தமது தலைவராக வரித்துக்கொண்டவர்கள்.

மற்றொரு பிரிவினர், நாவலருக்கு மாணாக்கராகவோ அன்றி நாவலரைக் கண்டவரின் மாணாக்கராகவோ அமைந்து, நாவலரைத் தமது இலட்சிய புருஷராகவும் குருமூர்த்தியாகவும் கொண்டு செயற்பட்டவர்கள். "நாவலரின் மருகரும் மாணாக்கரும்" என்ற சிறப்புக்குரியவரும் காவிய இரசனை மரபு ஒன்றைத் தோற்றுவித்தவருமான வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை (1836—1902), "நாவலர் செய்யும் பிரசங்கங்களைக் கேட்டு, அதன்மேல் குறிப்பு எழுதி வைத்து விட்டன்றி உறங்காத விரதம் பூண்டவர்" என வருணிக்கப் பட்டுள்ள ஏழாலை சி. செந்திநாதையர் (1848—1924), நாவலர் பெயரால் அச்சகம் அமைத்து அரும்பணி பல புரிந்த ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1858—1917), "தருமந்தெரிந்தவர் என்று நாவலர் கண்டு" வளர்த்து வரும் வேளையில் அகால மரணமடைந்த மாணவர் வி. சுப்பிரமணியபிள்ளை ( —1873), "நாவலரிடத்தில் மிகவும் அபிமானமும், உறைத்த பக்தியுமுடையவராய்" விளங்கி, நாவலரின் பாதசேகர் என்னும் சிறப்புப் பெயர் பூண்டவரான அறிவுக்களஞ்சியம் அம்பலவாணநாவலர், "நாவலர் அவர்களைப் போலத் தமிழ்நாட்டில் நல்லோர்களால் அபிமானிக்கப் பெற்ற" மாயாவாத தும்ச கோளரி, சதாவதானி புலோலி நா. கதிரைவேற்பிள்ளை (1871—1907) முதலியோர் உத்தம மாணாக்கரின் உளத்தூய்மையுடன் நாவலர் பணிகளை முன்னெடுத்துச் செல்லப் பெரிதும் முயன்றவர்கள்.

"நாவலர் தனித்தவர்; அவருக்கு 'வாரிசு' இல்லை. அவருடைய மாணாக்கர்கள் மகா படித்தவர்கள் என்று சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்கள். ஆனால் அவரைப் போலத் தருமத்தை நீதியைச் சிந்தித்தவர்களல்லர்.'' 'நாவலர்' (1968) என்ற பிரசுரத்திலே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். எடுத்துக் கூறவந்த விஷயத்தை வற்புறுத்தும் பொருட்டு கடுமுனைப்பாக ஆறுமுகநாவலருக்கு 'வாரிசு' இல்லை என்று அழுத்திச் சொல்லியிருக்கிறார் என்றே நாம் கொள்ளவேண்டும். நாவலரைப்போல இன்னொருவர் அதே காலகட்டத்தில் இருக்கவில்லையென்பது உண்மையே. நாவலருக்கு இணை நாவலர்தான். ஆயினும் அவரது ஞான பரம்பரையில் வந்த இரண்டொருவர் திரிகரண சுத்தியுடன் அவரைப் பின்பற்றி வாழமுயன்றனர் என்பதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதே. அத்தகைய சிறப்புடையோரில் அம்பலவாண நாவலர் ஒருவர்.

ஆறுமுகநாவலரின் ஆசீர்வாதத்தைச் சிறுபிராயத்திலேயே பெற்று அவரது அடிச்சுவட்டிலே சென்ற அம்பலவாணர், தான் செய்ய விரும்பிய பணிகளுக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணிக்குமுகமாக பிரமசரிய விரதத்தையும் மேற்கொண்டொழுகினார். வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் முதலியவற்றிற் புலமை, பிரசங்கவன்மை, கல்வித்தானத்தில் மிகுந்த ஈடுபாடு, நூலாக்கத்தில் அக்கறை என்பன நாவலரவர்களிடத்து இவர் கண்டு பின்பற்றிய பண்புகள் எனலாம். ஆறுமுகப் பிள்ளைக்கு 'நாவலர்' பட்டம் வழங்கிய திருவாவடுதுறை ஆதீனமே அம்பலவாணருக்கும் அதே பட்டத்தை வழங்கியது. அம்பலவாண நாவலரின் கல்வித்தொண்டின் சின்னமாக விளங்குவதே வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி. ஆரம்பத்திலே வேதனமின்றியும் சொற்ப வேதனத்திலும் ஆசிரியப் பணிபுரிய முன்வந்த இளைஞர்களை ஈர்த்தது அம்பலவாணநாவலரின் அப்பழுக்கற்ற சேவைமனப்பான்மையும் அவர் ஆறுமுகநாவலர்பால் காட்டிய அளப்பரிய பக்தியுமேயாகும். அம்பலவாண நாவலரும் ஆசிரியரும் பாடசாலைப் பணியை ஆறுமுகநாவலரவர்களுக்குச் செய்யும் தொண்டாகவே கருதினர் என்று கூறப்படுகிறது.

அரனடியாரை அரன் எனவே கொண்டு போற்றும் மரபு சைவசமயத்தில் உண்டு. அதற்கியைய, அம்பலவாண நாவலர் ஆறுமுகநாவலரவர்களைத் தமது தெய்வமாகவே கொண்டு வாழ்ந்து வந்தார். அற்புதமான அக்குருபக்தியின் வெளிப்பாடாக அமைந்ததே 'நாவல சற்குருமணிமாலை.'

ஆறுமுகநாவல னடியினை பரவுதுந்
தேறுமுகவின்பந் திகழ்தரற் பொருட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நூலின் இறுதியிற் பாடியிருக்கிறார் அம்பலவாணர். நாவலர்மீது அவர் வைத்திருந்த அரும்பெரும் பக்தி, நூல் முழுவதும் இழையோடுவதைக் காணலாம். நாவலரின் மருகரும் மாணாக்கருமான பொன்னம்பலபிள்ளை, பெருமானார் விதேகமுக்தியடைந்த வேளையிற் சொல்லிய செய்யுளிலே பின்வருமாறு கூறினார்:

ஆறுமுக ஐயற்கே ஆட்செய்யப் பெற்றனம்யாம்
வேறறங்கள் வேண்டா வெமக்கு

ஆறுமுக நாவலனை அர்ச்சித் தடிபணியிற்
பாறும் பவநோய் பறிந்து

ஆறுமுக நாவலசீ ரத்தசிற்ப நாயடியேம்
வீறுமின்ப வீடடைதன் மெய்

நாவலரையே நற்றெய்வமாகப் போற்றிப் பரவும் பக்திவயப் பாட்டைப் பொன்னம்பலபிள்ளையின் பாடலடிகளிற் காணக் கூடியதாய் இருப்பதுபோலவே, 'சற்குருமணிமாலை'யிலும் வரிக்குவரி காணக்கூடியதாயிருக்கிறது.

நாவலர் பெருமான் காலத்திலும் அதற்குப் பின்னரும் இலங்கையிலிருந்து தமிழறிஞர் பலர் இந்தியாவிற்குச் சென்று மொழித்தொண்டும் சமயப்பணியும் ஆற்றிவந்துள்ளமை பலரும் அறிந்த செய்தியாகும். அம்பலவாண நாவலரும் தமிழகத்திற் பல வருடங்கள் வாழ்ந்து புராணங்களுக்குப் பயன் நிகழ்த்தியும் சமயப்பிரசங்கங்கள் புரிந்தும் சற்பணிகளில் ஈடுபட்டுவந்தார். மதுரைச் சங்கத்தின் தொடக்ககாலத்தில் இலங்கை அறிஞர் சிலர் அதன் வித்துவ உறுப்பினராகத் திகழ்ந்தனர். பாண்டித்துரைத்தேவர் இலங்கைத் தமிழறிஞர் பலரை நன்கு அறிந்தவராகையால் அவர்தம் வரிசை அறிந்து கௌரவித்தனர். வி. கனகசபைப்பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, அ. குமாரசுவாமிப் புலவர், சி. செந்திநாதையர் ஆகியோருடன் அம்பலவாண நாவலரும் மதுரைச் சங்கத்துத் தமிழ் வித்துவான் வரிசையில் வீற்றிருந்தவராவர். அம்பலவாண நாவலர் போன்றோரது பிரதான கவனம் சமயத்திலேயே பதிந்திருந்ததெனினும், அக்காலத்திலே அரும்பத் துவங்கியிருந்த தமிழ் மறுமலர்ச்சியின் தாக்கத்தினால், தமிழ் ஆய்விலும் அபிவிருத்தியிலும் தவிர்க்க இயலாதவாறு கருத்துக் கொண்டிருந்தனர் என்பது கருதத்தக்கது.

ஆறுமுக நாவலர் செய்ததைப் போல சைவத்தையும் தமிழையும் வளர்க்கக்கூடிய நிறுவனங்களை இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் தாபித்தார். திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலுக்கு அணித்தாக அமைக்கப்பட்ட திருஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்த சுவாமிகள் மடாலயம், சிதம்பரத்தில் நிறுவிய திருஞானசம்பந்த சுவாமிகள் கோயில் திருப்பணி முதலியனவும் யாழ்ப்பாணத்திலே சித்தன்கேணியில் சில கோயில் திருப்பணிகளும் இவரது நாமத்தை இன்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. ஆயினும் இவர் ஆற்றிய லோகோபகாரமான பணிகளுள் சித்தன்கேணி ஆங்கிலப் பாடசாலைத் தாபனம் தலையாயது என்பதில் ஐயமில்லை. வண்ணார்பண்ணையில் ஆறுமுக நாவலரது முயற்சி பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாக வளர்ச்சியுற்றது போல, அம்பலவாண நாவலரது அரும்பணி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியாக மலர்ந்துள்ளது. பலகாலம் தென்னகத்தில் வாழ்ந்துவிட்டு ஒருமுறை இலங்கை சென்றபொழுது எவ்வாறு அவர் போற்றி வரவேற்கப்பட்டார் என்பதனை அக்காலத்துப் பத்திரிகைச் செய்தி ஒன்றின் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாய் இருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'சண்முகநாதன்' என்னும் பத்திரிகையில் (21-3-1913) 'சமாசாரங்கள்' என்னும் பகுதியில் பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது:

ஸ்ரீமத் அம்பலவாண சுவாமியாரவர்கள்

இவர்கள் யாழ்ப்பாணத்துச் சித்தங்கேணியைத்தமது சென்மபூமியாகவுடையவர்கள். தங்கள் வாழ்நாளிற் பெரும் பாகத்தைப் பாண்டி நாட்டிற் போக்கியவர்கள். நகரத்து வணிகராலும் பிறராலும் பெரிது மதிப்புற்றவர்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களின் சீடவர்க்கத்தவரென்றுங் கூறுப. ப்ரம்ம தர்க்கஸ்தவ மொழிபெயர்ப்பு நூலும் சற்குரு மணிமாலை யென்னும் பிரபந்தமுஞ் செய்தவர்கள். இப்போ தூத்துக்குடி மார்க்கமாகத் தம்மிரு சீடரோடும் கொழும்பில் வந்திருக்கிறார்கள். நாவலச் சாமியாரைக் கொழும்பிலே ஸ்ரீ. க. நவசிவாயம் ஜே. பி. அவர்கள், ஸ்ரீ. க. சுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய கனவான்கள் வரவேற்று மாலையிட்டுப் பந்தர் சோடித்து அலங்கார வண்டியிலழைத்துபசரித்தார்கள். ஆரிய திராவிடாங்கில வித்துவானும் சங்கீத சாகித்திய பண்டிதனும் பம்பரைப் புலவரேறும் தமிழ்ச்சங்க அங்கத்தவரும் இலங்கை இராசவாசல் முதலியாருமாகிய சிறீமான் சிற். கைலாசபிள்ளையவர்களும் உபசரணையிற் பங்கு பற்றினார்கள். சாமியார் கொழும்பிலே பிரசங்க மாரி பொழிகிறதாகவும் அறிகிறோம். யாழ்ப்பாணத்திற் கெப்போ வருவாரென்றாவலோடெதிர்பார்க்கிறோம். வந்தாற் பிரசங்கமாரி பொழிவதாகவும், அநேக ஊர்த் திருத்தங்கள் செய்யப் போவதாகவும் நினைக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மேற்கோளிலே அக்காலத்து உரைநடையின் பண்புகளைக் கண்டு கொள்வதோடு, சில செய்திகளையும் பெற்றுக்கொள்ள முடிகிறது. அம்பலவாண நாவலர் யாழ்ப்பாணத்தில் இருக்கும் போது 'அநேக ஊர்த்திருத்தங்கள் செய்யப் போவதாக' பத்திரிகை குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. அவருடைய செல்வாக்கிற்கு உட்பட்ட நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் (1880 — 1953), ஆசிரியர் சின்னத்துரை, திரு. நாகலிங்கம் முதலியோர் வட்டுக்கோட்டை சைவ ஆங்கில வித்தியா சாலையிலே கற்பித்த காலத்தில் சமூக சீர்திருத்த விவகாரங் களிலும் ஈடுபாடு கொள்ளலாயினர். "இவர்கள் காலத்தில் கோயில்களிற் தாசியர் நடனம், உயிர்ப்பலி, வழிபடவரும் ஒடுக்கப்பட்ட மக்களை இம்சித்தல் போன்ற கேடுகள் மலிந் திருந்தன." வித்தியா தானம் செய்ததோடமையாது, இத்தகைய சமூக சீர்கேடுகளை நீக்குதலிலும் அம்பலவாண நாவலர் ஆர்வ முடையவராயிருந்தார். அவரது தார்மீக ஆதரவுடனேயே நவாலியைச் சேர்ந்த இ. வைத்தியலிங்கம் என்பவர் 'சைவ பாலிய சம்போதினி' என்னும் பத்திரிகையையும் ஆரம்பித்துச் சில காலம் நடத்தினர்.

அம்பலவாண நாவலர் யாழ்ப்பாணத்துக்கு ஒரு தடவை வந்திருந்தபோது, சிதம்பரத்திலிருந்து ச. பொன்னம்பல பிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவருக்கு எழுதிய கடிதம் ஒன்றிலே பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

> அம்பலவாண நாவலர் உங்கு வந்தது தாங்களும் கைலாய பிள்ளையும் எழுத அறிந்தேன். விசேட சமஸ்கிருத உணர்ச்சியும், தடைபடாது பேசும் வன்மையும் நமது தேசத்தவர்கள் பலரை வசீகரிக்குமென்று எண்ணு கிறேன். நம்ம தேசத்து இங்கு வந்து பொருளீட்டிய சிலருள் இவர் நல்லவரென்பது எனது கொள்கை. உங்கே வந்து வித்தியாசாலைக்கு வந்தால் ஏற்ற முறையில் உபசரிப்பது நன்றென்று எண்ணுகிறேன். (7-3-1913)

ஆறுமுக நாவலர் சிதம்பரத்திலே தாபித்த வித்தியாசாலைத் தரும பரிபாலகராக இருந்த பொன்னம்பல பிள்ளை அளித் துள்ள சான்றுரை அம்பலவாணரைப் பற்றி சமகாலத்துப் பெரியோர் கொண்டிருந்த மதிப்பை எமக்குக் காட்டுகிறது.

மேற்கோளிலே மதிப்புடன் குறிப்பிடப்பட்டிருக்கும் சிற்- கைலாசபிள்ளையைப் பற்றியும் இவ்விடத்திலே ஒரு சிறிது கூறுதல் ஏற்றதாகும்: ஆறுமுக நாவலர் பிறந்த யாழ்ப்பாணத்து நல்லூரிலேயே 1856ஆம் வருடம் பிறந்த திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசபிள்ளை, இளமையிலே யாழ்ப்பாணத்தில் தமிழும் ஆங்கிலமும் கற்றுவிட்டு அரசாங்க சேவையில் இலிகிதராகச் சில வருடங்கள் கடமையாற்றினார். பிறரிடம் கற்றவற்றோடு தாமும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் வடமொழியையும் ஆழமாகக் கற்றறிந்தார். பின்னர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுத் தென்னிந்தியாவிலே தலயாத்திரையை மேற் கொண்டு சில ஆண்டுகள் அங்கு வசித்தார். அக்காலத்திலே நூற்பதிப்பிலே ஈடுபட்டிருந்த சி. வை. தாமோதரம் பிள்ளைக் குத் துணைபுரிந்தார். தமது யாத்திரையின்போது தமிழகத்துத் தமிழறிஞர் பலருடன் பழகி நட்புரிமை பூண்டார். உ. வே. சாமிநாதையர் இவருக்கு நெருங்கிய நண்பராயினர். திருவாவடுதுறை ஆதினத்து சுப்பிரமணிய தேசிகர் இவருக்கு 'வித்துவான்' என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினர். பேரறிஞர்களினதும் பெருமக்களி னதும் மதிப்பைப் பெற்று வாழ்ந்த கைலாசபிள்ளையிடம் சில காலம் பாடங்கேட்டவர்களுள் பிற்காலத்தில் விபுலாநந்த அடிகள் எனப் பெயர் பெற்ற மயில்வாகனனும் ஒருவர். சேர். பொன். இராமநாதனும் இவரிடம் சமய, தத்துவ நூல்களைக் கற்றுத் தெளிந்தார் எனத் தெரிகிறது. 'வடதிருமுல்லை மும்மணிக்கோவை' என்னும் பிரபந்தத்தையும் பல தனிச் செய்யுள்களையும் இயற்றிய இவர் பல சங்கங்களின் உறுப்பின ராகவும் இருந்து பணியாற்றினார். கொழும்பில் சிலகாலம் வாழ்ந்தமையால், அக்காலத்து ஆங்கிலக் கல்வியாளர் சிலரை யும் சிங்கள, பௌத்த அறிஞர்களையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. இலங்கையையாண்ட பிரித் தானிய கவர்னர் இவருக்கு 'இராசவாசல்' என்ற விருது அளித்தார். தமிழ், இசை, வடமொழி, ஆங்கிலம் ஆகிய வற்றில் பாண்டித்தியம் பெற்று விளங்கிய இவர் பத்தொன்ப தாம் நூற்றாண்டு ஈழத்தமிழறிஞர்களின் சிறந்த பிரதிநிதி யாகக் கொள்ளப்படத் தக்கவர். அத்தகையவர் அம்பலவாண நாவலர்மீது பெருமதிப்புக் கொண்டிருந்தார்.

ஆறுமுக நாவலரின் ஞானபரம்பரையினர் சிலர் தமது வட மொழிப் பாண்டித்தியத்தைப் பயன்படுத்திச் சைவசித்தாந்தம் சம்பந்தமாக அம்மொழியிலுள்ள சில நூல்களைத் தமிழிற் பெயர்த்தும் அம்மொழியிலேயே சிலவற்றைத் திருத்தமுறப் பதிப்பித்தும் வெளியிட்டனர். காசிவாசி செந்திநாதையரும் அம்பலவாண நாவலரும் இப்பணியில் தனிச்சிறப்புடன் விளங்குகிறார்கள். பிரமசூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியர் செய்த பாஷ்யத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார் செந்தி நாதையர். பௌஷ்கராகமத்துக்கு உமாபதி சிவாசாரியர் வட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில் எழுதிய விருத்தியுரையைப் பவித்திரமாக அச்சிட்டு வெளியிட்டார் அம்பலவாண நாவலர். "பௌஷ்கர விருத்தி சைவசித்தாந்தப் பொக்கிஷம்" என்பர். 'ப்ரம்ம தர்க்கஸ்தவம்' என்னும் வடமொழி நூலையும் தனக்கேயுரிய தமிழ் நடையில் மொழிபெயர்த்தார் அம்பலவாணர். அவரியற்றிய நூல்கள் பிற்காலத்தில் கவனிப்பார் இன்மையால் கிடைத்தற்கரிய வாயின. இலங்கைத் தமிழிலக்கிய வரலாறு ஆழமாகவும் கூர் நோக்குடனும் ஆராயப்பட்டுவரும் இந்நாட்களில் அம்பலவாண நாவலரது நூல்கள் ஆய்வாளர் கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். வடமொழிப் பயிற்சி காரணமாக ஒருவிதமான 'மணிப்பிரவாள' நடையில் எழுதினார் அம்பலவாண நாவலர். இந்நடையைச் சிலர் கண்டித்தனர். 'சண்முகநாதன்' என்ற பத்திரிகையிலே 1914ஆம் வருடம் 'ஆசிரியருக்குக் கடிதம்' என்னும் பகுதியிலே புனைபெயரில் வெளிவந்த சில கடிதங் களிலே அம்பலவாண நாவலரின் மிதமிஞ்சிய வடமொழிப் பிரயோகம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. வடமொழிச் சொற்களைப் பெருமளவிற் குறைத்து எழுதுதல் விரும்பத் தக்கது என்றும் அவ்வாறு எழுதுதல் சாலும் என்றும் கடிதங் களிற் கூறப்பட்டது. அக்கட்டுரையினை சு. சரவணமுத்துப் பிள்ளை எழுதியிருத்தல் கூடும்.

இவ்விடத்திலே இவ்விடயம் குறித்துச் சில செய்திகளைக் குறிப்பிடுதல் பொருத்தமாயிருக்கும். மறைமலையடிகள் தனித் தமிழ் இயக்கத்தை முன்னின்று நடத்திய காலப்பகுதியிலிருந்தே அதன் வரலாற்றைப் பலர் விவரிப்பர். இயக்கரீதியாக நோக்கும்போது அது சரியே. ஆயினும் மறைமலையடிகளுக்கு முன்னதாகவே பலர் பிறமொழி விரவாத தமிழ்நடை குறித்துச் சிந்திக்கத் தொடங்கியிருந்தனர் என்பது மனங்கொளத்தக்கது. 'மனோன்மணீயம்' ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, பரிதிமாற் கலைஞர் முதலியோரை மறைமலையடிகளின் முன்னோடி களாகக் குறிப்பிடுவது வழக்கம். அவர்களைவிட வேறு சிலரும் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலே அது பற்றிச் சிந்தித் திருக்கின்றனர். உதாரணமாக, காரைக்காலில் இருந்து வெளி வந்த 'திராவிட மந்திரி' என்னும் பத்திரிகையின் (17-6-1893) இதழிலே பின்வரும் குறிப்புக் காணப்படுகிறது:

திசை வடசொற் கலவாச்
சிறப்புத் தமிழ்

என்னும் தலைப்பின் கீழ் ஓர் உரைப்பகுதி காட்டப்பட்டபின், "திசை வடசொற்கள் காணப்படின் தெளிவுடையோர் களைந்து காட்டுக" என்று கூறி முடிக்கப்பட்ட கடிதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனித்தமிழ் காட்ட விரும்புவோன்" என்று ஆசிரியர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோலப் பல உதாரணங்கள் காட்டலாம். இப்பத்திரிகையின் ஆசிரியராக ஈழத்துத் தமிழ்ப் பண்டிதர் ச. விசுவலிங்கபிள்ளை என்பார் கடமையாற்றினார் என்பது சுவையான ஒரு தகவலாகும். ஒரு இதழிலே பத்திராதிபரைப் பற்றிய பின்வரும் அறிவித்தல் காணப்படுகிறது.

> .........வித்துவ பிரசித்திபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் மாணாக்கனும், அந்நாவலரவர்கள் காலத்தே சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலையிலே தலைமைத் தமிழ்ப்புலமை நடத்தினவனும், திருவெண் காட்டுச் சமீப பெருந்தோட்டத்திலே சில கார்காத்த பிரபுக்கள் வேண்டுகோளின்படி சில மாசங்கள் வசித்துத் தமிழ் பயிற்றினவனும், நாகபட்டணம் நேட்டிவ் ஹைஸ்கூலினும் கும்பகோணம் டவுண் ஹைஸ்கூலினும் தமிழ்ப் பண்டித நடாத்தினவனும், தற்காலம் சேலத்து ஓசூரிலே போர்ட் ஹைஸ்கூலில் தமிழ்ப்பண்டிதனாயிருப்பவனுமாகிய நான், இத்திராவிட மந்திரி என்னும் பத்தரிகையை ......இந்த வார முதலாகப் பூரண நிர்வகிப்புடனே நடத்தத் துணிந்தேன்...
>
> இங்ஙனம்
> ச. விசுவலிங்கபிள்ளை
> தமிழ்ப்பண்டிதன்.

விசுவலிங்கபிள்ளை போன்றவர்கள் தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் சென்ற நூற்றாண்டின் கடைக்கூறிலேயே தனித்தமிழ் குறித்துச் சிந்தித்துச் செயல்பட ஆரம்பித்தனர் என்பதை இத்தகைய தகவல்கள் நமக்குணர்த்துகின்றன.

ஆயினும் அம்பலவாண நாவலர் போன்றவர்கள் தமது கல்விப் பின்னணி, பயிற்சி முதலியவை காரணமாக வடமொழிச் சொற்கள் கலந்த நடையினையே வழங்கிவந்தனர். (தனித்தமிழ் இயக்கம் முனைப்பாகச் செயற்படுமுன் அவரது நூல்களிற் பெரும்பாலன எழுதப்பட்டவை என்பதும் மனங்கொள வேண்டியதே.) தமிழ் உரைநடை வரலாற்றை ஆராய்வோர் அம்பலவாணர் நடைப்பாங்கினை நுணுகி நோக்குதல் தகும். தனித்துவமான ஒரு நடையை அவர் கையாண்டார். எடுத்துக்காட்டாக மேல்வரும் சிறு பகுதியை நோக்குவோம்:

> ஒன்றில் ஐயுற்று வந்தோரிருவருள் வியவகாரத்தில் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து இது 'யார் சொல்லியது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரெழுதிய' தென்று வினாவுவார்க்கு, 'நாவலர் சொல்லியது நாவலரெழுதிய' தென்று விடையிறுக்கப்படு மெனின் அதற்கதுவே சித்தாந்தம். அதில் ஐயமில்லை. இது இந்நாள் நமது தமிழுலக வாய்பாடு. ஆரிய உலகத்தும் ஆங்கில உலகத்தும் சென்றவரை இதுவும் ஓர் வாய்பாடு..........எம்பெருமான் வந்தருளிய புண்ணியந் தான் இந்நாள் நாவலர் யாம் பாவலர் யாம் ஞானிகள் யாம் யோகிகள் யாம் எனப் பல்லோரும் அங்கங்கு ஞானமும் ஆசாரமுமுடையவர்களாய்ப் பொருளும் புகழும் பூஜ்யதையும் பெற்றுவாழும் அவரவர் இன்ப வாழ்வு என்பது யாரறியாதார்!

இலங்கைத் தமிழறிஞர் பலருக்குத் தமிழ்நாட்டிலே செட்டிகள் ஆதரவளித்து வந்திருக்கின்றனர். ஆங்கிலேயராட்சி யின் தொடக்கத்திலே தமக்கேற்பட்ட நிலைகுலைவிற்கு ஈடு செய்யும் வகையில் சமுதாயத்தில் பக்கபலம் தேடிக்கொள்ளு முகமாகச் சமய கலாசார 'மறுமலர்ச்சி'யில் இணைந்து கொண்டனர் செட்டி சமூகத்தினர்: இலங்கையிலிருந்து சென்ற, ஆறுமுகநாவலர், ந. ச. பொன்னம்பல பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், சுவாமிநாத பண்டிதர், முருகேச பண்டிதர், தில்லைநாத நாவலர் முதலியோரை வெவ்வேறு வழிகளில் ஆதரித்ததுபோலவே அம்பலவாண நாவலரையும் அச்சமூகத் தினர் ஆதரித்தனர். அவ்வாறு பெற்ற பொருளுதவியைக் கொண்டே சிதம்பரத்தில் ஒரு மடத்தை அமைப்பித்தார். அம் மடத்திலேயே தமது அந்திய நாட்களைக் கழித்து இயற்கை யெய்தினார். யாழ்ப்பாணத்துச் சைவப் பெரியார்கள் சிலர் சிதம்பரத்தில் மரணமடைந்தனர்: சபாபதி நாவலர், சுவாமிநாத பண்டிதர், செப்பறைச் சிதம்பர சுவாமிகள், உரையாசிரியர் வேலுப்பிள்ளை உபாத்தியாயர், இலக்கண சுவாமிகள் எனப்படும் முத்துக்குமாரத் தம்பிரான், அம்பல வாண நாவலர் முதலியோர் இவர்களுள் இயம்பத்தக்கவர்கள்.

கடந்த சில வருடங்களாக ஆறுமுகநாவலர் பற்றியும் அவரது பரம்பரையினர் பற்றியும் நுண்ணாய்வுகள் சில மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்து நவீன வரலாற்றை நன்கு விளங்கிக் கொள்வதற்கு இத்தகைய ஆய்வுகள் உதவி செய்வன. பல்வேறு காரணங்களால் அம்பல வாண நாவலர் வரலாறும் பணியும் விரிவாக ஆராயப்பட வில்லை. அக்குறையை நிவிர்த்தித்தல் ஆராய்ச்சியாளர் கடமையாகும். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலாசிரியர் நாகமுத்து

பிரபல ஆங்கில இலக்கியத் திறனாய்வாளரான எஃப். ஆர். லீவிஸ் என்பவர் ஆங்கில நாவல் இலக்கியத்தை வரலாற்று ரீதியாக நோக்கி விமர்சனஞ் செய்யும்பொழுது, முற்பட்ட நாவல்கள் பெரும்பாலும் அறவியல் கோட்பாட்டைத் தழுவிய மரபை உடையன என்று குறிப்பிட்டார். அம்மரபினை அவர் 'பெருமரபு' (The Great Tradition) என விவரித்தார்.

ஆங்கில நாவல்கள் மட்டுமன்றி, உலகின் பல்வேறு மொழிகளில் எழுந்த முற்பட்ட நாவல்களும் அறவியற் சார்புடையன வாகவே காணப்படுகின்றன. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு வரலாறுடைய தமிழ் நாவல் இலக்கிய வரலாறும் இப்பொது விதிக்கு விலக்கன்று. தமிழில் எழுந்த முதல் நாவல் என்று கருதப்படும் 'பிரதாப முதலியார் சரித்திரத்'திலிருந்து, சமீப காலத்து மு. வரதராசனாரின் நாவல்கள் வரை அறவியற் சார்புடையனவே அநேகம் என்று தடையின்றிக் கூறிவிடலாம். எனினும் இவ்வறவியற் பண்பானது, முற்பட்ட நாவல்கள் அனைத்திலும் முழுமையாகவோ, வெளிப்படையாகவோ காணப்படுகிறது என்பதற்கில்லை. சிற்சில நாவலாசிரியரிடத்து அறவியற் பண்பு தலைதூக்கி நிற்கக் காணலாம். இப்பிரிவில் அடங்குவோரில் ஒருவரே இடைக்காடர் என்னும் புனை பெயரில் நவீனங்கள் எழுதிய ஆசிரியர் த. நாகமுத்து (1868—1932) அவர்கள்.

ஆசிரியரின் ஊர் இடைக்காடு. எனவே இலக்கிய ஆக்கத்தின்போது ஊரைச்சுட்டும் வகையிலே 'இடைக்காடர்' என்னும் புனைபெயரை வைத்துக்கொண்டார். அதுமட்டு மன்று. இடைக்காடர் என்னும் பெயர் பழமை வாய்ந்தது என்பதையும் ஆசிரியர் அறிந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. சங்கச் செய்யுள்கள் சிலவற்றை இயற்றிய ஒருவரும் 'திருவள்ளுவ மாலைச்' செய்யுள் ஒன்றை இயற்றிய ஒருவரும் சித்தருள் ஒருவருமாக இடைக்காடர் மூவர் பழந்தமிழிலக்கிய வரலாற்றிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். திருக்குறளைத் தமது நூல்களில் அடிக்கடி எடுத்தாளும் ஆசிரியர் 'திருவள்ளுவமாலை'யிற் குறிப்பிடப்படும் இடைக்காடரையும் இடைக்காட்டுச் சித்தர் பாடல்களையும் அறிந்திருந்தார் என்பதற்குச் சான்றுகள் உண்டு.

ஆசிரியர் நாகமுத்து 1868ஆம் வருடம் நவம்பர் மாதம் பதினேழாம் திகதி பிறந்தார். அவரது தந்தையார் சின்னத் தம்பி தம்பு என்பவர் விவசாயமும் வியாபாரமும் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு தமது பெரிய குடும்பத்தைக் கவனித்து வந்தார். தம்பு விவசாயப் பின்னணியில் வந்தவராயினும் அக்காலத்தில் தமிழை நன்கு கற்றவரெனப் பெயர் பெற்றிருந்தார். தமிழ் மட்டுமன்றிக் கணிதமும் அவருக்கு வாலாயமான துறையாக இருந்தது. இவை யாவற்றுக்கும் மேலாகக் கிராமத்து மக்களின் பேரன்புக்குப் பாத்திரமானவராயிருந்தார். ஊர் விடயங்களில் பலருக்கு ஆலோசனை வழங்குவதில் நற்பெயர் பெற்றிருந்தமையால் அனைவரும் அவரை 'வசிட்டர்' என்று அழைத்து வந்தனர். தமிழ், கணிதம், நல்லொழுக்கம் இவை மூன்றும் தம்புவை ஆகர்ஷித்திருந்ததைப் போலவே அவர் மகன் நாகமுத்துவையும் சிறுவயதிலிருந்தே கவர்ந்தன. தன் சக்திக்கு இயன்ற வரையில் நாகமுத்துவிற்கு ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் தக்க கல்வியை அளித்திருந்தார் தம்பு. 1894ஆம் வருடம் கல்கத்தா பல்கலைக்கழகத்து எப். ஏ. தேர்வில் நாகமுத்து சித்தியடைந்தார். பி. ஏ. வகுப்பில் சேருவதற்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்த வேளையில் நோய்வாய்ப்பட்டு ஒரு வருட காலம் வீட்டிலேயே இருக்கும்படியாயிற்று. அடுத்த ஆண்டு அவரது தந்தையார் இறந்தார். தாயையும் உடன் பிறப்புகளையும் காப்பாற்றவேண்டிய பெரும் பொறுப்பு இருபத்தாறு வயது நிரம்பியிருந்த நாகமுத்துவைச் சார்ந்தது. ஆகவே தனது படிப்பு முயற்சிகளைக் கைவிட்டு ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். அன்று முதல் இறக்கும் வரை ஆசிரியராகவே பணிபுரிந்தார். தகப்பனாரிடமிருந்து பெற்றுக் கொண்ட சேவை மனப்பான்மையும் ஆசிரியராகவிருந்த அநுபவங்களின் அடிப்படையில் சமுதாயத்தில் நிலவிய கல்வி, கலாசார, பொருளாதார பிரச்சினைகளைக் கண்டறிந்த பிரக்ஞையும் சமய தத்துவ விடயங்களில் அவருக்கிருந்த ஈடுபாடும் நாளடைவில் அவரை எழுத்துத் துறைக்கு இட்டுச் சென்றன எனக் கொள்ளலாம். 'சனோபகாரம்' என்னும் சொல்லை அவர் அடிக்கடி எடுத்தாண்டிருக்கிறார். அதற்கேற்ப, கற்றோர்க்கே பெரும்பாலும் உவப்பாயிருந்த செய்யுள் நூல்களை இயற்றுவதிலும் பார்க்க, பலருக்கும் எளிதில் விளங்கக்கூடிய உரைநடை நூல்களை—குறிப்பாக நவீனங்களை—அவர் ஆர்வத்துடன் எழுதினார்.

நாகமுத்துவின் முதல்மனைவி விசாலாட்சியும் அக்காலத்துப் பெயர்பெற்ற குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவராயிருந்தமை இவ்விடத்தில் பொருத்தம் நோக்கிக் குறிப்பிடக்கூடியதாகும். விசாலாட்சியின் தந்தை சங்கர நமச்சிவாயர், ஆறுமுக நாவலர் தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராயிருந்தவர். அவர் தந்தை மு. தில்லைநாத பிள்ளை நாவலரோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ்லியன் கல்லூரியிலே கல்விகற்றவர். கிறித்தவ மதத்திலே பிரவேசிப்பதற்கு உடன்பட்டு இருந்த வேளையில் நாவலரின் புத்திமதிகளின்படி மனம் தெளிந்து ஞானஸ்நானம் பெறாது சைவத்தை மேலும் உறுதியோடு பற்றிக் கொண்டவர். வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆறுமுக நாவலர் தாபிப்பதற்குப் பக்கத்துணையாய் இருந்தவர்களில் ஒருவரும் நாவலர் சிலகாலம் நடத்திய ஆங்கிலப் பாடசாலையின் தலைமை உபாத்தியாயராக இருந்தவரும் தில்லைநாத பிள்ளையேயாவர். நாவலரைக் குருவாகக் கொண்டு ஒழுகிவந்த தில்லைநாதர், நாவலரின் மறைவுக்குப்பின் அவரது பாதக்குறடுகளைத் தனது இல்லத்தில் வைத்து வழிபடு சின்னமாகப் போற்றி வந்தார். இத்தகைய பின்னணியில் பிறந்து வளர்ந்த விசாலாட்சி தமிழும் ஆங்கிலமும் கற்றிருந்த தோடு யோகப்பயிற்சியும் உடையவராயிருந்தார். வேதாந்த விசாரத்திலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. ஆகவே நாகமுத்துவும் மனைவியும் இலக்கண, இலக்கிய, தத்துவசாத்திரத் துறைகளில் திளைத்தவர்களாயிருந்தனர். இப்பின்னணித் தகவல்கள் அவரது நூல்களை மேலும் நன்றாக விளங்கிக் கொள்ள ஏதுவாயுள்ளன.

'நீலகண்டன்,' 'சித்தகுமாரன்' ஆகிய இரு நாவல்களையும், 'சிறிய வினோதக் கதைகள்' என்னும் நூலையும், அம்பலவாண பிள்ளை என்பவருடன் இணைந்து 'இலகுசாதகம்' என்னும் சோதிட சாத்திர நூலையும் அவர் எழுதி வெளியிட்டார். இந்நூல்களை வெளியிட்டமையால் பெற்ற கீர்த்தியிலும் பார்க்க, யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைதீஸ்வர வித்தியாலயத்தைத் தாபித்தமையால் அவர் ஈட்டிய புகழ் அதிகம் ஆகும். ஆறுமுக நாவலர் காலத்தையடுத்து, அவருக்குப் பின் வந்த பலர் கல்வி நிலையங்களை நிறுவினர். பள்ளிக் கூடங்கள் நிறுவுதல் புனித கைங்கரியமாக மதிக்கப்பெற்றது. கல்வித்தானம் பரோபகார்மாகப் போற்றப்பட்டது. அவ்வாறு கல்வித்துறையில் முன்னோடிகளாக விளங்கிய சிலர் ஆற்றல் மிக்க எழுத்தாளராயும் திகழ்ந்தனர். உதாரணமாக மகாஜனக் கல்லூரித் தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளையைக் குறிப்பிடலாம். ஒருவிதத்தில் இது எதிர்பார்க்கக் கூடியதுமாகும். ஏனெனில் மெய்வருத்தம் பாராது, பணக்கஷ்டங்களையும் பொருட்படுத்தாது தியாகசிந்தையுடன் பல்வேறு பகுதிகளில் சிறிய பள்ளிக்கூடங்களை அரும்பாடுபட்டுத் தாபித்த ஆசிரியர்கள், அறிஞராகமட்டுமன்றி, ஆழ்ந்த தேசப்பற்றுடையவராயும் பண்பாட்டுக்காவலராயும் சீர்திருத்தவாதிகளாயும் இருந்தனர். அதாவது, அவர்களது இலக்கிய ஆக்கத்தின் அடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையானது, பொழுதுபோக்காக அன்றி, சமுதாய நோக்குடையதாய் அமைந்திருந்தது. அதன் காரணமாகவே அவர்களின் படைப்புகளில் அறவியற் பண்பும் இயல்பாயமைந்தது. சமுதாய நோக்கும் இழையோடியது. ஆசிரியர் நாகமுத்துவும் தமது காலத்துச் சிறந்த கல்விமான்களில் ஒருவராக மட்டுமன்றிச் சிறந்த சமூக சீர்திருத்தவாதியாயும் சேவையாளராயும் விளங்கினார். இவை யாவும் அவர் எழுத்துக்களிற் பிரதிபலித்தல் தவிர்க்க இயலாததொன்றேயாகும்.

முதலில் இவர் எழுதிய 'நீலகண்டன்' என்னும் நாவலை எடுத்துக்கொள்வோம். இது 1925ஆம் வருடம் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்று வெளிவந்தது. இந்நாவலின் உபதலைப்பு 'ஓர் சாதிவேளாளன்' என்பது. நாவலின் முகவுரையில் ஆசிரியர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

> இது, சாதியபிமானமின்னதென விளங்காது தம்மிற் றாழ்ந்தவர்களை யிம்சை செய்பவர்களுக்குப் புத்தி புகட்டும் நோக்கமாகவும், ஏனையோருக்கு நம்மவர்களின் உண்மையான சாதிநிலையின்னதென உணர்த்தும் நோக்கமாகவும், எழுதப்பட்ட ஓர் கற்பனாகதை. அனைவருக்குமுபயோகமாயிருக்குமெனவெண்ணி, சன்மார்க்கம் சற்போதனை முதலியவற்றைப் பற்றி யான்றோர் கூறியிருக்கும் உண்மைகள் ஆங்காங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன....
>
> இக்கதை சாதிபேதம் பாராட்டுவதில் ஆரம்பமாகி, அதை விடுவதில் முடிவாகின்றது.

இவ்வாறு ஆசிரியர் கூறுவது நாவலின் தன்மையை ஓரளவிற்குத் தெளிவாக்குகிறது எனலாம். ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையிலே தொடங்கிய காலப்பகுதியில் கதை நிகழ்வதாக ஆசிரியர் கதையை நடத்திச் செல்கிறார். ஒரு வகையில் வரலாற்றுத் தன்மைகொண்ட நாவல் என்றும் குறிப்பிடுதல் தகும். ஆசிரியரும் இதனை உணர்ந்திருந்தார் என்று கருத இடமுண்டு. மூன்றாம் அத்தியாயம் பின்வருமாறு தொடங்குகிறது.

> அங்கிலேயர் இலங்கையை யரசு புரியத் தொடங்கிச் சிலவாண்டுகள் சென்றன. அக்காலத்தில், யாழ்ப்பாணத்தில், தற்கால மாதிரியான கற்கள் பரப்பிய வீதிகள் மிகச்சிலவே யாகும். அவைகள் பெரும்பாலும், நெடுந்தூரஞ் செல்லும் வீதிகளே. மற்றையவைகள், மண்வீதிகள். மிகவுமொடுக்கமானவை. அவைகளினிரு மருங்கும் மரங்களடர்ந்து வளர்ந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்ட வரலாற்றுக் காலத்துச் சூழ்நிலையை வாசகர் மனதிலே பதியவைத்தல் வேண்டும் எனக் கருதியவர்போல அவரது வருணனைகள் பலவிடங்களிலும் இருப்பதைக் காண லாம். ஏறக்தாழ, ஒரு நூற்றாண்டிற்கு முன்நிகழ்ந்த சம்பவங் களை விவரிக்கும் பாவனையில் ஆசிரியர் எழுதினார். அந்த வகையில் அண்மைக்கால வரலாறு என்று கூறினும் தவறாகாது.

நாவல் தொடங்கும் பொழுது நீலகண்டன் என்னும் இளைஞனை மர்மமான சூழ்நிலையிற் சந்திக்கின்றோம். மனப்புலி என்னும் பிரபுவின் கையாட்கள் அவனைக் கொல் வதற்குத் திட்டங்கள் போட்டு வருகின்றனர். ஒன்றன்பின் ஒன்றாகப் பல சூழ்ச்சிகளிலிருந்து நீலகண்டன் தப்பிக் கொள் கிறான். அவனது திறமையும் நற்பண்புகளும் அவனுக்குத் துணையாய் நிற்கின்றன. இறுதியில் அவன் புகழ்பூத்த குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவன் என்பதும், நிரம்பிய சொத் துக்கு உரியவன் என்பதும் துலக்கமாகிறது. நன்மையின் சொரூபமாகிய நீலகண்டன் நல்வாழ்வு பெறுகிறான். தன் மனத்திற்கிசைந்த கன்னியாம் கோமளாவதியை மணம் முடித்து இன்பமாக வாழ்வாங்கு வாழ்கிறான். தீமை செய்ய எத்தனித்தோர் ஈற்றில் கொடிய முடிவுகளை அடைகின்றனர். இதுதான் கதைச் சுருக்கம். ஆனால் இக்கதைக் கருவை வைத்துக்கொண்டு, சுவையும் விறுவிறுப்பும் நிறைந்த நாவல் ஒன்றைப் பின்னி அளித்துள்ளார் ஆசிரியர்.

ஆக்க இலக்கியங்கள் சிலவற்றைப் படிக்கும் பொழுது அவற்றின் ஆசிரியர்களைப் பற்றிய மதிப்பீடும் எம்மனத்தில் தோன்றுவது உண்டு. இடைக்காடரின் நாவல்களைப் படிக்கும் பொழுது அவர் ஓர் ஆய்வறிவாளர் என்னும் எண்ணம் அடிக்கடி தோன்றிக்கொண்டேயிருக்கும். அதாவது நாவலில் வரும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் உணர்ச்சி ரீதியாக அன்றி, சிந்தனையின் அடிப்படையிலேயே — கருத்துக்களின் அடிப்படையிலேயே—அவர் படைத்துச் செல்கிறார். சிந்தனை யாளர் ஒருவர் நாவல் என்னும் இலக்கிய வடிவத்தைத் தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் தாங்குவதற்கு வாகன மாகக் கொள்வதை நாம் காணலாம்.

மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு 'நீலகண்டன்' வெறுமனே அறவியற் போதனைக் கதையாகவோ அல்லது வீரதீரக் கதையாகவோ தோன்றக்கூடும். அதுபற்றி அண்மைக் காலத்திற் குறிப்பிட்டுள்ள சிலர் நூலைப் படிக்காமலே தலைப்பை நோக்கித் தமது அபிப்பிராயங்களைக் கூறியிருக் கின்றனர் என்று எண்ணும்படியாயுள்ளது. வெளிப்படை யாகவே அறிவூட்டற் பண்பு நாவலில் இடம்பெற்றுள்ளமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்க வேண்டியதில்லை. ஆனால் இன்று அந்நாவலை மீண்டும் படிக்கும் பொழுது அதிலே பொதிந்திருக்கும் சமூக வியல் வளம் வியப்பூட்டுகிறது. தர்ம—அதர்மப் போட்டியிலே தர்மம் ஈற்றில் வெல்லும் என்ற அடிப்படைக் கருத்து நாவலின் பிரதான படிப்பினையாய் இருப்பதல்ல முக்கியம். அது நம்பிக்கை சார்ந்தது. ஆனால் நாவலிலே சமூகம், பொருளா தாரம், விழுமியங்கள் என்பன பற்றி நுட்பமான அவதானிப்பு களை ஆசிரியர் பாத்திரங்களின் அநுபவ வாயிலாக எடுத் துரைப்பது சிந்தனைக்கு விருந்தளிக்கிறது.

குறிப்பாக, ஆங்கிலக் கல்வியின் விளைவாகத் தமிழ் மத்திய வர்க்கத்தினரிடையே ஏற்படத் துவங்கியிருந்த தடுமாற்றங்கள், விழுமிய மயக்கங்கள், கலாசார மோதல்கள், பொருளாதார பலவீனங்கள் முதலியவற்றை மிகவும் நுணுக்கமாக ஆசிரியர் தொட்டுக் காட்டுகிறார். பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலே இலங்கைத் தமிழரின் சமூக வரலாற்றை எழுத விரும்புவோர் 'நீலகண்டன்' நாவலைப் பயனுள்ள முறை யின் பயன்படுத்தலாம்.

மாதவையா எழுதிய 'பத்மாவதி சரித்திரம்' என்னும் நாவலில் 'ஈரடி நிலைமை' என்றொரு சொற்றொடரைப் பயன் படுத்தினார். அந்நிய கலாசாரத் தாக்கத்தின் விளைவாகத் தமிழ்ப் பண்பாட்டையும் சரிவர அறியாது, மேனாட்டுப் பண்பாட்டையும் சரிவர உணராது திண்டாடும் ஒரு பிரி வினரை அவர் அத்தொடரினால் வருணித்தார். அதைப்போல இரண்டுங்கெட்டான் நிலையிலுள்ளவர்களை இடைக்காடர் விவரித்திருக்கிறார். நீலகண்டனுக்குச் சுப்பிரமணிய தேசிகர் எழுதிய கடிதமொன்றிலே பின்வருமாறு காணப்படுகிறது:

> அரசனரின் கீழ் வேலை செய்பவர்களிலனேகர், ஆங்கில பாஷையாவது, தமிழையாவது நன்கு கற்றவர்களல்ல. அவர்கள் தங்கள் பிழைப்புக்குத் தக்க படிப்புள்ளவர்கள். அவர்களைக் கற்றவர்களென்று நமது தேசத்தவர்கள் எண்ணுவது அவர்களின் அறியாமை. நீயும், அவர்களி லொருவனே. லிகிதர் வேலை செய்வதற்கு, பிழையற எழுத்துக் கூட்டவும் நேர்த்தியாய் எழுதவும் பழகிக் கொண்டால், அதுபோதுமானது. ......நியாய வாதி களிலும் அனேகர் நன்றாய்க் கற்றவர்களல்ல.

பிறிதோரிடத்திலே நீலகண்டன் மத்திய வர்க்கத்தினரில்—குறிப் பாக உயர் பதவிகள் வகித்துச் சமூக அந்தஸ்துப் பெற்று விளங்குபவர்களில் நம்பிக்கை இழந்து, கிராமப்புறத்தவர்களே தேச சேவைக்கு உண்மையில் உதவக்கூடியவர்கள் என்று கூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான். மேல்தட்டு வர்க்கத்தினரின் சுயநலத்தையும் போலித் தனத்தையும் இனங்கண்டு கூறும் பாண்மையில் இருக்கிறது அவனது கூற்று:

> உத்தியோகத்தரென்றழைக்கப் படுபவர்கள், நன்கு கற்றவர்களல்ல. ஆழ்ந்த புத்தியுள்ளவர்களல்ல. ஏட்டுச் சுரைக்காய்கள். ஒருவருக்கு முதவார். தாங்கள் கற்ற வர்களென வெண்ணி, சபைகளில் தலைமை வகிப்பதும், பேர் புகழைச் சம்பாதிப்பதுமே அவர்களின் நோக்கம். சனோபகாரமாவது, உலக நன்மையாவது அவர் களிடத்திற் கிடையாது. தயாளம், அநுதாபம் முதலிய குணங்கள் அவர்களிடத்திலியற்கையாயில்லை. இவர் களைச் சனங்கள் தங்கள் தலைவர்களாகவும், தங்களுக்கு வழிகாட்டிகளாகவும் எண்ணுவது மூடத்துவம். இவர் களிலும் ஆயிரம் மடங்கு அறிவுள்ளவர்களையும், புத்தி நுட்பமுள்ளவர்களையும், அனுபவமுள்ளவர்களையும், எங்கள் நாட்டில் தோட்டங்களிற் பயிர்ச் செய்கையில் முயற்சியாயிருக்கும் கமக்காரருக்குட் சாதாரணமாகக் காண்பதெளிது. ......எங்களுக்குத் தலைவர்களாயும் துணைவர்களாயும் வரத்தக்கவர்கள், கிராமப் பகுதி யிலுள்ள கிணற்றுத் துலாக்களிலும் பட்டைக் கொடி களிலும் தூங்குகின்றவர்களே. அவர்களே சனோப காரிகள். இரக்கமுள்ளவர்கள். அறிவுள்ளவர்கள். நாங்கள் சட்டை, தொப்பி போட்ட வேடதாரிகளை விட்டு, கிராமவாசிகளைப் பின்பற்றுதல் புத்தியாகும்.

"கிணற்றுத் துலாக்களிலும் பட்டைக் கொடிகளிலும் தூங்கு கின்றவர்கள்" என்று நீலகண்டன் கூறுவதில் மண்வாசனையும் இயற்பண்பும் மாத்திரமன்றி ஒருவிதமான கவித்துவமும் பொதுளியிருக்கக் காணலாம்; உணர்ச்சிச் சுழிப்பையும் அவதானிக்கலாம். சமூக அக்கறையுடைய எழுத்தாளனின் குரலை இத்தகைய இடங்களில் ஐயத்துக்கிடமின்றித் தரிசிக்க லாம்.

இன்னொரு வகையாகக் கூறுவதானால், இத்தகைய கருத்துக்களே சற்றுப் பிற்பட்ட நாவல்கள் சிலவற்றில் 'மீண்டும் கிராமத்துக்கு' என்னும் சுலோக வடிவத்தைப் பெற்றன. நகர வாழ்க்கையில் ஒட்டமுடியாத மனோபாவத் தின் வெளிப்பாடாகவும், மெல்ல மெல்லக் கூர்மையடைந்து கொண்டிருந்த பொருளாதார சக்திகளின் முரண்பாடுகளின் எதிரொலியாகவும், சமுதாயத்தில் உருவாகி வந்த புதிய ஏற்றத் தாழ்வுகளின் தத்துவார்த்த முறையீடாகவும் இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனங்கள் அமைந்தன. இச்செய்தியை மனங்கொள்ளும் போது இடைக்காடரின் நாவல்களில் நமக்கு மதிப்பு ஏற்படாமற் போகாது. ஆழமாகச் சிந்தித்தவர் அவர். இவற்றைக் கருத்திற் கொள்ளுமிடத்து, ஆசிரியரை "நற்போதனைகளைக் கூறும் கதாசிரியர்" என்று மேலெழுந்த வாரியாக மதிப்பிடும் மேதாவித்தனம் ஆய்வறிவின்மையின் விளைவு என்றே சொல்லவேண்டும்.

நாவலாசிரியர் தமது வாழ்க்கையின் பெரும்பகுதியைப் பள்ளிக்கூடத் தாபிதத்திலும் கல்விப் போதனையிலும் செல விட்டவர். அதன் விளைவாகவோ என்னவோ 'நீலகண்டன்,' 'சித்தகுமாரன்' ஆகிய இரு நாவல்களிலும் ஆசிரியர்கள் மதிப்புக்குரிய பாத்திரங்களாக வருகின்றனர். அதுமட்டுமன்றி, ஆசிரியத் தொழிலைப்பற்றிப் பல நல்லுரைகளும் நாவல்களில் இடம்பெறுகின்றன. உதாரணமாக 'நீலகண்டன்' நாவலில் "கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்னும் அத்தியாயத்தில் ஆசிரியத்தொழிலின் மகிமையே விவரிக்கப் பட்டுள்ளது.

'நீலகண்டன்' நாவலில் அமைந்த ஒரு சிறப்பியல்பு இங்குக் குறிப்பிடத்தக்கது. எதிரிகள் தன்னைக் கொல்வதற்குச் சூழ்ச்சி செய்வதை அறிந்த நீலகண்டன், யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு கிராமங்களுக்கும் சென்று அங்கு தலைமறைவாக வாழ முற்படுகிறான். எதிரிகளும் விடாமல் தொடர்ந்து தேடிப் பிடித்து விடுகின்றனர். பின்னர் யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கி, அநுராதபுரத்திற்கும், அங்கிருந்து கண்டிக்கும் செல்கிறான். இவ்வாறு அலைந்து திரியும் நீலகண்டன், கல்வி கேள்விகளில் வல்லவனாகையால் செல்லுமிடங்களில் எல்லாம், பயனுள்ள பல விஷயங்களைக் கற்றுக் கிரகித்துக் கொள்வதுடன், தனது அறிவையும் பிறருக்கு வழங்குகிறான். இது குறித்து நாவலாசிரியர் கூற்றாகப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> தேசசஞ்சாரஞ் செய்ததினால் அவருக்கு அறிவு விர்த்தியானது. அன்றியும் முன்னொருபோதும், அவரறியாத அநேக காரியங்களைக் கற்றுக் கொண்டார். அவைகள் அவருடைய பிற்சீவியத்துக்கு மிகவும் உபயோகமாயிருந்தன.

நாவலின் கதாநாயகனான நீலகண்டன் தனது ஞானகுருவான சுப்பிரமணிய தேசிகருக்கு எழுதிய கடிதம் ஒன்றிலும் தேசசஞ்சாரத்தின் நல்லம்சங்கள் மிகச் சிறப்பாக வருணிக்கப் பட்டுள்ளன. இன்றும் பொருந்தக்கூடியதாயுள்ள அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருணனைகள் ஆசிரியரது ஆழ்ந்தகன்ற கல்வியையும் சிந்தனைத் தெளிவையும் உணர்த்துகின்றன.

தமது நாவலை 'கற்பனா கதை' என்று ஆசிரியர் விவரித்திருப்பினும், அவரது வாழ்க்கை அநுபவங்கள் பெருமளவுக்கு நாவலில் இடம் பெற்றுள்ளன என்பது ஆய்வாளருக்குப் புலப்படாமற்போகாது. பொதுவாக எழுத்தாளருக்கு வாழ்க்கை அநுபவங்கள் கருப்பொருளாக அமைவது இயல்பே, எனினும் அவற்றைப் பயன்படுத்தும் முறையிலேயே படைப்பாளியின் திறமை இருக்கிறது. இதனை ஓர் உதாரணம் மூலம் விளக்குதல் தகும்.

ஆசிரியர் நாகமுத்து 1913ஆம் வருடம் தாம் இலட்சிய நோக்கில் நிறுவிய வித்தியாலயம் தனிநபர்களின் நிர்வாகத்தில் இருக்கக்கூடாது என்று கருதிச் செயற்பட்டவர். தான் ஆசிரியராகக் கடமையாற்றிய சில இந்து, கிறித்தவத் தனியார் பள்ளிக்கூடங்களின் நிர்வாகச் சீர்கேடுகளைக் கண்டறிந்தவர். இதன் எதிரொலியை 'நீலகண்டன்' நாவலிற் கேட்கக் கூடியதாயிருக்கிறது. கண்டி நகருக்குச் சென்று வாழநேரிட்டபொழுது நீலகண்டன், அங்கு "வசிக்கும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு, ஆங்கிலமும் தமிழும் கற்பிக்கும் பொருட்டு ஓராங்கில தமிழ் வித்தியாசாலையை ஸ்தாபிக்க வேண்டிய முயற்சிகளைச் செய்து ஓர் சுபமுகூர்த்தத்தில் வித்தியாசாலையை ஆரம்பித்தார்." நீலகண்டன் அச்சிறு வித்தியாசாலையைப் பற்றிக் கனவுகள் கண்டான். "அதைச் செவ்வனே நடப்பித்தால், காலாதீதத்தில் பெரிய கல்லூரியாகி தமிழ்ச் சாகியத்தாருக்கு அழியாப் பேரையும் கீர்த்தியையும் புகழையும் கொண்டு வரும்." இவ்வாறு இலட்சிய எண்ணங்கள் கொண்டிருந்த நீலகண்டனின் சிந்தனையை ஆசிரியர் பின்வருமாறு வருணிக்கிறார்:

> வித்தியாசாலை, ஓர் நன்னிலைக்கு வரக்கூடியதாயிருந்தபடியால், அதையொருவருடைய பராமரிப்பில் வைத்திருப்பது தகுதியன்றென்றும், தன் சாகியத்தாருக்கு உரிமையில்லாமற் போய்விடு மென்றும் எண்ணி, ஆசிரியர் நீலகண்டன் ஓர் பஞ்சாயத்தை நியமித்து பஞ்சாயத்தாரின் பராபரிப்பில் விட்டார்.

பொதுவில், கல்வி பற்றியும் கல்விக்கூடங்கள் பற்றியும் நல்லாசிரியர் குறித்தும் அவரது நாவல்களில் வருவன சுயசரிதைப் போக்கில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. வாழ்க்கை அநுபவங்களையும் உலகியல் செய்திகளையும் பக்குவமாகத் தமது படைப்புகளில் சேர்த்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலாசிரியர் சிங்கப்பூர்வரை பிரயாணஞ் செய்தவர். அத்தேசத்தில் வேற்றுநாட்டு மக்களின் வாழ்க்கைமுறை, நடையுடைபாவனை, வாழ்க்கைத் தத்துவம் முதலியவற்றை நன்கு அவதானிக்கும் வாய்ப்புப் பெற்றவர். இது நல்லதோர் அநுபவம் ஆகும். 'நீலகண்டன்' நாவலில், அநுராதபுரஞ் சென்ற கதாநாயகன், ஒருநாள் ஷிங்ஷொங் என்னும் சீன யாத்திகரைச் சந்திக்கும் நிகழ்ச்சி வருகிறது. இருவருக்கும் நடைபெறும் நீண்ட சம்பாஷனையினூடாகப் பல சீர்திருத்தக் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆசிரியர், அதேவேளையில் அன்றைய சீன சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடத்தக்களவு விளக்கத்துடனும் எழுதியுள்ளமை வியக்கத்தக்கதாயுள்ளது. அநுபவத்திற்கு மெருகேற்றி அழகூட்டும் இலக்கிய ரஸவாதத்தின் சாயலை இங்குக் காணலாம்.

'நீலகண்டன்' நாவலிலே கதாநாயகன் நீலகண்டன், யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களிலும் தலைமறைவாகச் சிலகாலம் வசித்துவிட்டுப் பின் அநுராதபுரம் போய்ச் சேருவதும், அங்கு நீலக்க பண்டா என்ற பெயரில் வாழ்வதும், பின்னர் கண்டிக்குச் செல்வதும், போகுமிடங்களிலெல்லாம் தனக்கு எதிராகச் செய்யப்படும் சதிகளையும் சூழ்ச்சிகளையும் துட்டர்களையும் வெல்வதும் அநுராதபுரத்தில் யானையிடமிருந்து தப்புவதும் இவை போன்ற பிற சம்பவங்களும் கதைக்கு ஒருவகையான வேகத்தையும் விறுவிறுப்பையும் ஊட்டுகின்றன என்பதில் ஐயமில்லை. அதே சமயத்தில் இத்தகைய சம்பவங்கள் ஏலவே வேறொரு நாவலில் இடம் பெற்றிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதே. தமிழ்தந்த தாமோதரம் பிள்ளையின் இளைய சகோதரரும் சிலகாலம் தமிழ் நாட்டில் கொத்தப்பட்டணத்திலே ஓவர்சியராக இருந்தவரும் தமிழ் இலக்கிய இலக்கண அறிவு மிக்கவராயிருந்தவருமான சி. வை. சின்னப்பா பிள்ளை எழுதிய 'வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம்' (1905) என்னும் நாவலிலே வீரசிங்கன் என்னும் வாலிபன், யாழ்ப்பாணத்துக் கிராமமொன்றிலே தனக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதிகளிலிருந்து தப்புவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பாதையினூடாக அநுராதபுரம் போகிறான். அங்கு மெனிக் பண்டா என்ற சிங்கள வீரனுடன் நட்புக் கொள்கின்றான். பற்பல வீரதீர அநுபவங்களுக்குப் பின்பு இறுதியில் தான் காதலித்த இலட்சுமி என்னும் கன்னியை மணந்து இன்பமாக வாழ்கிறான். 'நீலகண்டன்' நாவலிலும் கதாநாயகன் கோமளாவதி என்னும் நங்கையைக் காதலித்தே மணம் புரிகின்றான். கண்டியில் கந்தார் சூரிய நாயக என்னும் சிங்கள உத்தியோகத்தரின் நட்பைப் பெற்றுக்கொள்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை நோக்கும்போது கதையை வளர்த்துச் செல்வதில் இடைக்காடர் 'வீரசிங்கன்' நாவலின் சிற்சில அம்சங்களை மனங்கொண்டிருந்தார் என்று கருதத் தோன்றுகிறது. இளைஞர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டைவிட்டு இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வதும், அரசாங்க சேவையிலும் தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கமர்வதும், புதிய அநுபவங்களைப் பெறுவதும் ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்ட நிகழ்வுகளாகும். இவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் சற்றுப் பின்னர் வெளிவந்த நாவல்கள் அமைந்தன. 'வீரசிங்கன்,' 'நீலகண்டன்' முதலிய நாவல்கள், வெவ்வேறு காரணங்களுக்காகக் கிராமங்களிலிருந்து சிலர் விடுபட்டு வெளியூர்களுக்குச் செல்லத் துவங்கியிருந்த போக்கினைப் பிரதிபலித்தன எனலாம். இந்நாவல்களை எழுதிய நாவலாசிரியர்கள் வாசித்த ஆங்கில நாவல்களின் செல்வாக்கினாலும் 'இடம் பெயரும்' பாத்திரங்களைப் படைத்தனர் என்று கூறலாம். இலங்கையில் எழுந்த முதலாவது நாவலான 'அஸன்பேயுடைய சரித்திரம்' இவ்விடயத்தில் முன்மாதிரியாக அமைந்தது. அந்நாவலிலே கதாநாயகன் அஸன் 'உலகம் சுற்றும்' வாலிபனாகப் படைக்கப்பட்டிருந்தான்.

ஆரம்பகால நாவலாசிரியர்கள் பலர், வெவ்வேறு அளவில் மேல்நாட்டுப் புனைகதைகளைத் தழுவியும், (சில சமயங்களில் திருடியும்) தமது நவீனங்களை எழுதியுள்ளமை அண்மைக்கால ஆய்வுகளால் புலப்பட்டுள்ளன. அவர்களது நாவல்களில் இடம்பெறும் பாத்திரங்களிலேயே ஒருவகையான செயற்கைத் தன்மை இருப்பதைப் பலரும் அவதானித்திருக்கின்றனர். ஆனால், யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களையும் அநுராதபுரம், கண்டி முதலிய பட்டினங்களையும், கதை நிகழிடங்களாகச் சித்திரித்துள்ள ஆசிரியர் நாகமுத்துவின் 'கற்பனா கதை' முழுக்க முழுக்க ஒரு ஈழத்துக் கதையாகவே மிளிர்கிறது. சற்று மிகைப்படுத்திக் கூறுவதானால், தேசியத்தன்மை அதில் இடம்பெற்றுவிட்டது எனலாம். கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் எத்தகைய சந்தேகத்திற்கும் இடமின்றி அசல் ஈழத்துத் தமிழ்ப் பாத்திரங்களாகவே உள்ளன. இது விதந்துரைக்க வேண்டிய சாதனையாகும். அறிந்தோ அறியாமலோ யாழ்ப்பாணத்திலேயே சிறப்பாக வழங்குகிற சொற்பிரயோகங்களையும் ஆசிரியர் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மொழியியல் நோக்கில் நாவலை ஆராய்வோர் இதனைக் கண்டு கொள்வர்.

ஆசிரியர் சீர்திருத்தக் கருத்துகளை வற்புறுத்திய அதே வேளையில் சைவ சித்தாந்தத்திலும் பயிற்சியும் பற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவராய்க் காணப்படுகிறார். 'நீலகண்டனி'ல் வரும் சுப்பிரமணிய தேசிகர் என்ற பாத்திரத்தின் வாயிலாகச் சித்தாந்தக் கருத்துக்கள் உணர்த்தப்படுகின்றன. ஆயினும் சித்தாந்தக் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்து விளக்குவதற் கென்றே ஆசிரியர் எழுதிய நாவல்தான் 'சித்தகுமாரன்.' அது இரு பாகங்களாய் வெளிவந்தது. சைவசமயத்திலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்கள் கூறப் படுவதைப் பலரும் அறிந்திருப்பர். 'சித்தகுமாரன்' முதலாம் பாகத்தில் முதல் மூன்று பாதங்களும் இரண்டாம் பாகத்தில் ஞானமார்க்கமும் பாத்திரங்கள் மூலம் சித்திரிக்கப்பட்டுள்ளன. இது ஓர் உருவக நாவல். முகவுரையில் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்:

> இதிற் காணப்படும் பெயர்கள், உடம்பின் இந்திரியம், கரணம், தத்துவம் முதலியவற்றின் உருவகம். ஆகையால், அவைகளின் குணாகுணங்கள் அப்பெயர்களை யுடைய, ஆட்களுக்கும் ஊர்களுக்கும் அமையும். சமய வாதிகள் சமயவாதஞ் செய்வதை ஒழித்து, தத்தஞ் சமய நூல்களிற் காணப்படும் உண்மைகளை அறிவது அவர் கள் மேற்பொறுத்த கடனாகும் என்பதை உணர்த்தும் நோக்கமாக எழுதப்பட்டது.

சிவஞான போதம் முதலிய சாத்திர நூல்களிலிருந்து மேற் கோள்கள் காட்டப்பட்டுள்ளன. இதனைக் கவனிக்கும் பொழுது, தென்னிந்தியாவில் நாவல்கள் எழுதிய தி. ம. பொன்னுசாமிப் பிள்ளையின் நினைவு எமக்கு ஏற்படாமற் போகாது. இந்நூற்றாண்டின் முதல் தஸாப்தத்திலே மளமள வென்று நாவல்கள் எழுதிய பொன்னுசாமிப் பிள்ளை, தமது நாவல்களில் சிவஞான சித்தியார்ச் சூத்திரங்களைக் கையாண் டார். உதாரணமாக, 'விஜயசுந்தரம்' என்னும் நாவலிலே "பரமுக்தியடையும் உபாயம் சொல்லியிருக்கிறது" என்கிறார் பொன்னுசாமிப் பிள்ளை. 1903க்கும் 1915க்கும் இடைப்பட்ட காலத்திலே பொன்னுசாமிப் பிள்ளை அவர்களின் நாவல்கள் வெளிவந்தன. அவரது நாவல்கள் சிலவற்றின் பெயர்கள் நினைவுகூரத் தக்கவை. 'ஞான சம்பந்தம்,' 'ஞானாம்பிகை,' 'சிவஞானம்,' 'ஞானப்பிரகாசம்' என்பன ஞானமார்க்கம் சம்பந்தமானவை என்பது வெளிப்படை. இந்நாவல்களின் பாதிப்பு எமது ஆசிரியரிடத்துக் காணப்படுகிறது என்பதற்கு ஆங்காங்கு சில ஆதாரங்கள் உண்டு என எனக்குத் தோன்று கிறது. மொத்தத்தில் சைவசமயப் பின்னணியிலேயே பாத்திரங் களும் கருத்துக்களும் விவரிக்கப்படுகின்றனவாயினும், கடுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தைத் தமது நாவல்களிலே ஆசிரியர் புகுத்தவில்லை. கூர்ந்து நோக்கின், சமரச மனப்பான்மையே அடிநாதமாக அமைந்துள்ளது என்பது புலப்படும். 'நீலகண்டன்' நாவலில் வரும் சுப்பிரமணிய தேசிகரும், 'சித்தகுமாரன்' நாவலில் வரும் ஹரிஹரயோகீஸ்வரரும் குறுகிய வரம்புகளைக் கடந்த ஆன்ம விசாரத்தில் மூழ்கியிருப்பவராய்க் காணப்படுகின்றனர். தேவார திருவாசகங்களையும் சிவஞானபோத முதலிய சித்தாந்த சாத்திர நூல்களையும் மேற்கோள் காட்டும் பாத்திரங்கள், சித்தர் பாடல்களையும் வேதாந்தச் சார்புடைய தத்துவராயர் பாடல்களையும், சிலசமயங்களிலே விவிலியத்தையும் பொருத்தமாகக் குறிப்பிடுகின்றன. அக்காலத்திலே சைவ சித்தாந்திகள் சித்தர் பாடல்களை அங்கீகரிக்க மறுத்தனர். நாவலாசிரியர் இடைக்காடர் ஞானமார்க்கத்தை வற்புறுத்தியது மட்டுமன்றி, சமரச சன்மார்க்கத்தையும் சார்ந்து நின்றார் என்றே கூறத்தோன்றுகிறது. இடைக்காடரோடு தத்துவ விசாரத்தில் அவ்வப்போது சிலபொழுதுகளைக் கழித்த நாவலாசிரியை செல்லம்மாள் செம்பொற்சோதீஸ்வரரும் சமரச சன்மார்க்கத்தில் மனம் தோய்ந்தவராய் இருந்தவர் எனத் தெரிகிறது. செல்லம்மாள் தன் "சிற்றறிவிலுதித்த அனுபவத்தைக் கொண்டு நவமாக எழுதிய" நாவலே 'இராசதுரை' (1924).

ஆசிரியர் நாகமுத்து, நாவல்கள் எழுதிய காலத்து, தமிழகத்தில் தமது சொற்பொழிவுகள் மூலமாகவும் கட்டுரைகள் மூலமாகவும் பிரசித்திபெற்று இருந்தவர்களில் ஒருவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார். சமரசசன்மார்க்கத்தை அவர் பிரசாரஞ் செய்து வந்தார். சமய சீர்திருத்தத்துக்கும் உழைத்து வந்தார். அவரது பாதிப்பும் நாவலாசிரியர் மீது காணப்படுகிறது என நினைக்கிறேன். அக்காலத்தில் (1924—1931) யாழ்ப்பாணத்திலே வீறுடன் இயங்கி வந்த வாலிபர் காங்கிரஸ் மாநாட்டுக்குக் கலியாணசுந்தரனார் வருகை புரிந்து சொற்பெருக்காற்றியமையும் நினைவுகூரத்தக்கதே. கீரிமலையில் நடைபெற்ற மாநாட்டிற்கு வந்திருந்த கலியாணசுந்தரனார் தாய்மொழிக் கல்வியின் அவசியம் பற்றிப் பேசினார். கலியாணசுந்தரனாரை நாகமுத்து அவர்கள் நேரில் சந்தித்திருக்கவும் கூடும். நாகமுத்துவின் நண்பர்களான முத்துக்குமாரு, இளையதம்பி முதலியோர் காங்கிரசில் ஊக்கத்துடன் உழைத்தவர்கள். 'சித்தகுமாரன்' வெளிவந்த சமயம் ஆசிரியர், திரு. வி. க. விற்கு நூற்பிரதியை அனுப்பியிருத்தல் வேண்டும். ஏனெனில் அக்காலத்தில் கலியாணசுந்தரர் ஆசிரியராக இருந்த 'நவசக்தி' பத்திரிகையில்—1925 மே 29ஆம் திகதி இதழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சித்தகுமாரன்' பற்றிய குறிப்பு வெளிவந்துள்ளது. இலங்கையில் வெளியிடப்பட்ட 'தேசாபிமானி,' 'இந்துசாதனம்' முதலிய பத்திரிகைகளிலும் நாவல் பற்றிய குறிப்புரைகள் வெளிவந்திருக்கக் காண்கிறோம்.

'சித்தகுமாரன்' நாவலைப் பற்றிச் சிந்திக்கையில், தமிழில் அதற்கு முன்னும் பின்னும் எழுதப்பட்ட சில நூல்களும், ஐரோப்பிய மொழிகளில் எழுதப்பெற்ற சில நூல்களும் நினைவுக்கு வருகின்றன. 'சித்தகுமாரன்' நாவலில் வரும் பாத்திரங்களின் பெயர்களை நோக்குவோர்க்கு, அவை குணங்களினதும் பண்புகளினதும் உருவகப் பெயர்கள் என்பது தெளிவாகும். சித்தகுமாரன், மானதராசன், காமநாதன், ஆணவநாதன், விவேகநாதன், யோகீஸ்வரர், புலநாகர்கள் முதலிய பாத்திரப் பெயர்களும் பிரமபுரி, பக்தபுரம், மனோநிக்கிரகபுரம், கருவூர், காமபுரம், காரப்புரம் முதலிய இடப்பெயர்களும் ஞானோதய வித்தியாசாலை போன்ற நிறுவனப்பெயர்களும் இதனை உணர்த்துகின்றன. இவ்வாறு பண்புகளைப் பண்பியாக உருவகஞ் செய்து இலக்கியஞ் சமைத்தல் உலகின் பல மொழிகளிலும் காணப்படுவதொன்றாகும். உதாரணமாக ஆங்கிலத்தில் Morality Play என வழங்கும் பண்பியல் நாடக வகையைக் காட்டலாம். அரூபமான பண்புகளையும் குணங்களையும் பாத்திரங்களாகக் கொண்ட இந்நாடக வகையில் "பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான மனிதனது ஆன்மீக வரலாற்றை" நாடகாசிரியர்கள் சித்திரிக்க முயன்றனர். ஆங்கில இலக்கியத்திலே பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்விலக்கிய வடிவம் பிரசித்தமாயிருந்தது. மேற்கு ஐரோப்பாவிலே பொது வழக்கில் இருந்ததாயினும் இங்கிலாந்திலும் பிரான்சிலும் சிறப்பாக விளங்கியது. ஐரோப்பிய பண்பியல் நாடகத்தில் இரு கூறுகள் இணைந்துள்ளன என்று ஆய்வாளர் கூறுவர்: ஒன்று மத்தியகால உருவகக்கதை—allegory; மற்றையது மறைபொருள் நாடகம்—Mystery Plays. சமயச் சடங்குகளுடன் தொடர்புடைய பாடங்களிலே குழூஉக்குறிகளினாலான மொழி பயன்படுத்தப்படுவது வழக்கம். அதனை யூகிபாஷை என்றும் வழங்குவதுண்டு. இவற்றை ஆதாரமாகக் கொண்டே பண்பியல் நாடகம் பரிணமித்தது. நன்மைக்கும் தீமைக்குமிடையே நடைபெறும் இடையறாத போராட்டத்தில் மனிதன் அகப்பட்டுச் சிக்கித் தவிப்பதே பண்பியல் நாடகத்தின் கருவாகும். அழகு, பேராசை, நேர்மை, காமம், வைராக்கியம் முதலிய பல்வேறு குணங்கள் பாத்திரங்களாக நாடகத்திலே தோன்றுவது பண்பியல் நாடகத்தின் இலக்கணம். பண்பியற் கவிதைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. பதினைந்தாம் நூற்றாண்டில் ஆங்கிலத்திலே எழுதப் பட்ட பண்பியல் நாடகங்கள், கவிதைகள் சிலவற்றின் பெயர் களே குறிப்பிடத்தக்கன. 'அகங்கார வாழ்க்கை,' 'மனம்,' 'விருப்பம்,' 'அறிவு,' 'இன்பக்கோட்டை,' 'விடாமுயற்சி மாளிகை,' 'மனுக்குலம்,' 'பொதுமுறை மனிதன்' என்பன மாதிரிக்காக நோக்கத் தக்கன. இவற்றில் இறுதியாகக் கூறப் பட்ட *Everyman* எனும் நாடகம் உலகப் பிரசித்தி பெற்றது.

தமிழிலே நாடகங்கள் இல்லாவிடினும் உருவகரீதியான செய்யுள்கள் இருக்கின்றன. 'திருக்கோவையார்' பேரின்பப் பொருள் விளக்கம் பெறும்பொழுது அதில் வரும் பாத்திரங்கள் உருவகப்படுத்தப்படுவதைத் தமிழிலக்கிய மாணவர் நன்கறிவர். அதே கண்ணோட்டத்திலே 'கந்தபுராணம்' பேருருவகமாகவே கணிக்கப்படலாம். இவ்வாறு முற்றுருவகங்களாக அமைந் திருத்தல் ஒருபுறமாக, சித்தாந்த சாத்திர நூல்களிலே 'ஐம்புல வேடர்' முதலிய தொடர்கள் பயின்று வருவதும் நினைவு கூரத்தக்கதே.

தமிழில் நவீன நாடகக் காப்பியத்திற்கு அத்திவாரம் இட்ட 'மனோன்மணீயம்' இத்தொடர்பில் குறிப்பிடப்பட வேண்டியதே. ஆங்கிலக் கதை ஒன்றைத் தழுவி ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அந்நாடகத்தை இயற்றினாரெனினும் அதற்குள் தத்துவக் கருத்துக்களைக் குறியீடுகளாக அமைத் துள்ளார். பாத்திரங்களின் பெயர்களும் இதனைத் தெளிவாக்கு கின்றன. அதுமட்டுமன்றி, ஆசிரியரே உருவகம் பற்றிக் கூறி யிருக்கிறார். தமது நாடகத்தை உருவக மாலையாகக் கொள்ளலாம் என்பது ஆசிரியர் கூற்று.

> இல்லறம் துறவறம் பத்தி ஞான முதலிய மோக்ஷ சாதனங்கள் பொருத்தமுடைய சந்திகளில் வெளிப்படை யாக அமைந்திருப்பது மல்லாமல் இக்கதையினையே ரூபகமாலாலங்காரமாகக் கருதில், தத்துவ சோதனை செய்யும் முமுக்ஷுகளுக்கு அனுகூலமாகப் பலிக்கவும் கூடும். அப்படி உருவக மாலையாகக் கொள்ளுங்கால் ஜீவகனைச் சார்போதமான ஜீவாத்மா ஆகவும்......

என்று நாடகாசிரியர் விளக்கிச் செல்வதைக் கவனிக்கலாம். கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் தமிழில் எழுந்த இத்தகைய நாடகங்களை விரிவாக இவ்விடத்தில் எடுத்துரைக்க இயலாது. எனினும் இலங்கையில் எழுதப்பட்ட இரு நாடகங் கள் நினைவுகூரத்தக்கவை. வித்துவான் க. இராமலிங்கம் 1929ஆம் வருடம் வெளியிட்ட 'நமசிவாயம் அல்லது நான் யார்?,' நவாலியூர்ச் சோசுந்தரப் புலவர் 1936இல் வெளியிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உயிரிளங்குமரன் நாடகம்' ஆகிய இரு நாடகங்களும் புலமை சான்றவர்களால் எழுதப்பட்டவை. சைவசித்தாந்தக் கருத்துக் களையும் தத்துவக் கூறுகளையும் உருவகச் சித்திரிப்பு மூலம் இவை உணர்த்த முனைந்தன. இவ்விரு நாடகங்கள் எழுதப் படுவதற்கு முன்னரே 'சித்தகுமாரன்' வெளிவந்துவிட்டது. எனினும் ஈழத்தில் இத்தகைய ஒரு இலக்கியப் போக்கு இருந்து வந்திருப்பதை இவை நமக்குக் காட்டி நிற்கின்றன.

'சித்தகுமாரன்' நாவலைப் படிக்கும்பொழுது சில இடங் களிலே பாரதியின் 'ஞானரதம்' நினைவிற்கு வரும். பாரதியின் நூல் கலைநயம் நிறைந்ததொன்று என்பதில் ஐயமில்லை. ஆயி னும் சில ஒப்புமைகள் உண்டு. பாரதியின் நாவலிலும் தத்துவ ரீதியான கற்பனாலோகங்கள் பேசப்பட்டிருப்பினும், ஆசிரியரின் உள்நோக்கம் நிதர்சன உலகினை விமர்சிப்பதேயாகும்.

மேலே நாம் குறிப்பிட்டது போல, திரு. வி. க. வின் செல்வாக்கு மட்டுமன்றி, இராமகிருஷ்ண பரமஹம்ஸரது போதனைகளும் நாகமுத்து அவர்களைக் கவர்ந்திருக்கும் என நம்பலாம். 'சித்தகுமாரன்' நாவலில் வரும் சுவாமியார் ஓரிடத்தில் மேல் வருமாறு கூறுகிறார்:

> சிலர் பிறக்கும் பொழுது ஞானிகளாய்ப் பிறப்பதை நீங்கள் கேள்விப்படவில்லையா? ஸ்ரீ இராமகிருஷ்ண பரம அம்ச அவர்கள் அதிகங் கற்றவரல்ல. சரியை, கிரியை, யோகம் முதலியவைகளை முறையாக அனுட்டித் தவரல்ல. பின் அவர் ஞானியாய் வந்தது எவ்வாறு?

இவ்வாறு இராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பற்றிக் குறிப்பிடும் ஆசிரியருக்கு அரும்பெரும் வாய்ப்பு ஒன்று கிட்டியிருந்தது. அமெரிக்க ஐரோப்பிய திக்கு விஜயத்தை முடித்துக் கொண்டு சுவாமி விவேகாநந்தர் 1897இல் கொழும்பு மார்க்கமாக இந்தியா திரும்பினார். இலங்கையில் சில நாட்கள் தங்கி யிருந்த விவேகாநந்தர் யாழ்ப்பாணத்துக்குச் சென்று இந்துக் கல்லூரியில் முக்கியமான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அப்பொழுது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலேயே ஆசிரிய ராக இருந்த நாகமுத்து, சுவாமிகளின் சொற்பொழிவை நேரே கேட்டார். அதன் மூலமும் பரமஹம்ஸரைப் பற்றி அறிந் திருப்பார். விவேகாநந்தரால் முதலில் ஈர்க்கப்பட்டமையால் இராமகிருஷ்ண மடாலயத்தின்பால் அவருக்குப் பின்னர் நிரம்பிய மதிப்பு உண்டாயிற்று. அது அவரது சிந்தனைகளை யும் செயலையும் குறிப்பிடத்தக்க வகையிற் பாதித்தது. ஏனெனில் 1913ஆம் வருடம் மே மாதம் அவரால் ஸ்தாபிக்கப் பட்ட வைத்தீஸ்வர வித்தியாலயம் 1917ஆம் வருடம் டிஸம்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பொறுப்பில் விடப்பட்டது. அக்காலத்தில் சுவாமி சர்வானந்தா ஈழத்தில் வந்திருந்தார். சர்வானந்தருக்கும் நாகமுத்து அவர்களுக்கும் தொடர்பு இருந்தது. இராமகிருஷ்ண மிஷன் இலங்கையில் நடாத்திய முதல் வித்தியாலயம் இதுவேயாகும். இதன் முன் மாதிரியைக் கொண்டே பின்னர் மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயம் நிறுவப்பட்டது.

இவ்விடத்தில் முக்கியமான ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். இராமகிருஷ்ணர், விவேகாநந்தர் இருவருடைய செல்வாக்கினை ஆசிரியர் நாகமுத்துவில் மாத்திரமன்றி அவருக்குப் பின் வந்த வேறு சிலரிடத்திலும் நாம் காண்கிறோம். சைவம் என்ற வரம்பிற்குள்ளேயே சிந்தித்தும் ஒழுகியும் வந்த பெரும்பாலான ஈழத்துத் தமிழ் அறிஞர்களும் புலவர்களும் சுவாமி விவேகாநந்தரின் வருகைக்குப் பின்னர் சற்றுப் பரந்த நோக்கிலே செயற்படத் துவங்கினர். விவேகாநந்தரின் விஜயத்தைத் தொடர்ந்து பெயர்பெற்ற துறவிகள் சிலர் இலங்கைக்கு வருகை புரிந்தனர்: சிவானந்தர், திரிகுணைத்தாநந்தர், அபேதானந்தர், இராமகிருஷ்ணானந்தர், சர்வானந்தர் ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடவேண்டியவர்கள். மேலே குறிப்பிட்டதுபோல சர்வானந்தர், நாகமுத்துவின் சிந்தனையையும் செயலையும் பெரிதும் நெறிப்படுத்தினார். அத்துறவியே மயில்வாகனன் என இயற்பெயர் பூண்டிருந்தவர் துறவறம் மேற்கொண்டு விபுலாநந்தர் ஆகக் காரணமாயிருந்தவர். இராமகிருஷ்ண இயக்கத்தின் செல்வாக்குக் காரணமாக நாகமுத்து, மயில்வாகனர் முதலியோர் தேசத்தேவைகளுக்கும் சமூகப் புனருத்தாரணத்துக்கும் இன்றியமையாத கல்விமுறைகளைப்பற்றி ஊக்கத்துடன் சிந்திக்கலாயினர். யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டன. கல்வி பெருகியது.

இலக்கியத்துக்கும் சில உந்துதல்கள் கிடைத்தன. விவேகாநந்தர் பிரசாரஞ் செய்த வேதாந்தம் வீறுகொண்ட வேதாந்தமாகும். அது சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியனபற்றி நம்மவரை ஆழமாகச் சிந்திக்க வைத்தது. அச் சிந்தனைகள் சிலரது உள்ளங்களில் ஊறிக்கனிந்து இலக்கிய வடிவம் பெற்றபொழுது புதிய சோபையுடன் காட்சி தந்தன. இடைக்காடரின் நாவல்கள், விபுலாநந்தரின் கவிதைகள் என்பன இத்தகைய இலக்கிய வெளிப்பாட்டின் முற்பட்ட விளைபொருள்கள். "வெள்ளை நிற மல்லிகையோ" என்று தொடங்கும் விபுலாநந்தரின் பாடல் தமிழுலகிற் பிரசித்தி பெற்றது. சற்றுப் பின்னர் எழுத்துலகிற் பிரவேசித்த புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி பெரியதம்பிப் பிள்ளை (1899 – 1978), மா. பீதாம்பரம் (1898—1972) முதலியோரும் பலவிதங்களில் சமரச சன்மார்க்கத் தாற் கவரப்பட்டவர்களே. புலவர் மணியின் 'பகவத்கீதை' மொழிபெயர்ப்பு இதனைக் காட்டும். ஆக்க இலக்கிய கர்த்தாக்களே மட்டுமன்றி, கலைப்புலவர் க. நவரத்தினம் (1898 – 1962) முதலிய கலையபிமானிகளும் விவேகாநந்தர் போதனைகளால் ஈர்க்கப்பட்டவர்களே. இவ்வாறு நோக்கு மிடத்து, இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியத் திலே வேதாந்த விசாரத்தையும் சமரச சன்மார்க்கத்தையும் சமூக அக்கறைகொண்ட சமய நோக்கையும் முற்பட அறிமுகப் படுத்தியவர் இடைக்காடர் என்பதில் ஐயமில்லை.

இடைக்காடரின் நாவல்களை ஆராயும்பொழுது அவரது நடையைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறுவது பொருத்தமா யிருக்கும். பொதுவாக அக்காலத்து எழுத்தாளர் பலரைப் போலவே இவரும் வடசொற்கள் விரவிய ஒரு நடையையே கையாண்டிருக்கிறார். தத்துவம், ஒழுக்கம், கல்வி முதலிய துறைகள் குறித்த சர்ச்சைகள் நாவல்களிலே அதிகம் இடம் பெறுவதால் வடமொழிச் சொற்கள் வருதல் எதிர்பார்க்கக் கூடியதே. கடந்த இருபது முப்பது வருடங்களாகவே ஆய்வுத் துறைகளில் தூயதமிழ்ச் சொற்கள் பெருமளவில் இடம் பெற்று வந்துள்ளன. ஆயினும் ஒப்பு நோக்கில் ஆராயும்பொழுது 'நீலகண்டனி'ல் காணப்படுவதைவிட 'சித்தகுமாரனி'ல் வட சொற்கள் அதிகம் என்பதில் ஐயமில்லை. 'நீலகண்டன்' கதை யம்சம் கூடியதாயும் மண்வாசனை கமழ்வதாயும் இருப்பதே இதற்குக் காரணம்.

ஆயினும் ஆசிரியருக்கு மொழிபற்றிய கருத்துக்களிலே பரிச்சயம் இருந்திருக்கிறது. 'சித்தகுமாரன்' நாவலில் சித்த குமாரன், ஆணவநாதன், காமநாதன் ஆகியோர் உரையாடிக் கொண்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்திலே மொழிகள் பற்றிய சர்ச்சை கிளம்புகிறது. அவ்வேளையில் சித்தகுமாரன் வட மொழி தென்மொழிகளின் தாரதம்மியத்தை எடுத்துரைக் கிறான். கால்ட்வெல் பாதிரியார் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை 1856இல் வெளியிட்டதன் பின் மொழி-இன வாதங்கள் பெருகி உக்கிரமடைந்ததைப் பலரும் அறிவர். ஆரிய-திராவிட வாதங்கள் அக்கால முதல் தமிழுலகில் நிலை கொண்டுள்ளன. வாக்குவாதத்தின்போது சித்தகுமாரன் பின்வருமாறு கூறுகிறான்:

> நம்மவர்கள், தமிழ்ப்பாஷையின் அட்சரங்களைத்தானும் அறியாத சமஸ்கிருத பாஷாபிமானிகள் கட்டி வைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கும் கதைகளை நம்பி மோசம் போகின்றார்கள். அது மட்டே, ஆரியர்களுடைய சாதிப்பிரிவுகளைத் தாங்களும் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள். தக்க ஆராய்ச்சி செய்யாது அன்னிய சாதியாரைப் பின் பற்றும் தமிழ்ச் சாதியாருக்கு சாதியபிமானம் சமயாபி மானம் எவ்விதம் உதிக்கும். இவர்கள் சனோபகார மாய் ஒன்றையும் செய்ய வல்லவராகார்.

காமநாதனுக்கும் சித்தகுமாரனுக்கும் தொடர்ந்து வாதம் நடைபெறுகையில், சித்தகுமாரன் கால்ட்வெல், பெர்சிவல், ரெயிலர், வின்சிலோ, சாள்ஸ் இ. கோவர் முதலிய ஐரோப்பிய அமெரிக்க ஆய்வாளரின் கருத்துக்களை மேற்கோள் காட்டித் தமிழின் தொன்மையையும் அருமை பெருமைகளையும் வலியுறுத்துகிறான்.

பாத்திரங்கள் கூறுவனவற்றையெல்லாம் ஆசிரியரது கருத்தாக நாம் முடிவுகட்ட வேண்டியதில்லை. எனினும் நாவலாசிரியர் தமிழின் தொன்மையிலும் ஆற்றலிலும் பெருமை கொண்டவராயிருந்தார் என்பது தெளிவு. ஆனால் தாம் கைக்கொண்ட நடையில் தூய தமிழ்ச் சொற்களை நா— வில்லை. வடசொற்கள் இயல்பாகக் கலந்த ஒரு நடையையே பயன்படுத்தினார். அன்றும் இன்றும் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் அதிதீவிரமான தனித்தமிழ் நடையைப் பயன் படுத்த முற்படவில்லை என்பதும் மனங்கொள்ள வேண்டிய செய்தியாகும்.

மொழித்தூய்மைக் கோட்பாட்டை எவ்வாறு பிரிவுணர்ச்சி யுடனோ, குறுகிய மனப்பான்மையுடனோ, மிதமிஞ்சிய பற்றுடனோ ஆசிரியர் கைக்கொள்ளவில்லையோ, அவ்வாறே சமயப் பிரிவுணர்ச்சி சிறிதளவேனும் இல்லாமலே நாவலை எழுதியிருக்கிறார். அறிவுபூர்வமாக அவர் யாது கருதியிருப் பினும் சிருஷ்டி கர்த்தா என்ற முறையில் நிதானத்தையும் சமரச உணர்வையுமே வெளிப்படுத்துகிறார். இது அவரது ஆக்கத்திறனின் வெற்றியைக் குறிக்கிறது எனலாம்.

நாவலாசிரியராயும் கல்விமானாயும் இலட்சியப்பற்றுடன் வாழ்ந்த பள்ளிக்கூட ஆசிரியராயும் சமூகசேவையாளராயும் திகழ்ந்த ஆசிரியர் நாகமுத்து தமது 64ஆவது வயதில் தேக வியோகமானார். முற்றுப்பெறாத சுயசரிதை ஒன்றும் சிந் தனைக் கட்டுரைகள் சிலவும் கையெழுத்துப் பிரதியாக விட்டுச் சென்றார். ஆசிரியரது வாழ்வையும் எழுத்தையும் நுணுக்கமாக ஆராய்வதற்கு இக்குறிப்புகள் உதவுகின்றன. சென்ற நூற் றாண்டின் இறுதியிலும் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் இலக்கியம் படைத்த முன்னோடிகளை மறுமதிப்பீடு செய்யும் இன்று பின்னோக்கிப் பார்க்குமிடத்து, சில விமர்சகர்கள் கருதிவந்திருப்பதைப் பார்க்கிலும் கருத்தாழமும் கலைநயமும் வாய்க்கப்பெற்றவராகக் காணப்படுகிறார் கதாசிரியர் நாகமுத்து. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவலர் துரையப்பா பிள்ளை

நவீன ஈழத்து இலக்கியத்தைப் பற்றி எழுதுவோர் பலர் பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளையைக் குறிப்பிட்டுவிட்டே தமது பணியைத் தொடர்வர். 'ஈழத்து இலக்கிய முன்னோடி,' 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய முதல்வர்,' 'நவீனத்துவத்தின் விடிவெள்ளி' என்றெல்லாம் பலரால் பாராட்டப் பட்டுள்ள துரையப்பா பிள்ளை (1872—1929), சுப்பிரமணிய பாரதியின் சமகாலத்தவர் என்பதும் அவ்வப்போது சுட்டிக் காட்டப்படுவதொன்று. பாரதியையும் துரையப்பா பிள்ளையையும் ஒப்பியல் ரீதியில் ஆராயும் முயற்சியை இச்சந்தர்ப்பத்திலே நான் மேற்கொள்ளவில்லை. ஆயினும் அத்தகைய ஒரு ஆய்வு பயனுள்ளதாய் அமைவதோடு நிச்சயம் சுவைபயப்பதாயும் இருக்கும் என்று தயக்கமின்றிக் கூறுவேன். ஒட்டு மொத்தமாகப் பேசுவதானால் இருவருமே தேசியப் பின்னணியில் மலர்ந்த கவிஞர்கள் என்பதில் தடையில்லை. தேசியத்தைப் புரிந்துகொண்ட அளவிலும் வகையிலும் இருவரது படைப்புக்கள் குணவேறுபாடுகளைப் பெற்றன என்பதிலும் ஐயமில்லை. பாவலர் துரையப்பா பிள்ளை இலங்கையின் ஆரம்பகாலத் தேசியப் பின்னணியில் எவ்வாறு பங்கு கொண்டு இயங்கினார் என்பதையும் அச்சூழல் அவரது கலை, இலக்கிய, கல்விப்பணிகளுக்கு எவ்வாறு ஆதாரமாக அமைந்தது என்பதையும் சுருக்கமாக விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். முதலில் பாவலரது வாழ்க்கையின் முக்கியமான நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வது வசதியாயிருக்கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இலக்கியத்துறையிலும் கல்வித்துறையிலும் ஊக்கத்துடன் பணியாற்றிய பெரும்பாலானோரைப் போல, துரையப்பா பிள்ளையும் சுமாரான வருவாயுடைய சைவக் குடும்பத்திற் பிறந்தார். தந்தையும் தாயும் தமிழ்ப்புலமை நிரம்பிய பரம்பரையில் வந்தவர்கள். தாயின் முன்னோர்களில் ஒருவர் நாடகங்கள் சிலவற்றை எழுதிய கந்தப்பிள்ளை. தந்தை வழிப் பாட்டனார் கதிர்காமச் சட்டம்பியார்; தமிழும் வடமொழியும் நன்கறிந்தவர். அவரது வழித்தோன்றலே துரையப்பா பிள்ளையின் தந்தையாரான அருளம்பலம். அவர் கச்சேரி முதலியார் பதவியில் இருந்தவர். துரையப்பா பிள்ளைக்குப் பதின்மூன்று வயதாயிருக்கும்போது தந்தையார் இறந்தார். எனினும் தாயார் தங்கம்மா கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராகையால் எப்படியோ முயற்சிசெய்து மகனை வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வசாத்திரக் கல்லூரியில் 1888ஆம் வருடம் சேர்த்துவிட்டார். அக்காலத்தில் வட்டுக்கோட்டைச் செமினரி என்று வழங்கப் பட்ட சர்வசாத்திரக் கல்லூரியே யாழ்ப்பாணத்தில் மட்டு மன்றித் தென்ஆசியாவிலேயே மிகச்சிறந்த உயர்நிலைக் கல்லூரி களில் ஒன்றாகத் திகழ்ந்தது. சி. வை. தாமோதரம் பிள்ளை, கறொல் விசுவநாத பிள்ளை, ஆர்ணல் சதாசிவம் பிள்ளை முதலியோரெல்லாம் அங்குதான் கல்விகற்று உயர்நிலைகளை எய்தினர். செமினரியிலே பல்வேறு பாடங்களுடன் தமிழிலக் கியம், ஆங்கில இலக்கியம் ஆகியவற்றை ஆர்வத்துடன் கற்றார். அங்கு கல்வி பயிலும்போதே மதமாறிக் கிறித்தவ ரானார். பெயரையும் மாற்றிக் கொண்டார். இளமையி லிருந்தே அவருக்கு இலக்கியத்தில் அதீத ஈடுபாடிருந்தது. படிப்பை முடித்துக்கொண்டு சில வருடங்கள் யாழ்ப்பாணத் திலும் தென்னிலங்கையிலும் பள்ளிக்கூட ஆசிரியராகவும் அரசாங்க சேவையில் லிகிதராகவும் கடமையாற்றிய பின் இந்தியா சென்றார். அக்காலத்திலே ஈழத்துத் தமிழர்கள் இந்தியா செல்வது பொதுவான வழக்கமாயிருந்தது. இந்தியா தாய் நாடாகப் பலரால் கருதப்பட்டமையால் உரிமையுடனும் உற்சாகத்துடனும் அறிஞர்களும் கல்விமான்களும் அந் நாட்டிற்குப் போய்வந்தனர். (இந்தியா தாய்நாடென்றும் இலங்கை சேய்நாடென்றும் கூறும் வழக்கம் விடுதலைக்குப் பின்னரே—அண்மைக்காலத்திலேயே—சற்றுக் குறைந்துள்ளது).

1895இல் துரையப்பா பிள்ளை பம்பாய் மாகாணத்திலே உள்ள கோல்ஹாப்பூர் மிஷன் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியரா னார். கிறித்தவராயிருந்தமையால் மிஷன் பள்ளியில் சேர்வ தற்குக் கூடிய வாய்ப்பு இருந்திருக்கும் என எண்ணலாம். துரையப்பா பிள்ளை நேரே பம்பாய்க்குச் சென்றமை ஓரளவு வியப்பிற்குரியது. பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களுக்கு யாழ்ப்பாணத்தவர் ஏலவே போகத்துவங்கியிருந்தனர் என்பது உண்மையே. ஆயினும் தமிழிலக்கிய ஈடுபாடு மிக்கவராயிருந்த பிள்ளை சென்னைக்குப் போயிருப்பார் என்றே நாம் எதிர் பார்ப்போம். அதுமட்டுமன்று. துரையப்பா பிள்ளையின் தமையனார் தெ. அ. இராசரத்தினம் பிள்ளை தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருந்தார். சென்னைக் கிறித்தவக் கல்லுரியிலே கடமைபுரிந்த அவர் அக்கல்லூரியின் தாபகரும் முதல்வருமா யிருந்த டாக்டர் மில்லரின் அன்புக்குப் பாத்திரமானவராயு மிருந்தார். மில்லரின் வாழ்க்கை வரலாற்று நூலையும் 'சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் சரித்திரம்' (1934) என்னும் நூல் உட்பட வேறுபல பாடநூல்களையும் பொது நூல்களையும் எழுதியவர். அக்காலத்திலே சென்னையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த அறிஞர்கள், பெருமக்கள் பலருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். (பின்னாளில் துரையப்பா பிள்ளையைக் கொண்டு கிறித்தவக் கல்லூரி மீது பாடல் ஒன்று இயற்றுவித்தார்.) துரையப்பா பிள்ளை தமையனார் வாழ்ந்து கொண்டிருந்த சென்னைக்குப் போகாமல் கோல்ஹாப்பூர் சென்றார். (பிள்ளையின் சமகாலத்தவரும் அவருடன் செமினரியிற் பயின்றவருமான டி. எச். குறொசெற் அவர்களும், வட்டுக்கோட்டையிற் கற்றபின் பம்பாய் மாகாணத்தில் அகமதுகான் மிஷன் உயர் தரக் கல்லூரியின் தலைவராய்ப் பணி புரிந்துகொண்டே பட்டப்படிப்பிற் சித்தியெய்தியவர்.) அது போலத் தானும் செய்யலாம் என்று பிள்ளையவர்கள் எண்ணி யிருத்தல் கூடும். அது எவ்வாறாயினும், பம்பாய் வாசம் அவருக்குப் பலவழிகளில் நன்மையாகவே அமைந்தது. இரு வருடங்கள் கோல்ஹாப்பூரில் பணியாற்றிய பின் பெல்காம் இங்கிலாந்து மிஷன் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கு ஒரு வருடம் வசித்தார். தனது கல்வியை மேலும் விருத்தி செய்துகொண்ட அதே வேளையில் பொது வாக இந்தியாவிலும் சிறப்பாக பம்பாயிலும் அரசியல்-சமூக இயக்கங்களில் உழைத்து வந்த பாலகங்காதர திலகர், கோபாலகிருஷ்ண கோகலே, தாதாபாய் நவுரோஜி முதலியோரின் நடவடிக்கைகளைக் கவனித்து அவற்றால் ஈர்க்கப்பட்டார். குறிப்பாகக் கோகலேயின் செல்வாக்கு அவர் மீது அதிகம் எனலாம். அதனைப் பின்னர் பார்ப்போம்.

1898ஆம் வருடம் பம்பாய் மாகாணத்தில் கொள்ளை நோய் பரவியது. அதனால் ஏற்பட்ட அழிவு சொல்லுந்தர மன்று. அவ்வேளை ஊருக்குத் திரும்பும்படி தாயார் வருந்தி யழைக்கவே அதற்கிசைந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அடுத்த ஆண்டில் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று 1900இல் தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் பாடசாலையின் தலைமையாசிரியரானார். அடுத்த பத்தாண்டு கள் கலை, இலக்கிய, சமூக விவகாரங்களில் பேரூக்கத்துடன் ஈடு பட்டுழைத்தார். 1901ஆம் வருடம் 'கீதரசமஞ்சரி' என்னும் கவிதை நூலை வெளியிட்டார். அதே ஆண்டில் 'உதயதாரகை' பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 1910ஆம் வருடம் அமெரிக்க மிஷன் பாடசாலைத் தொடர்பை முறித்துக் கொண்டு தனது வீட்டிலேயே மகாஜன உயர்நிலைப் பள்ளியை ஆரம்பித்தார். அந்நாளிலிருந்து இறக்கும்வரை மகாஜனக் கல்லூரியை உருவாக்குவதிலே தனது முழு உழைப்பையும் செல வழித்தார். 1921ஆம் வருடத்திலிருந்து 'இந்து சாதனம்' பத்திரிகையின் தமிழ், ஆங்கிலப் பதிப்புகளின் ஆசிரியர் குழுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிந்து வந்தார். 1927ஆம் வருடம் மகாத்மாகாந்தி தமது இலங்கை விஜயத்தின் போது யாழ்ப்பாணம் வந்தகாலை வரவேற்புச் சபையில் முக்கிய உறுப்பினராக இருந்து பணியாற்றினார். அதே ஆண்டு 'சிவமணிமாலை' என்னும் செய்யுள் நூலையும் இயற்றினார். 1929ஆம் வருடம் இயற்கையெய்தினார்.

துரையப்பா பிள்ளையின் வாழ்க்கையை உற்றுக் கவனிக்கும் பொழுது இரண்டொரு செய்திகள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஈழத்துத் தமிழறிஞர் பெரும்பாலானோரைப் போலவே இவரும் இந்தியாவில் சிலகாலம் வாழ்ந்திருக்கிறார். ஆயினும் ஏனையோரிலிருந்து வேறுபடும் வகையில் வடஇந்தியாவில் வாழ்ந்திருக்கிறார். அதன் பெறுபேறுகள் ஊகித்தறிந்து கொள்ள வேண்டியவை. அதைப் போலவே பெரும்பாலான தமிழ்ப் புலவர்களோடு ஒப்பிட்டு நோக்குகையில் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளில் இவர் கூடுதலான அக்கறை கொண்டவராயிருந்தமையும் மனங்கொளள வேண்டியதே. அந்த வகையில் ஆறுமுக நாவலரின் பன்முகப்பட்ட முயற்சிகளின் தருக்கரீதியான வளர்ச்சியின் வடிவமாகத் துரையப்பா பிள்ளையைக் கருதலாம். சுருங்கச் சொன்னால் தேசியத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கூறுகளை இவரில் தூலமாகக் கண்டு கொள்ளலாம். இன்னுமொன்று. பிறப்பிலே சைவர்களாக இருந்தவர்கள் பலர், கல்வியின்போதும், உத்தியோகத்தின் போதும் குறிப்பாகத் தமது இளமைக்காலத்திலே, கிறித்தவத்தைத் தழுவிக் கொண்டனர். ஆயினும் நாளடைவில் அவர்களிற் சிலர் மீண்டும் சைவசமயத்திற்கு வந்தனர். சிலர் சமரச சன்மார்க்கத்தைப் பற்றிக் கொண்டனர். தேசிய உணர்வின் ஓர் அம்சமாக இடையில் வந்த 'அந்நிய' கிறித்தவத்தை விடுத்து பரம்பரைச் சமயமான இந்துமதத்தைப் பலர் தழுவிக் கொண்டமை வரலாற்றுச் செய்தியாகும். இது வெறுமனே மதமாற்றம் சம்பந்தமான விஷயம் எனக் கருதிவிட முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் சைவத்திலிருந்து கிறித்தவத்துக்குச் சென்றபோதும், பின்னர் மீண்டும் சைவத்துக்கு வந்தபோதும் கடுமையான உள்மனப் போராட்டங்களுக்கு ஆளாகினர். வரலாற்றில் இதற்குப் பல உதாரணங்களைக் காண்கிறோம். உதாரணமாகத் திருநாவுக்கரசர் சமணராயிருந்து சைவராகியதனால் ஏற்பட்ட உணர்வுகளை அவருடைய தேவாரங்களிலே நுண்ணிய முறையில் நாம் காணக்கூடியதாய் இருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே மற்றொரு ஈழத்தவரான சி. வை. தாமோதரம் பிள்ளையின் சிந்தனையிலும் எழுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் இத்தகைய ஒரு மனப்போராட்டத்தைத் தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளது. செமினரியில் படித்த காலத்தில் கிறித்தவரான பிள்ளையவர்கள் பின்னர் சைவத்தை மீண்டும் பற்றார்வத்துடன் தழுவிக் கொண்டார். தன் மகன் கிறித்தவத்தை ஏற்றுக் கொண்டபொழுது ஆவேசத்துடன் அதனை எதிர்த்தார். இவையெல்லாம் சிக்கலான மனப்போராட்டங்களை உண்டாக்கின என்பதில் ஐயமில்லை. தாமோதரம் பிள்ளை ஆய்வறிவாளராயுமிருந்தமையால் அவரது உளப் போராட்டங்கள் கூர்மையானவையாயும் வேதனையளிப்பனவாயும் இருந்திருக்கும் என்பது கூறாமலே விளங்கும். துரையப்பா பிள்ளையைப் பொறுத்தவரையிலும் அவரியற்றிய 'சிவமணிமாலை'யில் அத்தகைய மனோநிலைகளை ஆங்காங்குக் காணலாம். "ஈனப் பவங்களுள் ஆழ்ந்தேன்," "புன்மை எனும் நெறி மீதினில் யான் செலும் போக்கொழித்து" என்பன போன்ற கூற்றுக்கள் பரசமய வாழ்விலே நின்ற நாட்களை எண்ணிப் பாடியவை என்று கருதுதல் பிழையன்று. இன்னொரு விதத்திற் கூறுவதானால், துரையப்பா பிள்ளை போன்றவர்களது இலக்கிய ஆக்கங்களிலே வெளிப்படையான சமுதாயப் பொருள் எத்துணை முக்கியமோ அத்துணை முக்கியமாக அவர்களது உளவியல் அம்சங்களும் அமைந்துள்ளமை நினைந்து கொள்ள வேண்டியதாகும். மனோநிலைகளைப் பாடும் வேளைகளில் அவர்களின் படைப்பு தன்னுணர்ச்சிப் பாடல் நிலையை அண்மிப்பதும் கருத்திற் கொள்ள வேண்டியதேயாகும். இவையெல்லாம் அவர்களின் இலக்கியப்படைப்புகளுக்கு ஆழமும் சிக்கலும் நிறைந்த தன்மையை அளிக்கின்றன. எனினும் ஒட்டுமொத்தமாக நோக்கும்பொழுது பாவலர் துரையப்பா பிள்ளையின் கல்வி, கலை, இலக்கியப் பங்களிப்புகளை இலங்கைத் தேசியத்தின் பகைப்புலத்திலேயே மதிப்பிடுதல் வேண்டும்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இலங்கையிலே தேசியவாதம் படிப்படியாகப் பரிணமித்து வந்துள்ளது. இத்தேசியவாதம் முற்பகுதியிலே சமய, சமூக, கலாசாரத் துறைகளிலும் பிற்பகுதியிலே, பொருளியல் அரசியல் துறைகளிலும் முனைப்பாக வெளிப்பட்டது. பிரதேச அடிப்படையிலே தேசியத்தின் வேகமும் வலுவும் ஒரு சீராக—சமனாக — இருக்கவில்லை என்பது உண்மையே. ஆயினும் தேசியவாதத்தின் மூலாதாரக் கூறுகள் நாடு முழுவதிலும் பொதுவாக விரவிக் காணப்பட்டன. பொதுவான இவ்வளர்ச்சிப் போக்கின் பின்னணியிலேயே துரையப்பா பிள்ளை இயங்கிய சூழலை ஒருவாறு விவரிக்கலாம். (இலங்கையின் தேசியவாதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியை ஆராயும் ஒருவர், தவிர்க்க இயலாதவாறு இந்திய தேசியவாதப் படிமுறை வளர்ச்சியை எப்பொழுதும் மனத்திலிருத்திக் கொள்வது அவசியம். விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் இந்திய தேசியவாதத்தின் செல்வாக்கு பலவழிகளில் இலங்கைத் தேசியவாதிகளைப் பாதித்தது.)

இலங்கையில் மட்டுமன்றி ஏனைய ஆசிய நாடுகள் பலவற்றிலும் தேசியத்தின் உடனிகழ்ச்சியாக, 'உயர்ந்தோர் குழாம்' ஒன்று உருவாகியது. உயர்ந்தோர் குழாம் என்பதனை நவீன சமூகவியலாளர் 'எலீற்' (Elite) என்னும் ஆங்கிலச் சொல்லாற் குறிப்பர். மனித வரலாற்றிலே வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு தன்மை வாய்ந்த உயர்ந்தோர் குழாங்கள் தோன்றி மறைந்துள்ளன. பொருளுடைமை, சமூக அந்தஸ்து, அரசியற் செல்வாக்கு என்பன இவ்வுயர்ந்தோர் குழாங்களின் தனிச் சிறப்பியல்புகளாயும், வெவ்வேறு காலப் பகுதிகளில் இவற்றுக்கிடையேயுள்ள வேறுபாட்டைத் துலக்கிக் காட்டுவனவாயுமுள்ளன.

பிரித்தானியரது ஆட்சியின் விளைவாகவும் நாட்டின் பொருளாதார அமைப்பில் நிகழ்ந்த பெருமாற்றங்களின் பயனாகவும் புதியதொரு உயர்ந்தோர் குழாம் உருவாகியது எனச் சுருக்கமாகக் கூறுவது பொருத்தமாகும். நிலமானிய அடிப்படையில் கமத்தொழிலை மாத்திரம் பிரதானமாய்க் கொண்டியங்கிய பொருளாதார அமைப்பில், வரையறுக்கப்பட்ட சாதியமைப்பின்மீது கட்டியெழுப்பப்பட்டிருந்த சமூக உறவுகள், பிரித்தானிய ஆட்சியில் நிலைகுலையலாயின. குடியேற்ற நாடாக அமைந்த இலங்கையைப் பிரித்தானியர் தமது தேவைக்கேற்ப, மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்து உள்நாட்டிலே விற்பனை முறையை விஸ்தரிக்கும் நாடாகவும் மாற்றியமைக்கும் பெரும்பணியைச் செய்தனர். இது தவிர்க்கவியலாத வரலாற்று நிகழ்வாகவும் இருந்தது. இம்மாற்றம் நிகழ்ந்துகொண்டிருந்தபோது புதிய புதிய துறைகளிலும் வழிகளிலும் பொருளீட்டும் வாய்ப்புப் பலருக்குக் கிடைத்தது. இவர்கள் ஏலவே சமூகத்தில் உயர்நிலையில் இருந்தவர்களாயினும், இடம் பெயர்ந்து சென்று புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதில் முந்தியோரினின்றும் வேறுபட்டனர். தாம் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு தமது பிள்ளைகளுக்குப் புதிய கல்வியைப் பெற்றுக் கொடுத்ததோடு இங்கிலாந்துக்கு மேற்படிப்பிற்காக அனுப்பவும் வழிகண்டனர். அவர்கள் அங்கு பெற்ற உயர்கல்வியும் ஆங்கிலப் பயிற்சியும் மேலும் அவர்களது வேலை வாய்ப்புக்களையும் உத்தியோக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களையும் அதிகரித்தன. இவ்வாறு காரணகாரியத் தொடர்புடன் புதிய வர்க்கம் ஒன்று—உயர்ந்தோர் குழாம் ஒன்று—தோன்றியது. இஃது இலங்கை முழுவதற்கும் பொது வான வளர்ச்சி முறையாயிருந்தது. அதாவது சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று சமூகத்தவர்கள் மத்தியிலும் இப்போக்கினைக் காணக்கூடியதாயுள்ளது. பெரும்பாலும் சிற்சில குடும்பங்கள் பிரித்தானியர் ஆட்சியிற் சீரும் சிறப்பும் செல்வாக்கும் பெற்றன. கொழும்பில் இருந்த பொன்னம்பல முதலியார் குடும்பத்தை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய்க் கொள்ளலாம். இராமநாதன், அருணாசலம் ஆகியோர் இலங்கையின் உயர்ந்தோர் குழாத்தில் இடம்பெற்ற வரலாறு இங்கு நினைவுகூரத்தக்கது.

நவீன இலங்கைச் சமூக வரலாற்றை ஆராய்ந்தவர்கள், இங்குக் குறிப்பிடும் உயர்ந்தோர் குழாம் இருபிரிவானது என்பர். உயர்ந்தோர் குழாம் தேசிய அடிப்படையிலும் பிரதேச அடிப்படையிலும் பாகுபடுத்தப்படுவதுண்டு. முன் குறிப்பிட்ட மூன்று அம்சங்களான பொருளுடைமை, சமூக அந்தஸ்து, அரசியற் செல்வாக்கு என்பவற்றில் தேசிய ரீதியான உயர்ந்தோர் குழாத்துக்கும், பிரதேச ரீதியான—உள்ளூர்—உயர்ந்தோர் குழாத்துக்கும் அடிப்படை வேறுபாடில்லை எனலாம். ஆயினும், வாழ்க்கைமுறை, இலட்சியங்கள், பாரம்பரிய உணர்வு முதலியவற்றில் இவ்விரு பிரிவுகளுக்குமிடையிற் குறிப்பிடத்தக்க சில அழுத்த வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக, அனைத்து இலங்கைக்கும் பொதுவாக—தேசியத் தலைவர்களாக—விளங்கியோர் கூடுதலாக மேலைப்புல நாகரிகத்தை ஏற்றுக்கொண்டவராய், நாட்டின் வெகுஜனங்களிலிருந்தும் 'விலகி'யிருந்தோராய், தாய் மொழியிலும் பார்க்க ஆங்கிலத்திலே பயிற்சியும் புலமையும் மிக்கு உடையோராய் விளங்கினர். இப்பண்புக்கு நேரெதிர் நிலைப்பாட்டைப் பெற்றிருந்தனர் உள்ளூர் உயர்ந்தோர் குழாத்தினர். (சிற்சில வரலாற்றுக் காரணிகளினால், தென்னிலங்கையில் இருந்த பிரதேசப் பிரமுகர்களிலும் பார்க்க, அவர்க்குச் சரிநேரினராய் வட இலங்கையில் இருந்தோர் கூடியளவு ஆங்கிலக் கலை இலக்கியப் பரிச்சயமும் ஈடுபாடும் உடையராய் இருந்தனர். இதன் விளைவுகள் இன்றுவரை பல வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.)

எனினும், தேசிய உயர்ந்தோர் குழாத்துக்கும் உள்ளூர் உயர்ந்தோர் குழாத்துக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு இருந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தோன்றி யிருப்பினும் தலைநகருடன் தொடர்புகொண்டு அதனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பிரதான இருப்பிடமாக்கிக்கொண்ட தேசிய உயர்ந்தோர் குழாத்தினர் இன, மொழி, மத வித்தியாசங்களைக் கடந்து வர்க்க அடிப்படையில் கூடுதலான ஒருமைப்பாடுடையராய் விளங்கினர். வர்க்கம் என்ற சொல்லினால் இக் குழாத்தைக் குறிப்பிடுவதில் தவறு எதுவும் இல்லை. ஒரே தன்மையான வாழ்க்கைமுறை, பொருளீட்டம், மதிப்பீடுகள், வருமானம் என்பவற்றாலும் நெருங்கிய தொடர்புகளினாலும் இவ்வர்க்கத்தினரிடையே 'வர்க்க உணர்வும்' வளர்ச்சியுற்றுக் காணப்பட்டது. அதுமட்டுமல்லாது இவர்கள் ஆங்கிலேய ஆட்சியாளரிற் பெரும்பகுதியினரையும் தமது சக 'வர்க்கத்தின'ராகவே கருதிப் பழகினர். பிரித்தானிய அரசினால் வழங்கப்பட்ட விருதுகளும் பட்டங்களும் இத்தகைய மன ஒற்றுமையை உறுதிப்படுத்துவனவாய் அமைந்தன.

உள்ளூர் உயர்ந்தோர் குழாமோ அத்தகைய ஒருமைப்பாடும் ஒன்றிணைப்பும் கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக அதனைச் சார்ந்தோர் சில வேளைகளில் முரண்பட்ட கருத்தோட்டங்களையும் நலநாட்டங்களையும் பிரதிபலிப்பவரா யிருந்தனர். இன, மொழி, மத அக்கறைகள் இவர்களைக் கூடுதலாகப் பாதித்தன. கலாசாரப் பிரச்சினைகளில் இவர்கள் தவிர்க்க இயலாதவாறு ஆழ்ந்த ஈடுபாடும் சிரத்தையும் கொண்டியங்கினர். உதாரணமாக, தேசிய உயர்ந்தோர் குழாத்தைச் சேர்ந்தோர் அனைவரும் அன்றைய நிலையில் ஆங்கில மொழியையே தமது பிரதான கருத்து வெளிப்பாட்டுச் சாதனமாகக் கொண்டனர். ஆனால் பிரதேசங்களில் வாழ்ந்த பிரமுகர்கள் (குறிப்பாகச் சிங்களப் பகுதிகளில்) தாய்மொழியையே அதிகமதிகமாகப் பயன்படுத்தலாயினர். ஆறுமுக நாவலரிலிருந்து துரையப்பா பிள்ளை, ஈழகேசரிப் பொன்னையா வரையிலான உள்ளூர் உயர்ந்தோர் குழாத்தினர் தாய்மொழிப் பாண்டித்தியம் நிரம்பப் பெற்றவராய்த் திகழ்ந்தனர். இத்தகைய பொதுப்பண்புகள் வாய்க்கப் பெற்றிருந்த உள்ளூர்ப் பிரமுகர்கள் வரிசையில் இடம் பெறுபவரே பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளை.

பாவலர் அவர்கள் இயங்கிச் செயற்பட்ட தேசியப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குமுகமாகத் தென்னிலங்கைக்கும் வடபகுதிக்கும் பொதுவாக அமைந்த சில இயக்கங்களை ஈண்டு விவரிக்கலாம் என் எண்ணுகிறேன். நாட்டின் பல பகுதிகளிலும் மாவட்ட, பிரதேச அடிப்படையில் எழுந்த இவ்விடயங்களிற் சில காலக்கிரமத்தில் அனைத்திலங்கை முக்கியத்துவம் பெற்றது மட்டுமன்றி, மெல்ல மெல்ல உருவாகி வந்த தேசியவாதத்தின் மிக முக்கியமான கூறுகளாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தன என்பது மனங்கொள்ளத் தக்கதே. அத்தகைய தோர் இயக்கம் மதுவிலக்கு இயக்கம் ஆகும்.

கலாநிதி குமாரி ஜயவர்த்தனா, கலாநிதி பி. டி. எம். பெர்னாந்து ஆகியோர் அண்மையில் விரிவாக நிகழ்த்தியுள்ள ஆய்வுகளின்படி, இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுவிலக்கு இயக்கம் (சிறப்பாகத் தென்னிலங்கையில்) பரவலாக நடை பெற்றமை தெரியவந்துளது. மது அருந்துவது பௌத்தமதக் கோட்பாடுகளுக்கு விரோதமானதாயும் மேற்கு நாட்டு நாகரிகச் சின்னமாகவும் அந்நியப் பழக்க வழக்கமாகவும் கருதப் பட்டமையால், அவ்வியக்கம் பரந்துபட்ட வெகுஜன இயக்கமாக அமையக்கூடிய உள்ளியல்பைப் பெற்றிருந்தது. இறுதி ஆய்வில் மதுவிலக்குப் பிரசாரம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான பிரசாரமாகவும் அமைந்தது. அன்றைய ஆட்சி யாளர் அதனைக் கவனிக்கத் தவறவில்லை. 1915ஆம் ஆண்டுக் குரிய பொலிஸ் மாஅதிபரின் ஆண்டறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "இம் மதுவிலக்குக் கூட்டங்களிலே தேசியமும் அரசியலும் பெருமளவு கலந்தே இடம்பெற்றன. மதுவிலக்கு என்ற பெயரில் இவை உண்மையில் அரசியற் கூட்டங்களாகவே நடைபெற்றன."

1912ஆம் ஆண்டு இயற்றப்பெற்ற மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் விளைவாக நாடுமுழுவதும் மதுபானச் சாலைகள் (தவறணைகள்) பெருகின. உள்ளூர்த் தலைவர்கள் இதனை வன்மையாய்க் கண்டித்துக் குரலெழுப்பினர். தென்னிலங்கை யிற் பேரியக்கமாக நடந்தேறிய மதுவிலக்குப் பிரசாரம், 1915ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரங்களுக்குப் பங்களித் துதவிய காரணியாய் இருந்தது என அரசாங்கம் கருதியபடியா லேயே, அதில் சம்பந்தப்பட்ட தலைவர்கள் பலரை அரசாங்க விரோதிகள் எனக் குற்றஞ்சுமத்திச் சிறையிட்டது.

இவ்வாறு தென்னிலங்கையை உலுப்பிய மதுவிலக்கு இயக்கம் வடபகுதியிலும் தீவிரமாக நடைபெற்றது. இயக்க வடிவம் பெறுவதற்குப் பல்லாண்டுகள் முன்னதாகவே ஆறுமுக நாவலர் மதுவிலக்கைப் பற்றிச் சிந்தித்து எழுதியிருந்தார்.

> வறுமைக்கும் துன்பத்துக்கும் சகல பாவங்களுக்கும் பிறப் பிடம் மதுபானம். இலங்கையிலே பூர்வ காலத்தில் மதுபானம் மிக அரிது. தற்காலத்திலோ அது விருத்தி யாகிக் கொண்டே வருகின்றது. துரைத்தனத்தாருக்குச் சாராயத்தினால் 1852ஆம் வருஷத்து வரவு ஏறக்குறைய 6,00,000 ரூபா; 1872ஆம் வருஷத்து வரவு ஏறக்குறைய 20,00,000 ரூபா. கல்வியிலும் நாகரிகத்திலும் சிறப்புற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஆங்கிலேய துரைத்தனத்தார், தமக்குச் சாராயத்தால் எய்தும் பொருளைப் பிறவாயில்கள் சிலவற்றால் எய்துவிக்கத் தலைப்பட்டுக்கொண்டு சாராயத்தை ஒழிவிப்பாராயின், இலங்கைச் சனங்கள் நல்லொழுக்கமும், செல்வமும், ஆரோக்கியமும், தீர்க்காயுசும் அடைவார்கள்.

1874ஆம் ஆண்டில் வெளியிட்ட 'பூமிசாத்திரத்'தில் மேற்கண்டவாறு சஞ்சலத்துடன் எழுதினார் நாவலர்.

சமய அடிப்படையிலேயே நாவலர் தமது எதிர்ப்பைத் தெரிவித்தாரெனினும், "இலங்கைச் சனங்கள்" என்ற சொற்றொடர் உற்று நோக்க வேண்டியதாயுள்ளது. நாவலர் இயற்றிய 'பாலபாடம்' நான்காம் புத்தகத்தில் கொலை, களவு, கள், வியபிசாரம் முதலிய பாதகங்களில் ஒன்றான கள்ளுண்ணலைக் கடிந்து எழுதியுள்ளார். ஆனால் ஆட்சியினர் தமது வருவாயைப் பெருக்குவதற்காகச் சாராய விற்பனையை அதிகரிப்பதைக் கண்டிக்கும்பொழுது அவரது 'சமூக-பொருளாதார' உணர்வு புலப்படுகிறதெனலாம்.

பல வழிகளில் நாவலர் இலட்சியங்களைப் பின்பற்றியவர் எனத்தகும் பாவலரவர்கள் பலவாண்டுகளாகவே மதுவிலக்குப் பிரசாரத்தில் முன்னின்றுழைத்தார்; வசனத்திலும் பாட்டிலும் மதுவிலக்கு சம்பந்தமாக நிறைய எழுதினார். 'உதயதாரகை' பத்திரிகையுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்த பிள்ளையவர்கள் அதிலே குடிவெறியின் கொடுமைகளைப் பற்றியும் கேட்டைப்பற்றியும் பலவாறு தமது கருத்துக்களை வெளிப்படுத்தினார். 'தெல்லி மாநகர்' முகவரியிட்டு 'ஓர் கிறிஸ்தவன்' என்னும் புனைபெயரில் (உதயதாரகை, மார்கழி 20, 1901) எழுதிய கடிதமொன்றிலே "யாழ்ப்பாணமே......கொள்ளை நோயிலும் பார்க்க நின்னகத்திற் குடிகொண்ட சாராயக் கடைகள் பத்து மடங்கு கொடுமையுடையது" என்றும், "முன் இரு முறை இத்தாரகை வாயிலாய் வெளிப்படுத்திய படியே...... பெரியோர், சிறியோர், தலைமைக்காரர், உத்தியோகத்தர், கமக்காரர், வியாபாரிகளென்ற பேதமின்றி யெல்லோருமொரேமனதாயிக் கொடிய களரியைத் துகள்துகளா யற்றுப் போகச் செய்யவேண்டும்" என்றும் எழுதியிருக்கிறார் (உதயதாரகை, ஒக்டோபர் 22, 1903). குடிவெறி குறித்துத் தெல்லிப்பழையிலிருந்து அடிக்கடி பல விஷயங்களைத் 'தாரகை'யில் எழுதியிருப்பதைக் காணலாம். 1907ஆம் வருடம் *Ceylon National Review* என்னும் சஞ்சிகையில் 'Jaffna Past and Present' என்னும் தலைப்பில் எழுதிய நீண்ட கட்டுரையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு நாட்டு மதுபானங்களும் சாராயமும் ஏனை குடிவகை களும் எமது சமுதாயத்தில் வந்து புகுந்துள்ளமையைப் பற்றிக் கடிந்துரைத்திருக்கிறார். 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி' என்னும் நூலில் மதுவிலக்குப் பற்றிப் பல பாக்கள் யாத்துள்ளார்.

எங்கள்தே சத்திற் குடியால் வருந்தீமை
யிம்மட் டென்னவிங் கியலாது
சங்கங்கள் நாட்டியித் தீமையை முற்றும்
தடுத்திடு வாயடி சங்கமின்னே.

இப்பாடலில் மதுவிலக்கு இயக்கரீதியாக ஒழிக்கப்படல் வேண்டும் என்னும் கருத்து ஒலிப்பதைக் கேட்கலாமன்றோ! இது விஷயமாகப் பல வருடங்கள் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வந்தார் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. 1917ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற அளவெட்டி மதுவிலக்குச் சங்கத்தின் வருடாந்தரப் பொதுக் கூட்டத்திற் பாடுவதற்காகப் பல பாடல்களை இயற்றியிருக்கிறார். மதுவிலக்கு இயக்கத்தைப் பாராட்டியும் அதனை வாழ்த்தியும் எத்தனையோ இசைப்பாக்களை—ஜனரஞ்சகமான கீர்த்தனைகளை—ஆக்கினார். 1916ஆம் ஆண்டளவில் இயக்கரீதியாக அமைக்கப்பெற்ற இந்து வாலிபர் சங்கமும் இத் துறையில் முன்னின்று உழைத்தது. மதுவிலக்கு விஷயத்தில், இலங்கைக்குப் பொதுவான இயக்கம் ஒன்றில் பாவலர் பிரதேச அடிப்படையில் ஈடுபட்டிருந்தமையை இவை தெளிவுறுத்து கின்றன.

1914, 1915ஆம் ஆண்டுகளை அடுத்த காலப்பகுதியில் தென்னிலங்கையிலே பல விடயங்களில் இலக்கியக் கழகங்களும் இலக்கியச் சங்கங்களும் மாநாடுகளும் அடிக்கடி நடைபெற்று வரலாயின. மதுவிலக்கு இயக்கத்தைப் போலவே இவ்விலக்கிய இயக்கமும் அரசியல் நோக்கங்களைக் கொண்டிருந்தது. சிங்களத்தைப் பொறுத்தவரையில் இவ்வியக்கத்தின் விளைவாகப் பல கவிதை நூல்களும் நாடகங்களும் வெளியிடப்பட்டன. ஜோன் டி சில்வா அவர்களின் வரலாற்று நாடகங்கள் இத்தொடர்பில் குறிப்பிடத்தக்கன. அக்காலத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த எச். எல். டௌபிகின் என்பாரது கட்டளைப்படி சிங்களக் கவிதை நூல்களையும் பொலிஸ் பகுதியினர் கவனமாகப் பரிசீலனை செய்தனராம். சுருங்கக் கூறின் இலக்கியச் சங்கங்கள் தேசிய விழிப்புணர்ச்சியின் மற்றோர் அம்சமாக விளங்கின.

இத்துறையிலும் துரையப்பா பிள்ளையவர்கள் ஊக்கத் துடன் உழைத்தார். தாமே ஓர் இலக்கிய கர்த்தாவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையால் இலக்கிய சிருஷ்டியில் மட்டுமன்றி அதற்குரிய சூழல், அதற்குகந்த மொழி, இலக்கிய நோக்கு முதலிய வற்றிலும் அவருக்கு ஆழ்ந்த அக்கறையிருந்தது. அவர் பாடிய கவிதைகள் பலவற்றில் இது பிரதிபலிக்கின்றது. இது விஷயத் தில் சுப்பிரமணிய பாரதியுடன் ஒப்புநோக்கி ஆராயப்பட வேண்டியவர். அப்பொழுது அவரது பலமும் பலவீனமும் துலக்கமாகும்.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக (27-12-1922) நடந்த தமிழ் இலக்கிய மகாநாட்டைப் பற்றிய செய்தியொன்று *Hindu Organ* பத்திரிகையிற் காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் றிஜ்வே மண்டபத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டுக்கு கௌரவ அ. கனகசபை அவர்கள் முதல் நாள் தலைமை தாங்கினார். இக்கூட்டங்களிலெல்லாம் பிள்ளையின் பாடல் கள் பாடப்பெற்றன. 1922ஆம் ஆண்டு நடைபெற்ற இவ் விலக்கிய மகாநாட்டிற்கு அந்நாளில் தென்னிந்தியாவிலே பிரசித்திபெற்று விளங்கிய அறிஞர்கள் சிலர் அழைக்கப் பட்டிருந்தனர். 'இந்து சாதனம்' (ஒக்டோபர் 9, 1922) செய்தி யொன்றின்படி, சென்னைப் பல்கலைக் கழகத்து வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் (1871—1947), சென்னைச் சட்டக் கல்லூரி விரிவுரையாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை (1889—1945), பிரபல நாவலாசிரியர் அ. மாதவையா (1874—1925), தமிழறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் (1871—1931) ஆகியோர் மகாநாட்டுக்கு வருவதற்கு உடன்பட்டிருந்ததாய்த் தெரிகிறது. யாது காரணத்தாலோ பின்னர் மாதவையா வரவில்லை. மகாநாட்டின் இரண்டாம் நாள் அரங்குக்கு வைத்திலிங்கம் துரைசாமி தலைமை தாங்கினார். அக்கூட்டத்தில் துரையப்பா பிள்ளை, 'தமிழ்க் கல்வியின் தற்கால நிலை' என்னும் பொருள் குறித்துப் பேருரை நிகழ்த்தினார். இடையிடையே பாடல்கள் ஒலித்த அவ்வுரையிலே தமிழ்க் கல்வியிற் காணப்பெற்ற பெருங்குறை களும் சீர்க்கேடுகளும் இடித்துரைக்கப்பட்டன. சபையிலிருந் தோர் பேரார்வத்துடன் அப்பிரசங்கத்தைக் கேட்டிருந்ததாய்ப் பத்திரிகை எழுதியிருந்தது.

இலக்கிய சங்கமும் மாநாடும் சிறப்புற நடந்த அவ் வாண்டிலேயே (1922) யாழ்ப்பாணம் 'ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம்' நிறுவப் பெற்றது என்பதும் நினைந்து கொள்ளத்தக்கது. இச்சங்கத்திலும் பிள்ளையவர்கள் செயற் குழு உறுப்பினராக அமர்ந்து தொண்டாற்றினார். இலக்கியச் சங்கங்களாக இருப்பினும் அவை குறுகிய வட்டத்திற்குள் இயங்காது, பொதுவான கலாசாரப் பிரச்சினைகளையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவிச் சென்றன. அப்போக்கு பிள்ளையவர்களின் ஆளுமைக்கும் அக்கறைகளுக்கும் ஏற்றதாயிருந்தமையால் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் உழைத்தார் எனலாம்.

கொழும்பிலே 1906ஆம் வருடம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று நடந்தேறியது. அவ்வாண்டு ஆகஸ்டு மாதம் 13ஆம் திகதி ஐயாயிரம் மாட்டு வண்டிக்காரர் வேலை நிறுத்தஞ் செய்தனர். அக்காலத்தில் துறைமுகத்திலிருந்து பண்டங்களை ஏற்றிச் செல்லவும் துறைமுகத்துக்கு ஏற்றுமதிப் பொருட்களைக் கொண்டு செல்லவும் நகரில் வர்த்தகப் பொருட்களை எடுத்துச் செல்லவும் மாட்டு வண்டிகளே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. 1910ஆம் ஆண்டளவில் சுமார் இருபத்து மூவாயிரம் வண்டிகள் இருந்தன என்று 1911ஆம் ஆண்டுக் குடிசன மதிப்புப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. முனிசிப்பல் சபை புதிதாக விதித்த போக்கு வரத்துச் சட்டம் ஒன்றினை எதிர்த்தே ஐயாயிரம் வண்டிக்காரர் வேலை நிறுத்தஞ் செய்தனர். அப்பொழுது 'உதய தாரகை' ஆசிரியராக இருந்தவர் பிள்ளையவர்கள். 23-8-1906 இதழிலே, 'வண்டிக்காரர் குழப்பம்' என்னும் தலைப்பில் "13ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கமாய் வேலைக்குப் போகவில்லை......ஒருவரினுதவி மற்றவர்க்கு அகத்தியம் தேவையாயிருக்கு" என்று எழுதினார். பத்திராதிபர் என்ற வகையில் பிள்ளை பாரபட்சமற்ற முறையில் இவ்வாறு எழுதினார் என நாம் கொள்ளலாம். எனினும் தீவிரவாதியாக விளங்காவிடினும் வாழ்நாள் பரியந்தம் 'தொழிற்சங்கங்கள்' நிறுவுவதிலும் அவற்றை வளர்ப்பதிலும் அவருக்கு நிரம்பிய நாட்டம் இருந்தது. "இவரது சங்கங்கள் தேசியம் வாய்ந்தனவாக இருக்கும்."

யாழ்ப்பாணத்திலே பல சங்கங்களை நிறுவியதில் பெரும் பங்கு கொண்ட பெருமை துரையப்பா பிள்ளை அவர்களுக்கு உண்டு. அவை யாவற்றுள்ளும் 'உபாத்திமார் சங்கம்' நிறுவியதிலேயே அவருக்குத் தனிச்சிறப்பு ஏற்பட்டது எனலாம். "உபாத்திமாரை முகாமைக்காரர்களும் அரசாங்கமும் கவனியாதிருப்பதேனோ?......உபாத்திமார் எல்லோரும் ஒருங்குகூடிச் செய்யவேண்டிய விஷயங்கள் எவையென்று யோசிக்க ஓர் உபாத்திமார் சங்கம் இருத்தல் அவசியம்." (உதயதாரகை, 12-4-1906)

> உயர்ந்த சம்பளம் பெறுபவர்களுக்கே வயோதிப காலத்திலும் உபகாரச் சம்பளம் கொடுத்தற்கேற்ற ஒழுங்குகளுண்டு. அற்ப சம்பளம் பெறும் உபாத்திமார்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வித ஒழுங்கில்லை......உபாத்திமார் ஒருங்குகூடி அரசாட்சியாருக்கு முறையிடுவதற்கும் போதிய நியாயங் களிருக்கின்றன.

(உதயதாரகை, 14-6-1906)

தொழிற்சங்கம் என்று நேரடியாகக் கூறாவிடினும், "ஒருங்குகூடிச் செய்யவேண்டி"யதன் அத்தியாவசியத்தை மேற் காட்டிய கருத்துரைப்பகுதிகள் ஐயத்துக்கிடமின்றித் தெளி வாக்குகின்றன. இத்தகைய பிரசாரத்தின் பயனாகவும் முயற்சி களின் விளைவாகவும் அவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் உபாத்தி மார் சங்கம் ஒன்று உருவாகியது.

23 ஜூன் 1906 சனிக்கிழமை பகல் பதினொரு மணி யளவில் உபாத்திமார் சங்கக் கூட்டம் அடைக்கல மாதாவின் பாடசாலையில் நடைபெற்றது. அமெரிக்க, உவெஸ்லிய, சேட்சு, கத்தோலிக்க மிஷன் சங்கங்களின் கீழும் சுதேச முகாமைக்காரர்களின் கீழுமுள்ள ஆசிரியர் நிறைந்திருந்தனர். தலைவர்: தெ. அ. துரையப்பா பிள்ளை அவர்கள்; தெல்லிப்பழை ஆங்கில வித்தியா சாலைத் தலைமை ஆசிரியர். லிகிதர்: ஏ. தோமஸ்; கொழும்புத்துறை போதனா வித்தியாசாலை ஆசிரியர்.

(உதயதாரகை, 28-6-1906)

பிலிப் (Brother Philip) என்பவர் இம்முயற்சிகளில் முக்கிய பங்கு வகித்ததாகத் தெரிகிறது. இச்சங்கத்தின் பிறிதொரு கூட் டத்திலே, உயர்சம்பளம், உபகாரச் சம்பளம் கோரல் முதலி யனவற்றை உள்ளடக்கிய பல நிரணயங்கள் (தீர்மானங்கள்) கொண்டுவரப்பட்டன. இம்முயற்சிகளின் முக்கியத்துவத்தை இதற்கு மேலும் இவ்விடத்திலே விளக்குதல் வேண்டா. தென்னிலங்கையிலும் உள்ளூர் உயர்ந்தோர் குழாத்தைச் சேர்ந்த பலர் சிங்களப் பத்திரிகை எழுத்தாளராயும் ஆசிரியர் களாயும் இலக்கிய கர்த்தாக்களாயும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியர் சங்கங்களில் மட்டுமன்றி, யாழ்ப்பாணம் தமிழ்க் கழகம், யாழ்ப்பாணம் சனசங்கம் போன்ற பல நிறுவனங் களிலும் இடையீடற்ற அக்கறை கொண்டிருந்தார் துரையப்பா பிள்ளை. வாய்ச்சொல் வீரராக அன்றிச் செயல் வீரராயும் விளங்கினார். அதே வேளையில், தான் வாழ்ந்த பிரதேசத்து விவகாரங்களில் மட்டுமல்லாது அனைத்திலங்கைப் பிரச்சினைகளிலும் அவ்வப்போது அபிப்பிராயம் தெரிவித்தார். இந்திய அரசியல் விவகாரங்களையும் கூர்ந்து கவனித்துப் பல கட்டுரைகளை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாவற்றையும் நோக்கும்பொழுது, இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படிப்படியாக எழுச்சி பெற்று வந்த தேசியம் நாடு முழுவதற்கும் பொதுவான சில கூறுகளையும் அம்சங்களையும் கொண்டிருந்தது என்பதும், அவை பிரதேச அடிப்படையில் பல்வேறு வண்ணங்களிலும் வடிவங்களிலும் செயற்பட்டன என்பதும், வடபகுதியில் அவை நடந்தேறியவாற்றைத் தெரிந்து கொள்ளுவதற்குக் கல்விமானும் சீர்திருத்தவாதியும் தேசியவாதியுமான தெ. அ. துரையப்பா பிள்ளையின் வாழ்க்கையையும் பணியையும் எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாயும் கொள்ளுதல் சாலப் பொருந்தும் என்பதும் ஒருவாறு துணியப்படும்.

இந்தப் பின்னணியிலேயே பாவலரின் இலக்கிய ஆக்கங்களைச் சுருக்கமாக விவரித்து மதிப்பிடுவோம். இருபதாம் நூற்றாண்டின் விடியலில் 'இதோபதேச கீதரச மஞ்சரி' (1901) என்னும் பாத்தொகுப்பை துரையப்பா பிள்ளை வெளியிட்டார். அப்பொழுது அவர் ரெயிலர்—Taylor—என்னும் கிறித்தவப் பெயர் பூண்டிருந்தார். எனினும் அத்தொகுப்பில் இடம்பெற்ற நாற்பத்திரண்டு கீர்த்தனைகளும் கிறித்தவம் என்ற வரம்புக்குள் நின்று பாடப்பெற்றவை அல்ல. தனிப்பட்ட சமய உணர்ச்சி எதுவும் இன்றிச் சகல மக்களும் அறிந்து உணரவேண்டிய ஒழுகலாறுகளை எடுத்துரைப்பனவாகவே அவை அமைந்தன. உண்மையில் மக்களை நன்னெறிப்படுத்தும் இசைப்பாடல்களாகவே அவற்றைக் கொள்ள வேண்டும். கிறித்தவத்தின் செல்வாக்கு அவற்றில் இல்லாமல் இல்லை. "கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தல்" என்னும் தலைப்பைக் கொண்ட சங்கராபரண இராகக் கீர்த்தனை இதற்குச் சான்றாக உள்ளது. ஆனால் அதிலும் சமயக் கோட்பாடு இடம் பெறவில்லை. பாதிரிமார்களும் கிறித்தவக் கவிஞர்களும், அக்காலத்தில் இந்துக்களிடையே நிலவிய ஆசாரக் கேடுகள் பலவற்றைக்—பலியிடுதல், தேவதாசியர் நடனம், பாலிய விவாகம், பெண்கள் அவலநிலை முதலியவற்றை—கண்டித்துத் 'தூய' ஒழுக்கத்தை வற்புறுத்தினர். தமது பிரமாண நூல்களுடன் தமிழில் உள்ள பழைய அறநூல்களையும் அவர்கள் ஆதாரங்காட்டி எழுதினர். கிறித்தவத்தின் மேன்மையை ஒழுக்கவியல் துறையிலும் நிலைநாட்ட அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் வெளிப்பாடே இது. அதனாலேயே வேதநாயக சாஸ்திரியார், வேதநாயகம் பிள்ளை முதலிய கிறித்தவக் கவிஞரெல்லாம் நன்னெறி பற்றி ஓயாமற் பாடினர்; எழுதினர். இலங்கையிலும் துரையப்பா பிள்ளையின் தமிழ் ஆசிரியர்களில் ஒருவராகவும் சிறந்த நூலாசிரியராயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திராதிபராயும் விளங்கிய ஆர்ணல் சதாசிவம் பிள்ளை (1820—1896), 'நன்னெறிமாலை,' 'நன்னெறிக் கொத்து (1859) ஆகிய செய்யுள் நூல்களையும் 'நன்னெறிக் கதாசங்கிரகம்' (1869) என்னும் கதைக் கோவையையும் எழுதினார். இத்தகைய ஒரு பின்னணியிலேயே 'கீதரசமஞ்சரி'யை நாம் அணுகுதல் வேண்டும். அதேவேளையில் அது கிறித்தவக் கோட்பாடுகளை வலியுறுத்த முற்படவில்லை என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. திரு. சி. தில்லைநாதன் குறிப்பிட்டுள்ளது போல, "கிறித்தவ சமயக் கோட்டினைத் தாண்டிக் கொண்டு, தம்மைச் சுற்றி வாழ்ந்த மக்கள் சமூகத்துக்கு அன்று தேவைப்பட்ட பணிகளை ஆற்ற அவர் வருவதற்கான ஒரு முன்னறிவித்தலாக அந்நூல் அமைந்தது." நித்தியமான நீதிகளையும் நன்னெறிகளையும் பிள்ளையவர்கள் பழைய நீதி நூல்களின் வழி நின்று பாடியதில் புதுமை என்ன உண்டு என்று கேட்கத் தோன்றும். ஆனால் பலதரப்பட்ட நல்லுபாயங்களைக் காலத்துக்கேற்றவாறு அவர் பாடினார். உதாரணமாக 'வழக்காடலினால் வருந்தீமைகள்' என்பது ஒரு கீர்த்தனையின் தலைப்பு. பல்லவி, அநுபல்லவியுடன் எட்டுச் சரணங்கள் கொண்ட இக்கீர்த்தனையில் சமூகக்கேடாயிருக்கும் ஒரு பொருளை அவர் விவரித்து, "கோட்டுக்குப் போகாதொழியென நற்புத்தி" கூறுவதைக் காணலாம். அதுபோலவே 'கைக்கூலி வாங்குதல்' பற்றி ஒரு கீர்த்தனை பாடியிருக்கிறார். இவ்வாறே 'சீதன வழக்கத்தின் தீமைகள்,' 'மதுபானத்தின் தீமைகள்,' 'பணவாஞ்சை,' 'வீண் செலவு,' 'ஜீவகாருண்யம்' முதலிய பல சமூக முக்கியத்துவமுடைய பொருள்களைப்பற்றிப் பாடியிருக்கிறார். நீதிபோதிக்கும் தோரணையிலே கீர்த்தனைகள் அமைந்திருப்பினும் அவற்றின் நோக்கம் தனியே 'தூய' போதனை மாத்திரமன்று; சீர்திருத்தமே குறிக்கோளாகும்.

ஆயினும் துரையப்பா பிள்ளையை இலக்கியகர்த்தாவாகக் கொண்டு நாம் இன்றும் ஆராய்வதற்குக் காரணம், அவர் உள்ளடக்கத்திலே கொண்டிருந்த அளவு கவனம் உருவத்திலும் கொண்டிருந்தமையாகும். தான் கூறும் கருத்துக்கள் மக்களைச் சென்றடைதல் வேண்டும், அவர்கள் அவற்றை அடிக்கடி சிந்திக்க வேண்டும், பயிலவேண்டும் என்பது பற்றி அவர் பிரக்ஞை பூர்வமாக முயற்சி எடுத்திருக்கிறார்; தனது காலத்துக்கு ஏற்ற மக்கள் தொடர்பியல் குறித்துப் புத்திபூர்வமாகச் செயற்பட்டிருக்கிறார். யாப்பிலக்கணம் விதித்துள்ள பாவகைகளிற் பாடாமல் மக்கள் வாயில் நடமாடும் பிற்காலத்து இசைப்பா வடிவத்தை அவர் வேண்டுமென்றே தெரிந்தெடுத்ததிலிருந்து இது நிரூபணமாகிறது. பாவலருக்குப் பத்து வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவரான சுப்பிரமணிய பாரதி இதுவிடயத்தில் இன்னும் சிறப்பாகச் செயற்பட்டார். (அதனாலேயே 'சிந்துக்குத் தந்தை' எனப் போற்றப்படலானார்.) 'கீதரச மஞ்சரி'க்குத் துரையப்பா பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய ஆய்வறிவுமயமான நீண்ட முன்னுரையிலே ஓரிடத்தில் மேல்வருமாறு காணப்படுகிறது:

> நமது மூதாதையர்கள் மிகவும் விரும்பிப் பாடிய பண்டைய மெட்டுகள் மீது யாழ்ப்பாணத்தில் ஒருவகை வெறுப்பு வளர்ந்து வருகிறது. இந்திய நாடகக் கம்பனிகளின் வருகையுடன் இந்த நாட்டின் இசைச்சூழலை நிறைத்துப் பரந்து பெருகும் பார்சி மெட்டுகளையும் இந்துஸ்தான் மெட்டுகளையுமே மக்கள் விரும்புகிறார்கள். இந்த மெட்டுகள் யாழ்ப்பாணத்தாரின் நல்லொழுக்கத்துக்கு ஊறு விளைப்பன ஆகும்....... இந்த அன்னிய மெட்டுகளின் வசீகர சக்தியையும், ஆற்றலையும் நான் மனமுவந்து பாராட்டுகிறேன். இவை மனத்தின் மென்மையான உணர்வுகளை நுண்மையாகத் தொடுகின்றன என்பதும் உண்மையே. ஆனால் நம் செவிக்குப் பழக்கமான பழைய மெட்டுகளைக் கைவிட்டு இவற்றை மாத்திரமே நாம் ஏற்றுக் கொள்ளல்வேண்டும் என யாரும் சொன்னால், அதனை ஒப்புக்கொள்ள மாட்டேன். எளிமையான பரிவும், இயற்கையான எழிலும் படைத்த எங்கள் பழைய மெட்டுகளிற் சில எந்தப் புதிய மெட்டினாலும் வெல்லப்பட இயலாத அளவுக்கு மேம்பட்டு நிற்கின்றன. இது என் உறுதியான கருத்து.

இலக்கியத் திறனாய்வாளன் எவனும் பெருமைப்படத்தக்கவாறு அமைந்துள்ள இம்மேற்கோளில் பாவலரது நோக்கின் உறுதியையும் தெளிவையும் நுண்மையையும் ஐயத்துக்கிடமின்றித் தரிசிக்கலாம். நாடகம், இசை இரண்டிலும் அவருக்கிருந்த பயிற்சியும் கண்கூடு. இவ்விடத்திலேதான் பிள்ளையவர்களின் நவீனத்துவம் துலங்குகிறது. பாரதியுடன் ஒப்பிட்டு ஆராயக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகிறது. நவீனத்துவத்தைக் கையாள முற்பட்ட முயற்சி இருபதாம் நூற்றாண்டிலே இலக்கிய கர்த்தாக்களால் முழு உணர்வுடன் கைக்கொள்ளப் பட்டதாயினும், வரலாற்றடிப்படையில் பார்க்குமிடத்து சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து அது படிப்படியாக உருவாகி வந்துள்ளமை புலனாகும். அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதியார், வேதநாயக சாஸ்திரியார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமலிங்க சுவாமிகள், அண்ணாமலை ரெட்டியார் முதலியோர் இனிய, எளிய நடையில் இசைப்பா வடிவங்களை—கும்மி, சிந்து, கண்ணி, கீர்த்தனை ஆகியவற்றை—இயற்றினர். இவர்கள் தமக்கு முன்னிருந்த சித்தர்கள்—நாடோடிக்கவிஞர் கள்—முதலியோரிடமிருந்து முன்னுதாரணங்களைப் பெற்றுக் கொண்டனர். ஆயினும்—வேதநாயக சாஸ்திரி, இராமலிங்கர் முதலிய இரண்டொருவரிடத்துச் சமூகப்பிரக்ஞை ஆங்காங்கு மறைமுகமாகத் தலைகாட்டியபோதும்—இவர்கள் அனை வருமே சமயப்பொருளையே எளிமையாகப் பாட முனைந்த வர்கள். சமுதாய நோக்கு இவர்களுக்கு இருந்தது எனக் கூற வியலாது. பாரதியே இவர்கள் கையாண்ட இசைப்பா வடிவங் களைச் சீரிய—சமுதாயம், தத்துவார்த்தம் சார்ந்த—பொருள் களைப் பாடுவதற்குப் பயன்படுத்திப் புதுநெறி காட்டினான். பாவலர் துரையப்பா பிள்ளையும் அந்தப் பாதையில் அடியெடுத்து வைத்தவரே. இலங்கை இலக்கிய வரலாற்றைப் பொறுத்த வரையில் அவர்தான் சமூக சிந்தனையை முதன் முதலாகக் கவிதைப் பொருளாக்கியவர். அந்த வகையில் அவரும் புதுநெறி கண்டவரே. சமயத்திலிருந்து சமூகத்திற்கு இலக்கியகர்த்தாவின் கருத்தூன்றிய பார்வை புடைபெயர்தலை அவரது ஆக்கங்கள் காட்டுகின்றன. அதனால் அவற்றில் இடை மாறுபாட்டுக்காலத்தின் பண்புகள் பொருந்தியுள்ளன.

'கீதரசமஞ்சரி' வெளிவந்த காலத்து அதற்கு முகவாசகம் எழுதிய கு. கதிரைவேற்பிள்ளை (1829–1904) இதனைக் குறிப் பாலுணர்த்தியிருக்கிறார். குமாரசுவாமி முதலியாரின் மகனும் சட்டசபை உறுப்பினராய்த் திகழ்ந்த கௌரவ பாலசிங்கத்தின் தகப்பனும் மதுரைத் தமிழ்ச் சங்கம் முற்றுவித்து வெளியிட்ட பேரகராதியைத் தயாரித்தவரும் 'தர்க்க பரிபாடை' என்னும் நூலைப் பரிசோதித்துப் பதிப்பித்தவரும் 'இலங்கைத் தேசாபிமானி' என்னும் வாரப்பத்திரிகையை நடத்தியவரும் நீதிபதியாய் இருந்தவரும் தமிழறிஞருமான கதிரைவேற் பிள்ளை தெளிந்த ஞானத்துடன் கூறிய வார்த்தைகள் இவை:

> நமது தேசத்துப் புலவர் சன்மார்க்க விஷயங்களைச் சார்ந்த கீர்த்தனங்கள் இசைப்பாருளராயினும் ஓரோர் மார்க்கத்தோடு சம்பந்தப்பட்டனவாய் அல்லது நரஸ் துதியோடு கலந்தனவாயன்றிப் பெரும்பாலும் இசைத்தாரல்லர். ஆனால் இம்மஞ்சரியில் இசைக்கப் பட்ட கீதங்களோ சர்வசமயிகளும் ஒத்த உளத்தின ராய்ப் பாடக்கூடிய கீர்த்தனைகள். தாம் பெற்ற அங்கிலோ தமிழ்க்கல்வியறிவின் பயனாய்த்தேச நன்மைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்ற சிறந்த தேர்ச்சிக்குரிய கருத்துக்களைக் கீர்த்தனங்கள் மூலமாய் இந்நூலைச் செய்தவரே முதன்முதல் வெளிப்படுத்துகிறாரென்று சொல்லலாம். இவரது முன் மாதிரி யாழ்ப்பாணத்திலுள்ள மற்ற வாலிபரையும் இவ்வகை நன்முயற்சிகளிற் கையிடச் செய்யுந்தூண்டு கோலாயிருக்குமென எண்ணற்பாற்று. இதனகத்துக் கீதங்கள் சமானிய பதங்களை அருங்கருத்துத் தோன்ற வெடுத்துத் தொடுத்து, எதுகைமோனை நெறிதவறாது சந்தவின்பமுறச் செய்யப் பட்டிருக்கின்றன.......நமது தேசத்தவர் விநோதார்த்தமாய் இராக சாதனை பண்ணும் வேளைகளில் சன்மார்க்கத்துக் கெட்டுணை யேனுந் தகாத சிற்றின்ப கீதங்களுக்குப் பதிலாய் இந் நூலின் கீதங்களை அப்பியாசிப்பரேல் இன்பமும் பிரயோசனமுமடைவதோடு சன்மார்க்க விருத்திக்கு முதவிபுரிபவராவர்.......இப்புத்தகம் இளைஞர், முதியோர், கலாபிமானிகள், பரோபகாரிகள், சன்மார்க்க நேசர், சங்கீத விநோதர் முதலிய யாவராலும் அங்கீகரிக்கப்பட......

மேலேயிருக்கும் பகுதி கூர்ந்து கவனிக்கத் தக்கது. சமூகவியல் அடிப்படையில் அரிய பல கருத்துக்களை அநாயாசமாய் எழுதியிருக்கிறார் கதிரைவேற்பிள்ளை. "சாமானிய பதங்களை அருங்கருத்துத் தோன்ற எடுத்துத் தொடுத்து" ஆசிரியர் பாடல்களை ஆக்கியிருப்பதாக அவர் கூறியிருப்பது மிக முக்கியமான செய்தியைத் தொட்டுக் காட்டுகிறது. கவிதையாக்கத்தின் தனிச்சிறப்பே அதுதானே. பாரதி இதனை மிகத்திறமையாகவும் சரிநுட்பமாகவும் செய்து முடித்தான். அதனால் மகாகவி எனும் தகுதியையும் பெற்றுக்கொண்டான்.

'கீதரசமஞ்சரி' வெளிவந்தபொழுது தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் தமிழறிஞர்கள் அதனைப் பலவாறு பாராட்டிப் போற்றினர். சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ் ஆசானாயிருந்த வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி (1870—1903),

> விரையப்பா டுஞ்சீர் மிகப்படைத்த—தேலர்
> துரையப்பா பிள்ளையெனுந் தோன்றல்

என்று தொடங்கும் பாடலை அனுப்பியிருந்தார். (சாஸ்திரியாரின் மதிப்பிற்கும் பேரன்புக்குமுரியவராயிருந்த சி. வை. தாமோதரம் பிள்ளை மறைந்த ஆண்டிலேயே இந்நூல் வெளிவந்தது. தாமோதரம் பிள்ளையின் மறைவு குறித்துச் சாஸ்திரியார் பாடிய பாக்கள் உணர்ச்சிச் செறிவுடையன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கீதரசமஞ்சரியை' பாராட்டிப் பாடிய உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் (1830—1910),

> வடிதமிழ்க் கலையுணர்வு வாய்ந்தவன் கங்கை குலம்
> வந்த துரை யப்பவேளே

என்று தனது செய்யுளை முடித்தார்.

தனது காலத்துச் சமூகத் தேவையை உணர்ந்து பல வழிகளில் ஈடிணையற்றதும் முன்னோடியானதுமான கவிதா மஞ்சரியை வெளியிட்ட பிள்ளையவர்கள் அதனைத் தமது ஆசிரியர் ஆர்ணல் சதாசிவம் பிள்ளைக்குச் சமர்ப்பணம் செய்தார். சதாசிவம் பிள்ளை ஆசிரியராயிருந்த 'உதயதாரகை' பத்திரிகைக்கு அவரது மாணவர் துரையப்பா பிள்ளை ஆசிரியராய்ச் சிலகாலம் அமர்ந்திருந்ததும் குறிப்பிடத்தக்கதே. எனினும் குருவையும் அக்காலத்துப் புலவர் பலரையும் விஞ்சும் வகையில் சமூகசிந்தனையைத் தமிழ்ச் செய்யுளிலே முதலிற் புகுத்திய துரையப்பா பிள்ளை, 'கீதரசமஞ்சரி' மூலம் இருபதாம் நூற்றாண்டின் உதயத்தை ஏற்றபடி வரவேற்றார் எனக் கூறுவது மிகையாகாது.

இதனைத் தொடர்ந்து 1905ஆம் ஆண்டிலே 'சகலகுண சம்பன்னன்' என்ற நாடகத்தை எழுதினார் பாவலர். அப்பொழுதும் அவர் கிறித்தவராகவே இருந்தார். அவரிடம் முற்படக் கற்றவர்களில் ஒருவரும் பின்னர் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் படித்துத் பட்டம் பெற்றவரும் 1920களில் வட இலங்கையில் மதுவிலக்குப் பிரசார இயக்கத்தில் முன்னின்றவரும் சிறந்த கல்விமானாக விளங்கியவருமான வி. முத்துக்குமாரு எம். ஏ., பாவலரைப்பற்றிய கட்டுரை ஒன்றிலே (1954) பின்வருமாறு எழுதினார்:

> பள்ளிக்கூடப் பணியிலும், தனது பராபரிப்பிலிருந்த குழந்தைகளின் நலனிலும் மிகுந்த கவனஞ் செலுத்திய தோடமையாது, சமூகத்துக்குத் தான் ஆற்ற வேண்டிய கடமையையும் அவர் சிரத்தையுடன் நிறைவேற்றினார். சமூக சீர்திருத்தத்துக்காக அவர் தீட்டிய திட்டம் பரந்துபட்டதாயிருந்தது: வளர்ந்தோர் கல்வி, தார்மீக புனருத்தாரணம், இசை, நாடக மறுமலர்ச்சி, விஞ்ஞானப் பிரசாரம் என்பவற்றை முக்கியமாகக் கொண்டார். இசையில் அவருக்கிருந்த திறமையும், எழுத்து வன்மையும் பேச்சு சாதுரியமுமே அவரின் பிரபலியத்துக்குப் பிரதான ஏதுக்களா யிருந்தன. மாணவர்களும், தோட்டங்களில் வேலை செய்வோரும் அவர் இயற்றிய பாடல்களை உற்சாகத்துடன் பாடினர். நாடகமும் எழுதிப் பயிற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை மக்களிடத்தே பரப்புவதற்குக் கீர்த்தனைகளை இயற்றியது போலவே இந்நாடகத்தையும் இயற்றினார். பெருவணிகன் ஒருவனது மகன் சகலகுணசம்பன்னன் வர்த்தகம் செய்ய மூன்று முறை தகப்பனால் கப்பலிலே அனுப்பப் படுகிறான். இருமுறை பிறர்நலம் காப்பதற்காகத் தனது கப்பல்களையும் பொருளையும் இழந்துவிடுகிறான். மூன்றாம் முறை விஜயபுரி மன்னன் மகளை மணந்து அவர்களுக்கு வர விருந்த கேடுகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றித் தானும் உயர்நிலை எய்துகிறான். "நற்செயல் ஒருபோதும் நானிலத் தழியாது" என்ற நம்பிக்கை மொழியுடன் நாடகம் முடிவடை கிறது. கதை அடிப்படையில் 'இராஜா இராணி'க் கதைதான். எனினும் வணிகரது முக்கியத்துவமும் பேசப்படுகிறது. இடையே 'பொலிஸ்' என்ற பிரயோகமும் வருகிறது. நாடகம் என்ற வகையில் அதனை அதிகம் சிலாகித்துக் கூறவியலாது. உரைநடையில் பெரும்பகுதி அமைந்திருப்பதும் இடையிடையே கீர்த்தனைகள் வருவதும் ஆசிரியர் பாத்திரத்தின் வாயிலாக நற்போதனைகள் கூறப்படுவதுமே குறிப்பிடத்தக்க அம்சங்கள். ஆங்கில நாடக நெறியைப் பாவலர் அறிந்திருந்தமையால் அதனையும் மரபுவழித் தமிழ் நாடக நெறியையும் இணைக்கும் பரிட்சார்த்த முயற்சி ஒன்றையும் செய்து பார்த்தார் என்று கருத இடமுண்டு. மக்களுக்குப் பரிச்சயமான பதங்களையும் இசை வடிவங்களையும் பயன்படுத்திவந்த பாவலர் இந்நாடகத் திலே கப்பற் பாட்டுகளைப் பயன்படுத்தியிருக்கிறார். பிற தேசங்களைப் பற்றிய சமாசாரங்கள் நிரம்பவும் பேசப்படு கின்றன.

நாடகத்திலே வர்த்தகத்திற்கு ஆசிரியர் அளித்திருக்கும் முக்கியத்துவம் கவனிக்கத்தக்கது. இந்நாடகத்தில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய கட்டுரைகளிலும் கவிதை களிலும் கைத்தொழில், வர்த்தகம் இவற்றின் இன்றியமை யாமையைப் பலவாறு வலியுறுத்தியிருக்கிறார். இந்திய தேசியத்தின் முனைப்பான குரலாகக் கைத்தொழில்-வர்த்தகம் ஆகியவற்றின் வளர்ச்சி அமைந்தமையும் இங்கு மனங்கொளத் தக்கதே. தேசிய முதலாளித்துவத்தின் எழுச்சிக் குரலே அது என்பது வரலாறறிந்த உண்மையாகும். பாலகங்காதர திலகர் முதல் சுரேந்திரநாத பனர்ஜிவரை இக்குரலை அழுத்தமாய் ஒலித்தனர். பிள்ளையவர்களும், தாம் நிறுவி நடத்திய உயர் நிலைப் பள்ளியில் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளித்தார். உதாரணமாக, தொழிற்கல்வி பற்றிய கோட்பாடு வித்தியா பகுதியினரின் கவனத்திற்கு வருமுன்னரே மாணவருக்கு உதவு முகமாக அச்சுத்தொழிலையும் புத்தகம் 'பைண்ட்' செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலையும் பயில்வதற்கு வசதிகள் செய்து கொடுத்தார். விவசாயத்திலும் "நூதன முறைகளைப் பற்றிப் பிரசாரணங்கள் செய்வதும் பொருட்காட்சிகள் வைப்பதும்" அவசியம் எனவும் எழுதினார். பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேறும் மாணவர் வர்த்தகம், விவசாயம், சிறுகைத்தொழில் என்பவற்றில் இறங்க வேண்டும் என்று புத்திபுகட்டினார். சுயதேவைப் பூர்த்தி என்ற கோட்பாடு அவருள்ளத்தே அரும்பத் துவங்கியிருந்தது.

> இந்தியாவைப் போல் இலங்கையிலும் பரோபகாரிகளெழும்பிச் சங்கங்களாய்க்கூடி முதல் சேர்த்துக் கைத்தொழில் கற்கும்படி தமது வாலிபரை இங்கிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான் முதலிய தேசங்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

துரையப்பா பிள்ளையின் இக்கூற்றினை எதிரொலிப்பதுபோல பாரதியாரும் பல கட்டுரைகளில் ஆவேசத்துடன் எழுதினார். குறிப்பாக, ரவீந்திரநாத தாகூர், ஜி. சுப்பிரமணிய அய்யர், பாரதி முதலியோருக்கு அன்று ஜப்பான் பின்பற்றத்தக்க நாடாகத் தோன்றியது.

துரையப்பா பிள்ளையைப் போலவே வேறுசிலரும் சிந்தித்தனர். அவர்களுள் ஒருவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். நாவலாசிரியர் த. நாகமுத்து (இடைக்காடர்) அவர்களின் இளவலும் முதன்முதலாக இலங்கையில் எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டங்கள் பெற்றவரும் 'கணித மேதை' எனக் கொண்டாடப் பெற்றவரும் சிறந்த கல்விமானாயிருந்தவருமான த. சரவணமுத்து (1889—1923) தமது இந்திய அனுபவங்களின் அடிப்படையில் இவ்வாறு சிந்தித்தார். கல்கத்தாப் பல்கலைக்கழகத்திலே பயின்றபோது டாக்டர் ஜே. சி. போஸ், டாக்டர் பி. சி. ராய் ஆகியோரின் அபிமான மாணவராயிருந்த அவர் புகழ்பெற்ற வங்காள அறிவியல் அறிஞர்கள் தமது தாய் மொழியிலேயே ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதுவது கண்டு பெருவியப்புற்றார். தமிழிற்கு அத்தகைய நிலை எப்பொழுது வருமோ என்று ஏங்கினார். வங்காளிகளின் கல்விச்சாதனைகள் மாத்திரமன்றி, கைத்தொழில், வர்த்தக முயற்சிகளும் அவரைக் கவர்ந்தன. 1912ஆம் வருடம் கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பார்வையாளராய்க் கலந்து கொண்டார். அவ்வேளை நடைபெற்ற சுதேசி மேளா (Swadeshi Mela) வைப் பார்த்தபோதும், டாக்டர் ராயின் இரசாயன மருந்தாக்கத் தொழிற்சாலைக்கு விஜயஞ் செய்தபோதும், இந்தியப் பொருளாதார வளர்ச்சியைப் பின்பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலும் முன்னேற்றத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என எண்ணினார். இலங்கை திரும்பியதும் சில நண்பர்களுடன் கலந்தாலோசித்து, நமது இளைஞர்களை ஜப்பான், அமெரிக்கா, ஜேர்மனி முதலிய நாடுகளுக்கு அனுப்பு வதற்குத் திட்டம் தீட்டினார். தான் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைத் தேசியப் பெருங்கல்லூரி யாக வளர்த்தெடுக்கவேண்டும் என்று கனவு கண்டார். பூனாவிலே கோகலேயினால் பெயர்பெற்ற பெர்குசன் கல்லூரி யைப்போல அது மிளிர வேண்டும் என்று ஆசைப்பட்டார். முப்பத்துநாலாம் வயதிலே அகால மரணமடைந்த அவர் கண்ட கனவுகள் கனவுகளாகவே இருந்தன.

இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது இந்நூற்றாண்டின் முதலிரு தஸாப்தங்களிலே இலங்கையில் கல்விகற்ற மத்திய வர்க்கத்துச் சிந்தனையாளர் சிலரிடையே நிலவிய 'அபிவிருத்தி' அபிலாஷைகளுக்கு இலக்கிய வடிவம் கொடுத்ததில் துரையப்பா பிள்ளை மேம்பட்டு விளங்கினார் என்பது உறுதிப்படும். பழைய கதைமாந்தரையும் கதைகூறும் முறையையும் வைத்துக் கொண்டு வேதநாயகம் பிள்ளை 'பிரதாப முதலியார் சரித் திரத்'திலே சிற்சில நவீன சிந்தனைகளையும் போக்குகளையும் பிரதிபலிக்க முயன்றதுபோல, அரசர், வணிகர் முதலிய பழங் காலத்துப் பாத்திரங்களையும் சூழ்நிலைகளையும் எடுத்துக் கொண்டு சில புதிய எண்ணக் கோலங்களையும் அபிலாஷை களையும் தமது நாடகத்திலே துரையப்பா பிள்ளை சித்திரிக்க முயன்றார்.

நாடகம் வெகுஜன சாதனங்களில் ஒன்று. அதற்குத் தனி யான ஒரு கவர்ச்சி எப்பொழுதும் உண்டு. பம்பாயில் வசித்த பொழுதும், பின்னர் யாழ்ப்பாணத்திலும் இந்தியப் பார்சி மரபு நாடகங்களை அவர் நுனித்து நோக்கியிருக்கிறார். அவற்றிலிருந்து சில கூறுகளை அவர் தமதாக்கிக் கொண்டார். 1890ஆம் ஆண்டளவிலிருந்து பார்சி மரபு நாடகங்கள் இந்திய கம்பெனிகளினால் இலங்கையில் நடத்தப்பெற்று வந்தன எனத் தெரிகிறது. தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் பாடசாலைக்குத் தலைமையாசிரியராகப் பிள்ளையவர்கள் பொறுப்பேற்ற ஆண்டில் (1910) சுவாமி சங்கரதாஸ் நாடகக் குழுவினர் யாழ்ப் பாணத்தில் தங்கியிருந்து நாடகங்கள் மேடையேற்றினர். இத்தகைய தாக்கங்களும் ஆங்கில நாடகங்களைப்பற்றிய அறிவும் ஒன்றுசேர்ந்து 'சகலகுண சம்பன்னன்' நாடகமாக உருப்பெற்றது. இன்னுமொன்று. மேனாட்டுக் கிறித்தவ மரபிலே morality plays எனப்படும் பண்பியல் நாடகங்கள் பிரசித்திபெற்றவை. குணங்களை மாந்தராக உருவகிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தி அந்நாடகங்களின் உயிர்நிலை. நன்னெறியைப் போதிக்க முற்பட்ட தமிழ் எழுத்தாளர்கள் நன்னெறிச் செய்யுள்களையும் நன்னெறி நாவல்களையும் மாத்திரமன்றி நன்னெறி நாடகங்களையும் எழுதிப்பார்த்தனர். அத்தகைய முயற்சிக்கும் இந் நாடகம் சான்றாயுள்ளது. பல ஊற்றுக்களிலிருந்து வளம் பெற்று உருப்பெற்ற இந்நாடகத்தில் ஆசிரியர் அறிந்தோ அறியாமலோ யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கினைச் சில இடங்களிற் பயன்படுத்தியிருக்கிறார். அது போலவே கிறித்தவத் தமிழ்ப் பிரயோகங்கள் சிலவற்றையும் கையாண்டிருக்கிறார்.

1910ஆம் ஆண்டு மிஷன் பாடசாலைத் தலைமையாசிரியர் பதவியைத் துறந்து விசுவாசத்துடன் தம்முடன் வெளியேறிய சில ஆசிரியர்களையும் மாணவர்களையும் கொண்டு தமது வீட்டிலேயே ஒரு பள்ளிக்கூடத்தைத் துரையப்பா பிள்ளை தாபித்தபொழுது அவரது வாழ்வில் மற்றொரு அத்தியாயம் ஆரம்பித்தது. சாமுவேல் ஹற்சிங் ரெயிலர் (S. H. Taylor) என்று சில வருடங்களாக வழங்கிவந்த கிறித்தவப் பெயரைக் கைவிட்டு, தெல்லிப்பழை அருளம்பலம் துரையப்பா பிள்ளை என்று தமது பெயரை எழுதத் தொடங்கினார். மேலே நான் குறிப்பிட்டதுபோல, அடுத்த சில ஆண்டுகள் கல்விக்கூடத்தைப் பல எதிர்ப்புகளுக்கிடையே நிறுவி நடத்துவதிலேயே அவரது ஆற்றலின் பெரும்பகுதி செலவழிந்தது. இக்காலப்பகுதியில் தொழிற்சங்கங்கள் அமைப்பதிலும் ஆசிரியர்களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்புவதிலும் தமிழ் மறுமலர்ச்சிக்கான முயற்சிகளிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். பத்திரிகைகளில் சமூக சீர்திருத்தக் கட்டுரைகள் பலவற்றை எழுதிக் கொண்டிருந்தார். முதலாம் உலகப்போர் முடியும் தறுவாயிலேயே மீண்டும் இலக்கிய ஆக்கத்திற்கு அவர் முதன்மை அளிப்பதைக் காண்கிறோம். 1916ஆம் வருடம் அவர் நிறுவிய மகாஜனா பள்ளிக்கூடத்திற் பயிலும் மாணவர்கள் பொதுத் தேர்வுகளுக்குத் தோற்றும் அனுமதி அரசாங்கத்தால் வழங்கப் பட்டது. அவ்வுரிமையைப் பெறுவதற்கு அவர் பட்டபாடு கொஞ்சமல்ல. இறுதியாக 1919ஆம் வருடத்திலேயே அரசின் மானியம் பெறும் பள்ளிக்கூடமாக அது அங்கீகரிக்கப்பட்டது. எனவே 1916ஆம் வருடத்தை அடுத்த காலப்பகுதியிலிருந்தே மீண்டும் இலக்கியத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினார். அவ்வேளை அவருக்கு வயதும் நாற்பத்தைந்துக்கு மேலாகியிருந்தது. சற்று வேறுபட்ட ஆக்கங்கள் உருவாகின.

'எங்கள் தேசநிலை,' 'சுவதேசக் கும்மி,' 'சிவமணிமாலை' ஆகிய மூன்று நூல்களும் சில தனியன்களும் பிற்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டவை. இவை மூன்றுக்குமிடையே சிற்சில வேறு பாடுகள் இருப்பினும், மொத்தத்தில் இவை பழமை நோக்குடையனவாய், மரபுபேணுவனவாய் அமைந்திருத்தல் குறிப்பிட வேண்டியது. நுணுகி ஆராய்ந்தால் பாவலரது படைப்புக்களிற் காணப்படும் பின்னடைவு இக்காலப்பகுதியில் துலக்கமாயுள்ளது. இதற்குக் காரணங்கள் பல. அவை அனைத்தையும் விரிவாக இவ்விடத்தில் விவரித்தல் இயலாது. ஒரு வாக்கியத்தில் சுருக்கமாகக் கூறுவதாயின், உலகிலும் இந்திய உபகண்டத்திலும் இலங்கையிலும் பாவலரது வாழ்க்கையிலும் ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் வாழ்வின் முற்பகுதியில் ஓரளவு சீர்திருத்தவாதியாய் இருந்தவரைப் பிற்பகுதியில் 'நிதானக் கட்சி' யாளராயும் பழமை போற்றும் பண்பினராயும் ஆக்கின எனலாம். இம்மாற்றத்தின் உடனிகழ்ச்சியாக அவர் மேலும் மேலும் சைவப்பற்றாளராக இயங்கினார். அதற்குத் திருட்டாந்தமாக 1925இல் அவர் சிவதிட்சை பெற்றுக் கொண்டமையையும் 1926இல் சரஸ்வதி தமிழ் வித்தியாசாலை என்றொரு ஆரம்பநிலைப் பள்ளியை நிறுவியதையும் சுட்டலாம். 1927இல் 'சிவமணிமாலை' என்ற பிரபந்தத்தை இயற்றினார். கிறித்தவ சீர்திருத்தவாதியாக இலக்கிய உலகிற்பிரவேசித்தவர், சைவ பண்பாட்டுக் காவலராக இறுதியில் அமைதிபெறுகிறார். இம்மாற்றம் ஒவ்வொரு துறையிலும் பாதிப்பை உண்டாக்கியது என்பதை வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை. அன்னிய வெறுப்பு சீர்திருத்த வேகத்தை மழுங்கடித்தது என்பதில் ஐயமில்லை. பலரது வாழ்க்கையில் இதனைக் காண்கிறோம்.

இந்தியாவிலே காந்தியடிகளின் வருகையுடன், காங்கிரசும் முதலாளித்துவ சிந்தனையும் பிற்போக்கான பாதையில் செல்லத் துவங்கியதும் இங்கு நினைவுகூரத்தக்கதே. குறிப்பாக ருஷியப் புரட்சிக்குப் பின் முற்போக்கு அணி வேகம் பெறத் தொடங்கிய அளவிற்கு முதலாளித்துவம் பிற்போக்கு முறைகளை அனுட்டிக்க ஆரம்பித்தது. பாரதியிலேயே இதன் பாதிப்பை ஓரளவு காணக்கூடியதாய் உள்ளது. அந்நிலையில் ஏலவே கோகலேயின் மிதவாத சீர்திருத்தப் போக்கினால் ஈர்க்கப்பட்டிருந்த துரையப்பா பிள்ளை, சோஷலிஸம் முதலிய முற்போக்குத் தத்துவங்களைக் கண்டு அஞ்சியதில் வியப்பெதுவும் இல்லை. 'எங்கள் தேச நிலை' என்னும் பாடலுக்கு உபதலைப்பு 'சாதி—சமயம்—சைவநீதி' என்பது. அதிலே சில பாடல்கள் வருமாறு:

பழங்கால சீவியங் கைவிட்டார்—ஒரு
பரிதாப சீவியத் துட்பட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்காமற் றுன்பத்துக் கடியிட்டார்—இன்பம்
மிகவிழந் தேமன வமைதி கெட்டார்

போல்ஷெவி சிம்எனு மைப்பாதி—கொடும்
பொல்லாத சனசங்க வியாதி
பல்வே றிடங்களிற் செய்யநீதி—கொடும்
பாதகங் களைவிளைக் கும் போதி

'போல்ஷெவிசம்,' 'சனசங்கம்' என்பனவற்றைக் கவிஞர் வெறுப்பது வெளிப்படை. லெனின் தலைமையில் இயங்கிப் புரட்சியையும் நடத்தி வெற்றியும் கண்ட போல்ஷெவிக்குகள் பற்றியும் பொதுவுடைமைக் கொள்கை பற்றியும் ஏகாதிபத்திய செய்தித்தாபனங்களும் அமெரிக்க, ஐரோப்பிய முதலாளித்துவ பத்திரிகைகளும் அபாண்டப் பொய்களையும் பயங்கரக் கதைகளையும் கட்டவிழ்த்துவிட்ட காலத்தில் பாவலர் இதனை எழுதியிருக்கலாம். ருஷியாவிலே பெண்களைப் பொதுவுடைமையாக்குகிறார்கள் என்ற செய்தியை நம்ப மறுத்து பாரதியார் எழுதிய கட்டுரையை நாம் அறிவோம். அத்தகைய சூழ்நிலையில் சைவசமயப் பற்றாளராக மாறிக்கொண்டிருந்த பாவலர் போல்ஷெவிசம், சனசங்கம் என்பன கொடும் வியாதிகள் என வருணித்தது எதிர்பார்க்கக்கூடியதே. 'பாரத சமுதாயம்' என்ற பாடலில்,

முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை

என்று பாரதி பாடினான். ருஷியப் புரட்சியை மனங்கொண்டு சனசங்கம், பொதுவுடைமை ஆகிய கோட்பாடுகளை வரவேற்று வாழ்த்தினான். ஜனசங்கம் என்பது மக்கள் ஆட்சியையும் மக்கள் சக்தியையும் குறிக்கும்வகையிலே பாரதி பாடினான். அதே சொற்கள் பாவலருக்குப் பண்பாட்டுக் குழப்பத்தையும் பயங்கரத்தையும் உணர்த்தின. பாவலரைப் போலவே அக்காலத்து இலங்கைத் தமிழ்ப் பிரமுகர்களும் அரசியல்வாதிகளும் உயர்ந்தோர் குழாத்தினரும், வளர்ந்து கொண்டிருந்த மக்கள் சக்தியையும் தீவிர ஜனநாயகக் குரல்களையும் கண்டு கேட்டு அலமந்தனர். பாவலரின் பெருமதிப்புக்குரியவராயிருந்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் (1851—1930) சர்வஜன வாக்குரிமை வழங்கும் அரசியல் யாப்பினை எதிர்த்தார். இராமநாதனின் இளைய சகோதரர் சேர். பொன். அருணாசலம் (1853—1924), க. பாலசிங்கம் (1876—1953)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய இரண்டொருவரைத் தவிர பெரும்பாலான தமிழ்த் தலைவர்கள் அன்றும் இன்றும் உயர் மத்திய வகுப்பினராய் இருப்பது மட்டுமன்றி, முற்போக்கு இயக்கங்களை எதிர்ப்பவர் களாகவும் இருக்கின்றனர். இலங்கைத் தமிழ்ப் பிரமுகர்களில் சேர். பொன். அருணாசலம் ஒருவரே ருஷியப் புரட்சியை உள்ளூர வரவேற்றார். வெளிப்படையாகக் கூறாவிடினும், தனிப்பட்ட கடிதங்களில் "அங்கிருந்து வரும் நம்பிக்கையூட்டும் செய்திகள்" என்று ருஷியப் புரட்சி பற்றிய செய்திகளைச் சூசகமாய்க் குறிப்பிட்டிருக்கிறார். இது வெறும் உணர்வு வேறுபாடு மாத்திரமன்று. உலக நோக்கின் வேறுபாடு ஆகும். இதன் பிரதிபலிப்பும் விளைவும் அவர்களின் இலக்கிய ஆக்கங் களையும் பாதித்தன.

உதாரணமாக வாழ்வின் இறுதிக் காலத்தில்—ஐம்பத்தைந் தாவது வயதில்—பாவலர் இயற்றிய 'சிவமணிமாலை'யை நோக்குவோம். பல்லவர் காலத்துப் பக்திக் கவிஞர்கள் முதல் பட்டினத்தார் முதலியோர் ஈறாக வழிவழிவரும் இறை யடியார்களின் பாடல்களையொட்டித் தனது சுயஅனுபவத்தை யும் கலந்து பாவலர் பாடிய சிறு பிரபந்தமே இது. இதற்கு முந்திய நூல்களில் வெவ்வேறு பொருள்பற்றிப் பாடப்பெற்ற கீர்த்தனைகள் தொகுக்கப்பட்டன. இதிலே ஒரு பொருளை— தனது ஆத்ம சமர்ப்பணத்தை—பல செய்யுள்களாற் பாடினார். சிறு காவியம் எனத்தகும் வகையில் இக்கவிமாலை அமைந் துள்ளது. சைவத்தை விட்டு நீங்கிச் சமணம் சார்ந்து பின்னர் இறையருளால் மீண்டும் சைவம் சேர்ந்த நாவுக்கரசரின் வாழ்க்கையும் வாக்கும் பாவலரைப் பெரிதும் கவர்ந்தன போலும். அதனாலோ என்னவோ அப்பரின் பாடலடிகளை நினைவூட்டும் சொற்றொடர்கள் 'சிவமணிமாலை'யில் அனேகம் இருக்கின்றன.

இனி, பாவலர் கையாண்ட யாப்பமைதியை நோக்கினும் பழமை போற்றும் பண்பு மிகுந்திருப்பதைக் காணலாம். முந்திய படைப்புகளிலே பிறமொழிச் சொற்களும் பேச்சு வழக்கும் விரவிவர நெகிழ்ச்சியுடைய இசைப்பா வடிவங்கள் இடம் பெற்றதைக் கண்டோம். இந்நூலில் கற்றோர்க்கு இன்பந்தரும் —கடின யாப்பான—கட்டளைக் கலித்துறைப் பாக்களை எடுத் தாண்டார். இவ்விடத்திலே கட்டளைக் கலித்துறை பற்றிச் சில வார்த்தைகள் கூறுவது ஏற்புடையதாயிருக்கும். யாப்பருங் கலக் காரிகை காலத்துக்குப் பிற்பட எழுந்த இச்செய்யுள்வகை கற்றோரால் பெரிதும் மதிக்கப் பெற்ற தொன்றாக இருந்து வந்துள்ளது. ஆயினும் இதற்கு யாப்பிலக்கண நூல்கள் குறிப்பாக அன்றி வெளிப்படையாக இலக்கணம் கூறாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால், நாளடைவில் பல கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின. இடைக்கால வித்துவான்கள் பலர் கட்டளைக் கலித்துறையின் உயிராற்றலான செவிக்கின்பமூட்டும் பண்ணைக் கைநெகிழ விட்டு, சீரெண்ணித் தளை தடவிப் பாடும் யாந்திரீக முறையைப் பற்றிக் கொண்டனர். இதைக் கண்ணுற்ற சி. வை. தாமோதரம் பிள்ளை 'கட்டளைக் கலித்துறை' (1881) என்னும் நூலை எழுதி வெளியிட்டார். (அரிய இந்நூலை மீண்டும் பதிப்பிப்பது நம்மவர் கடமையாகும். இக்காலத்தில் நூற்பிரதி கிடைப்பதாயில்லை.) நூல் வெளிவந்த காலத்திலே 'சைவ உதயபானு' பத்திரிகையில் (5-12-1881) நீண்ட மதிப்புரை ஒன்று எழுதப்பட்டது.

> பல நூல்களினும் இலைமறை காய்போற் கிடந்த அதற்குரிய இலக்கணங்களெல்லாவற்றையும் ஈட்டி ஒன்றாகக் கூட்டி, கரதலாமலகம் போற்காட்டி, யாப்பிலக்கணங்கற்கும் மாணவகர் யாவர்க்கும் ஊட்டு வாராயினர்

என்று தாமோதரம் பிள்ளையைப்பற்றியும் நூலைப்பற்றியும் மதிப்புரை எழுதியவர் குறிப்பிட்டிருந்தார். (இதனைப் பெரும்பாலும் ஊரெழு சு. சரவண முத்துப்பிள்ளை எழுதினார் என ஊகிக்கலாம்.) இந்நூல் வெளிவந்ததை அடுத்து, கட்டளைக் கலித்துறைக்குப் புதிய மதிப்பும் தேவையும் ஏற்பட்டது. பாவலரது கட்டளைக் கலித்துறைப் பாடல்களில் ஓசையின்பம் சிறப்பாக அமைந்துள்ளது.

தொண்ணூற்றாறு செய்யுள்களைக் கொண்டது 'சிவமணி மாலை.' இப்பாடல் எழுதப்பட்ட காலத்தில் சிவானந்தையர் (1873—1916), முத்துக்குமார சுவாமிக் குருக்கள் (1853—1936), கணேசையர் (1878 — 1958) முதலிய வித்துவான்களும் மறையோர்களும் அவருக்கு உற்சாகமளித்து உரையாடி சமயத் துறையில் அவரை ஊக்குவித்தனர். இன்னொரு வகையாக நோக்கினால் ஆரம்பத்தில் பிறரையும் சமுதாயத்தையும் நோக்கிப் பாடிய பாவலர், பின்னாளில் உள்நோக்கித் தனது ஆன்ம ஈடேற்றத்துக்காகப் பாடினார் எனலாம். இசைத் தமிழ்வாணராக ஆரம்பித்த பாவலர் இயற்றமிழ் புலவராக மாற்றம் பெற்றார். திரு. இ. முருகையன் சுவைபடக் கூறியிருப்பது போல, "இசைப்பா ஆசிரியராக ஆரம்பித்த பாவலர், இயற்பா ஆசிரியராகப் பரிணமித்த கதை இதுவே ஆதலும் கூடும்."

இருபதுகளிலே கா. சுப்பிரமணிய பிள்ளை, பா. வே. மாணிக்க நாயக்கர், மறைமலையடிகள் முதலியோரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பினால் பிள்ளையவர்களும் தமிழுணர்ச்சி பெருகப் பெற்றவரானார்.

தேனொழுகும் செந்தமிழின் சீரை நாம் கண்டு
தேறுவோம் அப்பாஷை நூல்கள் செவ்வையாய் உண்டு

தண்டமிழ் பல்பாஷைகளின் தாயெனல் மெய்யே
சமஸ்கிருதத்தால் வந்ததெனச் சாற்றுதல் பொய்யே

இன்னிசை இலக்கண விலக்கிய மாட்சிசேர்
எங்கள் தமிழ்ப்பாஷை தனக்கெந்தப் பாஷை நேர்?

என்றும்

சுத்தநம் தமிழ்தொனித் திருநாடு—நல்ல
சுகசௌ கரியம் நிறைநாடு
இத்தரை தனிலினிய நாடு—இந்த
இகத்தி விதற்கிணை யேயீடு

என்றும் பலவாறு பாடியிருக்கிறார். வடமொழியின் மேன்மையையும் முதன்மையையும் மொழி வரலாற்று அடிப்படையில் நிராகரித்த போதும் தனது ஆக்கங்களில் சமஸ்கிருதச் சொற்களை அபரிமிதமாய்ப் பயன்படுத்தியிருக்கிறார். அதே போல, 'சிவமணிமாலை'யிற்கூட கிறித்தவத் தமிழிற் பயின்று வரும் சொற்பிரயோகங்கள் தாராளமாக வந்தமைந்துள்ளன. இவை இளமையிற் கற்றவற்றின் மீத மிச்சங்கள் போலும். 'சிவமணிமாலை'ப் பாடல்களுக்கு எடுத்துக் காட்டாக இரண்டைப் பார்க்கலாம்.

நாளுந் தொலைந்து பெலமுங் குறைந்து நலிவடைந்து
மாளுஞ் சமய மெனக்குமுன் றோன்றி மறுபிறப்பை
ஆளும் பலத்தை யருளியென் சீவனகன்ற பின்னர்
நீளும் சுகாநந்தம் நீயருள் வாய்சிவ நின்மலனே

நோயென்ன செய்யுந் தரித்திர மென்செயும் நூறெனுமெண்
ணாய்வரு மின்ன லெனையென்ன செய்யு மறிமனமே
சேயனின் மேற்கரு ணாநிதி யாய சிவபெருமான்
நேயமென் னெஞ்சி னிறைந்தெந்த நாளும் நிலைத்திடவே

கட்டளைக் கலித்துறையைத் தன்னுணர்ச்சிப் பாடலுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தியதில் பாவலர் ஓரளவு வெற்றிகண்டார் என்று கூறலாம்.

பாரதியாருக்குப் பத்து வயது மூத்தவரான துரையப்பா பிள்ளை பல வழிகளில் பாரதி சென்ற இலக்கியப் பாதையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது தூரம் நடந்தார். ஈழத்தில் அவரே முதலில் சமூக சிந்தனையைக் கவிப்பொருளாக்கியவர்; எளிமையைக் கவிதைப் பண்பாக்கிக் காட்டியவர்; சீர்திருத்தத்தைச் சீரிய முறையில் எடுத்தியம்பியவர். தேசியத்தைக் கல்வி, கவிதை ஆகிய வற்றில் புகுத்தியவர். இவையெல்லாம் இருந்தும் பிற்காலத்தில் பின்தங்கி நின்றார். அதனால் பூரணத்துவம் பெற்ற கவிஞராகப் பரிணமிக்கத் தவறிவிட்டார். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகரநிரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் அகரநிரல்


அகிலேச பிள்ளை, வே. 30
அண்ணாமலைரெட்டியார் 124
அப்துல்காதிறுப் புலவர் 30
அம்பலவாண சுவாமிகள் 86
அம்பலவாண நாவலர் 69, 77, 78, 80, 84
அமிர்தம்பிள்ளை 43
அரசஞ்சண்முகனார் 74
அருணாசலக் கவிராயர் 123
அருணாசலம், சேர். பொன் 70, 132, 137
அருணாசலம், மு. 9
அருளம்பலம் 107
அலெக்ஸாண்டர் போப் 52
அழகிய சொக்கநாதப்பிள்ளை 35
ஆறுமுகப்பிள்ளை, சு. 75
ஆறுமுகப்பிள்ளை, வை. 73
ஆறுமுகநாவலர் 18, 20, 21, 22, 34, 48, 52, 54, 67, 71, 75, 77, 85, 86, 88, 89, 115
இடைக்காடர் (நாகமுத்து), 87
இராசரத்தினம் பிள்ளை, தெ அ. 108
இராமகிருஷ்ண பரமஹம்சர் 102
இராமசாமி ஐயங்கார் 74
இராமசாமி ஐயர் 46
இராமசாமிப்பிள்ளை மதுரை, இ. 72
இராமநாதன், பொன். 83
இராமலிங்கம், க. 101
இராமலிங்கம், கோப்பாய் வே. 38
இராமலிங்க சுவாமிகள் 124
இன்னாசித்தம்பி, எஸ். 29
உமாபதிசிவம் 62
உமாபதி சிவாசாரியர் 83
உவின்ஸ்லோ 21
ஏரம்பையர், சு. 67

கணபதி ஐயர் 46
கணபதிப்பிள்ளை, க. 36
கணபதிப்பிள்ளை, சி. 60,61,63, 79
கணபதிப் புலவர் 46
கணேசையர், சி. 69, 75, 134
கதிர்காமச் சட்டம்பியார் 107
கதிர்காமையர்,ச. 68
கதிரேசஞ்செட்டியார், மு. 74
கதிரைவேற்பிள்ளை, கு. 27, 124
கதிரைவேற்பிள்ளை, நா. 55,62, 63, 69, 75, 78
கந்தப்பிள்ளை 46, 107
கந்தையாபிள்ளை, பண்டித ச. 76
கல்கி 49
கலியாண சுந்தர (முதலியார்) னார், திரு. வி. 55, 99, 102
கனகசபாபதிக் குருக்கள், நல்லூர், வே. 68
கனகசபை, அ. 118
கனகசபைப்பிள்ளை, வி. 26, 27, 75, 80
கனக சுந்தரம்பிள்ளை, தி.த. 27, 41
காசிநாதப் புலவர், நீ. 38
காசிவாசி செந்திநாதையர் 62, 67, 86
காசி விசுவநாத முதலியார் 40
காந்தியடிகள் 131
கார்த்திகேயப் புலவர் 69, 78
கால்டுவெல் 105
கிருஷ்ணசாமி ஐயங்கார் டாக்டர் எஸ். 118
கிறீன், டாக்டர் 20
குமரகுருபரர் 57
குமாரசாமிப் புலவர், சுன்னாகம், அ. 61, 62, 64, 67, 68, 72
குமாரசுவாமி முதலியார் 31, 33, 124
குயின்ஸி, டி. 51, 52, 53
கைலாசபிள்ளை, க. 63, 68, 77
கைலாசபிள்ளை, சிற். 81, 82,83
கோகலே 109, 131


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதைநாயகி அம்மாள் 49
கோபால கிருஷ்ண பாரதியார் 123
கோவர், இ. சாள்ஸ். 105
கௌரவ பாலசிங்கம் 124

சங்கரநமச்சிவாயர் 88
சண்முகநாதன் 81
சதாசிவம் பிள்ளை, ஆர்னல் 28, 40, 108, 122, 126
சபாபதிக்குருக்கள் 69
சபாபதிச் செட்டியார் 61
சபாபதி நாவலர் 22, 27, 56, 57, 67, 69, 73, 75, 77, 86
சபாபதி முதலியார் 59
சபாரத்தின முதலியார், ச. 67, 68, 69, 72, 73
சம்பந்தப்புலவர், வே. 78
சவேரிமுத்துப்பிள்ளை, மயிலை 22
சரவணமுத்து, த. 128
சரவணமுத்துப்பிள்ளை, சு. 11, 69, 73, 84, 134
சரவண முத்துப்பிள்ளை, தி.த. 27, 28, 41, 43
சாமிநாதையர், உ. வே. 24, 59, 60, 61, 83
சித்தலிங்கம், டி. பி. 62
சித்திலெவ்வை 28
சிதம்பரநாத முதலியார், டி.கே. 53
சிதம்பர சுவாமிகள் 86
சிவசங்கர பண்டிதர் 23, 69, 78
சிவசம்புப்புலவர் 30, 75, 77, 126
சிவநேசச் செல்வன், ஆ. 30
சிவபாத சுந்தரனார், சு. 23
சிவப்பிரகாச முனிவர் 57
சிவானந்தையர் 134
சின்னத்தம்பி 46
சின்னத்தம்பி தம்பு 87
சினனத்துரை 82
சின்னப்பாபிள்ளை 27, 96
சில்வா, ஜோன். டி. 117
சுந்தரம் பிள்ளை, க. 81, 84
சுப்பராய முதலியார், திருவேற்காடு 22
சுப்பிரமணியஐயர், ஜி, 128
சுப்பையனார் 36
சுப்பிரமணிய தேசிகர் 35, 83
சுப்பிரமணிய பாரதியார் 43, 49, 50, 63, 102, 118, 123, 128, 135
சுப்பிரமணிய பிள்ளை, கா. 118, 134
சுப்பிரமணிய பிள்ளை, வி. 78
சுப்பிரமணியம், க. நா. 49, 52
சுப்பிரமணியம், வி. ஐ. 51
சுரேந்திர நாத பானர்ஜி 127
சுலைமான் லெப்பைப் புலவர் 30
சுவாமிநாத பண்டிதர் 86
சூரிய நாராயண சாஸ்திரியார், வி. கோ. 125
செகராசசேகரன் 15
செந்திநாதையர், சி. 72, 73, 78, 80, 83
செல்லப்பா பிள்ளை, த. 27
சேதுப் பிள்ளை, ஆர். பி. 60
சேனாதிராய முதலியார் 78
சோம ஐயர் 15
சோம சுந்தரப் புலவர் 38, 82, 101
சைமன் காசிச் செட்டி 27

ஞானப் பிரகாசம் 98

டௌபிகின், எச். எல். 117

தம்பி முத்துப் பிள்ளை, எஸ். 9, 73
தாண்டவராய முதலியார் 22
தாதாபாய் நவுரோஜி 109
தாமோதரம் பிள்ளை, சி. வை. 23, 27, 44, 61, 67, 73, 75, 78, 83, 108, 110, 111, 125, 134
தாவீது யோசேப்பு 21
திருஞான சம்பந்தப்பிள்ளை 69
திருநாவுக்கரசு 76
தில்லைநாத நாவலர் 77, 86
தில்லைநாத பிள்ளை, மு. 88
தில்லை நாதர் 77
தில்லை நாதன், சி. 122
துரைசாமி ஐயங்கார் 49
துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரையப்பா பிள்ளை, பாவலர், 65, 89, 107, 136

நச்சினார்க்கினியர் 57
நரசிம்மலு நாயுடு 43
நமசிவாயம், க. 81
நவரத்தினம், க. 104
நாகமுத்து, 95, 102, 128
நாகலிங்கம் 82
நாகேச ஐயர் 46
நாவலாசிரியர் நாகமுத்து 87-106
நீலகண்ட சிவாசாரியர் 83

பத்திராதிபர் சரவண முத்துப் பிள்ளை 67, 76
பராக்கிரமபாகு 15
பரிதிமாற்கலைஞர் 84
பாண்டித்துரைத் தேவர் 80
பாலகங்காதரதிலகர் 109, 127
பாலசிங்கம், க. 132
பாஸ்கர சேதுபதி 75
பியாஜே 48
பிளேட்டோ 48
பீதாம்பரம், மா. 104
புதுமைப்பித்தன் 53
பூதந்தேவனார் 13
பூரணலிங்கம் பிள்ளை, மு.சி. 9, 43
பெர்சீவல் 105
பெர்னாந்து, பி. டி. எம். 115
பெரிய தம்பிப் பிள்ளை, ஏ. 60, 104
பொசாங்கே 51
பொன்னம்பல பிள்ளை, த. 27, 59, 61
பொன்னம்பல பிள்ளை, ந. ச. 72, 73, 75, 78, 80, 86
பொன்னம்பலம் இராமநாதன் 132
பொன்னம்பல முதலியார் 113
பொன்னுசாமிப் பிள்ளை, தி. ம. 98
போசராச பண்டிதர் 15
போஸ், டாக்டர் ஜே. சி. 128

மயில் வாகனப் புலவர், க. 30
மறைமலையடிகள் 84, 134
மாணிக்க நாயக்கர், பா. வே. 118, 134
மாணிக்கம் பிள்ளை, மு. சு. 73
மாதவய்யா 40
மாதவையா, அ. 118
மாப்பாண முதலியார் 46
மில்லர், டாக்டர் 108
மீனாட்சி சுந்தரம் பிள்ளை, த. ச. 55, 61
முத்துக்குமார கவிராசர் 44, 45
முத்துக் குமார சுவாமிக் குருக்கள் 134
முத்துக் குமாரத் தம்பிரான் 86
முத்துக்குமாரப் புலவர் 46
முத்துத்தம்பிப் பிள்ளை, ஆ. 67, 68, 70, 78, 80
முருகேச ஐயர் 46
முருகேச பண்டிதர், சுன்னாகம், 30, 68, 75, 78, 86
முருகையன், இ. 13, 124

ரவீந்திரநாத் தாகூர் 128
ராய், டாக்டர் பி. சி. 128
ரெயிலர் 105, 121, 130

லெனின் 132

விசாகப் பெருமாளையர் 22
விசுவநாத பிள்ளை, கறொல், 108
விசுவலிங்க பிள்ளை, சி. 73, 85
விபுலாநந்தர் (மயில் வாகனன்) 83, 103
வில்லியப் பிள்ளை 35
விவேகாநந்தர் 102
வின்சிலோ 105
வேங்கடசாமி, மயிலை சீனி 9
வேதநாயக சாஸ்திரியார் 123, 124, 125
வேதநாயகம் பிள்ளை, ச. 35, 43
வேலுப்பிள்ளை, வி. 73, 86
வைத்தியலிங்கம், இ. 82
வையாபுரி ஐயர் 15
வையாபுரிப் பிள்ளை, எஸ். 25, 26

ஹென்ரி மற்றிஸே 47
ஜயவர்த்தனா, குமாரி 98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் - நூல் அகரநிரல்


அருளம்பலக் கோவை 31
அஸன்பே சரித்திரம் 28, 97
இதோபதேசகீதரசமஞ்சரி 121
இந்துசாதனம் 73, 100, 109, 118
இரணவைத்தியம் 20
இராசதுரை 99
இலக்கணச் சுருக்கம் 22
இலக்கண வினாவிடை 22
இலக்கியப்பேழை 51
இலகுசாதகம் 89
இலங்கைத் தேசாபிமானி 124
இலங்கைநேசன் 18, 28, 64
இலங்கைவர்த்தமானி 28
இலங்கை வளமும் தாலவிலாசமும் 38
ஈழத்து வாழ்வும் வளமும் 36
உதயதாரகை 28, 109, 116, 119, 120, 126
உயிரிளங்குமரன் நாடகம் 102
உவின்ஸ்லோ அகராதி 23
ஊசோன் பாலந்தை கதை 29
எங்கள் தேசநிலை 130

கட்டளைக் கலித்துறை 134
கதிரைவேற்பிள்ளை அகராதி 23
கந்தபுராணம் 101
கந்தபுராண கலாசாரம் 59, 60
கந்தபுராண நவநீதம் 62
கல்லாடம் 59
கலிங்கத்துப்பரணி 57
கலித்தொகை 59
கனகிபுராணம் 35
காந்திமதி அம்மை அந்தாதி 35
கீதரசமஞ்சரி 109, 125
குண்டலகேசி 56
கெமிஸ்தம் 20
கோட்டுப்புராணம் 38, 39

சகலகுண சம்பன்னன் 126
சண்முகநாதன் 73, 84
சரசோதிமாலை 15
சாதாரண இதிகாசம் 28
சித்தகுமாரன் 40, 89, 99, 100, 102, 104
சிதம்பர சபாபதிநாத புராணம் 57
சிதம்பர மான்மியம் 23
சிந்தனைக்களஞ்சியம் 60
சிந்தாமணி 56, 59, 60
சிலப்பதிகாரம் 57, 59
சிவமணிமாலை 110, 111, 130, 131, 133, 134, 135
சிறிய வினோதக் கதைகள் 89
சுவதேசக்கும்மி 130
சூளாமணி 56
சூறாவளி 49
செகராசசேகரமாலை 15
சைவஉதயபானு 11, 70, 71, 72, 73, 134
சைவபாலிய சம்போதினி 82

ஞானக்கும்மி 45
ஞானசம்பந்தம் 98
ஞானரதம் 102
ஞானாம்பிகை 98

டம்பாச்சாரி விலாசம் 40

தணிகைப்புராணம் 55, 61
தத்தைவிடுதூது 35, 41, 43, 44
தமிழ் ஆங்கில அகராதி 21
தமிழ் இலக்கணத் தெளிவு 21
தமிழ் இலக்கிய வரலாறு 43
தமிழ்ப்பாஷை 41
தமிழ்ப்புலமை 54, 55
தமிழ்ப்பேரகராதி 75
தர்க்கபரிபாடை 124
தால புராணம் 38
தியாகபூமி 49
திராவிடப்பிரகாசிகை 22, 27, 56
திராவிட மந்திரி 84
திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் 104
திருக்குறள் 52, 53
திருக்கோவையார் 59, 101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையாடல் புராணம் 23
தேசாபிமானி 100
தேவாரம் 52, 56
தேவாரம் வேதசாரம் 62
தொல்காப்பியம் 17, 58
தொல்காப்பிய விருத்தியுரை 74

நமசிவாயம் அல்லது நான் யார்? 101
நல்லூர்க் கந்தசாமி கோயில் 68
நவசக்தி 99
நளவெண்பா 57
நன்னெறிக் கதா சங்கிரகம் 28
நன்னெறிக் கொத்து 122
நன்னெறிமாலை 122
நாவல சற்குரு மணிமாலை 79
நாவலர் சரித்திரம் 63
நீலகண்டன் 40, 89, 90, 92, 99, 104

ப்ரம்மதர்க்க ஸ்தவ 81, 84
பகவத்கீதை 104
பஞ்சலட்சணத்திருமுகவிலாசம் 35
பத்மாவதிசரித்திரம் 92
பரராச சேகரம் 15
பாஞ்சாலி சபதம் 50, 63
பாதுகாவலன் 35
பாலபாடம் 54, 116
பாவலர் சரித்திர தீபகம் 28, 36, 38
பிரதாப முதலியார் சரித்திரம் 28, 81
பிரதிகண்டனம் 69
பிரபந்தத் திரட்டு 54
பிரம்ம சூத்திரம் 83

புதுமைப்பித்தன் கட்டுரைகள் 53
புறநானூறு 53, 59
பூமிசாத்திரம் 116
பெரிய புராண சூசனம் 22
பௌஷ்கராகமம் 83

மகாபாரதம் 60
மணிமேகலை 56, 59
மனுஷ அங்காதிபாதம் 20
மனுஷ சுகரணம் 20
மனோன்மணீயம் 84, 101
மானிப்பாய் அகராதி 23
மித்தியாவாத நிரசனம் 69
மோகனாங்கி 28, 30, 41

யாழ்ப்பாண அகராதி 23
யாழ்ப்பாணச் சமய நிலை 65
யாழ்ப்பாண சுவதேசக் கும்மி 65, 117
யேசுமத பரிகாரம் 45

வடதிரு முல்லை மும்மணிக் கோவை 83
வளையாபதி 56, 59
வானசாத்திரம் 28
வித்தகம் 76
விஜய சுந்தரம் 98
விஜய மார்த்தாண்டம் 40
வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம் 96
வீரசோழியம் 24
வைத்தியாகரம் 21
வையாபாடல் 15

Ceylon National Review 116
Jaffna Freeman 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள் அகரநிரல்


அச்சு நூல்கள் 20
அணுகுமுறை 9
அம்பலநாவலரின் கல்விப் பணி 77, 86
அறிவிலக்கியம் 51
ஆய்வுநெறி 9
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 118
ஆரியதிராவிட வாதங்கள் 104
ஆற்றலிலக்கியம் 51
இசைப்பாவடிவம் 122
இந்தியவியல் ஆய்வு 9
இராமகிருஷ்ணமிஷன் 103
இலங்கைத் தமிழரசின் சமூக வரலாறு 92
இலக்கிய நிலைமை 51
இலக்கிய மரபு 13
ஈழத் தமிழ்ப் பத்திரிக்கைகள் 29
உபாத்திமார் சங்கம் 119
உரைநடையில் எளிமை 71
எழுதா எழுத்து 16

காவியரசனை மரபு 78
கீர்த்தனைகள் 122
குமாரசாமிப்புலவரை ஆதரித்து எழுதிய ஆறுமுக நாவலரின் மடல் 64
குருகுலக் கல்வி 20

சங்கரதாஸ் சுவாமி நாடகக்குழு 129
சமூகப் பொருளாதார உணர்வு 116
சிவஞானம் 98
சிவானந்த வித்யாலயம் 103
சுதேசிமேளா 128
சைவப் பிரகாசவித்தியா சாலை 88, 89

தமிழிலக்கிய ஆய்வு 9
தமிழிலக்கிய வரலாறு 24
தமிழ் விளக்கம் 22
தமிழ் மறுமலர்ச்சியின் தாக்கம் 80
தாதுவருடப் பஞ்சம் 34
திருஞான சம்பந்த சுவாமிகள் மடாலயம் 81
திருவாவடுதுறை ஆதீனம் 83
தொழிற்சங்கங்கள் 119

நாவலர் மரபு 66
நாவலரின் இலக்கிய நோக்கு 47-66

பண்பியல் நாடகவகை 100
பதிப்புக்கலை 25
பாரம்பரியம் 14
புராணங்கள் 54, 55
பொதுவுடைமைக் கொள்கை 132

மகாஜனக்கல்லூரி 89
மதுரைச் சங்கம் 75, 80
மரபும் மாற்றமும் 14
மூலபாட ஆய்ச்சி 24, 25
மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை 74
மொழிஇனவாதம் 104
மொழித்தூய்மைக் கோட்பாடு 105

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 81

வண்ணார் பண்ணை 89
வசனநடை கைவந்த வல்லாளர் 19
வமிசவரலாறு 15
வரலாற்றுத்தன்மை கொண்ட நாவல் 90


□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளாவியதாய் உருப்பெற்று வரும் தமிழ் இலக்கிய ஆய்வு விருத்தியின் பிரிக்கவியலாத அம்சமாகவே ஈழத்துத் தமிழிலக்கிய ஆய்வும் கடந்த சில வருடங்களாகப் பரிணமித்து வந்திருக்கிறது. ஈழத்து நவீன தமிழிலக்கிய ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்திருக்கும் நான் அதன் ஊற்றுக் களையும் மூலங்களையும் தேடியபொழுது பின்னோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அரும்பிய சில செல்நெறிகளும் கருத்தோட்டங்களும் இருபதாம் நூற்றாண்டிலே மலர்ச்சி பெற்று மேலும் செழுமையடைவதைக் காண முடிந்தது.

இந்நூலிலுள்ள கட்டுரைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழிலக்கியத்தின் சிற்சில அம்சங்களை விவரித்து விளக்குகின்றன. பொதுவான வளர்ச்சியையும் அவ்வளர்ச்சிக்குச் சிலர் ஆற்றிய காத்திரமான பங்களிப் பையும் அங்கங்கு மதிப்பிடவும் முயன்றிருக்கிறேன். அம் முயற்சிக்கு வாழ்க்கை வரலாறு, சமூக வரலாறு, இலக் கியத்தின் சமூகவியல், இலக்கியத்திறனாய்வு என்பன துணை புரிந்துள்ளன. சமுதாய ஆய்வும் இலக்கிய ஆய்வும் ஒன்றுக்கொன்று அநுசரணையானவை என்பதை இயன்றளவு காட்டியிருக்கிறேன்.

**க. கைலாசபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org